சேர்க்கை:

குருபாதம்

# தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்

தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

சிவாகமபாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசைமுறைகளைப் பயிற்றுவிப்பது.

சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.

தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் வெளியிடுவது.

அறிஞரைக்கொண்டு ஆலயம்தோறும் அறவுரை வழங்குவது.

பிரசாரவாகனத்தின்மூலம் தமிழ்நாடெங்கும்சமயம்வளர்ப்பது

ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

ஆதீனக் கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

தமிழ்க் கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது.

வடமொழிக் கல்லூரி நிறுவி சிரோமணித் தேர்விற்கனுப்புவது.

ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

நூலாராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிடுவது.

சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

"ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாகச் சமய உண்மைகளை அறிவுறுத்துவது.

சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

தமிழ்ப்பணி, சமயப்பணி செய்பவர்க் குதவுவது.

தமிழ்நாட்டுத் தலவரலாறு எழுதுவித்து வழங்குவது

புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.

அடிக்கடி ஆதுலர்க்கு அறுசுவையுண்டி யளிப்பது.

---

இதப்பாரம் போப்பலத்தில்



பொதுக்குழுதார்கள்
தருமபுர ஆதீன மகாசந்நிதானத்தை உபசரித்தல்




வெளியீடு எண். 184.

உ

திருச்சிற்றம்பலம்

# சிதம்பரம்

(பதிகங்களுடன்)

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உடு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளவர்கள்

திருவுள்ளப்பாங்கின்படி
வெளியிடப்பட்டது.

எழுதியவர்:

வித்துவான், ச. தண்டபாணி தேசிகர்.

சர்வதாரி.

பிரதிகள். 2000.

100704

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

உ

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| முகவுரை | 1 |
| பாராட்டுரைகள் | IX |
| தொடக்கவுரை | 1 |
| தலத்தின் மறுபெயர்கள் | 3 |
| தலத்தின் தொன்மை | 4 |
| தலப்பெருமை | 6 |
| தல அமைப்பு | 8 |
| தலத்திலுள்ள கோயில்கள் | 11 |
| தலத்திலுள்ள தீர்த்தங்கள் | 15 |
| கோயில் அமைப்பு | 16 |
| மூர்த்திகளும், மண்டபங்களும் | 19 |
| தெய்வப்புலவர்கள் | 33 |
| அன்பர்கள் | 75 |
| அருள் நூல்கள் | 86 |
| வரலாற்றுத்தொடர்புள்ள இடங்கள் | 122 |
| சுற்றியுள்ள சிவத்தலங்கள் | 123 |
| கர்ணபரம்பரைச்செய்திகள் | 125 |
| பழமொழிகள் | 126 |
| கல்வெட்டுக்கள் | 129 |

| | பக்க எண் |
|---|---|
| தேவாரம் | க |
| திருவாசகம் | உகூ |
| திருக்கோவையார் | ௩௦ |
| திருவிசைப்பா | ௩௰க |
| திருப்பல்லாண்டு | ௩௰உ |
| திருமந்திரம் | ௩௰௩ |
| பெரியபுராணம் | ௩௰௪ |
| திருப்புகழ் | ௩௰ரு |
| க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் | ௩௰௬ |
| பெருமாள் திருமொழி | ௩௰எ |
| பெரிய திருமொழி | ௩௰அ |
| கல்வெட்டிற்கண்ட பாடல்கள் | ௩௰கூ |
| சேர்க்கை. | ௪க |


---



## பட அட்டவணை


| | பக்க எண் |
|---|---|
| நடராஜர் (முகப்புப் படம்) | |
| ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் | |
| ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் | |
| க்ஷேத்திரபாலப்பிள்ளையார் | 1 |
| தில்லைவனமுடையபரமேசுவரி | 14 |
| சிவகங்கை | 16 |
| பாண்டியநாயகம் | 22 |
| கனகசபை | 24 |
| இராஜசபை | 27 |
| திருமூலர் | 34 |
| பதஞ்சலி | 35 |
| வியாக்கிரபாதர் | 75 |
| அகஸ்தியர் | 77 |
| திருநீலகண்டர் | 80 |
| அப்பர் இருவர் | 88 |
| அசுவனித்தேவர் | 116 |
| சிற்றம்பலம் | 128 |
| பேரம்பலம் | 132 |
| நாரதர் | 136 |

| | பக்க எண் |
|---|---|
| சந்திரசேகரர் | 140 |
| அக்நிதேவன் | 144 |
| கல்யாணசுந்தரர் | 148 |
| சூரியன் | 152 |
| இடபாரூடர் | 156 |
| பாசுபதமூர்த்தி | 160 |
| அர்த்தநாரீசுவரர் | 164 |
| மகாசதாசிவமூர்த்தி | 168 |
| திரிபுராந்தகமூர்த்தி | 172 |
| கிருஷ்ணதேவராயர் | 175 |
| கஜசம்மாரமூர்த்தி | 176 |
| பிக்ஷாடனர் | 178 |
| சமயாசாரியர் | க |
| ஊர்த்துவதாண்டவமூர்த்தி | கூஉ |
| நிருத்தசபை. | சக |


---



ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்



# முன்னுரை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து நான்காவது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். செந்திலாண்டவன் திருவருளால் அவதரித்து, ஐந்தாண்டுவரையும் ஞானானுபூதி நிட்டையிலேயே எழுந்தருளி, உணர்த்திய தெய்வம் எதிரே உற்றபின் வாய்திறந்து பேசிய, குமரகுருபர சுவாமிகட்கு 'ஐந்துபேரறிவும்' என்ற பெரியபுராணப் பாடலின் அநுபவப்பொருளை அறிவித்து, அதனை நேரிற்கண்டு முதிர்ச்சியுற தில்லைக்கேனுஞ்சென்றுவருக என இவர்கள் ஆணையிட்டார்கள் என்ற வரலாற்றைத் தமிழ்நாடு நன்கறியும். அதனால், இந்தஞானபரம்பரையில்வருபவர்களாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானங்களும், அடியார்களும் தில்லைத் தரிசனத்தைத் தமது பரம்பரை ஆசாரங்களுள் ஒன்றாக மேற்கொண்டு வந்தார்கள் என்பது வெளிப்படை.

இந்த நிகழ்ச்சியும், சேக்கிழார் தில்லைக்கூத்தனுடைய திருவருட்பெருக்கைப்பற்றி இடமிடங்கடோறும் தெரிவிக்கும் அருங்கருத்துக்களும், ஞானப் பெருஞ் செல்வராகிய மணிவாசகப்பெருந்தகையார்

ஆனந்தக்கூத்தைப்பற்றி அறிவிக்கும் கனிந்தபாடலாகிய திருவாசகம் திருக்கோவையாரின் காட்சிகளும் தருமபுர ஆதீன இருபத்தைந்தாவது மகா சந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** மனத்தகத்து நிறைந்து, ததும்பி, ஆனந்தநடராஜப் பெருமானை இன்றே காணவேண்டும் என்ற பெருவிருப்பை விளைவித்தன. திருநாளைப்போவாரும் நாளை நாளை என்று எண்ணியிருக்க, இவர்கள் திருவுள்ளப்பாங்கு "இன்னினியேகாண்பேன் என் தில்லைக்கூத்தனையே" என்ற பழந்தொடர் மொழியைப் புதுக்குவதாயிற்று.

தவமும் தவமுடையார்க்கு ஆகும் ஆதலாலும், எதுவும் 'பருவத்தால் அன்றிப் பழா' ஆதலாலும், அவனருளே கண்ணாகக் காணினல்லால் எதனையும் காண இயலாது ஆதலாலும் தில்லைக்கூத்தன் திருவருள் இன்றுவரும் இன்றுவரும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஒருநாள் விடியற்காலை அன்பரொருவர் வாயிலாக அருளழைப்புங் கிட்டியது. அன்று மாலை சிதம்பரத்திலிருந்துவந்த பேரன்பர் அடுத்த வாரத்துக் கதிரொளிநாளே ஞானசூரியன் உதயமாகவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டார். இருவர்கருத்தும் ஒத்திருந்தமையையெண்ணிவியந்து, அழைத்த ஆதிவாரமே அருள்வாய்ப்புடையதெனத் துணிந்து ஆவனசெய்தார்கள்.



மறுநாட்காலையில் அடியேனை அழைப்பித்து மதுரைக்குத் தலவரலாறெழுதி அரசியின் அருளைப் பெற்றதுபோலவே தில்லைவரலாறு எழுதித் திருவருளுக்குப்பாத்திரராகுக என்று ஆசிமொழியும், ஆணைமொழியும் வழங்கினார்கள். விரைந்துமுடிக்கத் திருவருள் துணைசெய்யும் என ஊக்கியருளினார்கள்.

அடியேன் ஆதீனத்துப் புத்தகசாலைப் பூங்காவில் புகுந்தேன். தில்லைமணம் கமழூய் எல்லையிலாப் புத்தகத்தருக்களில், பற்பல புதுப்பூக்கள் காட்சியளித்தன. அவைகளையெல்லாம் ஒருசேரத்திரட்டி எழுத முற்பட்டேன்.

ஒவ்வொரு நாளிலும் மகாசந்நிதானமவர்கள் தில்லையந்தாதி பார்த்தாயிற்றா? புலியூர்ப் புராணம், புலியூர்வெண்பா முதலியன தெரியுமே! அவற்றின் கருத்துக்கள்சேர்க்கப்பட்டனவா? திருமுறைகளின் கருத்துக்கள் சேர்க்கப்பெற்றனவா? என்றெல்லாம் கேட்டுப் புதுக்கருத்துக்களை - விரிந்த எண்ணங்களை விளைத்துவந்தார்கள். அவர்களின் அறிவுரையும் ஆதரவுப்பேச்சுக்களும் அடியேனை அயரா உழைப்புக் கடலில் ஆழ்த்திற்று.

வரலாறு எழுதமுற்பட்ட யான் இக்காலநிலை, வரலாற்றுப் பெருமையை அடியொற்றிச் செல்வதாகலின் தில்லைக்குத் தொண்டுசெய்த சேர சோழ

பாண்டியர்களும் பல்லவர்களும் யாவர்? அவர்கள் தொண்டு எத்தகையது? என்பதை அறிய அவாவினேன். அப்போது தென்னிந்திய தெய்வநிலையங்களைப்பற்றி ஜகதீசையரவர்கள் எழுதிய புத்தகம் பெருந்துணைசெய்தது. ஆதீனச் சுவடிநிலையத்தில் உள்ள கல்வெட்டுப் புத்தகங்களும், கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களுடைய ஆண்டறிக்கைகளும் உதவியாயிருந்தன. அவற்றை வைத்துக்கொண்டு இருநூறுக்குமேற்பட்ட கல்வெட்டுக்குறிப்புக்களைச் சேகரித்தேன். 1922-க்குப் பிற்பட்ட கல்வெட்டுக்களும், குறிப்புக்களும் கிடைக்கப் பெறாமையால் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பிரிவில் தேடலாம் என்று மகாசந்நிதானமவர்களிடம் தெரிவித்துக்கொண்டேன். அவர்கள் "எம்முயற்சி எடுத்தாயினும் புத்தகம் சீரியமுறையிலமையவேண்டும் என்பதே நமதுவிருப்பம்; விரைந்துசெல்லுக" என அருளாணைவழங்கினார்கள். விரைந்து சென்றேன். அங்குள்ள ஆராய்ச்சிக்குழுவினர்கள் மிகுந்த அன்பு காட்டி ஆவனசெய்வித்தார்கள். கல்வெட்டுப்பகுதிப் பேராசிரியர், திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் தம்கைக்குறிப்பைக் கொடுத்துதவி இதில் வேண்டியவரைபயன்படுத்திக்கொள்ளுங்கள்என்று சொன்னார்கள்.

ஆதீனப்புலவர், வித்துவான், திரு. ஒளவை, சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் 1916-1932 ஆண்டுகளில் எடுக்கப்பெற்ற கல்வெட்டுக்களைக் காட்டிக்




குறித்துக்கொள்ள உதவிசெய்தார்கள். ஒருவாறு தொகுக்கப்பட்ட கல்வெட்டின் எண் 220 ஆயின. அவற்றைப் பல்லவர், பாண்டியர், சோழர், சேரர், ராயர், நாயக்கர் என்றவரிசையில் அமைத்து, அரசர்களது ஆட்சியாண்டு முறைப்படி தொகுத்து, ஒருவாறு கல்வெட்டுப்பகுதி அடியேனால் எழுதிமுடிக்கப் பெற்றது.

இதற்கிடையில் ஒருநாள் கோயிலமைப்பையும் மூர்த்திகளையும் நூல்களையும்பற்றி அறிவொப்புக் கண்டுவரச் சிதம்பரம்சென்றபோது, பச்சையப்பன் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான், திரு. ந. சிவப்பிரகாச தேசிகரவர்கள் தில்லைத்தொடர்புடைய வெளிவராத சிலநூற்பெயர்களையும், தெருக்களின் பெயர்களையும், அவைகளின் காரணத்தையும் தெரிவித்தனர்.

திருக்கோயிலின் இயற்கைக்காட்சி செவ்வனே பொலிய வரலாற்றுத் தொடர்பும் சாத்திரநுட்பமும் வாய்ந்த பலசிற்பங்கள் படமெடுக்கப்பட்டன. அம்பலவாணரின் திருவுருவம் நான்கு நிறங்களுடன் தயாரிக்கப்பட்டது. எல்லாமாகச் சுமார் முப்பத்தொன்பது படங்கள் இதன்கண் விளங்குகின்றன.

இவ்வாறு, மிகச்சுருங்கிய காலத்துள் ஆக்கப்பெற்ற இந்நூல் ஒரு தேனடைபோன்றது. தேன்



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# பாராட்டுரைகள்

அண்ணமலைப் பல்கலைக்கழகத்
தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், வித்துவான்,

## திரு. ஜி. சுப்பிரமணியபிள்ளை M. A., B. L., அவர்கள்

திருத்தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 30—1—49-ல் தில்லைக்கூத்தனைத் தரிசிக்க எழுந்தருளிய நன்னாளில் சிதம்பரத்தைப் பற்றித் தமிழிற் பரந்து கிடக்கும் குறிப்புக்கள் பலவற்றையும் தொகுத்து ஒரு நினைவு மலராக இதனை வெளியிடுவது போற்றற்பாலதாம். இதுபோலவே இவர்கள் மதுரைக்குச் சென்றிருந்தபோதும் அங்கு மதுரைத் தலவரலாறு ஒன்று அழகிய நூல் உருவில் வெளியிடப்பட்டது. இச் "சிதம்பரம்" என்னும் மலரில் தில்லையைப் பற்றிய கல்வெட்டுக்களின் குறிப்புகள் முழுதும் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தலத்திற்குரிய தெய்வமறைப் பாடல்களும் சேர்க்கப்பட்டிருப்பது படிப்போர்க்குப் பேருதவியாயிருக்கும். குருமகாசந்நிதானம் அவர்களுக்குத் தமிழ் வளர்ப்பதிலும் சிவநெறியை விளங்கச் செய்வதிலும் உள்ள ஆர்வம் அளவிடற்கரியது. இந்நூல் ஒரு பெரிய பல்கலைக்கழகம் வெளியிட வேண்டியது. அத்தகைய பெரிய வேலையைக் குருமகாசந்நிதானமவர்களே மேற்கொண்டு, அச்சிட்டு உதவ முன்வந்தது அவர்களுடைய உள்ளப்பண்பின் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். தமிழ் மக்களுக்கும் சைவ உலகிற்கும் இந்நூல் பெரிதும் பயன்தந்து தில்லைக்கூத்தனின் திருவருளையும் கூட்டுவிக்கும் என்பது திண்ணம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்
தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர்,

## திரு. இ. சே. வரதராஜய்யர் அவர்கள் B. A.,

மூர்த்தி, தலம், தீர்த்தம்இவற்றைமுறையாகச்சென்று வணங்குவது தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கும் ஓர் சிறந்தமுறை. தெய்வத்தன்மை சிறப்புறத் திகழ்ந்த பெருமக்களான சைவசமயாசாரியர் நால்வர், பிரயாணவசதிகளோ, நன்கமைந்த சாலைகளோ இல்லாத பழங்காலத்திலேயே சிவனடியார் திருக்கூட்டத்துடன் தலங்கடோறும் கோயில்கொண்டருளியஇறைவன் உருவத்திருமேனிகளைக்கண்டு தேவாரம், திருவாசகம் முதலியன பாடியுள்ளனர். இற்றைக்கும் சிவாலயங்களின் திருப்பணி மேற்கொள்ளக்கருதும் சிவானுபவச்செல்வர்கள், தாம் பணிதொடங்குமுன்னர் மூவாற் பாடப்பெற்ற தலமா? என வினவுதல் மரபு. நால்வர்சென்ற வழியே நாமும் செல்வோம் என்ற மூதுரையில் நால்வர் எனக் குறிக்கப்பட்டவர் மேற்கூறிய சமயகுரவர் ஆவர். அத்தகைய பெரியோர்களாற் பாடப்பெற்ற திருக்கோயில்களில் தலைசிறந்ததாய்ப் பொதுவில் பதஞ்சலியும் புலிப்பாதரும் கண்டுமகிழ ஐந்தொழிலிணைந்த அருநடம்புரியும் பெருமானும், வாமத்துச்சிவகாமியம்மையை மகிழ்ந்தேற்றவனுமான திரு. நடராசப்பெருமான் அருள்மூர்த்தமாக எழுந்தருளியிருக்கும் தில்லைத்தலவரலாறு, பதஞ்சலிவியாக்ரபாதர் பூசித்தகதை, இரணியவன்மன் குட்டம்நீங்கியசெய்தி, பெருமான் நீராட்டிற்கும், நந்தவனத்திற்கும் முற்றூட்டுகளாக நிலங்கள் அளிக்கப்பட்டசெய்திகள், சோழமன்னர், விசயநகரவேந்தர் முதலானோர் ஆலயத்துக்குச் செய்த திருப்பணிகள் எல்லாம் விளங்கப் புராணம், சாசனம், சரித்திரம் முதலியவற்றின் உதவியைக்கொண்டு நன்கு எழுதப்பட்டுத் தில்லைப்பெருமானைத் தாம் கண்டு மகிழவரும் நன்னாளின் நினைவு மலராகத் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ௨௫-வது



பட்டத்து எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் உத்தரவின்பேரில் ஷை. ஆதீன வெளியீடாகப் போந்துள்ளது. இது தமிழ்மக்கள்யாவரும் அறிந்து மகிழத்தக்கநற்செய்தி. மையறு சைவமும் மாண்புறு தமிழும் தழைத்தோங்குமாறு இத்தகைய அரிய திருப்பணிகளை ஆற்றிவரும் இச்சைவப்பெரியார் நீடூழிவாழ எல்லாம்வல்ல இறைவனை மனம் மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

---

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்
தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர்,

## திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தலைவர் அவர்கள் அண்மையில் தில்லையம்பதிக்கு எழுந்தருளுவதை நினைவு கூர்தற்பொருட்டு அவ்வாதீனத்தில் வெளியிடும் சிதம்பரம் என்னும் நினைவு மலர், கோயில் என்று சிறப்பாக வழங்கிவரும் அப்பெரும்பதியின் உண்மை வரலாற்றைத் தெளிவாக அறியவிரும்பும் சைவ நன்மக்கட்கும், பிறர்க்கும் ஒரு நல்விருந்தாகும். இவ்வரியநூலில் தில்லைமாநகரிலுள்ள பல கோயில்களின் வரலாறும், அம்பலவாணர் திருக்கோயிலுக்குப் பண்டைத் தமிழ்வேந்தர்களான சோழ பாண்டியர்களும் பல்லவர்களும் பிற அன்பர்களும் செய்துள்ள தொண்டுகளும், வழங்கியுள்ள நிவந்தங்களும் பல கல்வெட்டுக்களின் துணைகொண்டு நன்கு விளக்கப்பட்டுள்ளன. உண்மையாகப் பார்க்குமிடத்து, சிதம்பரத்தைப்பற்றி இத்தகைய நூல் ஒன்று இதுகாறும் நம் தமிழ்மொழியில் வெளிவரவில்லையென்றே கூறலாம். ஆகவே இச்சிறந்த

வெளியீடு பல்லாற்றாலும் பலர்க்கும் பயன்படும் என்பது தேற்றம். ஆதீனத் தலைவர்களாக இருபத்தைந்தாம் பட்டத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நம் சைவசமயத்திற்கும், நம் தாய்மொழியாகிய தமிழுக்கும் உளமுவந்து செய்துவரும் அரும் பெருந்தொண்டுகள் பெரிதும் போற்றத்தக்கனவாகும்.

---

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்
தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர், வித்துவான்,

## திரு. க. வெள்ளைவாரணம் அவர்கள்

தமிழ்நாட்டிலுள்ள சைவசமயச் சான்றோர்களால் கோயில் என்னும் பொதுப்பெயராற் சிறப்பித்துப் போற்றப்பெறுவது பெரும்பற்றப் புலியூராகிய தில்லைப்பதியாகும். தில்லைத் திருக்கோயிலில் இறைவன் அருவுருவத் திருமேனிகொண்டு எழுந்தருளிய திருமூலட்டானமும், அப்பெருமான் உமையம்மைகாண ஐந்தொழில்நாடகஞ் செய்தருளும் திருச்சிற்றம்பலமும் சைவத் திருமுறையாசிரியர் எல்லோராலும் போற்றி வழிபடப்பெற்ற அருள் நிலையங்களாகும். தில்லைத்திருக்கோயிலிற் கூத்தப்பெருமானை இனியசெந்தமிழ்ப்பாடல்களாற் பாடிப்போற்றியும், திருத்தொண்டுகள்பலசெய்தும் சிவானந்தப் பெரும்பேறெய்திய அடியார்களும், அவர்கள் அருளிய உரைவழிநின்று எண்ணிலாத திருப்பணிகள்புரிந்த அரசர்களும், படைத்தலைவர்களும் பலராவர். திருமுறைக்காலந்தொட்டு இன்றுவரை தமிழ்மக்களால் சிறப்புமுறையில்வைத்து வழிபடப்பெற்றுவரும் இத்திருக்கோயிலின் வரலாறுகளை அறிந்துகொள்வது சைவசமயவளர்ச்சிக்குப் பெரிதும் இன்றியமையாததாகும்.



இக்கருத்தினைத் திருவுளங்கொண்ட திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்து ௨௫-ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் அருண்மிகு ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தாம் தில்லைப்பதிக்கு எழுந்தருளியதன் நினைவாகச் "சிதம்பரம்" என்னும் தில்லைத் தலவரலாற்றை வெளியிட்டுதவியுள்ளார்கள். பன்னிரு திருமுறை முதலிய தமிழிலக்கியங்களின் ஆதரவுகொண்டும், கல்வெட்டுகளின் உதவிகொண்டும் செவ்விய தமிழ் நடையில், தெளிவானமுறையில் இந்நூல் எழுதப்பெற்றிருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும். இந்நூல் வெளியீடு தமிழ்மக்கள் எல்லோரும் எளியமுறையில் தில்லைவரலாற்றை யுணர்ந்துகொள்ளுதற்குப் பெரிதுந் துணைசெய்வதாகும். இங்ஙனம் பல்லாற்றானும் சைவமும் தமிழும் வளர அறிவுப்பணிபுரிந்துவரும் செந்தமிழ் நிலையமான, திருத்தருமபுர ஆதீனத் திருமரபு நீடூழிதழைக்க எனத் திருச்சிற்றம்பலவன் திருவடிமலர்களை இறைஞ்சிப் போற்றுகிறேன்.

---

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்
தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர்,
தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,

## திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தில்லைப் பெருங்கோயிலுக்கு எழுந்தருளுவதன் சார்பாக, அவர்களால், வெளியிடப்பெறும் இந்நூல், தில்லைப்பெருங்கோயிலின் வைதீக சைவ பௌராணிக சரித்திரகாலநிலைகளை விளக்கும் வரலாற்றுநூலாகவும், இப்பெருங்கோயிலின் உண்ணிலையுண்மைகளை யுணர்த்தும் அறிவு

நூலாகவும் திகழ்கிறது. சான்றோர் ஒருவர் ஓரூருக்கு எழுந்தருளுகின்றாரெனின், அவர்வருகை என்றும் நினைவுகூரத்தக்க அறிவுநிலைவரவாக நிலைபெறுவது வரலாறுகளிற்காணும் மரபு. திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர் நால்வரும், தில்லைமூதூருக்கு எழுந்தருளியபோது தில்லையெல்லைக்குட்பட்ட திருவேட்களத்தில் தங்கினாரென வரலாறு கூறுகிறது. அங்ஙனம் அப்பெருமக்கள் தங்கியருளிய தன்பயனே, அத்திருவேட்களம் இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தன்பால்தோன்றி அறிவுப்பணிபுரிதற்குச் சிறந்த நிலைக்களனாக விளங்குகிறதென்பது அறிஞர் அறிந்ததொன்று. அப்பெருமக்களின் நினைவு நிலவ, திருஞானசம்பந்தருக்குத் தில்லைப் பெருங்கோயிற்குள்ளே திருஞானசம்பந்தர் கோயிலொன்று இருந்ததெனவும், அது தமிழ்வேந்தர்களால் பொன்வேயப்பெற்றிருந்ததெனவும், திருநாவுக்கரசுதேவர்க்கு அவர் திருப்பெயரால் ஒரு திருமடமும், சுந்தரமூர்த்தி சுவாமிக்குத் திருத்தொண்டத்தொகையீச்சரம் என ஒருதிருக்கோயில் இருந்ததெனவும் தில்லைப்பெருங்கோயில் கல்வெட்டுக்களே கூறுகின்றன. இதனால், சிவநலம்வாய்ந்தசான்றோர்வரவு நிலைத்த சமயஞானவொழுக்கநெறி வளர்க்கும் குறிப்புக்களாக நிலைபெறுவது காணும் இன்றைய தமிழுலகு, திருத்தருமபுர ஆதீனத் தலைவர், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் நல்வரவால் இத்தகைய நலமொன்றை எதிர்பார்த்தது. அவ்வண்ணமே இந்நூல்வெளியீடு, ஒருநிலைத்த வரலாற்றாராய்ச்சிக் கருவியாய்ப் பயன்படுமுகத்தால் தமிழுலகைப் பொதுவாகவும் சைவவுலகைச் சிறப்பாகவும் இன்புறுத்துவதாக உளது. இன்ன நலத்தோடு எழுந்தருளித் தில்லைப்பெருமன்றில் நின்று ஆடும் நங்கள் கூத்தப்பெருமானைப்பணிந்து சிவானந்தப்பேரின்பத்தில் திளைக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் என்றுங்குன்றாப் பெருஞானப் பேரின்பவள்ளலாய் விளங்குவார்களாக என ஆடவல்லான் இணையடியை அன்போடு பரவுகின்றேன்.



சிதம்பரம் மேலைக்கோபுர வாயில்
கற்பகப்பிள்ளையார் சந்நிதியுடன்



க்ஷேத்திரபாலப்பிள்ளையார்
(கற்பக விநாயகர்) —பக்கம் 19

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# சிதம்பரம்

தொடக்கவுரை :

உலகமே புருஷவடிவம். அதற்குத் திருவாரூர் மூலாதாரம். திருவானைக்கா கொப்பூழ். அண்ணாமலை மணிபூரகம். சிதம்பரம் இருதயம். காளத்தி கண்டம். காசி புருவமத்திமம். இவ்வாறு உலகம் விராட்புருஷ வடிவமாக விளங்குகிறது.

ஒரு புருஷனுடைய துடிப்பும், நடிப்பும், ஒளியும், ஒலியும் இதயத்தின் தடைபடாத இயக்கத்தில் இருக்கிறது. அதுபோலவே உலகபுருஷனுடைய இயக்கம் இதயத் தாமரையாகிய சிதம்பரத்தில் விளங்குகின்ற நடராஜப்பெருமானுடைய ஆனந்த தாண்டவத்தில் அமைந்திருக்கிறது. இயக்கமாவன படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். இவ்வைந்தும் இறைவன் ஆட்டத்தில் இருக்கின்றன.

இதன் பெருமையைக்கருதி உலகம் இத்தலத்தைப் **பூலோககயிலாயம்** என வழங்குவதாயிற்று. திருவிளக்கு, திருநந்தனவனம், திருமாலையெனச் சிவத்தொடர்புடைய எல்லாவற்றிற்கும் அடைமொழி புணர்க்கப்பட்டாலும், சிவனாருக்குத் திருச்சிவனாரென அடைமொழி புணர்க்கப்படாமையை உலகம் நன்கறியும். அதுபோலச் சிவத்தலங்கள் யாவற்றிற்கும் திருவேட்களம் திருநெல்வாயில் என அடைமொழி புணர்க்கப்பட்டாலும், இது திருக்கோயிலென வழங்காது கோயிலெனவே வழங்கப் பெறும். இது இத்தலத்திற்குள்ள தனிச்சிறப்பு.

இறைவனது பூர்ணமான விளக்கம் அமைந்துள்ள இடம் இத்தலமேயாகும். சாத்திர தோத்திர நூல்களனைத்தும் இத்தலத்தை மிகமிகப் பாராட்டுகின்றன. மொழிக்கெல்லாம் அடியாகிய ஒலித்தோற்றம் உண்டானதும் இங்கேயே. சிலம்பொலியாகிய பரநாதமும் இத்தலத்திலேயே பிறந்தது. தலமுறைதொகுத்த உமாபதிசிவாசாரிய சுவாமிகள் இத்தலத்தையே முதற்கண் வைத்துள்ளார்கள்.

சைவத்திருமுறைகளைப் பாதுகாத்து உபகரித்த உயர்வினாலும், இசையுலகத்திற்கே பிறப்பிடமாக இருப்பதாலும், அருள்விளக்கத்து அடித்தலமாக இருப்பதாலும் இன்றும் என்றும் திருமுறை ஓதுபவர்கள் திருச்சிற்றம்பலம் என்று தொடங்கி



முடிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்றால் இதன் உயர்வு எத்தகைத்து. முத்தித்தலங்களை ஒருசேரத் தொகுத்துக் கூறவந்த திருத்தருமபுர ஆதீனத்து ஸ்தாபகர் ஸ்ரீமத். குருஞானசம்பந்த சுவாமிகளும்,

> "**தில்லைவனங்** *காசி திருவாரூர் மாயூரம்*
> *முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்*
> *காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி*
> *வாஞ்சியமென் முத்தி வரும்*"

என இதனையே முதற்கண்ணெடுத்துக் கூறியருளுவாராயினர். கருத, காணப், பிறக்க, இறக்க முத்திதரும் தலங்களாகிய திருவண்ணாமலை, தில்லை, திருவாரூர், காசி என்பவற்றுள் தில்லையும் ஒன்றாதல் காணலாம். அன்றியும் உமாபதிசிவாசாரிய சுவாமிகள் கோயிற்புராணத்துள், பிறந்தாலும் இறந்தாலும் தரிசித்தாலும் முத்திசித்திக்கும் தலம் சிதம்பரம் என்கின்றார்கள்.

## தலத்தின் மறுபெயர்கள்

தலத்திற்கு மன்று, அமலம், சத்து, உம்பர், இரண்மயகோசம், மகத், தனி, புண்டரிகம், குகை, வண்ககனம், சுத்தம், பரம், அற்புதம், மெய்ப்பதம், சுழுனைவழி, ஞானசுகோதயம், சிதம்பரம், முத்தி, பரப்பிரமம், சபை, சத்தி, சிவாலயம், பொது, சிற்றம்பலம், புலியூர், பெரும்பற்றப்புலியூர் முதலிய பல் பெயர்கள் உள்ளன.

## தலத்தின் தொன்மை

வேதமுடிபாகிய உபநிஷத்துக்களில் மைத்திரேயஉபநிஷத் ஒன்று. அதிலேயே हृदयाकाशमयंकोशं आनन्दपरमालयम् என்றபகுதி காணப்படுகிறது. இது பழங்காலமுதலே கோயிலுண்மையைப் புலப்படுத்தும். சரித்திரகாலங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட பழமையுடையதாலும் மணிவாசகர் காலத்தை இரண்டாம் நூற்றாண்டு என்றுகொண்டால் தில்லை அவருக்கும் ஒரு நூற்றாண்டு முற்பட்டது எனக் கொள்ளலாம். மன்றுதொழுத பதஞ்சலியோடு உடனுறைந்தவரான திருமூலர் கி. மு. 6ம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கருதினால் அவரால் குறிப்பிக்கப் பெற்ற திருவம்பலம் திருக்கூத்து, சிதம்பரம் முதலியன கி. மு. 6ம் நூற்றாண்டின் முதலிலேயே மிக விளக்கம்பெற்றிருந்தது என்று துணியக்கூடும். சோழமன்னர்கள் தங்கள் குலதெய்வமாகத் தில்லைப் பெருமானைக் கொண்டிருந்தமையால் முதற்பராந்தகன் காலந்தொட்டே தில்லை பாராட்டப்பட்டது என்பது தெளிவு.

இக்கோயிலின் அமைப்பின் சில பகுதியைப் பரீக்ஷித்தறிந்த ஐரோப்பிய அறிஞர்கள் 'இது 5ம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகவேயிருக்கவேண்டும்' என்று கருதுகின்றார்கள். ஈஸ்ட்லிச் பேராசிரியர் '5வது நூற்றாண்டுமுதல் 10, 11 வரையில் கட்டப்பட்ட கட்டிடங்கள் உள்ளன' என்கிறார். வாலண்டியப்



பிரபு 'தஞ்சை ராமேச்சுரம் கோயில்களைவிட மிகப் பழமையான சிற்பவேலைப்பாடுள்ளது சிதம்பரம்' என்கின்றார். பெர்ஹூஸன் புலவர் நிருத்தசபை, பாண்டிய நாயக சிற்பவேலைப்பாடுகளைப் பரிசோதித்து 'மிகமிகப் பழமையானது இது' என்கிறார். கி. பி. 927—977ல் இருந்த விஜயராய ஆதித்தவர்மாவால் புதிதாகக் கட்டப்பெற்ற கட்டிடங்களும் 1785ல் பச்சையப்ப முதலியார் மனைவி விஜயாளம்மாளின் தாயார் சுப்பம்மாள் செய்த கோபுரச் சீர்திருத்தமும் இதனுடைய வளர்ச்சியை மாற்றத்தை அறிவிக்கும் துணைகளாம்.

கி. பி. 6ம் நூற்றாண்டில் வந்ததாக அறிவிக்கப் படும் சுவேதவர்ம (இரணியவர்ம) சக்ரவர்த்தியால் இக்கோயில் கட்டப்பெற்றதென்றும் தெரிகிறது. கொங்குதேசமன்னர்கள் வரலாற்றுக் குறிப்பில் 927—977வரை சேரகர்நாடக நாடுகளையும் சேர்த்து ஆண்ட வீரசோழராயர் பெரும்பொருட் செலவில் கனகசபை அமைத்தார் என்றும், அவர்குமாரர் அரிவரிதேவர் 1004ல் கோபுரங்கள், சுற்றுப்பிராகாரங்கள், ஏனைய சபைகள் கட்டுவித்து, ஆபரணாதிகள் செய்வித்தார் என்றும் அறியப்பெறுகின்றன. இந்த வீரசோழராயரும் முதற்கூறிய விஜயராய ஆதித்தவர்மரும் ஒருவராக இருக்கவேண்டும். இத்தகைய சிலகுறிப்புக்களால் கி. மு. 6ம் நூற்றாண்டு அல்லது கி. பி. முதல் நூற்றாண்டு முதற்கொண்டே தில்லை இலக்கிய உலகிலும் இடம்பெற்றுவந்தமை அறியப்படும்.

## தலப்பெருமை

"சாந்தோக்கியோபநிடதத்தில் 'பிரமபுரமாகிய இச்சரீரத்தில் உள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாசம்' என்பது முதலாகத் தகரவித்தை கூறப்பட்டது. இங்கே ஆகாசம் என்றது பிரமமாகிய சிவத்தை என்க. புறத்தும், இவ்வாறே இப்பிரமாண்டம் பிரமபுரம் எனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்கும் தில்லைவனம் புண்டரீகவீடு எனவும், இத்தில்லைவனத்தில் நிருத்தஞ்செய்யும் சிவம் ஆகாசம் எனவும் கூறப்படும். இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம் ஆதலால், சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்கும் தானமாதலால், இத்தில்லையும் சிதம்பரம் எனப் பெயர்பெறும்.

இத்தகரவித்தையை உபாசிக்கும் முறைமை கைவல்லியோபநிடதத்தில் சிவனது தகரோபாசனா விதிப்பிரகரணத்திலே "ஏகாந்தஸ்தானங்களிலே சுகாசனத்தில் இருந்து, சுத்தனாகி, நேராகிய கழுத்துத் தலை உடம்புகளை உடையனாய், அத்தியாச்சிரமஸ்தனாய், இந்திரியங்கள் அனைத்தையும் அடக்கி, பத்தியால் தனது ஆசிரியரை இறைஞ்சி, இருதய புண்டரீகத்தைத் துகளற்ற சுத்தமாகக்கருதி, அதன் மத்தியத்திலே, தெளிவுடையவராய், சோகம் இல்லாதவராய், எண்ணப்படாதவராய், வெளிப்படாதவராய், அனந்தரூபராய், சிவனாய், அமிர்தராய்,



பிரமயோனியாய், தத்பதமாய், ஆதிமத்தியாந்த விகீனராய், ஏகராய், விபுவாய், சிதானந்தரூபராய், அரூபராய், அற்புதராய், உமாசகாயராய், பரமேசுவரராய், பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசாந்தராய், பூதயோனியாய், சமஸ்தசாட்சியாய் இருப்பவரைத் தியானித்து, (அதனால்) முனியாகி, இருளின்மேற்போவான். அவர் பிரமா; அவர் சிவன்; அவர் இந்திரன்; அவர் அழிவற்றவர்; மேலானவர்; சுவப்பிரகாசர்; அவரே விஷ்ணு; அவர் பிராணன்; அவர் காலன்; அக்கினி; அவர் சந்திரன்; அவரே இருந்ததும் இருப்பதுமாகிய எல்லாமானவர்; என்றும் உள்ளவர். அவரை அறிந்து, (அதனால்) மிருத்தியுவைக் கடப்பன். முத்திக்கு வேறுவழி இல்லை." என்று கூறப்பட்டது. இதனால், பிரம விஷ்ணு ருத்திரர்களோடு கூடிய சகல சகத்தும் சிவனது விபூதியே ஆதலால் சிவனே சருவோற்கிருஷ்டர் என்பது தெளிவுறுத்தப்பட்டமைகாண்க. மிருத்தியு என்பது ஆணவமலம்; அது மிருகேந்திரத்திற் கண்டது.

மானவபுராணத்து ஆறாம் அத்தியாயத்தில் "முன்னே சத்தியபராயணனாகிய ஆசுவலாயன முனிபகவானும், பரமேஷ்டியுமாகிய செகந்நாதரை அடைந்து" என்றற்றொடக்கத்தால் ஆசுவலாயனர் வினாவினமைகூறி, அதற்குப் பரமேஷ்டி விடை கூறினமை சொல்லத்தொடங்கி, "எண்ணப்படாதவராய் வெளிப்படாதவராய்" என்பது முதலாகக்

கொண்டு விரிவாகச் சிவத்தியானப் பிரகாரத்தைக் காட்டி, "இப்படி முனியானவன், நேரேசாக்ஷியாய், இருளைக்கடந்தவராய், பூதயோனியாய், புரப்பகைவராய் இருப்பவரைத் தியானித்து, தனது ஆத்தும வித்தையினால் முத்தி அடைவன். தியானிக்கப்படும் பொருளாகியவர் சாம்பசிவன்; சநாதநர்; பிரமா; விஷ்ணு முதலிய ரூபங்களாகக் கூறுபட்டாற்போல் இருப்பர். அவர் பிரமா; அவர் சிவன்." என்று தொடங்கி "அவரை அறிந்து மிருத்தியுவைக்கடப்பான். அவரைப் பிரத்தியகான்மாவாக அறியும் அறிவேயன்றி முத்திக்கு வேறுவழி இல்லை." என்னுந் துணையால் இந்தச் சுருதிப்பொருளே காட்டப்பட்டது. பிரமகீதையிலும் இப்பொருளே உணர்த்தப்பட்டது.

தாவரமாகிய அண்டமும் சங்கமமாகிய பிண்டமும் சமமாமாதலால், பிண்டமாகிய சரீரத்தில் இடைக்கும் பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுழுமுனைநாடியும், பிரமாண்டத்திலுள்ள இப் பரதகண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில்லையும், கருணாநிதியாகிய சிவன் ஆனந்தநிருத்தஞ் செய்யும் ஸ்தானமாம்" என்று ஆறுமுக நாவலர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

## தல அமைப்பு

தலமானது கிழக்கே திருவேட்களத்தையும், தெற்கே கொள்ளிடப்பேராற்றையும், மேற்கே



நாகசேரி குளத்தையும், வடக்கே வெள்ளாற்றையும் தனக்கு எல்லையாகக்கொண்டு விளங்குவது. சிதம்பரம் புகைவண்டி நிலையத்தினருகில் பாலமான் என்றசிற்றாறு குறுக்கேஓடுகிறது. இதனைக்கடந்தே நகருக்குள் செல்லுதல் வேண்டும். இது தலத்துத் தெற்குப்பக்கத்திலிருந்து ஒரு மாலைபோல நகரத்தைச் சுற்றிச் செல்கிறது. நகரத்தின் நடுவில் இவ்வாறு வடக்குநோக்கி-யோடுவது சிறந்த புண்ணிய விசேடத்தைக் குறிப்பதாகும். தலத்தின் வடக்கே ஓடையொன்று இத்துடன் கலக்கிறது. அந்த ஓடை தில்லைக்காளிகோயில் பக்கத்திலிருந்துவருகிறது.

நகர் பல புறவீதிகளின் நடுவே ஒழுங்கான நான்கு வீதிகளையுடையது. வீதியின் இருமருங்கும் 'செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கும்' என்ற சம்பந்தப்பெருமானின் திருவாக்கை மெய்ப்பிக்கும் மாடங்கள் பல விளங்குகின்றன. மேலவீதியில் நகர்ச்செல்வத்தின் புகலிடமாகிய கடைவீதிகளும் விளங்குகின்றன.

நகரில் ஆங்காங்கு கல்விச்செல்வம் வளருதற்கு, தொடக்கநிலைப்பள்ளிமுதல் உயர்தரக்கல்லூரிவரை பல நிலையங்களும் விளங்குகின்றன. சிறப்பாக ஆறுமுக நாவலர் தமிழ்க்கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை யிரண்டும் இடையீடின்றி நடைபெற்று வருதல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். மற்றும் நகரப்பாதுகாப்புக்கு வேண்டிய நகராள்

கழகம், ஊர்காவல்மன்றம், ஆவணக்களரிநிலையம், மருத்துவவிடுதி, நீதிமன்றம், அஞ்சல்நிலையம் முதலியவைகளும் ஆங்காங்கு அமைந்துள்ளன.

சிதம்பரம் இன்று ஒரு கலைநிலையமாக விளங்குகிறது. அங்கே தமிழ், வடமொழி, ஆங்கிலம், இசை, கைத்தொழில், தேவாரப்பண், விஞ்ஞானம் முதலிய பல பிரிவோடுகூடிய பல்கலைக்கழகம் அமைந்திருக்கிறது. அதனை அமைத்தவர்கள் பெருங்கொடை வள்ளலாகிய செட்டிநாட்டரசர், ராஜா. ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்களாவார்கள். இவர்களின் முன்னோரான சிதம்பரஞ் செட்டியாரவர்கள் ஆனந்தக்கூத்தர் அருள்நிலையத்தைப் புதுப்பித்து அன்னசத்திரம்கட்டிவைத்தார்கள். தேவாரப் பாடசாலை நிறுவியுள்ளார்கள். இவர்களின் இளவல் இராமசாமிச் செட்டியாரவர்கள் நெடுநாள் நகராண்மைக்கழகத் தலைவராயிருந்து செய்ததொண்டுகளுள் குடிதண்ணீர் வசதிக்காகக் குழாயமைத்தது சிறப்புடையதொன்று. மேலும் உயர்தரக்கலாசாலை ஒன்றமைத்து அறியாமையைப் போக்கவும் முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

தேவாரப்பாடசாலைக்கெல்லாம் தந்தை என்று சொல்லக்கூடியது பழனியப்ப முதலியார் தேவாரப் பாடசாலையாகும். முதன்முதல் ஏற்பட்ட பாடசாலை இதுதான்.



## தலத்திலுள்ள கோயில்கள்

***வேடன்பிள்ளையார் கோயில்:—*** இது நகரின் கிழக்குப்பக்கத்தில் இருக்கிறது. சிங்கவர்மன் தலயாத்திரையாகத் தென்னாட்டுக்கு வருங்காலத்தில் காஞ்சியிற்கண்ட ஒருவேடனோடு தில்லைக்குவந்தான். அவ்வேடன் காட்ட வியாக்கிரபாதரைக் கண்டான். இவ்வாறு அவ்வேடன் நின்றுகாட்டிய இடத்தில் விளங்கித்தோன்றுவது இவ்விநாயகராதலின் இவர் வேடன்பிள்ளையார் எனுந் திருநாமம்பெற்றார்.

***செங்கழுநீர்ப்பிள்ளையார் கோயில்:—*** இது வேடன்பிள்ளையார் கோயிலுக்கு மேற்கில் ஒரு பர்லாங் தொலைவிலுள்ளது. ஏற்கனவே செங்கழுநீரோடை இருந்ததால் அதன் பக்கத்தில் விளங்கிய இவர் செங்கழுநீர்விநாயகர் என்ற திருநாமத்தினைப் பெற்றுவிளங்கினார். திப்புசுல்தான் கலகத்தில் இவர் துதிக்கை ஒடிபட்டதாகவும், கலகம் முடிந்ததும் இதனையப்புறப்படுத்தி வேறு விநாயக உருவத்தைப் பிரதிட்டிக்க முற்பட்ட அன்பரது கனவில் இவர் எழுந்தருளி "கையொடிந்த உன் மகனை நீக்கி விடுவாயோ" என அருளிச்செய்ததாகவும், அப்பொழுது தனது தவறினையுணர்ந்த அவ்வன்பர் தன் எண்ணத்தைக்கைவிட்டு இவரையே வழிபட்டதாகவும் கர்ணபரம்பரைச் செய்தி வழங்குகிறது. இது மேற்குப்பார்த்தசந்நிதி.

**சேக்கிழார் கோயில்:—** இது ஞானப்பிரகாச குளத்தின் வடகிழக்குமூலையிலுள்ளது. ஆறுமுக நாவலர் விருப்பப்படி, கட்டப்பெற்றது. சேக்கிழார்த் திருவுருவம் ஒருகாலை ஊன்றி யொருகாலைமடக்கி யோகாசனத்திருத்தல் போல அமைக்கப்பெற்று உள்ளது. ஒருகையில் பெரியபுராணஏடு இருப்பதை இன்றுங் காணலாம். இது தெற்குப்பார்த்தசந்நிதி.

**கமலீசுவரன் கோயில்:—** சுவாமி, அம்மன், சண்டேசர் உள்ளிட்ட பரிவார மூர்த்தங்களுடன் அமைந்துள்ள ஆலயம் இது. மேற்குப்பார்த்த சந்நிதி. இக்கோயிலின் பெயராலேயே இது இருக்கும் தெருவும் வழங்கப்படுகின்றது. இது திருமகள் வழிபட்டுப் பேறுபெற்ற இடம்.

**தேரடிப்பிள்ளையார் கோயில்:—** இது கீழவீதியின் புறவீதியில் கீழசந்நிதிக்கு நேராக உள்ளது. தேரடியைச்சேர்ந்து இருப்பதால் இப்பெயர் வழங்குகிறது.

**மாரியம்மன் கோயில்:—** இது கீழத்தெரு மாரியம்மன் கோயில் என்று வழங்கப்பெறும். இது வண்டிக்காரத்தெரு மூலையில் இருக்கிறது. பிரசித்தமான ஊர்காவல் தெய்வம்.

**காளியம்மன் கோயில்:—** தெற்குச் சந்நிதிக்கு நேராக மாலைகட்டித்தெரு மேல்புறக் கோடியில் உள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி. அம்மை



வீராசனத்தில் நான்கு திருக்கரங்களுடன் விளங்குகின்றாள். சூலமும் கபாலமும் இவள்கரத்தை அழகு செய்கின்றன.

**வீரபத்ரசுவாமி கோயில்:—** காளிகோயிலின் பின்புறம் ஒரு பர்லாங் தொலைவிலுள்ளது. இதில், தக்கன் வேள்வியைத் தகர்த்தற் பொருட்டு அவதரித்த வீரபத்திரமூர்த்தி விளங்குகிறார். கோயில் பழங்காலத்து அழகிய திருப்பணி.

**செல்லியம்மன் கோயில்:—** இது நகரின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது. இதுவும் ஊர்காவலுக்குரிய தெய்வம்.

**நந்தனார் கோயில்:—** இது தலத்தினுடைய தென்மேற்கு எல்லையில் இருக்கிறது.

**கூத்தாடும்பிள்ளையார் கோயில்:—** மேற்குச் சந்நிதிக்கு ஒரு பர்லாங்கு தூரத்திலிருக்கிறது.

**இளமையாக்கினார் கோயில்:—** மேற்கூறிய விநாயகர் கோயிலிலிருந்து ஒருபர்லாங்கு தெற்கு நோக்கிச்சென்றால் இத்திருக்கோயிலையடையலாம். இது நகரத்தார்திருப்பணி. கிழக்குநோக்கியசந்நிதி. கோயிலின் முன்பு திருநீலகண்டநாயனார் மூழ்கிச் சபதம்செய்துகொடுத்த குளம் இருக்கிறது. சுவாமி பெயர் மாத்யந்தனேசுவரர். வியாக்ரபாதர் ஆன்மார்த்தமாகப் பூசித்ததலம். கணம்புல்லர் திருமுடியால் விளக்கெரித்ததலமும் இதுவே. திருநீலகண்டர்

திருநக்ஷத்திரத்தில் அவர் உற்சவம் நடைபெறுகின்றது. நவராத்திரி உற்சவம் மிகவிமரிசையாக நடைபெறும். திருப்புலீச்சர மான்மியம் என்ற நூல் இதன்பெருமையைக் கூறும்.

**அனந்தேசுவரர் கோயில்:—** இது பதஞ்சலி முனிவர் ஆத்மார்த்தமாகப் பூசித்ததலம். நாகசேரிக் குளத்தின் கீழ்கரையிலுள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி.

**தில்லைக்காளி கோயில்:—** இது தலத்தின் வட எல்லையில் இருக்கிறது. தாரகனை யழித்தற் பொருட்டுத் தோன்றியகாளிதேவி அசுரனையழித்த பின்பும் கோபம் தணியாமையால் உலகத்தை அழிக்கத் தொடங்கவே, பெருமான் ஊர்த்துவ தாண்டவஞ்செய்து காளியின் கோபத்தை அடக்கித் "தில்லையின் வடஎல்லையில் அமர்க" என ஆணை தந்தனர். இதுவும் பிரசித்திபெற்ற ஆலயங்களுள் ஒன்று. இதன்முன்னர் அழகிய பெருங்குளமும், பக்கத்தில் ஓடையும் உள்ளன.

**நரமுகப்பிள்ளையார் கோயில்:—** தேரோடுந் தெற்குவீதியின் நடுவிலுள்ளது. வடக்குநோக்கிய சந்நிதி. விநாயகர் மனிதமுகத்தோடு கால்களை மடக்கிக்கொண்டு காட்சியளிக்கின்றார்.

**மத்யந்தனேசுவரராலயம்:— வியாக்கிரபாதர் தந்தை மத்யந்தன முனிவர் வழிபட்ட தலம்.**



தில்லைவனமுடைய பரமேஸ்வரி

(தில்லைக்காளி) —பக்கம் 14

நகர்க்குத் தெற்கே ஒன்றரைக்கல் தொலைவில் உள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி. ஆலயத்துக்கு எதிரில் புலிமடு என்ற ஓடை இருக்கிறது.

## தலத்திலுள்ள தீர்த்தங்கள்

ஞானப்பிரகாசர்குளம்:— இது யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசரால் வெட்டப்பட்டது. ஊருக்குத்தென்கோடியில் இருக்கிறது. மிகப்பெரிய குளம். இதில் தெப்போற்சவம் நடைபெறும்.

**ஆயிகுளம்:—** இது நகர்க்குத் தெற்கேயிருக்கிறது. குடிதண்ணீருக்குப் பயன்படாதது.

**ஓமகுளம்:—** இது நந்தனர் தீமூழ்கிய இடம், நகர்க்குத் தென்மேற்கே இருக்கின்றது.

**புலிமடு:—** இது நகருக்குத் தெற்கேயுள்ளது.

**வியாக்ரபாத தீர்த்தம்:—** புலீச்சரத்தருகில் உள்ளது. இளமையாக்கினர்குளமெனவும் வழங்கப்படுகின்றது. மிக அழகானது.

**அனந்த தீர்த்தம்:—** இது நகருக்கு மேற்கே அனந்தேச்சுவரர் கோயிலில் உள்ளது.

**நாகசேரி:—** அனந்தேச்சுரத்துக்குப் பின்புறமுள்ள பெரிய குளமாகும். ஆதிசேடன் பதஞ்சலி

இவைகளை அடுத்து வெளிப்புற மதிலும், ராஜ கோபுரத்தை யடுத்து உட்புறமதிலும், அதனை அடுத்துச் சுற்றாலைமதிலுமாக மூன்று உறுதியான கருங்கல் மதில்கள் உள்ளன. ராஜகோபுரங்கள் மேல்நிலைப் பத்திவரை கருங்கல்லாலும், அதன் மேற்பகுதி செங்கல்லாலும் ஆனவை. கோபுரங்களில், புராண இதிகாசங்களில் கூறப்படுமிறைவன் அருள்விளையாடல்களும், கூத்தின் விகற்பங்களும் கண்டவர்மனத்தைக் கவரும் நிலையில் சுதைச்சிற்பங்களாகத் தோற்றமளிக்கின்றன.

கீழக்கோபுரம் கி. பி. 1250ல் ஆண்ட மதுரை சுந்தரபாண்டிய தேவனால் கட்டப்பட்டது. அதன் பின் பச்சையப்ப முதலியாரால் செப்பனிடப்பட்டது. அதற்கடையாளமாக அவர் உருவமும் அவர் மனைவியின் உருவமும் இதில் இருப்பதைக் காணலாம். இதில் நாட்டிய விகற்பங்களை அறிவிக்கும் திருவுருவங்கள் அமைந்து இருந்தன. சுந்தர பாண்டியன் சிதம்பரத்திற்குப் பல தொண்டுகள் செய்தமையை 177, 178, 183, 184எண் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இதில் பதஞ்சலி, வியாக்ரபாதர், சண்டேசாநுக்கிரகர், போர்வீரனைப் போன்ற சிவனார் ஆகியோரது உருவங்கள் அமைந்துள்ளன. சண்டீசர் உருவத்தின் கையில் பரசு (கோடரி) இருக்கிறது. ஏழு குதிரைகள் பூட்டப்பெற்றதும் அருணனால் செலுத்தப் பெறுவதுமான பெரியதேர் ஒன்றில், சிவனும் விஷ்ணுவும் அமர்ந்திருப்பதாக

ஒரு சிற்பமுள்ளது. இதேமாதிரி கங்கைகொண்ட சோழபுரத்திலும் ஒரு சிற்பம் உண்டு. ஆனால் அதில் தேரோட்டுவது சனிபகவான்.

வடக்குக் கோபுரம் 1509-1530 வரை விஜயநகர வேந்தனயிருந்து ஆண்ட கிருஷ்ணதேவராயரால் அவரது ஒரிசாவெற்றி நினைவாகக் கட்டப்பட்டது. தரைமட்டத்துக்குமேல் 140 அடி உயரமுள்ளது.

தெற்குக்கோபுரவாயில் 1243ல் ஆண்ட கோப் பெருஞ்சிங்கதேவனென்ற பல்லவ அரசனல் கட்டப் பட்டது. இவன் சிதம்பரத்திற்கு வந்திருந்தசெய்தி யையும் நிலமளித்தசெய்தியையும் நடராஜர்கோயில் இரண்டாவது பிராகார மேற்குச் சுவரிலுள்ள கல் வெட்டு அறிவிக்கின்றது.

கிழக்குமேற்குக் கோபுரங்களில் நூற்றெட்டு நாட்டியபேதங்களை அறிவிக்கும் சிற்பங்கள் அமைந் துள்ளன.

கிழக்குக் கோபுரவாயிலாக மணிவாசகரும், தெற்குக் கோபுரவாயிலாக ஞானசம்பந்தப்பெருமா னும், மேற்குக் கோபுரவாயிலாக அப்பரடிகளும், வடக்குக் கோபுரவாயிலாகச் சுந்தரமூர்த்திகளும் நடராஜப்பெருமானை வழிபட எழுந்தருளினர்களா தலின் சத்புத்ரமார்க்கத்தால் தந்தை இருக்கிற இடத்தை நேரேயடைவிக்கின்றபெருமையும், தாஸ மார்க்கத்தால் வலதுகைப்புறமாகவந்து வழிபட்டு



ஏவல்கேட்கும் பெற்றிமையும், சகமார்க்கத்தால் பின்புறமாக வந்து வேண்டியதையெல்லாம் முடித் துக் கொள்ளுகின்ற விழுப்பமும், சன்மார்க்கத்தால் அருட்சத்திவழியாகக் கொண்டு இடப்பக்கமாக இறைவன் திருமுன்பு அடையும் ஏற்றமும் ஆகிய இந்நான்கு மார்க்கங்களும் நான்கு கோபுரங்களின் நிலையால் அறியப்படுவனவாகும்.

## மூர்த்திகளும், மண்டபங்களும்

**முக்குறுணிவிநாயகர் ஆலயம்:—** வெளிப் பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் உள்ளது. விநாயகர் திருஉருவம் மிக அழகானது. பெரியது. எட்டடி உயரமுள்ளது.

**கற்பகவிநாயகர் ஆலயம்:—** கற்பகம்போல அடியார்களின் கருத்தறிந்து முடிக்கவல்ல பெருமா னதலின் கற்பகவிநாயகர் எனப் பெயர் பெற்றார். ஆலயம் மேலைக்கோபுரத்தை அடுத்து இடதுகைப் புறமாக உள்ளது. மேற்குப்பார்த்த சந்நிதி. இவர் திருவுருவம் நடன திருக்கோலமாகத் திருக்கோபுரத் திலேயே செதுக்கப்பெற்றிருக்கின்றது. துதிக்கை யைச் சேர்த்து ஏழு திருக்கரங்களுடன் காட்சி அளிக்கின்றார்.

"தன்னேங்கு மலரடியும் தளிரோங்கு சாகைகளும்
மின்னேங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னேங்க நடமாடு மன்றேங்கு மதிற்குடபால்
பொன்னேங்கல் முன்னேங்கும் பொற்பமர்கற்பகம் போற்றி"

என்ற கோயிற்புராணச்செய்யுள் இவரது தியான சுலோகம்போல, அமைந்துள்ளது. தலவிநாயகரும் இவரேயாவர்.

**சண்முகர் ஆலயம்:—** மேலைக்கோபுரத்தை அடுத்து உட்புறமாகக் கிழக்குநோக்கிய சந்நிதியாய் உள்ளது. நவவீரர்களின் திருவுருவங்களும் இதில் உள்ளன. இவருக்குக் கந்தசஷ்டிவிழா நடக்கிறது. இதுபோலவே மற்றைய மூன்று கோபுரங்களிலும் முருகனாலயம் இருக்கின்றது. ஒவ்வொன்றுக்கும் திருப்புகழ்ப்பாக்கள் தனித்தனி உள்ளன.

**மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில்:—** மேலைப் பிராகாரத்தில் சிவகங்கையைச்சேர இருக்கிறது கிழக்குநோக்கிய சந்நிதி. சொக்கலிங்கம், மீனாட்சி இருவரது திருவுருவங்கள் இருக்கின்றன.

**ஒற்றைக்கால் மண்டபம்:—** மீனாட்சிசுந்தரேசுவரர் கோயிலை அடுத்துள்ள, சிவகங்கை தீர்த்த மண்டபத்தின் முன்னுள்ள விநாயகராலயம் இது. ஒரு தூண் இருப்பதால் இப்பெயர்பெற்றது.

**நூற்றுக்கர்ல் மண்டபம்:—** நூறு கால்களை யுடையது. ஒற்றைக்கால் மண்டபத்தை அடுத்து உள்ளது. இன்று அடைபட்டிருக்கின்றது. இது வரலாற்றுத் தொடர்புடையது. கட்டிமுடித்தவன் தொண்டைநாட்டு மணவிற்கூத்தனாகிய காலிங்கன் என்பான். இதனை அறிவிக்கும் பாடல்:—



*[1]"மல்லற் குலவரையான் நூற்றுக்கால் மண்டபத்தைத்*
*தில்லைப் பிரானுக்குச் செய்தமைத்தான்—கொல்லம்*
*அழிவுகண்டான் சேரன் அளப்பரிய வாற்றற்*
*கிழிவுகண்டான் தொண்டையான் ஏறு."*

**பஞ்சமூர்த்திதீர்த்தமண்டபம்:—** நூற்றுக்கால் மண்டபத்தின் முன் சிவகங்கை ஓரமாக உள்ள படித்துறைமண்டபம். இதில் தைப்பூசம், கிரஹண புண்ணியகாலங்கள் முதலாகிய விசேட நாட்களில், பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளி வந்து தீர்த்தம் கொடுத்தருளுவர்.

**அம்மன் (பராசக்தி) கோயில்:—** இது தனித்த பெரு ஆலயம். கிழக்குநோக்கிய சந்நிதி. இரு பிராகாரங்களை உடையது. இதன் திருச்சுற்றுமதிலை எடுத்தவன் காலிங்கர்கோனே. இதனை அறிவிக்கும் பாடல்:—

*[2]"எவ்வுலகும் எவ்வுயிரும் ஈன்றும் எழிலழியாச்*
*செவ்வியாள் கோயில் திருச்சுற்றைப்—பவ்வஞ்சூழ்*
*எல்லைவட்டந் தன்கோற் கியலவிட்ட வாட்கூத்தன்*
*தில்லைவட்டத் தேயமைத்தான் சென்று."*

வர்க்குஸன் என்னும் பேராசிரியர் "இந்திய சிற்பக்கலை" என்னும் நூலில் இக்கோயிலைப்பற்றி "கோயில் தலைவாய்மண்டபம் தனி அழகு படைத்தது. ஐம்பது அடி அளவுள்ள இம்மண்டபத்தின்

---

1, 2 S. I. I. Vol. iv P. 33. 34.

நடுப்பாகம்மட்டும் இருபத்தொன்றரை அடி அகலமுள்ளது. இதுவெளவால்நெற்றிமண்டபமாக இருந்தது. சுற்றுப்பக்கங்களிலும் இரண்டடுக்குமாளிகைகள் அமைந்திருக்கின்றது. இம்மண்டப முகட்டின் கீழ் அமைந்திருக்கின்ற தூணொன்றில் சங்கிலித் தொடர் தொங்குகிறது'' என்று பாராட்டியுள்ளார்.

*துர்க்கைகோயில்:—* அம்மன்கோயிலையடுத்து வாயிலின் வடபால் உள்ள மண்டபத்தில் இத்திருவுருவம் காட்சி யளிக்கிறது.

*பாண்டியநாயகர் கோயில்:—* இது வெளிப்பிராகாரம் வடமேற்குமூலையிலுள்ளது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் திருப்பணி. ஒரு தேர்போல் வேலைசெய்யப்பெற்று உருளைகள் மாட்டி யானையைப்பூட்டி இழுப்பதுபோல் இது அமைந்துள்ளது. சித்திரம் செறிந்த தூண்களை உடையது. முருகர் மயிலின்மீது ஆறுமுகம் பன்னிருகையுடன் வள்ளி தேவசேனை சமேதராக' எழுந்தருளியிருக்கின்றார். உருவம் ஆறடி. அழகானவேலைப்பாடு. இவ்வாலய மண்டப உட்புறத்தில் இப்பொழுது கந்தபுராணச் சித்திரங்களும் திருமுறையாசிரியர் திருவுருவங்களும் தீட்டப்பெற்று அழகு செய்கின்றன. இச் சித்திரங்களைப் பார்ப்பதற்குப் பலர் இன்றும் வந்து கண்டு செல்கின்றார்கள்.

*நவலிங்கம் கோயில்:—* இது சிவகங்கையின் வடபாலுள்ளது. புதியகோயில். பதினைந்து ஆண்டு



பாண்டிய நாயகம்
(சுப்பிரமணியப்பிள்ளையார்) —பக்கம் 22

களுக்கு முன் காடுமூடிக்கிடந்த இது, துறவி ஒருவரால் காடுவெட்டிக் காணப்பட்டது. நடுவிலுள்ள மகாலிங்க மூர்த்தி பெயர்க்கமுடியாததால் அப்படியேவைத்துக் கட்டப்பெற்றுள்ளது. ஏனைய இலிங்க உருவங்கள் எடுப்பிக்கப்பெற்று இருமருங்கும் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கின்றன. நவக்கிரகங்களால் பூசிக்கப்பெற்றமூர்த்திகள் இவைகள்.

**ஆயிரக்கால் மண்டபம்:—** இது ராஜசபை எனப்படும். நவலிங்கம்கோயிலின் எதிரில் உள்ளது. ஆனந்தக் கூத்தர் ஆறுமாதத்திற்கு ஒருமுறை (மார்கழி, ஆனி) எழுந்தருளியிருந்து அபிஷேகங் கொண்டருளுவர். தரிசனம் நடைபெறுவதும் இங்குதான். வரிசைக்கு இருபத்துநான்கு தூண்கள் வீதம் நாற்பத்தொரு வரிசைகளாகத் தூண்கள் அமைக்கப்பெற்று உள்ளன. நடுவில் வெளவால் நெற்றிமண்டபம் அமைக்கப்பட்டதால் ஐம்பத்தாறு தூண்கள் குறைவு. ஆதலின் இம்மண்டபத்தின் வெளியிலுள்ள தூண்களையும், சேர்த்து எண்ணிக் கொள்ளவேண்டும். மேனாட்டுச் சிற்பவிற்பன்னர்கள் வெளவால் மண்டபத்தைக் கண்டுவியந்து பேசியுள்ளனர். இத்தகைய மண்டபங்கள் 1585—1685 இவற்றிற்கிடையில் முகமதியர் குடியேறியகாலத்தில் அவர்கள் கற்பனைக்கு இணங்கக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். மெக்கன்ஸியின் கையெழுத்துப் பதிவுகளும், ஸ்தல மன்னர்கள் கோயிலுக்கு மானியம் விட்டகாலமும் அதுவே

என்று கருதுகின்றன. சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர் புராணத்தை இயற்றுதற்கு இடமாக இருந்ததும் இம்மண்டபமே. இதன் அகலம் சுமார் 190அடி. நீளம் 340 அடி.

*சிவகங்கை:*— சுமார் நூற்றறுபதடி நீளமும் நூறடி அகலமுமுள்ளது. இதன் நாற்புறமும் திருச்சுற்றுமாளிகையும் அழகிய படிகளும் அமைந்திருக்கின்றன. இதற்குக் கீழ்பால் மேல்பால் வடபால் ஆகிய மூன்று பக்கங்களிலும் இறங்குந் துறைகள் உள்ளன. துறைகள் ஒவ்வொன்றிலும் மண்டபங்கள் விளங்குகின்றன. இம் மூன்று துறைகளும் இறைவனின் மூன்று திருக்கண்களை ஒத்திருப்பனவாகும். மற்றும், கிழக்கிலும் மேற்கிலுமுள்ள இரு மண்டபங்களில் முறையே நடராஜப்பெருமானும், பஞ்சமூர்த்திகளும் தீர்த்தம்கொடுக்க வடபாலுள்ள நெற்றிக்கண் போன்ற துறைமண்டபத்தில் முருகப்பெருமான் தீர்த்தங்கொடுப்பது சமயநுணுக்கத்தை அறிவிக்கும் சிறந்த நிகழ்ச்சியன்றோ! இத்தீர்த்தத்தின் முதல் திருப்பணியும் மேற்கூறிய காலிங்கனுடையதே எனச் சாஸனம் கூறும்.

*ஐந்துசபைகள்:*— சித்சபை; இது நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம். பரஞான சொரூபமான பராசக்தி வடிவம். சிற்றம்பலம் என்பதும் இதுவே. முன்னொருகால் வானுலகத்துள்ள தேவர்கள் யாவரும் இதனைத்தொழுதும் போற்றியும்



கனகசபை

(பொன்னம்பலம்) —பக்கம் 26

தூயசெம்பொன்னினல் எழுதி மேய்ந்தனர். பின் பொன்வேய்ந்து புதுப்பித்தவன் முதற்பராந்தகன் (907—953) என்று திருவாலங்காட்டுப் பட்டயம் அறிவிக்கின்றது. இந்நிகழ்ச்சியைக் கண்டராதித்த தேவரும் திருவிசைப்பாவில் கூறியுள்ளார். 'எழில் பெறும் இமயத்தியல்புடை யம்பொற் பொலிதரு புலியூர்ப்பொது' என்று திருவாசகம் சிறப்பித்ததும் இதனையேயாம். சிவாயநம என்ற பஞ்சாக்ஷரத்தை ஒவ்வொரு ஓட்டிலும் எழுதிவேய்ந்ததாகத் தில்லை உலா கூறுகிறது. இன்னும் முதற்பராந்தகனுக்கு முன்புகூட, சிம்மவர்மனுகிய இரணியவன்மனும் பொன்வேய்ந்தவனுவான். இவனது வருகையைப் பற்றியும், உடற்பிணிபோக்கிக் கொண்டதைப் பற்றியும் கோயிற்புராணம் கூறுகின்றது. மணவிற் கூத்தன் காலிங்கனும் பொன்வேய்ந்ததாக அவனது கல்வெட்டுக் கூறுகிறது.

இச்சபையில் நடராஜப்பெருமானின் வலது புறத்தில் சிதம்பர இரகசியம் இருக்கிறது. இதில் மந்திரசொருபமாய திருவம்பலச்சக்கரம் அமைக்கப் பட்டுள்ளது. ஆண்டுக்கொருமுறை புனுகுசட்டம் சாத்தப்படும். தங்கவில்வமாலை இதன்மீது சாத்தப் பெற்றிருக்கிறது. இதன்மீது தொங்கும் திரை வெளிப்புறம் கருப்பாகவும் உட்புறம் சிவப்பாகவும் உள்ளது. மறைப்புச்சத்தியே அருட்சத்தியாக மாறி உபகரிக்கும் என்பதனை இது விளக்குகின்றது. நடராஜப்பெருமான் திருமஞ்சனம் கொண்டருளு

கின்ற இடம் கனகசபை[1] எனப்படும். இதனையும் மணவிற் கூத்தன் காலிங்கன் பொன்வேய்ந்தான் என்று கல்வெட்டு அறிவிக்கிறது. உற்சவமூர்த்திகள் எழுந்தருளி இருக்கின்ற இடம் தேவசபை எனப்படும். பேரம்பலம் என்பதும் இதுவே.

அநபாயனின் முன்னோர்கள் தம்குலதெய்வமாய நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சிற்றம்பலத்தைப் பொன்மயமாக்கினார்கள்; ஆதலினால் அநபாயன் இப் பேரம்பலத்தைப் பொன்னினால் மெழுகிப் பொன்மயமாக்கினான் என்றுதெரிகிறது[2] இதனை,

"சேயவன் திருப் பேரம்பலம் செய்ய
தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
ஆயசீர் அநபாயன்......"

என்றபெரியபுராணப்பாடற்பகுதி தெளிவுறுத்தும். பின்னர், இப்பேரம்பலத்தைச் செம்பினால்மெழுகி அழகுபெறச்செய்தான் காலிங்கன் என்பது,

---

[1] கனகசபை இது **பொன்னம்பலம்**; திருவாலங்காடு **இரத்னசபை**; மதுரை **ரஜதசபை** (வெள்ளியம்பலம்); திருநெல்வேலி **தாமிரசபை**; திருக்குற்றாலம் **சித்திரசபை.** [2] 'தில்லைத் திருஎல்லை பொன்னின்மயமாக்கிய வளவர்" (சண்டீசர் பா. 8.), "மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும் சென்னி" (புகழ்ச்சோழ பா. ௮.) என்பன அநபாயன் தில்லைஎல்லை, திருவீதி ஆகியவைகளையும் அழகு பெறச்செய்த செய்தியை அறிவிக்கும்.

கின்ற இடம் **கனகசபை**[1] எனப்படும். இதனையும் மணவிற் கூத்தன் காலிங்கன் பொன்வேய்ந்தான் என்று கல்வெட்டு அறிவிக்கிறது. உற்சவமூர்த்திகள் எழுந்தருளி இருக்கின்ற இடம் **தேவசபை** எனப்படும். பேரம்பலம் என்பதும் இதுவே.


அநபாயனின் முன்னோர்கள் தம்குலதெய்வமாய நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சிற்றம்பலத்தைப் பொன்மயமாக்கினார்கள்; ஆதலினால் அநபாயன் இப் பேரம்பலத்தைப் பொன்னினால் மெழுகிப் பொன்மயமாக்கினான் என்றுதெரிகிறது[2] இதனை,

> "சேயவன் திருப் பேரம்பலம் செய்ய
> தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
> ஆயசீர் அநபாயன்......"

என்றபெரியபுராணப்பாடற்பகுதி தெளிவுறுத்தும். பின்னர், இப்பேரம்பலத்தைச் செம்பினால்மெழுகி அழகுபெறச்செய்தான் காலிங்கன் என்பது,

---

[1] கனகசபை இது **பொன்னம்பலம்**; திருவாலங்காடு **இரத்ன சபை**; மதுரை **ரஜதசபை** (வெள்ளியம்பலம்); திருநெல்வேலி **தாமிரசபை**; திருக்குற்றாலம் **சித்திரசபை**. [2] 'தில்லைத் திருஎல்லை பொன்னின்மயமாக்கிய வளவர்" (சண்டேசர் பா. 8.), "மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும் சென்னி" (புகழ்ச்சோழ பா. 8.) என்பன அநபாயன் தில்லைஎல்லை, திருவீதி ஆகியவைகளையும் அழகு பெறச்செய்த செய்தியை அறிவிக்கும்.



ராஜசபை (ஆயிரக்கால் மண்டபம்) —பக்கம் 23



"தில்லைச் சிற்றம்பலத்தே பேரம்பலந் தன்னைச்...
செம்பு வேய்வித்தான் தெரிந்து"

என்ற கல்வெட்டுப்பகுதி அறிவிக்கும்.

நிருத்தசபை என்பது நடராஜப்பெருமானின் திருமுன்னர் கொடிமரத்தின் தென்பாலுள்ளது. ஊர்த்துவதாண்டவமூர்த்தி இதில் எழுந்தருளியிருக்கிறார். மண்டபம் யாவும் பரிகள்பூட்டிய தேரமைப்பைப் போல, சக்கரங்களுடன் விளங்குகிறது. 'எங்கும் காணமுடியாத சித்திர வேலைப்பாடமைந்த ஐம்பத்தாறு தூண்களால் தாங்கப்படுகிறமண்டபம்' என்று வர்குசன் இதனை வியந்து பேசுகின்றார். ராஜசபை என்பது ஆயிரக்கால் மண்டபமாகும்.

திருமூலநாதர்:— பாதாளத்திலுள்ளதான ஒரு பர்வதத்தின் கொழுந்தே திருமூலட்டானேசுவரர். இது சுயம்புமூர்த்தி. ஆலமரநிழலில் இருந்ததாகப் புராணம் கூறும். வியாக்கிரபாதமுனிவர், பதஞ்சலிமுனிவர் இவ்விருவரும் பூசித்துப் பேறுபெற்றது. இச்சந்நிதியிலேயே உபமன்யுமுனி பால்வேண்டியழுதது. சிங்கவன்மன் என்ற இரணியவன்மனை வியாக்கிரபாதமுனிவர் இச்சந்நிதியில் அழைத்து வந்து தரிசனம்செய்துவைக்கும்போது 'மைந்தனே! உபமன்யு இப்பெருமான் அருளாலேயே கிருஷ்ணனுக்குச் சிவதீக்கைசெய்தான்; இப்பெருமான் அருளாலேயே அக்கிருஷ்ணன் சிவாகமப்பொருள்களை உபமன்யுபால் தெரிந்துகொண்டான்'

इतो हि देवकीसूनुमुपमन्युरदीक्षयत् ।
इतः शिवागमार्थांश्च स कृष्णोऽबोधि तन्मुखात् ॥

என்று உபதேசித்தார் எனச் சிதம்பரமான்மியம் கூறும். இச்சந்நிதி கிழக்குநோக்கியது. **பெரும்பற்றப்புலியூர் மூலட்டானத்தார்** என்று திருவீழிமிழலைத் திருத்தாண்டகமும் கூறுகின்றது. உமையபார்வதி சந்நிதி தெற்குநோக்கியது.

**தண்டபாணி:—** இவர் உருவம் கொடிமரத்தின் மேல்பால் தூணில் அமைந்திருக்கிறது. இவர் கலியுகவரதராக விளங்கிக்கொண்டிருக்கிறார். இதற்குப் பலர் பிரார்த்தனை செய்துகொள்கிறார்கள்.

**நடராஜமூர்த்தி:—** உயிர்களிடத்து அநாதியே படிந்துள்ள மலத்தைநீக்கி, தூய்மையுறுத்தி என்றும் மாறா இன்பத்தை அடையச்செய்வதே இறைவன் தொழில். உயிர்களோ எண்ணிறந்தன. நித்தியமாயின. உணர்த்த உணரும் தன்மையன. செம்பிற்களிம்புபோலவும் நெல்லுக்குமிபோலவும் நீருக்கு உப்புபோலவும் மல மாயை கன்மங்கள் அநாதியே உயிர்களின் அறிவு இச்சை தொழில்களை மறைத்துக் கொண்டிருக்கின்றன. அவ்வழுக்கள் நீங்கினால் உயிர்கள் இன்பம் அடையும். அழுக்குகளோ தாமே நீங்கமாட்டா; அவை அறிவு உடையன அல்ல. உயிர்களும் தாமேநீக்கிக்கொள்ளமாட்டா; சுதந்திரமின்மையால். இறைவனே அழுக்கை நீக்கவேண்டும். அவ்வழுக்குத்தான் மலம். மலம் என்பதற்கு



ஆன்மாவினது சிற்சத்தியை யாதொருபொருள் மறைத்து நிற்கிறதோ அதுவே மலமெனப்படும். இத்தகைய மலத்தைப் போக்கி இன்பவீடளிப்பதற்கே இறைவன் ஐந்தொழில்களையும் ஆற்றுகின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன அவை.

படைத்தலாவது ஆன்மாக்கள்செய்யும் வினைப் பயன்களுக்கீடாகத் தனுகரண புவனபோகங்களைத் தோற்றுவித்தல். காத்தலாவது கொடுக்கப்பட்டவற்றை வினைக்கீடாகப் புசிக்கின்றகாலம்வரை நிலைநிறுத்துதல். அழித்தலாவது புசிக்கின்ற உலைவுதீர இளைப்பாற்றுதல். மறைத்தலாவது மலங்களை முதிர்வித்துப் பக்குவம்வரச்செய்தல். அப்பக்குவத்தால், அருட்பதிவு உண்டாகிச் சுத்தமான உயிர்கட்குப் பேரின்பத்தைக் கொடுத்தலே அருளலாகும். இவ்வைந்து தொழில்களை ஒருசேர ஆக்குவதே ஐந்தொழிற் கூத்து. கூத்தருடைய திருக்கரத்தில் விளங்கும் துடியிலிருந்து தோற்றமும், அமைத்த திருக்கரத்தில் திதியும், அங்கியில் சங்காரமும், ஊன்றிய பதத்தில் திரோதமும், தூக்கிய பதத்தில் முத்தியுமாக ஐந்து தொழில்களும் ஒருசேர நிகழ்கின்றன.

பெருமான் ஐந்தெழுத்துவடிவன். திருவடியில் **ந.** உதரத்தில் **ம.** தோள் **சி.** முகம் **வா.** முடி **ய.** பாதாதிகேசமாகஎண்ணும்போது, கூத்தனுருவம் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தாம். துடி சி. வீசியதிருக்

கரம் வா. அபயகரம் ய. நெருப்பு ந. முயலகன் ம. இங்ஙனம் பார்க்கும்போது இறைவனின் வலப் பக்கம் சிவாய எனவும், இடப்பக்கம் நம எனவும் காணப்பெற்று இறைவனின் வடிவம் சிவாயநம என்ற ஐந்தெழுத்தின் வடிவாம். சி-சிவம். வா-சத்தி. ய-ஆன்மா. ஆதலின் சிகாரமாகிய சிவத்திற்கும் வகாரமாகிய சத்திக்கும் இடையில் அதுவும் அடைக் கலம்வழங்கும் அபய அஸ்தத்தில் ஆன்மாவாகிய யவ்வை வைத்திருப்பது எவ்வளவு கருணைப்பெருக் கைக் காட்டுகிறது.

பெருமானின் திருவாசி பிரணவமாகும். வீசிய கரத்தால் மாயையை உதறி, அங்கியால் வல்வினை யைச் சுட்டு, ஊன்றியபதத்தால் மலத்தை அமுக்கி, தூக்கிய திருவடியாகிய அருளை எடுத்து, ஆன்மாக் களை ஆனந்தசாகரத்து அழுத்துவதே கூத்தின் குறிக்கோள் என்று உண்மைவிளக்கம் கூறுகிறது. இந்த ஆனந்தக் கூத்து நாதாந்த நாடகம் என நவிலப்பெறும். இந்த நாடகத்தைக் கண்டு காட்டு பவள் சிவகாமித்தாய். ஆனந்த நடராஜப்பெருமா னின் புன்முறுவலே ஆன்மாக்களுடைய மூவகைத் துன்பங்களையும் போக்குவது. இந்தப்புன்முறுவலில் லயித்த அப்பரடிகள்,

“சிரித்தமுகங் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே!”

என்று திருவிருத்தத்தில் கூறுகிறார். பெருமான் சடை ஞானமே வடிவானது. அதனை இருமருங்கும்



விரித்துநின்று ஆடுவது ஞானத்தை வரையாது வழங்கும் வள்ளன்மையைக் குறிப்பதாம். ஞானசம் பந்தப் பெருமான் ‘மதிதாங்கு நீள்சடையாய்’ என் றும், அப்பரடிகள் ‘பனித்தசடை’, ‘செஞ்சடை’ என்றும் கூறியுள்ளதும் கருதத்தக்கன. பெருமான் மேனியில் பாசம்கழியப்பண்ணும் திருநீறும், குண் டலியின் வடிவாகிய பூணூலும், தொழுவார் வினை யறுத்து வீடருளும் பரநாதவடிவாகிய வீரக்கழலும், விளங்குகின்றன. முயலகன், அவன் கையிலிருக் கிற பாம்பு ஆகிய இரண்டையும் ‘மூடாய முயலகன் மூர்க்கப் பாம்பு’ என்று சுந்தரர்பெருமான் குறிப் பிடுகின்றார்.

இன்றைய விஞ்ஞான உலகமும் நடராஜப் பெருமானுடைய ஆடல் அசைவு ஒவ்வொரு அணு வின் அசைவினாலும் விளங்குவதை நன்கறிந்து, இறைமைத்தன்மைக்கு வியந்து மிகமிகப் போற்று கின்றது. கலையமைப்பில் கருத்தைப் பறிகொடுத்த மேனாட்டார் நடராஜப்பெருமானைத் தம் இல்லங்க டோறும்வைத்துக் கண்டுகளிக்கின்றார்கள். தருமை யாதீன மாசிலாமணிதேசிகரிடம் அநுபவப்பொருள் கேட்டறிந்த குமரகுருபர சுவாமிகள், நடராஜப் பெருமானுடைய ஐந்தொழிற் செய்தியை,

“பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பில் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே.

தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பது உன் அமைத்த பொற் கரமே.
தோன்றபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே.
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்து நின்று
ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே.
அடுத்த இன்னுயிர்கட்கு அளவில் பேரின்பம்
கொடுப்பது, முதல்வ! நின் குஞ்சித பதமே."

என்ற அகவலால் அறிவித்து இன்புறுகிறார்கள் ஞானசாத்திரம்,

"ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான்நடுவே நாடு."

என்றும்,

"இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத் துள்."

என்றும் கூறி, ஓங்காரத் திருவாசியில் துடியில் சிகரமும், வீசுகரத்தில் வகரமும், இடைநிற்கும் அபயத்தில் ஆவியும்(ய), அங்கியில் பாசமும்(ந), ஊன்றிய திருவடியில் மாயையும்(ம) அமைந்திருக்கின்றதை விளக்கியருளுகின்றது.

**தில்லைக் கோவிந்தராஜர்:—** கனகசபையின் முன்பு தென்திசையில் தலையைவைத்து வடதிசையில் காலை நீட்டிக் கிடந்த திருக்கோலமாய் இப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். கிழக்குப் பார்த்த



சந்நிதி. சாத்விகவிமானம். போகசயனம். தில்லை மூவாயிரவர்கட்கும் கண்ணுவருக்கும் பிரத்யக்ஷம். குலசேகராழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் பதினொன்றும், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் இருபதும் உள்ளன. குலசேகராழ்வார், தில்லைமூவாயிரவரே கோவிந்தராஜப் பெருமாளைப் பூசித்துவந்ததாகக் கூறியுள்ளார். அதனையறிவிப்பது,

"தில்லைநகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த
அணிமணி யாசனத் திருந்த அம்மான்."

என்ற பாசுரப்பகுதியாகும்.

## தெய்வப் புலவர்கள்

**அம்பலக்கூத்தர் :**

ஆலவாய்ச்சொக்கர், தமிழ்விருப்பால் மதுரையிலிருந்து தமிழாராய்ந்ததுபோல - பாணபத்திரனுக்குத் திருமுகம் கொடுத்தனுப்பியதுபோல, அம்பலக்கூத்தரும் பெற்றான் சாம்பானுக்கு,

"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

எனச் சீட்டுக்கவி கொடுத்தருளினர். திருவாசகத்தில் வைத்த பெருவிருப்பால் அந்தணவடிவந் தாங்கி வந்து திருவாசகத்தைத் தாமே எழுதிச் சிற்சபையில் சேர்ப்பித்தனர்.

## திருமூலதேவர் :

'நம்பிரான் திருமூலன்' என்றும், 'திருமூல தேவநாயனர்' என்றும், 'அருண்மூலர்' என்றும் சைவப்பெருமக்களால் போற்றப்படும் சிறப்பினை உடையவர் திருமூலர். இவர் நந்தியின் மாணுக்கர்களில் ஒருவர். இவர் மன்றுதொழுத பதஞ்சலி வியாக்கிரபாதரோடு தென்றிசைக்கு இரு முறை எழுந்தருளினர். இவரது திருமந்திரத்தில் திருவம்பலச்சக்கரம் என்ற பகுதி பேசப்பட்டுள்ளது. அதனுள் "கூத்தனைக் காணுங் குறிபலபேசிடின்" என்னும் மந்திரத்தாலும், 'ஆகின்றபாதம்' என்னும் மந்திரத்தாலும் கூத்தப்பெருமான் சக்கரத்துள் வியாபித்திருக்குந்தன்மையை எடுத்துக்காட்டுகிறர். ஒன்பதாந் தந்திரத்துள் திருக்கூத்துத் தரிசனம் என்ற பகுதியில் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, அற்புதக்கூத்து எல்லாமாயிருப்பது தில்லைக் கூத்தே எனத் தெரிவிக்கிறர். ஆனந்தக் கூத்தருடைய திருமேனி, செய்கை, எல்லாம்திருமந்திரமே வடிவமாக இருக்கிறதென்றும் அறிவிக்கிறர். 'திருமந்திரமே சிதம்பரம்' என்பதும் 'திருமேனிதானே திருஞானமாகும்' என்பதும், அவர்கள் காட்டும்


கீழக்கோபுரத்தில்



திருமூலர்

கையில் இருப்பது திருமந்திரம்

# கிழக்குக்கோபுரத்தில்



பதஞ்சலி

முடிந்த முடிபுகள். திருமூலர்காலம் 8000 ஆண்டு களுக்குமுன் என்பது துடிசைகிழாரது ஆய்வின் துணிவு.

**பதஞ்சலி :**

பதஞ்சலியென்ற பெயரினைப் பெற்றுவிளங்கிய வர்கள் பலருளர். வடமொழியில் மகாபாஷ்யம் இயற்றிய பதஞ்சலியும், யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலியும் வேறுவர். அவருள் மகாபாஷ்யப் பதஞ்சலி கி. மு. 150லும், யோகசூத்ரப் பதஞ்சலி கி. பி. 7ம் நூற்றாண்டிலும் இருந்தவர்கள் என்று தக்க ஆதாரங்களுடன் டாக்டர் A. P. கீத் என்பவர் சொல்லுகிறார். 'மன்று தொழுத பதஞ்சலி' யெனத் திருமூலதேவர் திருமந்திரத்திற் குறிக்கப்படுபவரும், சைவசமய ஆசாரிய பரம்பரையை யொட்டியவரும், ஆனந்தக் கூத்தரின் அருள்தொண்டரும் ஆகிய பதஞ்சலி இவர்களின் வேறுவர். இவர் ஆதிசேடனு யிருந்தகாலதது, தன்மீது சயனித்திருந்த விஷ்ணு வினுடைய ஆனந்தாதிசயத்தை அவரதுவாயிலாகத் தெரிந்துகொண்டு, தானும் ஆனந்த தாண்டவம் தரிசிக்கவேண்டும் என்ற ஆவலுடையவராகத் திருக்கயிலாய மலையின் சாரலடைந்து நெடுநாள் தவஞ்செய்தார். பெருமான் வெளிப்பட்டு "நமது ஆனந்த தாண்டவத்தைத் தாங்குமிடம் தில்லை வனமாதலின் ஆங்குவருக' என்று ஆணைதந்து மறைந்தருளினார்.

ஆதிசேஷனார், பெருமாள் அருளியபடியே பதஞ்சலி முனிவராகி, நாகலோகஞ் சென்று, ஞானமயமாகிய பர்வதத்தைவணங்கி அதன்பக்கலி லுள்ள பிலத்துவாரம் வழியாகத் தில்லைவனத்தை யடைந்தார். வியாக்ரபாதரொடு நட்புக்கொண்டு, திருமூலட்டானரை வணங்கித், தில்லைவனத்தின் மேல்பால் நாகசேரிஎன்ற தீர்த்தத்தை உண்டாக்கி, அதன் கரையில் ஒருசிவலிங்கத்தைத் தாபித்து வழிபாடுசெய்துவந்தார். அவர் வழிபாடுசெய்ததால் அது அனந்தேச்சுரம் என்று இப்பொழுது வழங்கப் படுகிறது. இதில் ஒன்று நம் அறிவுக்குப் புலனாவது திருமூலதேவர் திருக்கயிலையிலிருந்து சிதம்பரத் துக்கு வந்தாரென்ற பெரியபுராண வரலாறும், பதஞ்சலி திருக்கயிலையிலிருந்து சிதம்பரத்துக்கு வந்தாரென்றவரலாறும் திருமூலர் திருமந்திரத்தை வலியுறுத்துகின்றது. ஆதலால் மன்று தொழுத பதஞ்சலியெனச் சிறப்பிக்கப்பட்டவர் திருமூலர் காலத்தவரேயாதல் தெளிவு. பதஞ்சலி செய்த வட மொழி நூல்கள் பல.

## திருஞானசம்பந்தர்:

காழிவேந்தர் ஞானசம்பந்தப்பெருமான் அடியார்கள் புடைசூழ, தந்தை சிவபாதவிருதயரோடும் திருநீலகண்டயாழ்ப்பாணரோடும் கொள்ளிடக்கரையைக்கடந்து தில்லையின் எல்லையை யடைந்தார். செல்கதிப் பயனைக் காண்பவர்போல மனமகிழ்ந் தார். புள்ளும் மாவும் மரமும் மகிழ்ச்சிதெரிவிக்க,



தெற்குக் கோபுரவாயிலை அணுகினார். தில்லைவா ழந்தணர்கள் "பொங்குகொங்கையில் சுரந்தமெய்ஞ் ஞானமாம் போனகம் பொற்குன்ற மங்கைசெங் கையாலூட்ட" உண்டருளிய மதலையார் வந்தார் என்று நகரை யலங்கரித்து எதிர்கொண்டழைக்க வந்தார்கள். வேதமந்திரங்களைச்சொல்லித்தெற்குத் திருவாயிலின் வழியாக அழைத்துச் சென்றார்கள். பிள்ளையார் சிற்றம்பலத்தை வலம்வந்து பேரம் பலத்தைத் தொழுது திருவணுக்கன் றிருவாயிலை அணுகினார். மனத்தில் ஆர்வம் பொங்கியெழுந்தது. சிறுகை சென்னிமேற்குவிந்தது. கண்கள் ஆனந்த தாரை பொழிந்தன. உட்புகுந்தார். புகுந்தவர் திருநடனம் கும்பிட்ட தன்மையைச் சேக்கிழார் பெருமான்,

"அண்ணலார் தமக்களித்தமெய்ஞ் ஞானமே
யானஅம் பலமுந்தம்
உண்ணிறைந்தஞா னத்தெழும் ஆனந்த
ஒருபெருந் தனிக்கூத்தும்
கண்ணின்முன்புறக் கண்டுகும் பிட்டெழுங்
களிப்பொடும் கடற்காழிப்
புண்ணியக்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதராடிய பொற்பு."

"உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை எனப்போற்றி

இணையில் வண்பெருங் கருணையே எத்திமுன்
எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர்
பொழிந்தனர் விழிமாரி.”

என்று அறிவிக்கின்றார்கள். காலம்பெற அழுத காழிப்பிள்ளையார் தில்லைவாழந்தணரை முதலாகக் கொண்டு ‘கற்றாங் கெரியோம்பி’ என்றபதிகத்தைப் பாடி ஆனந்தவெள்ளத் தழுந்தினார். மீட்டும் அவ் வாறே வலம்வந்து செல்வத் திருமுன்றிலில் தாழ்ந் தெழுந்து திருவீதிவலமாகத் திருவேட்களம் அடைந் தார். அங்கே சிலகாலம் தங்கி நாடோறும் வந்து மன்றுளாடுமணியை வழிபட்டுச் செல்கின்றவரான ஞானசம்பந்தர், ஒருநாள் தில்லைவாழந்தணர்கள் நடராஜப்பெருமானுக்கு அணுக்கத் தொண்டினரா யிருக்கும் பேற்றை அதிசயிப்பவராகப் புலியூரை அடைந்தார். அடையும்பொழுது ‘நீலத்தார் கரிய மிடற்றார் நல்ல நெற்றிமேலுற்ற கண்ணினார் பற்று சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார் சீலத்தாராகிய’ சிவகணநாதர்களாகத் தில்லைமூவா யிரவரும் தோற்றமளித்தனர். அந்தக்காட்சியைத் திருநீலகண்டயாழ்ப்பாணருக்கும் காட்டியருளினர். தில்லைவாழந்தணர்களும், காழிப்பெருமான் தம்மை வணங்குவதற்குமுன் தாம் வணங்கி, ஆலயத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள். பிள்ளையாரும் பேரம்பலத்தை வணங்கி மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக்கூத்தரெதிர் சென்று திருக்களிற்றுப் படியின் மருங்கிலேவணங்கினார். தில்லைவாழந்தணர்



களைச் சிவகணநாதர்களாகக் கண்ட காட்சியை யமைத்து “ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்” என்ற திருப்பதிகத்தைத் திருமுன்பாடினார். பிறகு நிவாநதியின் (வெள்ளாற்றின்) கரையில் விளங்கும் திருத்தலங்களை வழிபடச்சென்றார். இது திருஞான சம்பந்தப்பெருமானுடைய முதல் விஜயம்.

பின்னொருமுறையாகத் தையலாள் தழுவிடக் குழைந்த கச்சிக்கம்பரது திருக்கோலத்தைக் காண வேண்டுமென்ற பெருவிருப்பினராகத் தந்தையா ரின்றித் தனியாகக் காஞ்சிக்கு எழுந்தருளியபோது இடையிலுள்ள தில்லைமூதுரை யடைந்து திருநடம் கும்பிடப்பெற்றார். இது இவரது இரண்டாவது விஜயமாகும்.

இனி மற்றொருமுறையாக, திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருஅரசிலி, திருப்புறவார்பனங் காட்டூர் முதலாய பலதலங்களை வணங்கிக்கொண்டு தில்லைப்பதிக்கு வருகின்றார். தில்லைவாழந்தணர்கள் எதிர்கொள்ள, சிவிகையினின்றும் இறங்கித் திரு வெல்லை பணிந்தார். வடதிசை வாயில்வழியாக உட்புகுந்தார். பேரம்பலத்தை வணங்கினார்; அம் பலத்தே ஆடுகின்ற தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிட்டார்; எல்லையில்லா இன்பம் அடைந்தார்; இவ்வாறு சிலநாள் வண்தமிழ்பாடிக் கும்பிட்டு இனிதிருந்தார். ஞானசம்பந்தர் தில்லைக்கு வந்து விட்டார் என்று அறிந்து இவரது தந்தையார், காழி

அந்தணர்கள், முனிவர்கள் யாவரும் வந்தணைந்தார்கள். எல்லோரும் ஒருசேரத் திருச்சிற்றம்பலத்தைப் பணிந்தார்கள். பிறகு சீகாழிசெல்லப் புறப்பட்டார்கள். இது மூன்றாவது விஜயம்.

### திருநாவுக்கரசர்:

நிவாநதிக்கரையிலுள்ள பலதலங்களைவணங்கிக் கொண்டு கிழக்குநோக்கி வருகின்ற திருநாவுக்கரசர் தில்லையம்பலத்தாடும் சிவன் திருவடிவணங்கி ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொள்ள நினைந்தார். தில்லையின் பக்கத்தை யடைந்தார். எல்லையில் நின்றே வணங்கினார். அன்பொடு வணங்கி அமுதத் திருநடனங்கண்டு அள்ளி அள்ளி உண்கின்றார். அவரது கும்பிட்ட நிலையினை,

"கையும் தலைமிசை புனைஅஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழுமுன் பெழுதரு
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்."

என்று சேக்கிழார்பெருமான் சித்தரிக்கின்றார்கள்.

அப்பர் சுவாமிகள் "ஒன்றியிருந்து" முதலிய திருவிருத்தங்களை ஓதி மேலும் ஆராத அன்பு



கொண்டு "பத்தனாய்ப் பாடமாட்டேன்" என்ற திருநேரிசையும்பாடிப் பரவிப் போந்தார். இவ்வாறு சிலநாள் தங்கியிருந்து கைத்தொண்டும் சொற்றொண்டும் புரிந்து எழுந்தருளி யிருக்கின்றவர்கள் அருள்பெருமகிழ்ச்சிபொங்க "அன்னம்பாலிக்கும்" என்னும் திருக்குறுந்தொகைபாடி ஏத்தினார். பின்னர், திருவேட்களம் திருக்கழிப்பாலை ஆகிய தலங்களைத் தரிசிக்கச்சென்றவர்க்குப் புலியூர் எண்ணம் மீண்டும் பொருந்துவதாயிற்று. வழிக்கொண்டு விரைந்து வருகின்றவர்கள் "பனைக்கை மும்மத" என்று தொடங்கும் திருப்பாடலில் நினைப்பவர்தம் மனக்கோயில் கொண்டொழுகும் அம்பலக்கூத்தனாரைத் தினைத்தனைப்பொழுதும் மறந்துய்யலாகாமையைத் திருவுள்ளத்தெண்ணிக்கொண்டே தில்லையை அடைந்தார். பெருமானைப் பிரிந்திருந்த நாட்கள் பிறவாநாட்களாகத் தோன்றின. அதனால் "அரியானை" என்றெடுத்துப் "பேசாத நாளெல்லாம் பிறவாநாளே" என்று பேசினார். இறைவனுடைய நடனத்தில் ஈடுபட்ட மனத்தின் எழுச்சியால் "செஞ்சடை" என்றெடுத்துத் "துளங்கெரி யாடுமாறே", "அனலெரி யாடுமாறே", "நீண்டெரி யாடுமாறே" என்றெல்லாம் பலபடியாக வியக்கின்றார்.

பின்னர் ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தர் வரலாற்றைக் கேள்வியுற்று, அவரது மலர்க்கழல்கள் வணங்குதற்கு ஒருப்பட்டு, தில்லையைவிட்டுப் புறப்படுகின்ற இவர் பொய்யாகிய பிறவிநோயை

நீக்கவல்ல தன்மையுடைய தில்லைத் திருவீதியினை மேனி நிலத்திற்புரளுமாறு அங்கப்பிரதக்ஷிணம் செய்து, வலமாகவந்து, தில்லைத் திருஎல்லையினையும் பணிந்து புறப்படுகின்றார்.

**சுந்தரர் :**

திருநாவலூரில் திருவவதாரம்செய்து இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றுத் தென்திசை நோக்கிவருகின்ற சுந்தரர்பெருமான் வேதஒலி நாதஒலி கீதஒலி நீங்காத தில்லையின் பக்கத்தை அடைந்தார். தொழுவாரது மும்மலத்தைவாட்டும் தில்லையின் எல்லையை வணங்கினார். வண்டு முதலாயினவும் சிவனடியாரின் தோற்றத்தை வழங்க, தில்லையின்வடக்குவாயிலை அடைந்தார். அடியார்கள் எதிர்கொண்டழைத்தார்கள். அடியார்களோ ஆரூரரோ முன்பு வணங்கினவர்கள் யார் என்றறிய முடியாதபடி வணங்கினார். திருவீதியிற்புகுந்தார். எங்கும் வேதஒலியும், அரம்பையராடலொலியும், தேவதுந்துபிஒலியும் உண்டாயின. சிரத்தின்மேற் கைகுவிய, பேரம்பலத்தைவணங்கி வலங்கொண்டு வேதத்தின் முதல் இடை கடையிலும் அடியார்கள் திருவுள்ளத்திலும் விளங்குகின்ற சிற்றம்பலத்தின் திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார். அவர் திருக்களிற்றுப்படியில் வணங்கியதும், அதனால் அடைந்தபேறும் சேக்கிழார் திருவாக்காலேயே நாம் உணரத்தக்கன. அவையாவன:



'வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்தஅன் புந்தச்
செய்தவப் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு.''

"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.''

இந்தநிலையில் வணங்குகின்ற சுந்தரர் திருநடங்கும்பிடப்பெற்று மண்ணிலேவந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாமென்று ஆனந்தக் கண்ணீர்வடிய, திருப்பதிகம்பாடித்தோத்தரித்தார். அப்போது "ஆரூர! ஆரூரில் நம்பால் வருக" என ஆனந்தக்கூத்தரருளால் ஆணைபிறந்தது. ஆணையைச் சிரமேற்றாங்கித் திருவாரூருக்கு வழிக்கொண்டார். இது இவரது முதன்முறை விஜயம்.

திருமுதுகுன்றத்தில் பன்னீராயிரம் பொன் பெற்று, மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூருக்கு

வருகின்றவர் தில்லைத்திருவீதியை யடைந்து, தலைமேற் கைகள்குவிய, ஆனந்தவெள்ளம் கண்களில் நிறைந்துவழிய, திருக்களிற்றுப்படியை யடைந்து அட்டாங்கபஞ்சாங்கநமஸ்காரஞ்செய்து, ஆனந்தக் கூத்து அகத்தில்நிறைய "மடித்தாடுமடிமைக்கண்" என்றெடுத்து ஒவ்வொரு திருப்பாடலிலும் 'புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றமையை' வியந்துபாராட்டுகிறார். இது இவரது இரண்டாவது விஜயம்.

மூன்றாம் முறையாகக் குருகாவூரை வணங்கி வழிக்கொள்ளுகின்ற சுந்தரர்பெருமான் திருக்கழிப் பாலையை வணங்கிக்கொண்டு தில்லையில் நடராஜப் பெருமானது திருவடியைத்தொழுது சிலநாட்கள் தங்கினார்.

**மாணிக்கவாசகர் :**

திருவாதவூரில் அவதரித்துத் தென்னவனுக்கு மந்திரியாய் ஆலவாய்ச் சொக்கரால் ஆட்கொள்ளப் பெற்றும், தில்லையுள் 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று அருளிச்செய்த பெருஞ் சிறப்பு சிந்திக்கத்தக்கனவற்றுளொன்று. திருத்தில்லையை யடைந்த மணிவாசகப்பெருமான் கண்டபத்தில் தில்லையில் அந்தமிலா ஆனந்தத்தைக் கண்டதாக-தித்திக்கும் சிவபதத்தைக்கண்டதாக-கோதிலமுதானானைக் கண்டதாகக் கூறுகின்றார். தான் கண்ட தில்லைக்காட்சியை "உலகுடைய வொருமுதலைச்



செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேன்" என்று கூறுதல் கன்மனத்தையுங் கரைக்கும் பகுதியாகும். அனைத்துலகும் தொழும் தில்லை, எல்லோரும் இறைஞ்சுதில்லை என்ற பகுதிகளும் கருதத்தக்கன.

குலாப்பத்துள் தமது துறவுநிலையைக் கூறி ஆனந்தக்கூத்தினை யருளிச்செய்த அருமைப்பாட்டினை வியக்கிறார். உலகவர்க்கு உண்மையுணர்த்தற் பொருட்டு அகவல் மூன்றினை யருளிச்செய்தார். குயிற்பத்து, கோத்தும்பி, பூவல்லி முதலியவற்றுள் உலகத்தவரையுந் தம்முடனழைத்து, இறைவன் இயல்புகளை அறிவித்து அநுபவத்தை அருளிச் செய்கின்றார். இவ்வாறு அநுபவத்திறமுற்ற - வீடு பேற்று விருப்புமிக மூத்ததிருப்பதிகம், ஆனந்த மாலை என்பவற்றைப் பாடியருளினார். இவ்வண்ணமாகத் தில்லையில் இவர் அருளிச்செய்த பதிகங்கள் மிகுதியாயிருத்தல் மாணிக்கவாசகர் தில்லைக்கே யுரியவர் என்பதை யறிவிப்பனவாம். "தில்லைபாதி திருவாசகம்" என்ற பழமொழியும் ஈண்டுக் கருதத் தக்கது.

இவர் தில்லையில் எழுந்தருளியிருந்த காலத்துச் சிதம்பரத்தில் இரவு தங்குதலாகாதென்பதற்காகக் கீழ்ப்பக்கத்திலுள்ள வில்வவனத்தில் தங்கியிருந்தார். பித்தராகிய இவர் தங்கியிருந்தமையால் அது பிச்சபுரம் என்று இன்றும் வழங்குகின்றது.

மணிவாசகப்பெருமான் இவ்வாறு தில்லையில் எழுந்தருளியிருக்கின்ற காலத்தில் சைவரொருவர் ஈழநாடு சென்றவர் இருந்தாலும் எழுந்தாலும் பொன்னம்பலம் என்று கூறிவந்தார். புத்தனாகிய ஈழநாட்டரசன் இதனைக்கேட்டு "என்ன! பொன்னம்பலம் அவ்வளவு பெரியதோ!" என்று அதனைப்பற்றி வினாவி அறிந்தான். உடனே புத்த அரசன் தமது புத்தநந்தியை அழைத்துக்கொண்டு தில்லைமூவாயிரவரோடு மதவாதத்திற்கு வந்தான். வாதத்திற்குவந்த மன்னவன் நிலையினை யறிந்த தில்லைமூவாயிரவர் மனம்வருந்தி நடராஜப்பெருமானிடம் விண்ணப்பித்துக்கொண்டனர். நடராஜப் பெருமானும் கனவிற்றோன்றி 'நமது மாணிக்க வாசகரைக்கொண்டு வாதிடுக' என்று ஆணைதந்தார். அவ்வாறே அந்தணர்கள் வாதவூரடிகளை வாதிட வேண்டினர். புத்தர்கள் நியாயவாதம் செய்யாது சலவாதம் செய்ததால் வாதவூரர், அவர்கள் நாவினின்றும் 'கலைவாணி நீங்க' என்று ஆணைதந்தனர். புத்தர்கள் ஊமைகளாயினர். புத்தவரசன் இந்த அற்புதத்தைப் பார்த்து அடிகளைநோக்கி "உரையுள்ளோர் ஊமையாயினர், ஊமையான என்பெண் உரையாடுவாளானால் நான் சைவனாகின்றேன்" என்று விண்ணப்பித்துக்கொண்டான். உடனே வாதவூரடிகள் ஊமைப்பெண்ணை வா என அழைத்து ஊமையை நீக்கியதோடன்றிப், புத்தர்கொண்ட ஐயங்களுக்கு விடையிறுக்கவும் செய்தார். அதுவே திருச்சாழலாக இன்றுவிளங்குவது. இதைக்கேட்ட



அரசன் மகிழ்ந்தான். புத்தநந்திகள் மாணிக்கவாசகரை வணங்கி வாய் பெற்றுச் சைவராயினர்.

இங்ஙனம் வாதவூரடிகள் அருட்செயல்களாற்றி எழுந்தருளியிருக்கும்போது ஒரு வேதியர் எழுந்தருளிவந்து உம்முடைய திருவாசகம் முழுமையும் எழுதிக்கொள்ள வேண்டுமென்றார். அடிகளார் அதற்கிசைய முழுவதும் எழுதினர். பின்பு வேதியர் வாதவூரடிகளைநோக்கித் திருச்சிற்றம்பலமுடையார் மீது ஒரு கோவை பாடுக! என்று ஆணைதந்தனர். அவ்வாறு அடிகள் ஆக்கியருள அதனையும் எழுதிக் கொண்டார். மறைந்தருளினர். மறுநாள் விடியற் காலையில் திருக்காப்புநீக்கிய தில்லைவாழந்தணர்கள் சிற்றம்பலமுடையார்பக்கல் ஒரு ஏடு இருக்கக்கண்டு வியந்தார்கள். வந்தவழியறியாது திகைத்தார்கள். தெய்வச்செயலென்று துணிந்தார்கள். மலர்களைக் கொண்டு அருச்சித்தார்கள். ஏட்டை அவிழ்த்துப் பார்த்தார்கள். இறுதியில் 'மணிவாசகன் சொல்ல அழகியதிருச்சிற்றம்பலமுடையார் எழுதியது' என்றிருந்தது. கண்டு வியந்த அவர்கள் மணிவாசகரை அடைந்து இந்நிகழ்ச்சியைத் தெரிவித்தார்கள். மணிவாசகர் இறைவன் அருட்பெருமையைவியந்து, சிற்றம்பலநாதன் பொற்கழல்காணச் சிற்சபையை அடைந்தார். அப்போது தில்லைவாழந்தணர்கள் அனைவரும் ஒன்றுகூடி இப்பாட்டுக்குப் பொருள் யாது என வினாவினர்கள். மணிவாசகர் அதற்குப் பொருள் "தூசகலல்குல் வேய்த்தோளிடத்தவனே"

என்று சிவகாமவல்லித்தாயாரோடு கூடிய ஆனந்த நடராஜப்பெருமானைச் சுட்டிக் காட்டிக்கொண்டே சிற்சபையிற்புகுந்து மறைந்தருளினார். இவர்பாடிய திருவாசகப்பதிகங்கள் ஐம்பத்தொன்றனுள் இருபத்தைந்து பதிகங்கள் தில்லையைப் பாடியனவாகும்.

**கல்லாடர் :**

இவர்சிறந்தபுலமையுடன் திருவருளும் நிறையப் பெற்றவர். இவரது இயற்பெயர் இன்னதென்று அறியப்படவில்லை. சங்கப்புலவர்களுள் கல்லாடர் என்பாரும் ஒருவர் உளர். தொல்காப்பியத்திற்கு உரைகண்ட கல்லாடர் மற்றொருவர். ஆயினும் இவர் செய்த கல்லாடம் என்ற நூல் சிறப்புடையதாகப் பலராலும் போற்றப்படுகிறது. 'கல்லாடம் படித்தவனோடு மல்லாடாதே' என்ற பழமொழியும் இதனை வலியுறுத்தும். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்ற தில்லைக் கூத்தப்பிரான் ஆணைப்படி பாடப்பெற்ற திருக்கோவையார் என்னும் அருள் நூல் பொருளிலக்கணத்துக்கு மாறுபட்டது என்று சிலர் கூறுவதைக் கேட்டு, இவர் மனம் பொறாது அதிலிருந்து நூறு செய்யுட்களைத் திரட்டி, அவ்வொவ்வொரு செய்யுளின் கருத்தும் ஒவ்வொரு பாடலில் அமையுமாறு நூறு அகவற் பாடல்கள் இயற்றினார் என்றும், அதனை அரங்கேற்றுகையில் பெருமான் 'மனமுவந்து கேட்டு முடி, தாமசைத் தார் நூறுதரம்' என்றும் ஒரு வரலாறு கூறப்படுகிறது. இவர் தமது நூலில் 'கண்டர்வகாணாக்



கதிதரு நகர்' எனவும், 'மத்தியந்தனன் வரஞ்சொலி விடுத்த, தில்லைகண்ட புலிக்கால் முனிவனும்' எனவும் குறிப்பிடுவன சிதம்பரத்தைப் பற்றிய சிறப்பினை அறிவிப்பனவாகும்.

**திருமாளிகைத்தேவர் :**

இவர் போகரிஷியின் மாணாக்கர். திருவாவடுதுறையில் வசித்தவர். சேந்தனாருடன் சிதம்பர தரிசனத்துக்கு வந்தார். அன்று இரதோற்சவம். இரதங்களில் வடம்பூட்டப்படவில்லை. தானே அது ஓடுமாறு கட்டளையிட்டார். திருவிசைப்பா பதிகம் நான்கினை நடராஜப்பெருமான் விஷயமாகப் பாடியருளினார். திருமாளிகைத்தேவர் என்ற ஜயந்தன், ராசராசன் காலத்தில் திருவீழிமிழலைக் கோயிலில் விளக்குவைத்தாரென்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. அவற்றால் பத்துப் பதினொன்றாம் நூற்றாண்டுகளில் சயந்தன் என்ற இயற்பெயரும், திருமாளிகைத்தேவர் என்ற சிறப்புப்பெயரும் பெற்ற ஒரு சிவஞானி இருந்திருக்கலாம் என்று சாஸனத் தமிழ்க்கவி சரிதத்தில் மு. இராகவையங்காரவர்கள் குறிப்பிடுகின்றார்கள். அல்லாமல் திருமாளிகைத் தேவர் பாடினதாகக் குறிப்பிடப்பெறுகின்ற திருவிசைப்பா பதிகங்கள் நான்கனுள் ஒன்றிலேனும் அவர் பெயரில்லை. சேந்தனாருடைய பதிகங்களும் சேர்ந்த ஏழாவது பதிகத்தினிறுதியிலேயே திருக்கடைக் காப்பினுள் சேந்தன் என்ற முத்திரையிடப்

பெற்றுள்ளது. ஆதலால் இருவரும் ஒருவரேயென ஆராய்ச்சியாளர் முடிவுசெய்துள்ளார்கள்.

**சேந்தனர் :**

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகளிடம் பொக்கிஷ அதிபதியாக இருந்தவர். பட்டினத்தடிகள் துறவின்பின் சிதம்பரத்தை அடைந்து விறகு விற்று வரும்லாபத்தால் ஒரு சிவனடியாருக்கு அமுதூட்டும் திருத்தொண்டைச் செய்து வந்தார். சிவபெருமான் ஒருநாள் நடுராத்திரியில் இவரிடம் சென்று கூழுண்டு அந்தக் கூழை மறுநாள் தம் திருமேனியிற் காட்டினர். சேந்தனர் வீட்டிலுண்ட கூழ்தானே என்றையுற்ற மக்களின் ஐயமகற்ற, பெருமான் திருத்தேர் கொண்டருள்கின்றகாலத்துத் தேரை யழுந்துமாறு செய்தார். சேந்தனர் திருப்பல்லாண்டுபாடத் தேர்அசைந்தது. திருவிசைப்பா பதிகம் மூன்றும் திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றுமாக நான்கு பதிகங்கள் இவர் பாடியனவாகக் காணப்படுகின்றன.

**கண்டராதித்தர் :**

இவர் முதற்பராந்தக சோழனுடைய திருமகனர். சிவஞானகண்டராதித்தரென்று இவரைச் சாஸனம் கூறுகின்றது (Ep. car IX P. 99) இவருடைய மனைவியே செம்பியன் மாதேவியென்பார். இவர் செய்த சிவாலயத் திருப்பணி பல என்பது



சரித்திர உலகம் நன்கறிந்தது. அப்பெருந்தேவி தமது நாயகரான கண்டராதித்தருடன் சிவபெருமானை வழிபடுதலைக் குறிக்கும் பாவனையாக, பிம்பங்கல் பல வகுக்கப்பட்டுள்ளன. இவருடைய ஆட்சிக் காலம் கி. பி. 949—957. இவர்பாடிய திருவிசைப்பா தில்லையைப்பற்றியதாகும்.

**கருவூர்த்தேவர் :**

இவர் போகரிஷியின் மாணக்கர்களிலொருவர். பிராமணர். இவரைக் கருவூரிலிருந்த அந்தணர்கள் மது மாமிச பட்சணி என்று அருவருத்தார்கள். அதனல் இவர் அகாலத்தில் மழைபெய்யச் செய்தல், ஆற்றில் வெள்ளம் பெருகச் செய்தல், திருக்கோயிற் கதவம் தானே திறக்கச் செய்தல், பூதங்கள் குடை தாங்கிவரச் செய்தல், ஆகிய பற்பல அற்புதங்கள் செய்துகாட்டினர். நடராஜப் பெருமானுடைய வழிபாட்டுக்கு வந்தபொழுது திருவிசைப்பா அருளிச் செய்தனர். தஞ்சையிலுள்ள இராஜராஜேச்சரத்தின்மீதும், கங்கைகொண்ட சோழேச்சரத்தின் மீதும் திருவிசைப்பாக்கள் பாடியிருப்பதால் இராஜேந்திரன் காலத்தவராகவோ சற்றுப் பிந்தியவராகவோ ஆகலாம்.

**பூந்துருத்தி நம்பிகாடநம்பி :**

தில்லைக்குத் திருவிசைப்பா செய்தவருள் இவரும் ஒருவராவர். முதலாம் இராஜராஜனது 35ம்

ஆட்சியாண்டில் உண்டான திருவையாற்றுக் கல்வெட்டு ஆத்திரேய கோத்திரத்து நம்பிகாடநம்பி யென்றவரைக் குறிப்பிடுகிறது. அவர் ஒரு அர்ச்சகர். பூந்துருத்தி, திருவையாற்றை அடுத்திருப்பதால் இவரும் அவரும் ஒருவரோ என்று சாஸனத் தமிழ்க்கவி ஆசிரியரும், பெரியபுராண ஆராய்ச்சியாசிரியரும் கருதுகின்றனர்.

### வேணாட்டடிகள் :

வேணாடென்பது தென்றிருவாங்கூர்ச்சீமை. அதனையாண்ட அரசர்கள் வேணாட்டடிகள் எனக் கல்வெட்டுக்களால் வழங்கப்படுகின்றனர். அக்கல்வெட்டுகள் கி. பி. 12ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை. ஆதலால் தமிழறியும் சேரர்பெருமானாகிய இவர் தில்லைக்குச்சென்று திருவிசைப்பா பாடினார்.

### திருவாலியமுதனார் :

இவரும் தில்லையைச் சிறப்பித்துத் திருவிசைப்பா பாடியவர். இவரைப்பற்றி ஒன்றும் அறியப்படவில்லையென்று ஆராய்ச்சியாளர் விடுத்தனர். அபிதான சிந்தாமணியாசிரியர் திருமயிலையில் வேதியர் குலத்து அவதரித்துச் சிவத்தைப்பாடி முத்தி பெற்றவர்; மறையவர் என்று குறித்தனர். மாயூரத் தருகாமையில் சீகாழி தாலூகாவில் திருவாலி திருநகரி என்றொரு வைணவத்தலம்உண்டு. அங்கெழுந்தருளியுள்ள பெருமாளுக்குத் திருவாலியமுதன் என்பது பெயராகும். ஆதலால் இவரும் அப்பெயரைத் தாங்கியிருத்தல்கூடும். இவர் கோயிலைப்பற்றிப் பாடியனவாக நான்கு பதிகங்கள் ஒன்பதாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. இவர் காலம் அறியப்படவில்லை.



### புருஷோத்தமநம்பி :

இவரும் தில்லையைப்பற்றியே திருவிசைப்பா பதிகம் இரண்டு பாடியுள்ளார். இவருடைய காலமும் அறியப்படவில்லை.

### சேதிராயர் :

இவர் தில்லையைப்பற்றிப்பாடிய திருவிசைப்பா ஒன்று. இவர் முதற்குலோத்துங்கன் காலத்தவராக அல்லது பிற்பட்டகாலத்தவராக இருப்பாரென்று ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றனர். சேதிராயரென்போர் கிளியூரைத் தலைநகராகக்கொண்டு,தென்னாற்காட்டுப் பகுதியை ஆண்டவரென்றும் துணிவர். திருவிசைப்பாவில் சேதிபர்கோன் எனத் தன்னைக் குறித்துக் கொள்ளுகிறார்.

### ஐயடிகள்காடவர்கோன் :

இவர் பல்லவர் வம்சத்தைச் சேர்ந்தவர். வடநூற்கடலையும், தென்றமிழ்நூலையும் நிலைகண்டு

உணர்ந்தவர். அரசாட்சியைத் துன்பமென்று எண்ணி மகனிடத்து ஒப்பித்து, சிவத்தொண்டை மேற்கொண்டவர். நடராஜப்பெருமானது ஆனந்த தாண்டவத்தைக்கண்டு வணங்கி,

"ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நல்நெஞ்சே!
தில்லைச்சிற் றம்பலமே சேர்"

என்ற வெண்பாமலரொன்றுசூட்டியவர். இவ்வாறே பலதலங்களுக்கும் வெண்பாமலர்சூட்டி இறைவன் அடியையடைந்தவரென்று பெரியபுராணம் கூறும். வடமொழிப்புராணம் இவர் மகன் பெயர் பீமவர்மனென்று அறிவிக்கின்றது. பல்லவர் வம்சாவளியில் பீமவர்மன், சிம்மவிஷ்ணு இவர்கள் தந்தை மூன்றாம் சிம்மவர்மனென்று காணப்படுகின்றது. ஆதலால் ஐயடிகள் காடவர்கோனும், மூன்றாம்சிம்மவர்மனும் ஒருவராகலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அதுபொருந்துமாயின் இவர்காலம் கி. பி. 550—575 ஆகலாம்.

### சேரமான்பெருமாள் :

இவர் சேரநாட்டின் மகோதைநகரத்தில் சேர ராஜபுத்திரராக அவதரித்துச் சிவப்பணியிலீடுபட்டு இருந்தவர். சிவப்பணி வழுவாதநிலையில் மந்திரிகளின் வேண்டுகோளுக்காக அரசாட்சியேற்றவர். இவரது பூஜைமுடிவில் வழக்கம்போல் கேட்கப்படும்



சிலம்பொலியை ஒரு நாள் நடராஜப்பெருமான் தாழ்க்கச்செய்து அதன் காரணமாகச் சுந்தரரோடு தோழமை கொள்ளும்படியாக இணைத்து வைக்கப் பெற்றவர். சுந்தரரைக் காண்பதற்காகச் சிதம்பரம் சென்றபோது 'பொன்வண்ணத்தந்தாதி' பாடி நடராஜப்பெருமானுடைய அருள் நலங்களை வியந்து போற்றினவர். இவரைச் சுந்தரர் "கார் கொண்ட கொடைவள்ளல்" என்று குறிப்பிடுகிறார். ஆதலால் இவர் காலம் கி. பி. 800—830 ஆகும்.

சேரமான் பெருமாளென்று பட்டந்தாங்கிய சேர அரசர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். ஆதலின் இவர் இயற்பெயர் இன்னதென்று அறியப்படவில்லை.

### பட்டினத்தார் :

இவர் கோயில் நான்மணிமாலை பாடியவர். இவருடைய அவதாரத்தலம் காவிரிப்பூம்பட்டினம். வணிகமரபினர். பெருஞ்செல்வர். பொருளெல்லாவற்றையும் சிவப்பணிக்காகவே செலவழித்து மனத்துறவு பூண்டு பரமஞானியாய் விளங்கியவர். இவருடைய காலம் பத்தாம் நூற்றாண்டு.

### நம்பியாண்டார்நம்பி :

இவர் திருநாரையூரில் அவதரித்துப் பொல்லாப் பிள்ளையார் பேரருளைப்பெற்றவர். இராஜராஜ

னுடைய வேண்டுகோட்படி திருமுறைகளிருக்கும் இடத்தைப் பொல்லாப்பிள்ளையார் வாயிலாகக் கேட்டு அறிந்தவர். அவ்வாறே யரசனுடன் தில்லைக்குச் சென்று சமயாசாரியர்களை எழுந்தருள்வித்து அவர்கள் கையடையாளமுள்ள திருக்கதவங்களைத் திறந்து திருமுறைகளைப் பெற்றவர். இவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலேவந்த பெண் ஒருத்தியைக் கொண்டு பண் வகுப்பித்தவர். பண்ணை அடிப்படையாகக்கொண்டு தேவாரத்திருமுறைகளை ஏழாகவகுத்தவரும் இவரேயாவர். கோயிலைப்பற்றி "கோயிற்றிருப்பண்ணியர் திருவிருத்தம்" என்ற நூலை ஆக்கியிருக்கின்றார். இவர்கள் காலம் கி. பி. 985—1016.

**சேக்கிழார் :**

தொண்டைமண்டலத்திலுள்ள புலியூர்க்கோட்டத்துக் குன்றத்தூரில் அவதரித்தவர். பாலறுவாயர் என்ற ஒரு தம்பியார் உளர். அருண்மொழித்தேவர் என்பது இவரது பிள்ளைத் திருநாமமென்று சேக்கிழார் புராண ஆசிரியர் செப்புவர். கல்வெட்டு ஆசிரியர்கள் சிலர் இரண்டாம் இராஜராஜனது ஆட்சி 17ம் ஆண்டுக் கல்வெட்டிற் காணப்படும் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனை உத்தம சோழப் பல்லவராயன் என்பதைக்கொண்டு சேக்கிழார் என்பது குடிப்பெயராகவும், மாதேவடிகள் என்பது இவரது பக்திச்சிறப்புப்பற்றிய பெயராகவும், இராமதேவர் என்பது இயற்பெயராகவும்,



உத்தமசோழப்பல்லவராயன் என்பது அநபாயன் அளித்த பட்டப்பெயராகவுங்கொள்ளப்படுவனவாம் என்பர். இயற்பெயர் எவ்வாறாயினும் இவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவராக அமைச்சுரிமை ஏற்று, நம்பியாண்டார்நம்பியருளிய தொண்டரந்தாதியிற் கூறிய அடியார்களின் வரலாறுகளை எடுத்து நன்றாகக்கூறும் பெற்றிமைக்காக, பல கல்வெட்டுக்களையும், தலங்களையும், வரலாற்றுக் குறிப்புக்களையும், செப்புப்பட்டயங்களையும், கர்ணபரம்பரைச் செய்திகளையும் ஆராய்ந்தாரென்பது வெளிப்படை.

சோழன் சைனநூலாகியசீவகசிந்தாமணியைக் கேட்டு அதன் கண்மயங்கிநிற்க, மந்திரியாகிய இவர் அவன்மனத்தைமாற்ற இவ்வரலாற்றைக் கூறினர். கேட்ட அரசன் அதனை ஒருநூலாக ஆக்கித்தரும்படி விண்ணப்பிக்க, சேக்கிழார் சிதம்பரத்தையடைந்தார். நடராஜமூர்த்தியின் திருமுன்பு தரிசித்து நின்றார். **உலகெலாம்** என்ற அசரீரி பிறந்தது. அதனையே முதலாகக்கொண்டு ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து 4286 செய்யுட்களால் திருத்தொண்டர் புராணத்தைப்பாடி முடித்தார். அதை அரசனுக்கு அறிவித்தார். அரசன் எல்லோரையும் கூட்டுவித்து இராஜசபையை அரங்கேற்று மண்டபமாக்கினன். சேக்கிழார் ஓராண்டுச் சித்திரைமாதத்துத் திருவாதிரையிற் றொடங்கி, மறு ஆண்டு சித்திரைத் திருவாதிரையில் முடித்தார். இவருக்குச் செயவீரபாவலர், தொண்டர்சீர்பரவவல்லார் எனவும் திருப்பெயர்கள்

வழங்கின. சோழநாட்டுத் திருநாகேச்சரத்தைப் போலக் குன்றத்தூரிலும் திருநாகேச்சரம் என்ற கோயிலை உண்டாக்கினார்.

இவரது காலம் அநபாயன் காலம். அநபாயன் என்ற சிறப்புத் திருநாமம் பெற்றவன் இரண்டாம் குலோத்துங்கனே என்பர். ஆதலில் இவர்காலம் கி.பி. 1113—1150 இவற்றிற்கு இடைப்பட்டதாகும். அநபாயன் பெரியபுராண அரங்கேற்றம் முடிந்ததும் இவரை யானையின்மீது பெரியபுராணத்தோடு எழுந்தருளுவித்துத், தானும் ஏறியிருந்து, இருகைகளாலும் சாமரைவீசிப், பவனிசெய்வித்துச் சிறப்புச் செய்தான். இவர்வாக்கில் பல இடங்களிலும் தில்லையின்மீது வைத்திருந்த எல்லையில்லா அன்பு இனிது விளங்குவதைக் காணலாம்.

**அருணகிரியார் :**

இவர் திருவண்ணாமலையில் அவதரித்தவர். முருகனுடைய திருவருளை நிரம்பப்பெற்றவர். சிதம்பரத்துக்கு வந்தபோது சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள முருகனைப்பற்றிப் பாடிய திருப்புகழ் சுமார் எழுபத்தைந்தாகும். அதில் சிதம்பரம், அம்பலச்சிதம்பரம், அம்பலம், கனகசபை, கனகம்பலம், கனகாபுரி, செம்பொனம்பலம், திருச்சிற்றம்பலம், தில்லை, தென்புலியூர், புலிகண்டவூர், புலிசரம், புலிசை, புலிநகர், பெரும்பற்றப்புலியூர், பெரும்புலியூர், மன்று என்ற பலபெயர்களால் இத்தலத்தைக்



குறிப்பிட்டிருக்கின்றார். மற்றும் கோயிலில் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள முருகனைக் கண்டு 'தில்லை மேலைக்கோபுர மேவிய பெருமாளே', 'தெற்குக் கோபுரவாசலில் மேவியபெருமாளே', 'தெய்வயானை மானோடு நாலு கோபுர வாசல் மேவியபெருமாளே', 'மன்றுள் வளர் பெருமாளே', 'கனகசபைதனில் மேவிய கந்தப்பெருமாளே', 'புலிகண்டவூர் மகிழ் தம்பிரானே' என்று பலவாறாகப் போற்றித் துதித்திருப்பதும் சிந்தித்து மகிழ்தற்குரியது.

**உமாபதிசிவம் :**

தில்லைவாழந்தணர் குலத்திலே அவதரித்தவர்கள். நடராஜப்பெருமானைப் பூசிக்கும்பேறு பெற்றவர்கள். கல்வித்துறையிற் சிறந்தவர்கள். ஒரு நாள் இறைவனைப் பூசித்துவிட்டு இல்லத்திற்கு எழுந்தருள்கின்றபோது விருதுகளோடு சென்றார்கள். மறைஞானசம்பந்த சிவாசாரிய சுவாமிகள் ஒரு அம்மையார் கஞ்சிவார்க்க இருகைகளாலும் வாங்கி உண்டுகொண்டிருந்தார்கள். அம்மையார் இவர்வரவைநோக்கிக் கஞ்சியை நிறுத்த, அருட்சினங்கொண்ட ஆசாரிய சுவாமிகள் "பட்டகட்டையில் பகற்குருடு செல்வது பாரீர்" என்று கூறினார். இந்தச் சொல்லம்பு அதிபரிபக்குவியாகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் காதில் சென்று தைத்தது. பல்லக்கைவிட்டுக் கீழேகுதித்து, மறைஞானரிடம் ஓடிவந்து, இரண்டு முழங்கைகளிலும் வழியும்

ஆசாரியசேடத்தை வாங்கியுண்டார். மறைஞானரும் மகிழ்ந்து கன்றினைப்பிரிந்த தாய்ப்பசுவைப் போல மனமுருகினார். அருளுபதேசத்தை வழங்கினார். உமாபதிசிவாசாரிய சுவாமிகள் சிவானுபவங் கைகூடிய செல்வராய்த் திகழ்ந்தனர். தில்லைவாழ் அந்தணர்கள் இதனைக் கேள்வியுற்று, உமாபதி சிவாசாரியரை, பிறருடைய எச்சிலையுண்டாரென்று ஒதுக்கிவைத்தனர். இவர்களும் கொற்றவன்குடியில் ஒரு மடம் தயாரித்துக்கொண்டு வசித்துவந்தனர். மூலையிற்கிடந்தாரை முற்றத்தே விடுமுதல்வன் இவரது சிவானுபவத்திறத்தை உலகிற்கு உணர்த்தத் திருவுளங்கொண்டான்.

தில்லையில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாத் தொடக்கம் வந்தது. தில்லைவாழந்தணர் கொடி ஏற்றத் தொடங்கினார்கள். கொடி யேறவில்லை. இடர்ப்பாடு உண்டாயின. ஆனந்தக்கூத்தர், அருள் வள்ளலாகிய உமாபதிசிவத்தை யழையுங்களென்று அசரீரியாக யறிவித்தனர். தில்லைவாழந்தணர்களும் கொற்றவன்குடியடைந்து நிகழ்ச்சியைத்தெரிவிக்க, இறைவன் திருவருட்டன்மையைவியந்து தில்லைக்கு வந்து "கொடிக்கவி" என்னும் சாத்திர தோத்திரம் பாடினார். கொடி தானே ஏறிற்று.

பின்னொருகால் பெற்றான்சாம்பான் என்னும் அதீதபக்குவியாகிய அடியவரின் பத்திக்கு வியந்து ஆனந்தக்கூத்தர், 'அடியார்க்கெளியன்' என்னும்



சீட்டுக்கவியைக் கொடுக்க இறைவன் ஆணையைப் பெற்ற உமாபதிசிவம் சத்தியோநிருவாண தீட்சை செய்து முத்தியிற் சேர்ப்பித்தார். இந்த அருளிப் பாட்டையறியாத ஊரார்களுடைய பிதற்றுரையால் மன்னன் சோர்ந்து, உமாபதிசிவாசாரிய சுவாமிகளிடம் வந்து, நீர் முத்திகொடுத்தது உண்மையாயின், என் கண்முன் ஒருவருக்கு முத்திகொடுத்தருள்க! என்றான். அப்போது அதற்கேற்ற பக்குவியாக ஒருவரும் இல்லாமையால் கோமுகைநீரில் வளர்ந்து எழுந்த ஒரு முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தார். இதனைக்கண்ட அரசனும் ஏனையரும் பெருவியப் புற்றனர். இங்ஙனமாகப் பல அற்புதங்களை இயற்றிச் சிவப்பிரகாசம் முதலான ஞானசாத்திரங்களை அருளிச்செய்து குஞ்சிதசரணத்தை யடைந்தார். இவர்களுடைய சமாதி சிதம்பரத்தின் மேல்பால் கொற்றவன்குடி மடத்தில் இருக்கிறது.

## இரட்டையர் :

இவர்கள் தெய்வத் தமிழ் வல்ல புலவர்கள். ஒருவர் முடவர். ஒருவர் குருடர். குருடர்தோளில் முடவர் ஏறிக்கொண்டு யாத்திரை செய்துவருவர். இவர்களுக்கு இளஞ்சூரியர், முதுசூரியர் என்று பெயர். திருவக்கையில் இருந்த ஆட்கொண்டான் என்ற கொங்கராயனாலும், கச்சியிலிருந்த சம்பராயனாலும் பாதுகாக்கப்பட்டவர்கள். இவர்கள் பாடியது தில்லைக்கலம்பகம். "கலம்பகத்திற்கு

இரட்டையர்கள்'' எனப் பிற்காலத்தாரால் பேசப் பெற்றவர்கள். காலம் 450 ஆண்டுகளுக்கு முன்பு.

**காளமேகப்புலவர் :**

இவரையறியாத தமிழ்நாடு இருக்கமுடியாது. நகைச்சுவைபடப்பாடுதலில்வல்லவர். இவர் வைண வராயிருந்து சைவரானவர். இவர் பலதலங்களுக்குச் சென்று, சிதம்பரத்துக்கு வந்தபொழுது பெருமா னுடைய பிக்ஷாடனத் திருக்கோலத்தைக்கண்டும், நடனத் திருக்கோலத்தைக்கண்டும் நகைச்சுவை படப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக ஏழு பாடல்கள் இருக்கின்றன.

> '' நச்சரவம் பூண்டதில்லை நாதரே! தேவரீர்
> பிச்சைக்குந் தன்னைப் புறப்பட்டும்—உச்சிதமாம்
> காளமேற் குஞ்சரமேல் கார்க்கடல்போ லேமுழங்கும்
> மேளமேல் ராஜாங்க மேன்''

என்பது சபாநாயகர் உற்சவத்தைத்தரிசித்தபோது பாடியது. இவர் திருமலைராயனைப்பாடியிருப்பதால் கி. பி. 1455—1468 ஆகலாம்.

**குருஞானசம்பந்தர் :**

தருமபுர ஆதீனத்து ஆதிகுருமூர்த்திகளாகிய இவர்கள், சிதம்பரத்துக்கு எழுந்தருளியிருந்தபோது ஆனந்த நடராஜமூர்த்தியை வழிபாடு மெய்மறந்து நின்று, பின். இராஜசபையாகிய ஆயிரக்கால்



மண்டபத்தில்நிட்டைகூடியிருந்தார்கள். அப்போது ஒருநாள் நடராஜப்பெருமான் அருளால் சிவகாமி அம்மையார் நடுயாமத்தில் தமது பள்ளியறையில் வைக்கப்பட்ட வெள்ளிக்கிண்ணத்துள்ள பாயசத்தையும், பொற்கிண்ணத்துள்ள திருவமுதத்தையும், கங்கைநீரையும் எடுத்துவந்து 'அன்பனே உண்க' எனக் கொடுத்தருளினர். சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா, முத்திநிச்சயம் முதலிய எட்டு அருள் நூல்களும் இவர்கள் இயற்றினவே.

**கண்கட்டிமறைஞானர் :**

இவர் காளத்தி மறைஞானபண்டாரம் என்பவரிடம் சிவதீட்சை பெற்றவர். சிதம்பரத்தில் குகைமடம் என்ற ஒன்றைத் தாபித்து, அஞ்ஞானமயமாகிய உலகத்தைப் பார்க்கக் கூடாது என்று கண்ணைக்கட்டி அதில் வாழ்ந்துவந்தார். குருவழி அநுபவங் கைகூடப் பெருமையால் ஆன்மாநந்தவாதத்தை மேற்கொண்டார். சிதம்பரத்திலேயே தங்கியிருந்து சிவதருமோத்தரம், சைவசமயநெறி முதலிய பல நூல்களைச் செய்தார்.

**புராணத்திருமலைநாதர் :**

இவர் அவதரித்தது தில்லையிலேதான். சைவ வேளாளமரபினர். இயற்பெயர் திருமலைநாதர். தில்லைவாழந்தணர்களின் வேண்டுகோட் கிணங்கிச் சிதம்பரபுராணம் ஒன்று இயற்றினர்.

"ஆற்றல் சான்றுள வாயிர மறையவ ராலும்
[illegible] தொண்டர்கள் மறைநெறி யெதிகளா யுள்ளோர்
போற்ற ஞான்சிதம் பரத்திடைப் புகழினைத் திகழச்
சாற்று வாய்வட மொழிவழித் தமிழினல் என்றார்."

என்பது அப்புராணத்தின் பாயிரச்செய்யுள். இவர் பாடிய மற்றொரு நூல் மதுரைச் சொக்கநாதருலா. இவர்காலம் 16ம் நூற்றாண்டென்பர்.

### குமரகுருபரர் :

மாசிலாமணி ஞானசம்பந்தப்பெருமானால் ஆட்கொள்ளப்பெற்ற இவர்கள் "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள" என்னும் பெரியபுராணத்தின் அநுபவப்பொருள் காணத் தில்லையை யடைந்தார்கள். தரிசன ஆனந்தமானது சிந்தையைப் பிணிக்கச் சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை என்ற இரண்டுநூல்களைப்பாடி யருளினார்கள். சிவகாமியம்மை இரட்டைமணிமாலையும் இவர் பாடியதாகக் கூறுவதுண்டு. இவர்கள்காலம் 17ம் நூற்றாண்டாகும்.

### வெள்ளியம்பலவாணர் :

இவர்கள் குமரகுருபர சுவாமிகளுடன் கல்வி பயின்றவர்கள். மாசிலாமணி ஞானசம்பந்தரிடம் ஞானோபதேசம்பெற்றவர்கள். வடமொழியுந் தென்தமிழும் நிலைகண்டுணர்ந்தவர்கள். மிருகேந்திராகம மொழிபெயர்ப்பு, முத்திநிச்சயபாஷ்யம், ஞானாவரண



விளக்கம் முதலியவற்றைச் செய்தருளியவர்கள். தில்லையிலே நெடுங்காலம்வசித்து இறைவன் திருவடிகளை யடைந்தவர்கள். இவர்களுடைய சமாதி ஞானப்பிரகாசகுளம் தென்மேற்குக் கரையில் விளங்கிக்கொண்டிருக்கிறது.

### படிக்காசுத்தம்பிரான் :

இவர் தருமபுர ஆதீன அடியார் குழாத்துள் ஒருவராக விளங்கியவர். ஒருநாள் சிதம்பரத்தில் நடராஜப்பெருமான் திருமுன்னிருந்த திரைச்சீலையில் தீப்பற்றியதை ஞானத்தாலுணர்ந்து தம் கைகளைப் பிசையவே அங்குத் தீ அவிந்தது. பெருமான் தீக்ஷிதர் கனவில் தோன்றி 'நமது திரைச்சீலையில் பற்றிய தீயைப் படிக்காசன் அவித்தான்; அவனிடத்தில்சென்று கொடுக்க' என ஒரு விபூதிக்கிழியைத் தந்தருளினார். தீக்ஷிதரும் விழித்தெழுந்து, இறையருளை வியந்து, தருமை வந்து, படிக்காசரிடம் அக்கிழியைச் சேர்ப்பித்தனர். பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் இவரைப்பற்றிப் பாடியபாடல் இவரது கவிதாசாமர்த்தியத்தை அறிவிக்கும்.

" மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்த வேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
தூய சேற்றில்

நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே
பாட்டினுடை நளினந்தானே."

தில்லையில் படிக்காசுபெற்றதால் இவர் படிக்காசுத் தம்பிரான் எனப் பெயர்பெற்றார்.

**துறைமங்கலம் சிவப்பிரகாசர் :**

இவர் வெள்ளியம்பலவாண சுவாமிகளிடத்தில் தொல்காப்பியம் பாடங்கேட்டவர் கற்பனைக் களஞ்சியம் என்ற சிறப்புத்திருநாமம்பெற்றவர். இவர்கள் வெள்ளியம்பலவாண சுவாமிகளை யடுத்த காலத்து இவருடைய இலக்கியப் பரப்பினெல்லையை - இலக்கணத்தின் தேவையை அறிந்துகொள்வதற்காக வெள்ளியம்பலவாண சுவாமிகள் 'கு' என்றெடுத்து 'கு' என்று முடிக்கச்சொன்னார்கள். அப்போது,

"குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழல்
முடக்கோடு முன்னம் மணிவார்க்கு—வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைத்தோல் மேற்கொள்ளல்
ஊருடையா னென்னும் உலகு"

என்று கற்பனையும் கவிதையும் பொருந்தப் பாடி முடித்தனர்.

**அப்பைய தீக்ஷிதர் :**

இவர் வடமொழிப்புலமை மிக்கவர். தமது வாழ்நாளின் பிற்பகுதி முழுவதையும் தில்லையிலே



கழித்தவர். சித்தாந்த கௌமுதி ஆசிரியரான பட்டோஜி தீக்ஷிதர் வேதாந்தநூல் கற்றது இவரிடத்திலேதான். சிவபரத்துவநிரூபணம் செய்வதில் தலைசிறந்து விளங்கியவர். அரசன் தமக்கு மரியாதையாக அளித்த பீதாம்பரத்தைத் தீயிலிட்டு மறுநாள் பெருமானது திருமேனியில் அதுவிளங்கக் காட்டியவர். தன்னை வஞ்சகமாகக் கொல்லவிரும்பிய தாதாசாரியாரின் முன்னே அவரால்கொடுக்கப் பட்ட விஷத்தையுண்டு பொலிவுடன் விளங்கியவர். மேலும் தாதாசாரியர் ஆணைப்படி சிலர் இவரைக் கொல்லவந்து இவரது பக்கத்தில் சிலர் சூலங்களை வைத்துக்கொண்டு நிற்பதைக்கண்டு அஞ்சியோடினார்கள். அதுகண்ட தீக்ஷிதர் பெருமானிடம் முறையிட, தாதாசாரியர் மீது இடிவிழுந்தது.

பிரபன்னாமிருதம் என்றவைணவநூலில், 'சைவ சாத்திரபாரங்கதரர்களுக்குள் முதன்மை ஸ்தானம் பெற்ற, மிகக் கீர்த்திவாய்ந்த அப்பைய தீக்ஷிதர் மிகுந்த புகழுடன் சிதம்பரத்தில் விளங்குகிறார்' என்று இவரைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதும் கருதத்தக்கது. விஜயநகர அரசனாகிய ராமராயரின் காலத்தவர். அவர் தில்லைக்குவந்து, இடைக்காலத்தில் அப்புறப்படுத்தப்பட்டிருந்த தில்லைக்கோவிந்தராஜப்பெருமாளை மீண்டும் எழுந்தருளச் செய்த காலத்து இவரும் உடனிருந்தவராவர். 104-க்கு மேற்பட்ட பலசிறப்புடைய சாத்திரதோத்திரங்களாகிய வடநூல்களை அருளிச்செய்த இவரது காலம்

பதினாறும் நூற்றாண்டாகும். 'மணிவாசகரைப்போல இவரும் பஞ்சாக்ஷரப்படியிலேறி உட்புகுந்தனர்; மற்றொன்றும் அறியப்படவில்லை' என இவரது முத்திநிலையின் வரலாறு கூறப்படுகிறது.

**சித்தர் சிவப்பிரகாசர் :**

கும்பகோணத்தில் தோன்றிய இவர் திருவாவடுதுறையையடைந்துதீட்சைபெற்றுச், சிவப்பிரகாசர் என்னும் திருநாமமும் ஏற்றார். விஜயநகர மன்னனின் காரியஸ்தராக, சிதம்பரத்திலிருந்த வைணவர்கள் சிலரால் கூத்தப்பெருமானது நித்தியபூஜை தடைப்பட்டது. அதனை அறிந்த இவர் குரு ஆணைப்படி, சிதம்பரம் வந்து, தில்லை மூவாயிரவரால் கொடுக்கப்பட்ட சிவிகையிலமர்ந்து வேலூரையடைந்தார். ஆங்குள்ள இலிங்கநாயக்கரைக்கண்டு தம்கருத்தைச் சொல்லி வந்தகாரியத்தை முடித்தார். இவர்செய்த அற்புதங்கள் பலவாகும். இவருடைய வரலாறு முழுவதையும் கர்னல்மெக்கன்ஸி என்பார் சேகரித்த கையெழுத்துப் புத்தகங்களில் ஒன்றில் காணலாம். பதினேழாம் நூற்றாண்டுப் புலவர்வரிசையில் இவர் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் செய்த நூல்களுள் அத்துவித வெண்பாவும் ஒன்றாகும்.

**அகோரசிவாசாரியார் :**

இவர் ஆதிசைவர். பதினெண்பத்ததி செய்த ஆசாரியருள் இவர் ஒருவர். இத்தலத்து அநந்தே



சுவரன் கோயில் சந்நிதியில் இவருடைய மடம் இருக்கிறது. இவருடையபத்ததி சித்தாந்த சைவர்களால் பெரிதும் போற்றப்படுகிறது.

**சொக்கநாதப்புலவர் :**

இவர் தொண்டைநாட்டிற் பிறந்தவர். மாதை வேங்கடேசனையும் மாதைக்கருப்பனையும் பாடிப் பரிசில் பலபெற்றவர். நடராஜப்பெருமானைப்பற்றி, பாடிய புலவர்களுள் இவரும் ஒருவர். இவர்பாடியது:-

" அம்பலவா இன்னொருகால் ஆடினால் ஆகாதோ
உம்பரெலாம் கண்டதெனக் கொப்பாமோ—சம்புவே
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்கும் தித்தியென
ஒற்றிப் பதஞ்சலிக்கும் ஊர் "

**பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் :**

சிவகங்கை ஜமீனைச்சார்ந்த கடம்பங்குடியில் இருந்தவர் என்பர். எப்பொழுதும் இடையில் பட்டு யணிந்திருந்தமையால் பலபட்டரை என்றபெயரால் இவர் வழங்கப்பெறுவர். படிக்காசுப்புலவரைப் புகழ்ந்துபாடியவர். புரவலர்கள்மீதும் பெருமான் மீதும் பாடப்பட்ட தனிப்பாடல்கள் பல உள்ளன. அவைகளுள் தில்லையைப்பற்றிய திருப்பாடல்களும் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று:-

" எடுத்தசன னங்கடொறும் ஈன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்தமணிப்

பைந்நாகணைதுயின்மால் பாலாழியுஞ் சிறிதாம்
மன்னு சிதம்பரதேவா"

**மாரிமுத்துப்புலவர் :**

இவர் இத்தலத்துக்கருகிலுள்ள தில்லைவிடங்கனில் வேளாளர் மரபில் அவதரித்தவர். நடராஜ மூர்த்தியின் திருவடிகளில் இடையீடில்லாத அன்பு உடையவர். இவர் பிள்ளைகள் மூவரில் ஒருவருக்குச் சித்தப்பிரமையுண்டாக, புலியூர்வெண்பா பாடி அதை நீக்கியருளினர். இன்னும் சிதம்பரேசுவரர் விறலிவிடுதூது, புலியூர்நொண்டி நாடகம் என்பனவும் இவர் இயற்றியனவே.

**முத்துத்தாண்டவர் :**

இவர்பிறப்பிடம் சீகாழி. இசைவேளாள மரபினர். சிவபக்திமிக்கவர். இளமைப்பருவத்திலேயே கன்மநோயினால் பற்றப்பட்டு வருந்தினர். வழிபாட்டிற்காகக் கோயில் சென்ற இவர் இரவு அங்கேயே தங்கி, பசியால்வருந்துங்கால் அம்மையார் அவர்முன் தோன்றிப் பாலடிசில் அளித்து உண்ணச்செய்து, "தில்லைப்பெருமானைத் தரிசித்து வணங்கிப் பாடுக; அதுவே உனது உடற்பிணி நீக்கத்திற்கு வழி" என்று ஆணையும் அருளினர். ஆணையின் வழியே இவர் தில்லைப்பதிசென்று வணங்கிநின்று "பூலோக கைலாசகிரி சிதம்பரம்" என்று ஆங்கு எழுந்த அதனையே முதலாகக்கொண்டு கீர்த்தனை பாடித்



துதித்தார்கள். பெருமான் அருளால் பஞ்சாக்ஷரப் படியில் பொற்காசுகள் ஐந்து தோன்றப்பெற்று மகிழ்ந்தார். பிணியும் பின்னடைந்தது. மற்றொரு முறை வருங்கால் பாம்புதீண்ட "அருமருந்தொரு தனிமருந்து அம்பலத்தே" என்ற பாடலைப் பாடி விஷநீக்கம் பெற்றார். இவ்வாறு தில்லைப்பெருமான் மீது பலகீர்த்தனங்களும் பதங்களும்பாடி ஆவணிப் பூச நன்னாளில் கூத்தப்பிரான் திருமுன்புநின்று, "மாணிக்கவாசகர்பேறு எனக்குத் தரவல்லாயோ அறியேன்" என்ற பாடலைப் பாடி, பிறவாநெறி பெற்றனர்.

**ஞானப்பிரகாசர் :**

இவர் யாழ்ப்பாணத்திலவதரித்தவர். பாண்டி மழவர்குலம். திருவண்ணாமலை ஆதீன மடத்தில் சந்நியாசம் பெற்றவர். வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர். இவர் சிதம்பரத்தில் வசிக்கின்ற காலத்துப் பெரும்பொருளை இலங்கையரசனொருவன் இவரிடம் ஒப்புவித்துப்போய்த் திரும்ப வாராமையால் நெடுங்காலம் பார்த்திருந்து அதனைக் கொண்டு குளந்தோண்டி மடம் கட்டுவித்தனர். அக்குளமே இன்று ஞானப்பிரகாச குளம் என வழங்குகிறது. சிவபுரிமடத்தில் ஞானப்பிரகாசரது திருவுருவம் இன்றும் இருக்கிறது. இவர் சிவஞான சித்தியாருக்கு உரைவகுத்த ஆசிரியர் அறுவருள் ஒருவராவர்.

### கோபர்லகிருஷ்ணபாரதி:

இவர் நாகபட்டினத்தை அடுத்த நரிமணம் என்ற ஊரினர். இராமசாமிபாரதி என்பாரின் புதல்வர். வடமர் என்னும் வகுப்பினர். மாயூரம் கோவிந்த சிவத்தினிடம் கல்விபயின்றவர். மிக்க இசைப்புலமையுடையவர். தியாகையரால் பாராட்டப்பெற்றவர். சிதம்பரத்திற்கு அடிக்கடி சென்று வழிபாடு இயற்றுபவர். சிலகாலம் அங்கேயே தங்கி விடுவதும் உண்டு. பெண்களுள் ஒருவரை ஒருவர் ஆசையோடு அழைத்துக் கும்மியடிக்கும் முறையில் சிதம்பரக்கும்மி பாடியிருக்கிறார். நடராஜமூர்த்தி மீதுபாடிய பல கீர்த்தனங்கள் மிக அழகானவை. திருநீலகண்ட நாயனார் இயற்பகை நாயனார் திருநாளைப்போவார் ஆகியோரது சரித்திரங்களைக் கீர்த்தனைகளாக இயற்றியுள்ளார். தரிசனத்திற்காக வந்த ஆறுமுகநாவலர், ஆலயத்தில் பாடிக்கொண்டிருந்த இவரைக்கண்டு தமது நினைவாகப் பத்து ரூபாய் அளித்தனராம்.

### மீனாட்சிசுந்தரம் பிள்ளை :

துறைசை ஆதீனத்து மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் காலத்து ஆதீன மகாவித்துவானாக இருந்தவர்கள். இவர்களைப் பிற்காலக் கம்பரென்று புலவருலகம் பேசும். இவர்கள் இத்தலவிஷயமாகச் செய்தது திருத்தில்லை யமக அந்தாதியென்பது.



### ஆறுமுக நாவலர் :

இவர்கள் யாழ்ப்பாணத்துநல்லூரில் கார்காத்த வேளாளகுலத்தி லவதரித்தவர்கள். இராமநாதபுர மன்னரான பொன்னுசாமித் தேவரவர்களாலும், துறைசை, தருமை முதலிய ஆதீனங்களாலும் மிகப் பாராட்டப்பெற்றவர். நைட்டிகப் பிரமசாரி. நெடுங் காலம் சிதம்பரத்திலே தங்கியிருந்து சைவமும் தமிழும் வளரச் சைவப்பிரகாச வித்தியாசாலையும், வித்தியாநுபாலன யந்திரசாலையும் நிலைநாட்டியவர்கள். சைவமும் தமிழும் இன்று புத்துயிர்பெற்று விளங்குவது இவராலேயே யெனலாம். இவர்கள் கல்லூரியே இன்று இத்தலத்து மேலவீதியில் விளங்கிக்கொண்டிருக்கிறது.

### வடலூர் இராமலிங்க சுவாமிகள் :

இவர்களுடைய பெரும்பான்மையான காலம் சிதம்பரத்திலேயே கழிந்தது எனலாம். ஆனந்த நடராஜமூர்த்தியை உபாசனாமூர்த்தியாகக் கொண்டவர்கள். இவர்களது அருட்பாவில் எங்கும் நடராஜப் பெருமான் தோத்திரங்களைக் காணலாம்.

### பொன்னம்பல சுவாமிகள் :

வேதாந்த மதத்தைத் தழுவியவர்கள். பகவத்கீதைக்கு விரிவாக அழகிய உரைகண்டவர்கள். இவர்கள் இருந்த மடம் பொன்னம்பலசாமிமடம்

என வழங்கும். இம்மடத்தின் பெயராலேயே இது இருக்கும் தெருப்பெயரும் வழங்கப்படுகிறது.

**திருமங்கையாழ்வார் :**

சீகாழி தாலுக்கா திருநகரிக்கடுத்த திருக்குறையலூரில் அவதரித்தவர். மணவாளத் திருக்கோலம்கொண்டு எழுந்தருளிய பெரிய பெருமாளது பாதஸ்பரிசத்தால் 'கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று அருளிய பாடலை முதலாகக் கொண்டு பிரபந்தத்தைப் பாடிமுடித்தார். தில்லைத் திருச்சித்திரகூட விஷயமாக ஆக்கியன திருமொழிகள் இரண்டு.

**குலசேகராழ்வார் :**

கொல்லி நகரில் ஸ்ரீ கௌஸ்துபாம்சராய் திருடவிருதருக்குப் புத்திரராய் அவதரித்தவர். சேர அரசர். சக்ரவர்த்தி திருமகன் தனியே யுத்தத்திற்குப் புறப்பட்டதாக எண்ணி வில்லும் அம்பும் கொண்டு தாமும் புறப்பட்டவர். 'ஆனை செல்வத் தரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்' என்று இம்மை மறுமை யின்பங்களில் விருப்பற்று ஸ்ரீரங்கநாதன் திருவடிகளிலேயே அனவரத அத்யந்த நிவாஸம் பூண்டவர். தில்லைத்திருச்சித்திரகூட விஷயமாகப் பாடிய திருமொழி 'அங்கண் நெடுமதிள்' என்பது.

கிழக்கோபுரத்தில்



வியாக்கிரபாதர்



## அன்பர்கள்

பாமலர்கொண்டு பரமானந்தத் தாண்டவ மூர்த்தியை வழிபாடுசெய்த தெய்வப்புலவர்களே யன்றி அன்பு மலர்கொண்டு இறைவனைப் பூசித்த வர்களும் இத்தலத்தில் பலர் இருந்தனர்.

**வியாக்கிரபாதர் :**

இவர் மாத்யந்தனமுனிவரின் புதல்வர். தில்லை யின் பெருமையைத் தமது தந்தையாரிடம் கேட்டு அறிந்த இவர், தில்லையையடைந்து திருமூலட்டான ரைத் தரிசித்தார். அதற்கு மேல்பால் ஒரு சிவ லிங்கந்தாபித்து வழிபட்டிருந்தார். வண்டுகள் தேனைக்குடிப்பதற்கு முன் பூக்களை எடுத்துப்பூசிக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு உண்டாயது. அதனைப் பெருமானிடம் விண்ணப்பித்துப் பனிக் காலத்திலுங் கூட மரங்களில் வழுக்காமல் பிடித்துக் கொண்டு ஏறுதற்கு புலிக்கால் புலிக்கைகளையும், விடியலில் வழிபார்த்துச் செல்லுதற்கும் பூக்களைப் பழுதுபார்த்து எடுத்தற்குமாக கால்கை நகங்களில் கண்களும் பெற்றார். அதனால் வியாக்கிரபாதர் (புலிக்கால் முனி) எனப் பெயர் பெற்றார்.


இவ்வாறு சிவபூசைசெய்துவந்த இவர் வசிட்ட முனிவரின் தங்கையை மணஞ்செய்து கொண்டார் இவருடைய புதல்வரே உபமன்னியு முனிவர். தைப் பூசம் வியாழக்கிழமையொடு கூடிய சித்தயோக

தினத்திலே பதஞ்சலிமுனிவருடன் ஆனந்தத்திருக் கூத்துக்காட்சியைக் கண்டு தரிசித்தார். இவர் ஆத்மார்த்தமாக வழிபட்டதே திருப்புலீச்சரம்.

**உபமன்னியுமுனிவர் :**

இவர் வியாக்ரபாதரின் புதல்வர். கண்ணனுக்குச் சிவதீட்சை செய்தருளியவர். தாய்மாமனுரான வசிட்டமுனிவர் வீட்டில் காமதேனுவின் பாலைக் குடித்து வளர்ந்தவர். அந்தப்பழக்கத்தால் தமது வீட்டிற்குவந்தபோதும் அப்பாலை அருந்தவேண்டுமென்று அழ வியாக்கிரபாதர் திருமூலட்டானரின் திருமுன் தம்மகனைரைக் கொண்டுபோய்விட்டனர். குழந்தை பால்வேண்டி அழுவதைக்கண்ட பெருமான் திருப்பாற்கடலையே வரச்செய்து உண்பித்தனர். இதுவே திருப்பாற்கடல் தீர்த்தமாகும்.

திருக்கயிலாயமலையில் இவர் பல முனிவர்கள் தம்மைச் சூழவிருக்கின்றபோது ஆயிரம் சூரியன் போன்ற ஓர் ஒளிதோன்ற, அருகிருந்த முனிவர்கள் இது என்ன அதிசயம் என்றனர். "தென்திசையில் அவதரித்த சுந்தரன் பெருமான் அருளால் கயிலை செல்கின்றான்" என்று பதிலுரைத்த உபமன்னியு முனிவர் கைகள் தலைமேற்குவிய எழுந்து வணங்கினர். மேலும் அவர்கள் பெருமான் திருவடியைத் தவிர மற்றென்றையும் வணங்காத இயல்புடைய நீர் இப்பொழுது அவ்வொளியை வணங்கக் காரணம் என்னை? என்றார்கள். அதற்கு அவர் நம்பியாரூர



**அகஸ்தியர்**
(கையில் கமண்டலத்துடன்)



ராகிய சுந்தரர், பெருமானை எப்பொழுதும் தம் உள்ளத்திலே வைத்துக்கொண்டிருப்பவராதலின் அவர் நம்மால் தொழப்படும் தன்மைபெற்றார். என்ற பதில் உரைத்து மேலும் அவர்கள் விருப்பப்படியே தென்திசையின் சிறப்பினையும், சுந்தரர் மண்ணுலகில் அவதரித்ததன் காரணத்தையும், சொல்லியருளினார். இம் முனிவர் பெருமானை,

> "இன்ன தன்மைய னென்றறியாச் சிவன்
> தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான்
> உன்னருஞ் சீர் உபமன்னியமுனி"

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

**சிவாலயமுனிவர் :**

தேவாரத் திருமுறைகளின் பெருமையை அறிந்து அதனை நாடோறும் விதிப்படி பாராயணஞ் செய்து வந்தால் விரும்பியன பெறலாம் என்று எண்ணினார். அந்த ஆசை நிறைவேறாமையால் சிதம்பரத்தை அடைந்தார். ஆனந்தக்கூத்தரை வணங்கி நெடுநாள் தவஞ்செய்தார். ஒருநாள் 'அன்பனே! அகத்தியமுனிவனிடம் செல்லின் உன் எண்ணம் முடிவுறும்' என்ற அருள்வாக்குப் பிறந்தது. அதுகேட்ட சிவாலய முனிவர் பொதியிலை அடைந்து அகத்திய முனிவரிடம் தமது கருத்தை விண்ணப்பித்தார். அதன்படியே அவர் அடங்கன்முறை முழுவதையும் உபதேசித்ததோடு அதிலிருந்து இருபத்தைந்து பதிகங்களைத் திரட்டிக்கொடுத்து 'இதனை

நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள், திருப்பதி கங்கள் முழுவதையுமே பாராயணஞ் செய்தவர்க ளாவார்கள்' என்றும் அறிவுறுத்தருளினர். அதன் படி முனிவர் பலநாள் பாராயணஞ்செய்து இறை வன் திருவருளைப் பெற்றார்.

**தில்லைவாழந்தணர்கள் :**

தில்லைப்பெருமானுடைய திருமேனி தீண்டும் பேறு பெற்றவர்கள். குற்றமில்லாத குலத்தில் தோன்றியவர்கள். மாறுபாடில்லாத ஒழுக்கம் மிக்கவர்கள். 'உறுவது நீற்றின் செல்வ' மாகவும் பெறுவது சிவன்பால் அன்பாகவும் கொண்டவர்கள். இல்லறவொழுக்கத்தில் என்றும் தவறாதவர்கள். தம்மையே தமக்கொப்பானவர்கள். "கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றாரென்றும், பசுவேட்டெரியோம்பிச் சிறப்பர்' என்றும் ஞான சம்பந்தப்பெருமான் இவர்களைப் பாராட்டுகின்றார். இவர்கள் மூவாயிரவருமே ஞானசம்பந்தப்பெரு மான் கண்களுக்குச் சிவகணநாதர்களாகக் காட்சி யளித்தனர் என்றால் இவர்கள் பெருமையைப் பற்றிச் சொல்வது யாது? இமயமலையில் அந்தர் வேதியில் நடந்த யாகத்திற்குப் பிரமனாலழைத்துச் செல்லப்பெற்றுத் திரும்பிக்கொண்டுவந்து விடப் பட்டவர்களில் ஒருவர் குறைய அழைத்துவந்த அரசன் கவர்ந்தானாக "மூவாயிரவருள் யாமும் ஒருவர்" என்று மன்றுளாடும் மணியினாலேயே திரு வாய்மலர்ந்தருளப்பெற்றவர்கள். இவர்களுள் ஒரு



வரே நமது சந்தானாசாரியர்களில் நான்காமவராகிய உமாபதிசிவாசாரிய சுவாமிகள்.

தில்லைவாழந்தணர்களது சிறப்பினைக் கூற வந்த சேக்கிழார் பெருமான், 'தில்லைவாழந்தணர் புராணம்' என்ற ஒரு பகுதியமைத்து அதிலே முதல் இரண்டு பாடலில் முறையே தில்லைத் திருக்கூத்திற் கும், அத்திருநடனம் செய்தருளுகின்ற திருவடிக்கும் வணக்கம்கூறி, 3முதல் 8வது பாட்டுவரையிலுள்ள ஆறு பாடலில் தில்லைவாழந்தணர்களது பெருமை ஓர் அளவுகூறி, ஒன்பதாவது பாடலில் 'தென் தமிழ்ப் பயனாயுள்ள திருத்தொண்டத்தொகைபாட அன்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு திருஆரூர்ப் பெருமான் ஆணை அருளி '**தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்**' என்று அடியெடுத்துக் கொடுத்தார். அவ்வாறு கொடுத்த அத்தொடரால் குறிக்கப்பெற்ற முதற்பொருளாயுள்ளவர்கள் இவர் கள் என்றால் இவர்களின் பெருமைகள் எம்மால் சொல்லப்படும் எல்லைக்குட்பட்டு அடங்குமோ?' என்று முடித்துள்ளார்கள் என்பதும் சிந்திக்கத் தக்கதொன்றாம்.

திருவுடையந்தணர், தெய்வவேதியர்கள், மும் மையாயிரவர், தில்லையந்தணர் என்றெல்லாம் இவர் கள் குறிக்கப்படுகிறார்கள். இவர்களது நியாயசபை யிலேதான் அருட்சிவயோகியாகிவந்த பெருமான் திருநீலகண்டர்மீதுள்ள பெருவழக்கைத் தீர்த்துக்


கொண்டார் என்று திருநீலகண்டர் புராணவரலாறு குறிக்கின்றது.

**மறைஞானசம்பந்தர் :**

புறச்சந்தானசாரியர்களுள் இவர் மூன்றாமவு ராவர். உமாபதி சிவாசாரிய சுவாமிகளைப் 'பட்ட கட்டையில் பகற்குருடு ஏறுதல் பாரீர்' என்று இடித்துரைத்து நல்வழிப்படுத்திய சிவஞானி. இவ சிவபோகத்தமர்ந்திருக்கும் இடமாக மேல்கோபுர தில் தென் பக்கத்தில் ஒரு குகை இருக்கின்ற. இவர்கள் சமாதிக்கோயில் சிங்காரத்தோப்பு என் அழைக்கப்பெறும் திருக்களாஞ்சேரியில் இருக் கிறது.

**திருநாளைப்போவார் .**

சோணாட்டில் ஆதனூரில் பறையர் குலத்தில் அவதரித்தவர். நந்தன் என்பது இவருடைய பிள்ளைத் திருநாமம். இவருடைய முருகிவளர்ந்த சிவபக்தி சிவாலயங்களுக்குப் பேரிகை முழவு முதலியவற்றிற்குத் தோலும் வாரும், யாழ் முதலிய வற்றிற்கு நரம்பும், கோரோசனை முதலியனவும் உதவிவரச்செய்தது. திருக்கோயிலுள் சென்று வழி பட எண்ணிக் குலமும், காலமும் தடுத்தமைக்கு மனம் வருந்தித் திருப்புன்கூர் இறைவனை வேண்டி னார். சிவலோகநாதர் 'சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்று நந்தியை விலகச்செய்து காட்சிவழங்கினர்.



திருநீலகண்டர் முதுமைப் பருவம்



திருநீலகண்டர் மீண்டும் இளமை எய்தியது

தில்லைக்குச் செல்லவேண்டுமென்ற விருப்பம் எழும்போதெல்லாம் நாளைப்போவேன், நாளைப்போவேன் என்று சொல்லிப் பரபரக்கும் மனத்துக்கு ஆறுதலளித்து வருவார். அதனால் இவருக்கு நாளைப்போவாரென்னுந் திருநாமம் உண்டாயிற்று. ஒருநாள் அன்புஉந்த திருஎல்லையாவது வணங்கி வருவோமென்று தில்லைக்குப் புறப்பட்டார். எல்லையை வலம்வந்து வணங்கிச் சிலநாள் தங்கியிருந்தார். இறைவன் தில்லைவாழந்தணர்கள் கனவில் வந்து "ஓமத்தீயில் மூழ்குவித்து அழைத்துவருக" எனக் கட்டளையிட்டு மறைந்தார். தில்லைவாழந்தணர்களும் அவ்வாறே இவரை யழைத்துவந்தனர். நந்தனாராகிய முனிவர் நடராஜப்பெருமானைச் சேவித்து மறைந்தருளினார். இவர் தீயில் மூழ்கிய இடம் இப்பொழுது ஓமக்குளம் என வழங்குகிறது.

**திருநீலகண்டர் :**

சிதம்பரத்தில் குயவர் குலத்தில் உதித்தவர். சிவனடியார்களுக்குத் திருவோடுதருந் திருப்பணியைப் பூண்டவர். சிவனடியாராக எழுந்தருளிவந்த சிவபெருமான் தந்த ஓட்டினைப் பத்திரமாக வைத்திருந்தும் பரமன் மாயையால் மறைத்தருளினார். திரும்ப அவர் கேட்கின்ற காலத்துக் காணாது திகைத்து வருந்தினார். பெருமான் அதை நம்பாது 'மனைவியின் கைப்பிடித்துச் சத்தியம்செய்து தருக' எனக்கேட்டதற்குத் தனக்கும் மனைவிக்குமுள்ள

சூளுறவு அயலறியாமல் வாழ்ந்ததை எல்லாரு மறியத் தெரியுங்காலம் வந்துவிட்டதே யென்று மனம் புழுங்கினார். இவரது நிலையை யுணர்ந்த பெருமான் அவ்வாறாயின் மூங்கிற்கோலைப் பிடித் தாயினும் மூழ்கிச் சத்தியம் செய்துதருகென, அவ் வாறே சத்தியம் செய்துகொடுத்தனர். மூழ்கி எழுந்த அப்போதே கழிந்த இளமையை மீண்டும் பெற்றார். மூழ்கிய தீர்த்தம் இளமையாக்கினார் குள மென்று இன்றும் வழங்கிவருகிறது.

**கூற்றுவ நாயனார் :**

இவர் களப்பிர மன்னர். பலநாடுகளை வென்ற வர். தமக்கு முடிசூட்டுமாறு தில்லைவாழந்தணர்களை வேண்டிக்கொண்டார். தில்லைவாழந்தணர்கள் 'சேர அரசர்க்கன்றி நாங்கள் முடிசூட்டோம்' என மறுத் தனர். நடராஜப்பெருமானுடைய திருவடிகளையே முடியாக எண்ணித் துயில்கொள்ளக் கூத்தப்பெரு மான் கனவிலெழுந்தருளித் திருவடியே முடியாகச் சூட்டப்பெற்றார்.

**கணம்புல்லர் :**

அறுபான்மும்மை நாயன்மாரில் ஒருவர். சுந்தர ரால் பாராட்டப்பெற்ற சிறப்பினர். அவதார ஸ்தலம் இருக்குவேளூர் என்பது. சிவாலயத்தில் விளக்கெரிக்கும் நியமம்பூண்டவர். இத்தகைய இவர் சிதம்பரம்வந்து நடராஜப்பெருமான் திருவடியை



வணங்கிச் சிலகாலம் தங்கினார். திருப்புலீச்சரத்தில் தம் பணியைச் செய்துவந்தார். வறுமைமேலீட்டால் கணம்புல்லைக் கொண்டுவந்து விற்று அதுகொண்டு விளக்கெரித்துவந்தார். ஒருநாள் புல்லும் விலை போகவில்லை. புல்லினை எரித்து ஒளியுண்டாக்கினார். அன்று அதுவும்போதாமையால் தன் திருமுடியை விளக்காக எரித்து இறையருளைப்பெற்றார்.

**கோச்செங்கணான் :**

சுபதேவனும் கமலவதியும் மக்கட்பேற்றை விரும்பித் தில்லைக்குச்சென்று மன்றாடும்பெருமானை வழுத்த, கோச்செங்கணான் அவதரித்தான் என்றும், இவன் பல கோயில்களைக் கட்டியதோடு சிலநாள் தில்லையில் தங்கியிருந்தான் என்றும், அப்பொழுது மறையவர்க்கு மாளிகைகள் பல சமைத்தான் என் றும் சேக்கிழார் அறிவித்துள்ளார்.

**பெற்றான்சாம்பான் :**

உமாபதிசிவாசாரிய சுவாமிகள் காலத்தில் நட ராஜப்பெருமானுக்குத் திருவமுதுசமைக்க விறகை வேதியர் வழியாகக் கொடுத்துவந்தான். தில்லை நடராஜருடைய திருமுகப்பாசுரத்தால் கொற்றவன் குடி உமாபதிசிவாசாரிய சுவாமிகள் மடத்திற்கும், விறகு கொடுத்துவந்தான். ஒருநாள் வெள்ளத்தால் இத்தொண்டுக்கு இடையூறுவர, உமாபதியாருக்கே நிவேதனகாலம் தாழ்த்தது. உமாபதியார் பணி

விடையாளரைக் காரணம்வினவினர். உண்மையையறிந்தனர். சாம்பான் நாளைக்குவரின் எம்மிடம் அறிவிக்க என ஆணைதந்தனர். அவர்களும் அவ்வாறே செய்தனர். ஆசாரியமூர்த்தியைப் பெற்றான் சாம்பான் கண்டவுடன் அடியற்றமரம்போலக் கீழே விழுந்தெழுந்து சீட்டுக்கவியைச் சேர்ப்பித்தனன். உமாபதியார் திருவருளிருந்தபடியை வியந்து உடனே இவனை முத்தியிற்சேர்ப்பித்தார்.

**குடவுழுந்தர் :**

உமாபதிசிவாசாரியார் மடத்திலுள்ள மந்ததர பக்குவியாகிய ஒரு சீடர். ஒரு குடம்நிறைய உளுந்தை ஒவ்வொன்றாக இட்டு நிறைந்தால்தான் இவருக்கு மனப்பாடம்வருமாம். இவருடைய திருவுருவம் ஒன்று கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியசுவாமிகள் மடத்தில் இருக்கிறது.

**ஆனந்தநமசிவாயபண்டாரம் :**

இவர் சிதம்பரம் குருநமசிவாயமூர்த்திகளின் மாணாக்கர். சாலிவாஹன சகம் 1514ல் வாழ்ந்த கர்நாடகத்தரசன் வேங்கடபதிதேவன் என்பவன் இவருக்குச் சிதம்பரத்தில் ஒருமடம் கட்டித்தந்தான்.

**இராசராசன் :**

சோழ அரசர்களுள் மிகச் சிறப்புடையவன். அருண்மொழித்தேவன் என்பது இவனது இயற்



பெயர். செல்வத்தில் சிறந்து சிவனடிச்சிந்தையனாயிருந்தது பற்றித் தில்லைவாழந்தணர்கள் "இராஜராஜன்" என்றபெயரால் இவனை அழைப்பாராயினர். தஞ்சை இராசராசேச்சரம் கோயிலை எடுப்பித்தவனும் இவனே. சிவபாத சகரன், அபயகுலசேகரன் என்றபட்டப்பெயர்களும் இவனுக்கு உள.

இவனது அரசாட்சியில் இம் மன்னனைக்காண வருகிறவர், மூவரருளிய பதிகங்களுள் ஒவ்வொன்று சொல்ல, அதனைக்கேட்டுக் கைகள் தலைமீதேறக் கண்ணிலாநந்தவெள்ளம் வழிய நெஞ்சம் நெக்குருகி அன்புமயமாயினன். அன்று முதல் அவ் அரிய திருமுறைகளைப் பெறவேண்டும் என்ற எழுச்சி தோன்றிற்று. பல இடங்களில் தேடச்செய்தும் கிடைத்தில. இந்நாளில், திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பிகள் பொல்லாப்பிள்ளையாரின் திருவருளைப்பெற்று விளங்குகிறார் என்று கேள்வியுற்றான். அவரிடம் சென்று தன்கருத்தை அறிவித்தான். நம்பிகளும் பிள்ளையாரிடம் வணங்கி விண்ணப்பித்து அவரருளால் திருமுறை தில்லையிலிருப்பதாகத் தெரிந்துகொண்டார். அரசனுடன் தில்லைக்குவந்தார். அரசனும் ஆங்குள்ள அந்தணர்களிடம் வந்தகாரியத்தை அறிவித்தான். அதற்கு அவர்கள் 'தமிழ்வைத்த மூவர் வந்தால் அறைதிறக்கும்' என்றார்கள். செவிமடுத்த அரசன் அதற்குடன்பட்டவனாய் அம்பலவர்க்கு விழாச்செய்து மூவர்களது திருப்படிமங்களை வீதியுலாவருவித்து, திரு

முறைகள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குமுன்னால் கொண்டுவந்துநிறுத்தி, 'மூவரும் வந்தனர்' என்று அந்தணர்கட்கு உணர்த்தினான்.

அறை திறக்கப்பட்டது. திருமுறைகள் புற்றினால் மூடப்பட்டிருந்தன. கண்ட அரசன் மனம்கவல, 'இக்காலத்துக்குவேண்டியவற்றைமட்டும் வைத்துள்ளோம்' என வானத்தில் ஓசை எழுந்தது. அதனால் மனமகிழ்ந்தமன்னன் நம்பியின் கழல்வணங்கினான். அரசன் விருப்பப்படியே எடுத்த திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் தொகுத்தருளினர். இம்மன்னனும் திருமுறைகண்டசோழன் என்று பெயர் பெற்றான். வரலாற்றாசிரியர்கள் இவனை முதல் இராஜராஜன் என்று குறிப்பிடுவர்.

## அருள் நூல்கள்

ஞானாகாசமாகிய தில்லையைப்பற்றி எழுந்த நூல்கள் பல. அவற்றில் திருமூலர் காலத்துக்கப்பாற்பட்ட நூல்கள் இல்லையென்னலாம். அந்த நூல்கள் பலவற்றுள்ளும் தில்லையினியல்பும், அங்கு வாழ்வாரது அருங்குணங்களும், நடராஜப்பெருமானது அருட்டிறங்களும் பேசப்பட்டுள்ளன.

### திருஞானசம்பந்தர் தேவாரம்:

தில்லை, தேவர்கள் வாழக்கூடியது. ஒழுக்கத் திற்றவறாது சீலத்தையே கடைப்பிடித்த அந்தணர்



களையுடையது. வற்றாத நீரூற்றுப்போல வளர்ந்துகொண்டேயிருக்கின்ற தமிழால் உயர்ந்தவர்களுக்கு உறைவிடமாயுள்ளது. அங்கிருக்கின்ற அந்தணப் பெருமக்கள் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றபடி வேதங்களைப் படித்து வேள்வி பலசெய்து நாட்டில் கலியே வராதபடி ஓட்டுபவர்கள். எங்கும் ஆன்மபோதத்தையழித்துச் சைவயக்ஞம் செய்பவர்கள். நடராஜப் பெருமானை என்றும் பிரியாதே வழிபடுபவர்கள்.

நடராஜப்பெருமான் முற்றாத வெண்திங்களை முடிக்கணிந்தவர். பிறப்பில் பெருமான். கருமான் தோலைப் போர்த்தவர். திரிபுரங்களைச் செற்றவர். வேதமுங் கீதமும் விளக்குபவர். மயிர்ச்சாந்தணிந்த மகேஸ்வரியோடு மகிழ்ந்துவீற்றிருப்பவர். தில்லை வாழ் மக்களுடைய செல்வவளம் "செல்வநெடுமாடஞ் சென்று சேணோங்கிச், செல்வமதி தோயச் செல்வம்" என்பதால் நமக்கு விளக்கப்பெறுகிறது.

பேரம்பலம்-பிறைவந்து இறை தாக்கும் பேரம்பலமென்றும், சிற்றம்பலம்-சீராலேமல்கு சிற்றம்பலம், நல்லவர் பிரியாத சிற்றம்பலம், மாகந்தோய் பொழில்மல்கு சிற்றம்பலம், செம்மையாரழகாய சிற்றம்பலமென்றும் பேசப்படுகின்றது. 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என்ற பகுதி யாவர் மனத்தும் மறவாமல் அமைத்துக்கொள்ள வேண்டியதொன்றாகும்.

## திருநாவுக்கரசர் தேவாரம்:

திருநேரிசை திருவிருத்தம் ஆகியவைகளில் "தில்லையைச்சுற்றி, மேகந்தவழும் சோலைகள் சூழ்ந்திருக்கின்றன. பூக்கள் இடைவிடாது மணம் வீசுகின்றன. தேனுண்டு தேக்கெறிந்த வண்டுகள் திமிர்த்துப் பாடுகின்றன. மதகுகள்தோறும் நீர் தேக்கப்பட்டிருக்கின்றது. அதில் வாளைகள் பாய்கின்றன. வயல்கள்தோறும் வாளைமீன்களோடு கூடிய தண்ணீர் தேங்கியிருக்கின்றது" என்றெல்லாம் இயற்கைவளம் பேசப்படுகிறது.

இறைவளமாகக் 'கூத்தனை வானவர்கோன் என்று வாழ்த்துவேன். அவர் என்று வந்தாய் என்ற குறிப்புடன் ஆடுகிறார். அடியேன் வந்தது அவரது ஆடலைக் காண்பதற்காகவே. நான் அவருக்கடைக்கலம். என்னைப்போல உலகமும் அவரைக் கண்டு இன்புறுகிறது' என்று பலபட எடுத்துப் பாராட்டுகின்றார். அவற்றுள் 'பத்தனாய்ப் பாட மாட்டேன்' என்ற பகுதி முழுவதும் எதற்காக நீ இங்குவந்தாய் என்று பெருமான் கேட்பதுபோலவும், அதற்கு உன் ஆடல் காண்பான் வந்தேன் என்று அறிவித்தல்போலவும் அமைந்திருத்தல் காண்க. இரவுபகல் ஆடிக்கொண்டிருந்தால் திருவடி நோகுமே என்று இவர் மனம் வாடுவது எவ்வளவு உள்ளத்தின் கனிவைக்காட்டுகின்றது. பின்னர் நடராஜப்பெருமானின் ஒவ்வொரு அவயவங்க

வடக்குக்கோபுரத்தில்



அப்பர் இருவர்

ளாகக் கண்டகண்கள் வேறொன்றனது அழகில் ஈடுபடா என்று அறிவிக்கும் பகுதிகள் மிகச் சிறந்தன.

திருக்குறுந்தொகையில், உலகவரை நோக்கி நீங்கள் பிணமென்று பெயர்வைத்து எரிசுற்றப் படுவதன்முன்பு புலியூரெம்பெருமானை யடைந்து மலர்தூவி வணங்குங்கள்; அவர் தம் அடியாரை அறிந்துகொள்வர்; இருமையும் வழங்குவரென்று அறிவிப்பதோடு மீளாவடிமைபூண்ட தனக்கிருக்கும் ஏற்றத்தை 'அல்லல் என்செயும்? அருவினை யென் செயும்? தொல்லைவல்வினைத் தொண்டன்றான் என் செய்யும்? என்று சொல்லிக்காட்டி அதன்வாயிலாக வினைகளுக்கும் அஞ்சாத வீரத்தை ஆன்மாக்க ளாகிய நமக்கு வழங்குகின்றார்கள். அதிலேயே மற்றொரு பதிகத்தில் தில்லைப்பெருமானை ஒருகண மேனும் விட்டுப்பிரிந்திருக்க முடியாமையை அறிவிக் கின்றார்கள்.

திருத்தாண்டகத்தில், தில்லைக்கூத்தனைப்பற்றிப் பேசாத நாட்களெல்லாம் பிறவாநாட்கள் என்று அறிவிக்கவந்த அப்பரடிகள், இறைவன் பலவேறு இயல்புகளை உடையவனாயினும் அந்தணர் சிந்தை யில் இருப்பவனென்றும், வேதத்தி னுட்பொருளாக விளங்குபவனென்றும், அணுவுக்கணுவாய் இருப் பவனென்றும், ஒளியை - கனலை - காற்றை - கடலை - மலையைக் கலந்திருப்பவனென்றும் அறிவிக்கின் றார்கள். எல்லாத்தலங்களிலும் வீற்றிருக்கின்ற

இறைவர் புலியூர்ச் சிற்றம்பலத்தில் புகுந்தார்; அவருடைய அடையாளங்கள் சூலம், வெண்ணூல், வேதவொலி, கையில்வீணை, ஒருகையில் சுத்தி, கழுத்தில் கறையிருக்கும்; போய்ப்பாருங்கள் என்று ஆற்றுப்படுக்கின்ற அழகு மிகவும் சிந்தையைப் பிணிப்பதொன்று.

**சுந்தரர் தேவாரம் :**

சுந்தரர் தனது மனத்தை முன்னிலைப்படுத்தி எமவாதனைக்கு உட்படாது தடுத்தாட்கொள்கின்ற பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்று விட்டோமென்று தாம்பெற்ற ஆனந்தத்தைவியந்து பேசுகின்றவர்கள் தனது மனத்திற்கு "நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ் செய்மனமே" என்று நல்லறிவுபுகட்டி யருள்கின்றார்கள். புறச்சமயத் தார்க்குப் பெருமான் இருளாயிருக்குந் தன்மையை யும் அறிவிக்கின்றார்கள். இந்தத் திருப்பதிகமே சேரமானுக்குச் சிலம்பொலி நிகழ்த்தவொட்டாது பெருமானைத் தடுத்து நின்ற தன்மையையுடையது.

**திருவாசகம் :**

இதில் இருபத்தைந்து பதிகங்கள் தில்லையின் சிறப்பைத் திருக்கூத்தின் சிறப்பை யறிவிப்பன.

இறைவனது புகழைப்பேசுகின்ற கீர்த்தித் திரு வகவலில், நடராஜப்பெருமான் எல்லா ஊர்களிலும் பொருந்திக் கூத்தியற்றுவதால் அவைகள் இயங்கு



கின்றனவென்பதோடு, இறைவன் பலவேறு தலங் களில் நிகழ்த்திய அருளிச்செயல்களை யெல்லாம் அறிவித்து, புலியூரில் புக்கிருந்த அருமைப்பாடுய் அறிவிக்கப்பெற்றுள்ளது.

இறைவனது ஐந்தொழிலாற்றலை அறிவிக் கின்ற திருவண்டப்பகுதியுள், தேவருமறியாச் சிவ பெருமான் புவனியிற் சேவடிதீண்டித் தம்மையாட் கொண்ட அருமைப்பாடும், பிச்சேற்றிய பெருமை யும், தமது அவயவங்கள் எல்லாவற்றையுமே கோற் றேனினால் குயிற்றுவித்த விந்தையும், ஒவ்வொரு மயிர்க்கால்தோறும் எலும்புத்துளைதோறும் சிவா னந்த அமுதத்தைச் செறித்தமையும், மனத்தை வற்றா இன்பவூற்றாக மாற்றினமையும், அருள்விளக் கத்து ஆழ்த்தினமையும் அறிவிக்கப்பெற்றுள்ளன.

ஆன்மாக்கள் முத்தியடையும் நெறியை அறி விக்கின்ற போற்றித் திருவகவலில், தன்னுடைய எளிமையைப் புலப்படுத்தித் தன்னையும் ஆட் கொண்ட அருமைப்பாட்டினை அறிவிக்கப்படுவ தோடு தன் சொல்மாலைகொண்ட திருவருள் திறமும் வியந்து கூறப்பெற்றுள்ளது.

தனுகரணபுவன போகங்களைச் சுண்ணமாகக் கொண்டு இடிக்கச் சத்திகளைக் கூவுகின்ற திருப் பொற்சுண்ணத்துள் உலகமக்களையழைத்து, பாடுங் கள், கூவுங்கள், தொழுங்கள், என்று அறிவுறுத்தப் படுகிறது.

சிவபோதமே ஒருவண்டாகச் சித்தவிகாரத் தூதைச் செப்பிவிடுகின்ற திருக்கோத்தும்பியில் "நான் ஆர்? என் னுள்ளமார்? ஞானங்களார்?" என ஆய்வும், ஆய்வு வந்ததன் வகையும், அதன் பயனும், பெருமான் தன்மனத்து வரவர வந்தொழிந்த பெரு வள்ளன்மையும் விளக்கப்பெற்றுள்ளன.

சிவபோத இன்பமிகுந்து கொட்டப்படுகின்ற திருத்தெள்ளேணத்தில் அந்தணனாய் வந்தாண்டு கொண்டு கருவேரறுத்தபின் யாரையுங் கண்ட தில்லையென்று அறிவிக்கப்பெற்றுள்ளது. அதில் "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் னுள்ளமும் போய் நான்கெட்ட வாபாடித் தெள் ளேணங்கொட்டாமோ" என்பது முதலியன அநு பவத்திறத்தை யறிவிப்பன.

ஒரு கலையும் உணராத ஊமையைக்கொண்டு பதிமுதனிலை யுணர்த்தப்படுகின்ற திருச்சாழலில் இறைவன் பூண்பனவும், செய்வனவும், விரும்பு வனவும், வெறுப்பனவும், இருப்பனவும், இயற்று வனவுமாகிய எல்லாம் ஆன்மாக்களாகிய நம்மீது வைத்த பெருங்கருணையே என்பதனை வினா விடை முறையில் அறிவிக்கப்படுகின்றது.

சிவபெருமான் தன்னைத் தேடி யாட்கொண்ட தன்மையை ஆவலோடு சொல்லி அடியார்களோடு பூவியந்து கொய்கின்ற திருப்பூவல்லியுள், இறைவன் பணிகூறப் பூக்கொய்யும் மகளிர் தில்லைப்பதியில்



வைத்து இறைவன் தம்மையாட்கொண்ட முறையும், அதனால் தாமடைந்த பேறுகளும், இறைவனியல்பு களும் கூறுவதாகப் பேசப்படுகின்றன.

இறைவனது புகழை இன்னலற எடுத்தியம்பும் திருவுந்தியாரில், தக்கயாகம், திரிபுரசம்ஹாரம், பாலனுக்குப் பாற்கடலீந்தது, இராவணனை அழித் தது முதலிய பலவரலாறுகளின் வாயிலாக ஞான வெற்றி நவிலப்படுகிறது.

இறைவனருள் உள்ளத்திலடங்காமையால் கைகொட்டிப் புகழ்கின்ற திருத்தோணோக்கத்தில் பேய்த்தேரைப் புனலாகக்கருதி முகக்கும் பேதை குணமாகாமல் சேவடியைக் கூடும் வண்ணம் தோணோக்கத்தைவேண்டிச் "சித்தஞ் சிவமாக்கி" என்பன முதலியவற்றால் பல அநுபவத்திறங்கள் அறிவிக்கப்படுகின்றன.

அருட்சத்தியிருந்து ஆடத் தாலாட்டுகிற திருப் பொன்னூசலில், அடிகள் "தேன்தங்கித் தித்தித்து அமுதூறித் தெளிந்து ஊன்தங்கிநின்று உருக்கும்" எனவும், இறைவன் புகழைப் பலகாலும் சொல்லி இறைஞ்ச அவன்பாவங்களைப் பற்றறுப்பானென வும் இறையினியல்புகள் அறிவிக்கப்படுகின்றன.

அன்னைப்பத்தில், ஒருபெண் தன் தாயிடத்துத் தான்காதலித்த தலைவனின் இயல்புகள் - தலைவன்

தரும் பேறுகள் இப்படி இப்படி இருக்கின்றன என்று வியந்து கூறுவதாகப் பேசப்பெற்றுள்ளது.

குயிற்பத்தில், குயிலைப்பார்த்து எமக்கு எல்லா வகையிலும் இன்பமளிக்கும் நாயகன் வரக்கூவாய் என்று வேண்டிக்கொள்வதாகப் பேசப்படுகிறது. இதில் சிறந்தபகுதி இலங்கையில் வண்டோதரிக்குப் பேரருள்செய்ததும், இறைவர் மும்முடிவேந்தராக விளங்குவதுமாம்.

தசாங்கத்துள், சிவராஜதானிப் பெருவேந்தராகிய தில்லைநடராஜப்பெருமானுக்குரிய நாடு, ஊர், ஆறு, ஊர்தி, மலை, படை, பறை, குடி, தார், கொடி முதலியவை பேசப்பெற்றுள்ளன.

சிதம்பரத்தில் அருள் அடையுங் குறிப்பினை யுணர்த்துகின்ற கோயில்மூத்ததிருப்பதிகத்தினுள், இறைவன் இறைவி இருவரது நிலையும், தனக்குச் செய்யவேண்டிய அருளின் திறமும், அருள்பெற்ற அடியார்களின் நிலையும், நீ அருள்செய்யாவிட்டால் எனக்கு வேறு கதியில்லை யென்பதும் பேசப்படுகின்றன. இதனுள் 'சிரிப்பார் களிப்பார்' என்ற திருப்பாடல் அடியவர் தன்மையை அறிவிப்பதாம்.

இறைவனிடத்தில் எழுந்தமோகத்தை இயம்புகின்ற கோயிற்றிருப்பதிகத்தில், இறைவனை இன்பமாக - அன்பாக - ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகுமாறு அருள்தந்தவள்ளலாக-குறைவிலா



நிறைவாகப் பேசப்படுகின்றது. அதனோடு தனக்கு அளித்த அருட்டன்மையும், அதற்குக் கைமாறில்லை யென்பதும் காட்டப்பெற்றுள்ளன.

இந்திரியவழிப்படாது இறைவனைத் தில்லையிற் கண்டேன் என்று சொல்லும் கண்டபத்தினுள், பெருமானை அந்தமிலா ஆனந்தமாக - பிறப்பறுத்த இணையிலியாக - கோதில் அமுதமாக - பேதமிலாப் பெருமையனைப் பேசப்பெற்றுள்ளது. அன்றியும் உருத்தெரியாக்காலத்தே ஆட்கொண்ட அருமைப் பாடும், சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகமும், வினையும் மலமும் அறுத்து வான்கருணை தந்த வள்ளன்மையும் பேசப்படுகின்றன. தில்லை, வேதங்களெல்லாம் தொழுதேத்தப் படுவதென்றும், செறிபொழில் சூழ்ந்த தென்றும், அனைத்துலகும் தொழுத்தகுவ தென்றும், அணிகொள் தில்லையென்றும் சிறப்பிக்கப்படுகின்றது.

வினைமுழுதும் வந்தாலும் அஞ்சேன்; சிவனடி பேணாச் சிந்தையர்வந்தால் என்மனம் அஞ்சுமென இகழ்ந்துரைக்கின்ற அச்சப்பத்தினுள், எதற்கும் அஞ்சாத மணிவாசகர் "அஞ்சுவதஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சலறிவார்தொழில்" ஆதலின், எம்மால் அஞ்சத்தகுவார் இவரிவர் என்பதை நன்கு அறிவிக்கின்றார். இதில் அங்கங்கே அகங்கரைந்து கண்ணீர்வார மெய்மயிர்சிலிர்ப்ப உள்ளம்நெக்குருக வணங்கவேண்டும் முறைகளையும் நமக்கு உபதேசிக்கின்றார்.

நெடுநாள் விரும்பிய சிவானந்தவெள்ளத்தைப் பெற்றதால்விளைந்த இறுமாப்பாகிய குலாப்பத்தில், தேடும்பொருள் சிவன்கழலேயாமெனத் தெளிந்து கொண்டேனென்றும், சிவபதத்தை யறிந்தேன் என்றும், சென்ற பிறவிகளிற் செய்தநல்வினையால் புதையல் கிடைத்தாற்போல் பெருமான் எனக்கு ஏற்பட்டாரென்றும் பேசுகின்றார். “கொம்பிலரும்பாய்க் குவிமலராய்க் காயாகி, வம்புபழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே” என்பது உடலின் பல வேறு பருவநிலை விளக்குவதாகும். பஞ்சேந்திரியங்களால் தான் பட்டபாட்டையும், அதனை அடக்கும் அருமைப்பாட்டினையும், ‘கடக்குந் திறலைவர் கண்டகர்தம் வல்லாட்டை அடக்கும் குலாத்திலை யாண்டானை” என்றபகுதியாற் குறிப்பிடுகின்றார்.

இறைவன் நாமத்திறம் பெருகும் இன்பமருள் என்று சொல்கின்ற எண்ணப்பதிகத்தில், திருவருள் காட்டி யென்னையும் உய்யக்கொண்டருள வேண்டுமென்றும், அடிகாட்டிப் பிரியேனென்றருளியது பொய்யோ என்றும், பிரிந்து ஆற்றேனென்றும், என்கடமைகளில் தவறியநான் நீயேவரினும் காணவும் நாணுவேனென்றும், எனை ஆவவென்றருள் என்றும் இறைவன்மாட்டு இணையில்லா அன்பால் எழுந்த எண்ணங்களை எடுத்தியம்புகின்றார்.

பிறவியைவிட்டுச் சிவனடிக்கீழ்ச் செல்கின்ற காலம் எனக்கு வந்துவிட்டது; எல்லாரும் வாரும் என்றழைக்கின்ற யாத்திரைப்பத்தில், அநுபவ அதிகத்தால் இறைவன் திருக்கழல்புகப் போவோம் என்றும், எம்மையாட்கொள்ளும் புயங்கன் திருவடிகளைப் போற்றுங்கள்; வெகுளி, வேட்கைகளை விடுங்கள்; இப்படிப்பட்டகாலம் உங்கட்குக் கிடைக்காது; கூட்டத்தோடு திருவடிசேரப் புறப்படுங்கள்; யான் சொல்கிறபடி நடவாவிடில் பின்னர் ஐயோ இழந்தோமே யென்று மருள்வீர்கள்; பின்னர் யார் உங்களை மதிக்கப்போகிறார்கள் ஆதலால் இன்றே புறப்படுங்கள், புறப்படுங்களென்று உலகவரையும் அழைக்கின்றார்.



எல்லோரும் எம்முன் வருக என்றழைக்கின்ற திருப்படையெழுச்சியில்,மாயப்படை வந்துவிட்டது; அவை தாக்குதற்கு முன் ஞானவாளை ஏந்துங்கள்; நாதப்பறையறையுங்கள்; அருட்கொடையைப் பிடியுங்கள்; திருநீற்றுக்கவசத்தைப் பூணுங்கள்; தொண்டர்களே! தூசிப்படையாக முன்னே செல்லுங்கள்; பக்தர்களே! பக்கத்தில் வாருங்கள்; யோகியர்களே! அணிவகுத்து நடத்துங்கள்; சித்தர்களே கடைக்கூழையில் வாருங்கள் போவோம் என்று படை திரட்டுகிறார்.

இறைவன் எழுந்தருளப்பெற்றால் எமக்கு எல்லா வளங்களும் கிட்டும் என்று சொல்லுகின்ற திருப்படையாட்சியில், சிவபெருமான் ஆட்கொண்டதும், அதனால் விளைந்த துன்ப நீக்கமும், பேரின்பப்

பேறும், அதனால் பிறநினைவுகள் இல்லாமையும் அறிவிக்கப்படுகின்றன.

மோகமிகும் அடியாரொடு கூடுதற்கு விரும்பிய ஆனந்தமாலையில், சிவானுபவவிருப்பினால் இனி உன்னைக் கூடும் வண்ணம் இயம்பாய்; நீ நடுவாக நிற்கவேண்டும். என்னை யஞ்சேலென்பார் யார்? திகைத்தேன்; இனித் தேற்று; செய்வதொன்றும் அறியேன் என்று வேண்டுகின்றார்.

இறைவன் எனக்களித்த போகசுகத்தை யார் பெறுவாரென்று தனது அருமை சொல்லுகின்ற அச்சோப்பதிகத்தில், இறைவன் அருளிச்செய்தவழி அறியமுடியாமையால் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கித் தன்னையாண்ட வழி வகைகளை வேறு யாவரடைவாரென்று அதிசயிக்கின்றார்.

**திருக்கோவையார் :**

இதிலுள்ள நானூறு கட்டளைக் கலித்துறைகளுமே பாட்டுடைத் தலைவனாகிய தில்லைப்பெருமானது எல்லையில் கருணைத்திறத்தை எடுத்து இயம்புவன. இதனை அந்தணர் வேதமென்றும், யோகியர் ஆகமத்தின் காரணமென்றும், கணிதர் கணித நூலென்றும், புலவர்கள் எழுத்திலக்கணமென்றும் பேசுவர்.

இதில் தில்லைத்தொல்லோன், புலியூர்ப்புனிதன், மாணிக்கக்கூத்தன், இடமுடைய நடமாட்டுடையவர், நிருத்தம்பயின்றவன், மூவாயிரவர் வணங்க நின்றோன், தொழுதெழுவார் வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன், எரியாடி, கோற்றேன், வெள்ளிக்குன்றவர் என்ற சொற்றொடர்கள் படிப்போர்க்கு இன்பம் அளிப்பனவாகும். தில்லையின் தொன்மை, வளப்பம் முதலியவைகளை அறிந்துகொள்வதற்கு ஒளிவளர் தில்லை, சேணிற்பொலி செம்பொன் மாளிகைத் தில்லை, வண்டு தேதே எனும் தில்லை, அகழும் மதிலும் அணி தில்லை, தில்லைத்தொன்னகர் ஆகிய பலவகைத் தொடர்கள் எடுத்துக்காட்டாக மிளிர்கின்றன.



**திருவிசைப்பா :**

திருவிசைப்பா திருப்பதிகங்கள் இருபத்தெட்டில் பதினைந்து சிதம்பரத்தைப் பற்றியன.

இவற்றில், ஆன்மாக்கள் உணர்த்தினாலன்றி உணராத் தன்மையன ஆதலின் உன்னுடைய சேவடிகளை என் மனத்துவைத்தருள்; என்னெஞ்சு அதனையே நினைந்து வருந்துகின்றது. உன்னுடைய வயிற்றுக்கொப்பூழின் அழகை அநுபவித்து என் மனம் மகிழ்ச்சியை அடைந்தது; எனது உணர்வு நின் உதரத்தின்மீது விளங்குகின்ற மணிவடத்தில் தோய்ந்து தன்செயலற்றது; என் அறிவு, நின் திருவாயாகிய செம்பவளச்சோதியில் அடங்கிக்கிடந்தது என்றெல்லாம் அறிவிக்கின்றார்கள்.

மற்றும் பெருமானைக் காதலித்த தன்பெண், பன்றிப்பின் சென்ற வேடா! விசயற்கருள் செய்த வேந்தே! இடபக்கொடியானே! மகேந்திரமாமலை மேல் இருப்பவனே! தில்லை மூவாயிரவரையும் என்னையும் மகிழ்ந்து ஆளவல்லவனே! பிறவிப் பிணிதீர ஐந்தெழுத்தோதித் திருவெண்ணீறு இடப் பெற்றேனாதலின் திருநீறு இடாத உருவத்தைத் தீண்டேனென்னும் என்று நற்றாய் கூறுவதாக ஒரு பதிகம் அமைந்துள்ளது.

தில்லைவாணனை - தில்லைவாணனது அடியார்களைப்பற்றிப் பேசாத பேய்களோடு எனக்கென்ன உறவு என்று பேசுகிறது மற்றொருபதிகம்.

இறைவன் எழுந்தருளியிருக்குங்கோயில் திருச்சிற்றம்பலமேயென்று அறிவிப்பதோடு முன்னிரண்டடியில் இறைவன் ஆட்கொண்ட தன்மையும், பின்னிரண்டடியில் தில்லையின் இயற்கைவளமும் கூறப்படுவதாக அமைந்திருக்கின்றது ஒரு பதிகம்.

நின்னை வழிபட்ட அடியார்கள் யாவரும் அமருலகத்தையாளவும், நீ தில்லைச்சிற்றம்பலத்தை யிடமாகக்கொண்டாய் என்று வியக்கின்றது ஒரு பதிகம். அதில் கணம்புல்லர், கண்ணப்பர், திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சேரமான், ஆரூரன் இவர்கள் வரலாறுகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. இப்பதிக ஐந்தாம் பாடலில் சேரமான் பெருமாளும்,

 100704

சுந்தரரும் உடலோடு வெள்ளானை மேற்கொண்டு கயிலை சென்றமை குறிப்பிடப்படுகிறது.

காண்பது-
தில்லை நடராஜப்பெருமானை
கூடுவது - உறுவது - அணைவது என்றுகொல் எனத் தன்னுடைய எளிமையும், இறைவன் பெருந்தகைமையும் எண்ணி ஏழுறுகின்ற நிலையில் இயங்குகிறது கண்டராதித்தர் திருவிசைப்பா.

ஆண்டா
ஒன்றற்கும் பற்றாதவனாயிருப்பினும் ஆகாதென்று தில்லைப்
னடிமையைத் தள்ளுதல் ஆகாதென்று வேணாட்டடிகள் பெருமானை வேண்டிக்கொள்கிறது வேணாட்டடிகள் இலை
திருவிசைப்பா. இதில் கைச்சாலும் சிறுகதலி இலை
வேம்புங் கறிகொள்வார்; யாரும் தம்பானை சாயப்
பிடிக்கமாட்டார்கள்; நிறைகுளத்துநீர்பள்ளவயலில்
சரியாதோ? கன்றைப்பிரிந்த பசுவைப்போல் கதற
விடுவாய்! ஓரெருதுக்குப் புல்லும் ஓர் எருதுக்கு வைக்
கோலும் இடுதல் நடுவுநிலைமையோ என்ற பழ
மொழிகள் அங்கங்கே அமைந்து ஒளிவிடுகின்றன.

அம்பலத்தான், பாதாதிகேசமாகவந்து, தமது மனத்திற் குடிகொண்டதாகத் திருவாலியமுதனார் தமது திருவிசைப்பாவில் தெரிவிக்கிறார்.

அவரே தமது மற்றொருபதிகத்தில், நடராஜப் பெருமானை நினைக்குந்தோறும் என்மனம் அனலைக் கண்ட மெழுகுபோலாகின்றது என்று வருந்தும் ஒருதலைவி பூவம்புமேற்படும்போதெல்லாம் வருந்து

NIH

கின்றேனென்று அலறுகின்றாள்; ஐய! உனது திருவடிகளை என் நகில்மீது ஒற்றுக என்கின்றாள். அம்பலத்தானைக்கண்டும் என் மனம் பதைப்பு ஒழிய வில்லையே? இந்தச்சந்திரன் மிகத்தேய்ந்து உடல் வெளுத்து வளைந்து பாம்புக்குப் பயந்திருந்தும் என்னைப் படாதபாடு படுத்துகின்றானே! உமக்கு உடை புலித்தோல்; பூண் அரவம்; உண்பது பலி; ஊர்வது விடை; இருப்பது கல் என்றறிந்துங்கூட உம்மையன்றி என் மனம் வேறுயாரையும் நாடேன் என்கிறதே; என் அறிவைத் துறந்தேன்; நாணத்தை விட்டேன்; நிறைகழன்றேன்; ஆசையகன்றேன்; தாய், தந்தை, உற்றார், உடன்பிறப்பாளர் எல்லாரையும்விட்டேன்; அடியாளை என்றுகொள்ளத்தான் வேண்டும் என்று வற்புறுத்துகின்றாள் என்பதாகத் தெரிவிக்கிறார். இதில் சிலந்திகோச்செங்கணானை வரலாறு, மார்க்கண்டற்காகக் காலனைக்காய்ந்த வரலாறு, கங்கையைத்திருமுடியிற்சேர்த்த வரலாறு முதலியனவும் காணப்படுகின்றன.

மற்றொருபதிகத்து, அருவாயுருவாயிருக்கின்ற இறைவனே, பல்லாயிரம்பேர்கள் பதஞ்சலி திருநடனங்காட்டு என்று வேண்டிக்கொள்ளத் திருமன்றுள் ஆடுகின்றானென்று அறிவிக்கின்றது. இதில் தில்லைவாழந்தணர்கள் “தீமெய்த்தொழிலார் மறையோர்” என அறிவிக்கப்படுகிறார்கள். தில்லை வளம் பலபடியாகப் பேசப்படுகிறது. மற்றொன்றில் அவரே, நடராஜப்பெருமானின் திருப்பாதங்களைக்



காண்பது என்றுகொல் என்றும் அடியேன் எம்பிரானடியிற் சேர்வன்கொலோ வென்றும் அறிவிக்கின்றார்.

புருடோத்தம நம்பியின் திருவிசைப்பாவில், சிவபெருமானைக் காதலித்த ஒருபெண் கூறுவதாக “ஐய! தில்லைமன்றுள் திருவடிநோவ நீ ஆடினால் எம் உயிர்க்கு யார்காவல்” என்பதுபோன்ற கனிவுரைகள் காணப்படுகின்றன. அவருடைய மற்றொரு பதிகத்தில், கனிந்தமொழி கூறியும் அவர்வந்து தலையளிசெய்யாமையால் வளைகள்முதலியன கழலுகின்ற தன்மை பேசப்படுகிறது.

சேதிராயரது திருவிசைப்பாவில், தாய்கூற்றாக என்மகள் நீர் விடத்தை உண்டீரென்று மயங்கிப் போனாள். நாணத்தைத் துறந்தாள். விம்மினாள். அயர்ந்தாள். மயலுற்றாள். கிளியைப் பார்த்துக் “கிளியே! கொன்றைத்தாரன்; மாதொருகூறன்; கொன்றைமார்பன் என்று ஒருகால் நீ சொன்னால் பிழைப்பேன்” என்பாள்; என்மகளை நீர் என்ன செய்துவிட்டீர். உம்மீது காதல்கொண்டு இவள் ஒன்றிற்கும் உதவாதவளாகிவிட்டாளென்ற நயப்புரைகள் பல பேசப்படுகின்றன.

## திருப்பல்லாண்டு:

பதின்மூன்று திருப்பாடல்கள் கொண்ட இப் பதிகம் ஒன்றே பல்லாண்டுமுறையில் அமைந்து

உள்ளது. இறைவன் திருவடிக்கீழ் யாரும் பெறாத அறிவுபெற்றேன் ஆதலினால் விண்ணும் மண்ணும் அறியும்படியாகப் பல்லாண்டு கூறுகிறோம் என்று காரணம் தோன்ற எடுத்துக் கூறுகிறார் சேந்தனார். இதில் உபமன்யுவுக்குப் பாற்கடலளித்த வரலாறும், தாதை தாளற வீசிய சண்டேசுவரருக்கு அனுக்கிரகித்த வரலாறும் தெரிவிக்கப் படுகின்றன. பதினொராம் பாடலில் ஆரூரின் திருவிழாச் சிறப்பு அழகாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**திருமந்திரம் :**

இந்நூலில் திருவம்பலச் சக்கரம் என்றபகுதியில் சக்கரம் கீறும் முறைமையும், இறைவனது மந்திரவடிவங்களும், வழிபாட்டுமுறையும் அறிவிக்கப் படுகின்றன. திருக்கூத்துத் தரிசனம் என்ற பகுதியிலும், சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்றபகுதிகளிலும், தில்லைக்கூத்தருடைய நடன விசேடங்கள் அறிவிக்கப்படுகின்றன.

**பொன்வண்ணத்தந்தாதி :**

இவ் அந்தாதி முதற்குறிப்பால் பேர்பெற்றது. இதில் இறைவனைக் காமுற்ற ஒரு தலைவியின் நிலைமையைத் தாய் கூறுவனவாக வரும் துறைப் பாடல்கள் பலகாணப்படுகின்றன. இறைவனை ஏத்தாத இந்திரியங்களிருந்தும் பயனில்லை யென்பதைச்



"சொல்லாதன" என்னும் பாடல் தெரிவிக்கின்றது. இறுதியாகத் தொண்ணூற்றெட்டாம் திருப்பாடலில் எந்தப்பிறவி எடுப்பினும், எந்தநிலை யடையினும் இறைவன் திருவடியை மறவாத வரத்தை வேண்டுகின்றேன் என்று ஆசிரியர் கூறுவதாக வருவது இனியபகுதிகளிற் சிறந்ததொன்று.

**கோயில்நான்மணிமாலை :**

இந்நூல் பட்டினத்தடிகள் அருளிச்செய்தது. அந்தாதித் தொடையாலாக்கப்பட்ட நாற்பதுபாக்களையுடையது. இதில் அடியார்கள் பெயரெழுதிய புத்தகத்தில் என்னையும் எழுதவேண்டுவனென்று வேண்டிக் கோடலும், வழிவழியடிமை யென்பதையறிவிக்கும் "ஆளெனப் புதிதுவந்து அடைந்திலம் அத்த! நின் தாளிணைவல் தலையினியற்றி வழிவழி வந்த மரபினம்" என்று கூறுவதும், சராசரமனைத்தும் உன்னிடமடங்கும்; நீ ஒன்றினுந் தோன்றாய்; ஒன்றினும் அடங்காய்; என்று கூறும் இறையினிலக்கணமும், இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா என்று கூறும் பகுதிகளும் அறிந்து இன்புறக் கூடியன. திருவடிப் பேற்றினைக் கிடையாச் செல்வமென்று குறிப்பிடுகின்றார். இதில் எலிக்கு மூவுலகாள வரங்கொடுத்தமையும், சண்டேசுவரருக்குப் பரிகலங்கொடுத்தமையும், சிறுத்தொண்டர் வீட்டில் திருவமுதுசெய்தமையும் பேசப்படுகின்றன. மனிதவாழ்க்கை ஒன்றையொன்று விழுங்குவதாக இருக்கின்றது என்பதை "நஞ்சுமிழ் பகுவாய்"

என்ற பாடலும், மனைவாழ்க்கையாகிய மரக்கலம் பிறவிக்கடலில் பேதுறுகின்ற நிலையினை "அறிவிலொழுக்கமும்" என்றபாடலும் அறிவிக்கின்றன. இவை யன்றி இன்புறத்தக்க பகுதிகளாம்.

**கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் :**

நம்பியாண்டார்நம்பிகளால் அருளிச் செய்யப்பட்ட இந்நூலில் ஆசிரியர் 'அன்பு எனக்கு நின் பாத மலர்க்கே மருவ அருளுகண்டாய்' என்று வேண்டிக் கொள்கிறார். இன்னும் இறைவனை "அன்பின் வழி வந்த ஆரமிர்தே!" 'தவநெறிக்கே இட்ட தத்துவனே' 'அடியவர் எய்ப்பினில் வைப்பாக் கருதிவைத்த நிதியே' என்று அழைப்பன மனங்கரைக்கும் சொற்றொடர்களாம். மனத்தைப்பார்த்து 'மனமே! தில்லைக்கூத்தனைக்கண்டும் அன்பு பூண்டிலை; தன்வச மழிந்தாயல்லை; இன்னும் புலன்வழியே சென்று வாழவந்தனை; என்னை என்ன செய்யப் போகிறாயோ; நீ சொல்' என்றபகுதி ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் விளித்துக் கூறியதாக உணரும் தன்மைத்து. திருக்கோவையாரின் சிறப்பை எடுத்துப் பேசுவது 'வருவாசகத்தினில் முற்றுணர்ந்தோன்' என்னும் திருப்பாடலாகும்.

**பெரியபுராணம் :**

திருத்தொண்டர் வரலாற்றைக்கூறும் இப் பெரியபுராணம் தில்லைப்பெருமான் முதலெடுத்துக்



கொடுக்கச் சேக்கிழார் தில்லையிலிருந்தே செய்த தாகலின் புராணமுழுவதுமே ஆங்காங்கு, தில்லைப் பெருமை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சிறப்பாக அப்பர், சம்பந்தர், சுந்தரர், திருநாளைப் போவார், தில்லைவாழந்தணர் புராணங்களில் காணலாம். செல்வமல்கிய தில்லை; வாவிசூழ் தில்லை என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும் தொழுவார்களின் மும்மலங்களைப்போக்கி, வீட்டின்பத்தை அளிப்பதும் இத்தலமே. இது அகழாலும் உயர்ந்த மதிலாலும் சூழப்பெற்றது.

நடராஜப்பெருமான் உலாக்கொண்டருளுவர் திருவீதியில். இது சிவமேநிலவும் திருவீதி, நெடுவீதி, செல்வவீதி, அம்பொன்வீதி, மாதவங்கள் நல்கும் திருவீதி என்றெல்லாம் பாராட்டப்பெற்றிருக்கிறது. இதில் உலகுக்கெல்லாம் திருவுடையந்தணர்கள் வாழும் மாடமாளிகைகள் விளங்கி அழகினைச் செய்கின்றன. பொய்ப்பிறவிப் பிணியோட்டும் தன்மையதாக விளங்குகின்றன. திருநாவுக்கரசு சுவாமிகள் அங்கப்பிரதக்ஷிணம் செய்ததும் இவ்வீதியிலேதான். மலர்ந்தபேரொளி குளிர்தரச்சிவமணம் கமழ்ந்து வான்துகள் மாறிச் சிலம்பு அலம்புறு சேவடியுடைய பெருமான் பயில்வுறுகின்ற செம்மையினாலே அன்பர் சிந்தையினைப்போலவும் அவ்வீதி விளங்குகின்றதாம். ஞானசம்பந்தப்பெருமானும் இத் திருவீதியில் தங்கியிருத்தற்கு அஞ்சி, அருகிலுள்ள திருவேட்களத்தையே தமக்குத் தங்குமிடமாகக்கொண்டு கூத்தப்பெருமானை வழிபட்டார்.

என்ற பாடலும், மனைவாழ்க்கையாகிய மரக்கலம் பிறவிக்கடலில் பேதுறுகின்ற நிலையினை "அறிவிலொழுக்கமும்" என்றபாடலும் அறிவிக்கின்றன. இவையன்றி இன்புறத்தக்க பகுதிகளாம்.

### கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் :

நம்பியாண்டார்நம்பிகளால் அருளிச் செய்யப்பட்ட இந்நூலில் ஆசிரியர் 'அன்பு எனக்கு நின்பாத மலர்க்கே மருவ அருளுகண்டாய்' என்று வேண்டிக் கொள்கிறார். இன்னும் இறைவனை "அன்பின்வழி வந்த ஆரமிர்தே!" 'தவநெறிக்கே இட்டதத்துவனே' 'அடியவர் எய்ப்பினில் வைப்பாக் கருதிவைத்த நிதியே' என்று அழைப்பன மனங்கரைக்கும் சொற்றொடர்களாம். மனத்தைப்பார்த்து 'மனமே! தில்லைக்கூத்தனைக்கண்டும் அன்பு பூண்டிலை; தன்வசமழிந்தாயல்லை; இன்னும் புலன்வழியே சென்று வாழவந்தனை; என்னை என்ன செய்யப் போகிறாயோ; நீ சொல்' என்றபகுதி ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் விளித்துக் கூறியதாக உணரும் தன்மைத்து. திருக்கோவையாரின் சிறப்பை எடுத்துப் பேசுவது 'வருவாசகத்தினில் முற்றுணர்ந்தோன்' என்னும் திருப்பாடலாகும்.

### பெரியபுராணம் :

திருத்தொண்டர் வரலாற்றைக்கூறும் இப் பெரியபுராணம் தில்லைப்பெருமான் முதலெடுத்துக்



கொடுக்கச் சேக்கிழார் தில்லையிலிருந்தே செய்ததாகலின் புராணமுழுவதுமே ஆங்காங்கு, தில்லைப் பெருமை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சிறப்பாக அப்பர், சம்பந்தர், சுந்தரர், திருநாளைப் போவார், தில்லைவாழந்தணர் புராணங்களில் காணலாம். செல்வமல்கிய தில்லை; வாவிசூழ் தில்லை என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றும் தொழுவார்களின் மும்மலங்களைப்போக்கி, வீட்டின்பத்தை அளிப்பதும் இத்தலமே. இது அகழாலும் உயர்ந்த மதிலாலும் சூழப்பெற்றது.

நடராஜப்பெருமான் உலாக்கொண்டருளுவர் திருவீதியில். இது சிவமேநிலவும் திருவீதி, நெடுவீதி, செல்வவீதி, அம்பொன்வீதி, மாதவங்கள் நல்கும் திருவீதி என்றெல்லாம் பாராட்டப்பெற்றிருக்கிறது. இதில் உலகுக்கெல்லாம் திருவுடையந்தணர்கள் வாழும் மாடமாளிகைகள் விளங்கி அழகினைச் செய்கின்றன. பொய்ப்பிறவிப் பிணியோட்டும் தன்மையதாக விளங்குகின்றன. திருநாவுக்கரசு சுவாமிகள் அங்கப்பிரதக்ஷிணம் செய்ததும் இவ்வீதியிலேதான். மலர்ந்தபேரொளி குளிர்தரச்சிவமணம் கமழ்ந்து வான்துகள் மாறிச் சிலம்பு அலம்புறு சேவடியுடைய பெருமான் பயில்வுறுகின்ற செம்மையினாலே அன்பர் சிந்தையினைப்போலவும் அவ்வீதி விளங்குகின்றதாம். ஞானசம்பந்தப்பெருமானும் இத் திருவீதியில் தங்கியிருத்தற்கு அஞ்சி, அருகிலுள்ள திருவேட்களத்தையே தமக்குத் தங்குமிடமாகக்கொண்டு கூத்தப்பெருமானை வழிபட்டார்.

மற்றும், "பலர் அருச்சித்து வழிபட்டுப் பேறு பெற்றிருப்பதோடு எனது தந்தை வியாக்கிரபாதராலும் வழிபடப்பெற்றது. அத்துடன் பலபெருமைகளையும் தனதாக்கிக்கொண்டு பெரும்பற்றப்புலியூர் என்ற பெயருடன் ஒன்றுபட்ட மனமுடைய முனிவர்கட்கும் இருப்பிடமாக விளங்குகின்றது. மேலும் சிவகாமியம்மையார் உலகுய்யும்விருப்புடன் எப்போதும் கண்டுகொண்டிருக்குமாறு பெருமான் அம்பலத்தே திருக்கூத்தாடுகிறானாதலின் இத்தலம் விளங்கும் தென்திசைக்குரிய பெருமை வேறு எத்திசைக் குரியது" என்று உபமன்யர் கூற்றாகச் சேக்கிழார் தில்லைப்பெருமையை அறிவிப்பதும் சிந்திக்கத்தக்கதொரு சிறந்தபகுதியாகும்.

**திருக்களிற்றுப்படியார்:**

இந்நூல் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனாரால் அருளிச்செய்யப்பட்டு, பஞ்சாக்ஷரப்படியில் வைக்கப்பட்ட பெருமையினையுடையது. இதனைச் சிலையாற்செய்த யானை, எடுத்து, ஆனந்தக்கூத்தருடைய திருவடிகளில் இட்ட பெருமையுடையது. நூறு வெண்பாக்களால் ஆனது.

**கொடிக்கவி:**

இந்நூல் உமாபதிசிவாசாரிய சுவாமிகளால் கொடியேறுவதற்கு அருளிச்செய்யப்பட்டது. இதில் நான்கு பாடல்கள் உள்ளன. ஒன்று கட்டளைக்



கலித்துறை. ஏனையன வெண்பாக்கள். அவற்றுள் ஒன்றில், வாக்குமனாதீதனாகிய கடவுளை நோக்கி அறிவால் பிரியாது அநுபவித்தலை அறிவிப்பது கொடி யென்றுணர்த்தப்படுகின்றது.

**கோயிற்புராணம்:**

இது உமாபதிசிவாசாரியசுவாமிகளால்அருளிச் செய்யப்பட்டது. ஐந்து சருக்கங்களை உடையது. பாயிரமுள்பட 415 பாடல்கள்கொண்டது.

வியாக்கிரபாதச்சருக்கம், வியாக்ரபாதமுனிவர் மத்யந்தனமுனிவருக்குத் திருவருளால் அவதரித்து வண்டுமொய்க்காத மலர்களைக்கொண்டு இறைவனை வழிபாடுசெய்தற்காகவும், மரமேறிப் பூக்களை எடுப்பதற்காகவும் புலிக்காலையும், நகக்கண்களையும் பெற்ற வரலாற்றினை அறிவிக்கிறது. இச்சருக்கத்து வியாக்கிரபாதமுனிவர் சிவயோகத் தமர்ந்திருந்த நிலையை அறிவிக்குஞ் செய்யுள்கள் மிக நுணுகிய கருத்தை அறிவிப்பனவாம். இச்சருக்கம் இருபத்தொன்பதாம்செய்யுளில் தலத்தின் மறுபெயர்களும் அவற்றின் காரணங்களும் அறிவிக்கப்படுகின்றன.

பதஞ்சலிச்சருக்கத்தில், ஆதிசேடன் பதஞ்சலியாகி நாகசேரிவழியாகவந்து வியாக்கிரபாதரோடு திருமூலட்டானரை வழிபட்டுத் திருநடனம்தெரிசிக்க இருந்த செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

நடராஜச் சருக்கத்தில், தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடிய சித்தயோக சுபதினத்தில் மூவாயிரம் முனிவர்களுக்கும், பதஞ்சலி வியாக்கிரபாதமுனிவர்கட்கும் பெருமான் ஆனந்ததாண்டவம் காட்டியது கூறப்பட்டுள்ளது.

இரணியவன்மச் சருக்கத்தில், கௌடதேசத்து அரசனாகிய சிங்கவர்மன் தில்லைக்குவந்து மேனியிலிருந்தநோய் நீங்கப்பெற்று இரணியவன்மனாகித் திருக்கோயிற்றிருப்பணி செய்வித்தமை யறிவிக்கப் பட்டிருக்கிறது.

திருவிழாச்சருக்கத்தில்; வசந்தோற்சவம், நீர் விளையாட்டு உற்சவம், பவித்ரோற்சவம், தீபோற்சவம், திருவாதிரை உற்சவம்; பூசோற்சவம், ஆனி மாத உற்சவம் முதலியவற்றை ஆகமவிதிப்படி அரசன் நடத்தியது அறிவிக்கப்படுகிறது.

**சிதம்பரபுராணம் :**

தில்லைவாழந்தணர்களின் விருப்பப்படி, தில்லையிலே பிறந்த புராணத்திருமலைநாதர் என்பவரால் இப்புராணம் செய்யப்பட்டது. பாயிரத்துடன் மான்மியச் சருக்கம், துன்மதச் சருக்கம், நியமச் சருக்கம், சோமநாதச் சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருச்சிற்றம்பலச் சருக்கம், சமாதிச் சருக்கம், துற்றெரிசனச் சருக்கம் என்ற பத்துச் சருக்கங்களைக் கொண்டது. 813 விருத்தங்களை யுடையது. சொற்சுவை பொருட்சுவை மலிந்தது.



**புலியூர்ப்புராணம் :**

இது யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை சிவானந்தையரவர்களால் இயற்றப்பட்டது. இது பிற்காலத்து வாக்கு; பாடல் வளமானது. ஆயிரத்து இருநூற்றைந்து விருத்தங்களையுடையது. 1936ல் அச்சிடப்பெற்றது. பாலையினியல்பினை விரிக்கும்,

"புறத்தவரு னினும்நமது புல்லியலூன் புனிதமென
நெறிப்படுவார் பொருள்பறித்த நெடும்பதியுட் பகுந்தலைத்து
மறத்துறையினில் லாமவர்க் கறிவுகொளுத் துவபோன்று
சிறைப்புறவம் பால்மடுக்கும் செவ்வியது திருந்துசுரம்"

என்ற பாட்டு எவ்வளவு நயம்பட அமைந்துள்ளது?

**தில்லைக்கலம்பகம் :**

இது கலம்பகத்திற்கு இரட்டையர்கள் என்று சிறப்புப்பெற்ற இரட்டையர்கள் பாடியது. நூறு பாடல்களையுடையது. கலம்பகத்திற்குரிய எல்லா உறுப்புக்களையும் பெற்றுவருகிறது. இவர்களுடைய கற்பனைத்திறம்,

"நடிப்பார்தென் புலியூரில் நம்பரிடம் பிரியாமல்
அடிப்பாவை சிறுமருங்கு லாற்றியிருந் ததுபாரீர்
கொடிப்பாதி யாயிரண்டு குடஞ்சுமந்து வடஞ்சுமந்து
முடிப்பாரஞ் சுமந்துமொரு முருகனையுஞ் சுமந்ததுவே"

என்ற பாடலால் நன்கு விளங்குதல் காண்க.

## தில்லையுலா :

இதை இயற்றினர் பெயர் அறியப்படவில்லை. தமிழ்ப்பொழிலில் வெளியாகியிருக்கிறது. முற்றும் வெளிவரவில்லை. இதில் நடராஜப்பெருமான் உலாப் போகிறகாலத்து, தம்பிரான் றோழனாகிய குபேரன் தேர் பக்கத்திருந்தது. பதினொருருத்திரர், பன்னிரு சூரியர், திருமால், பிரமன், வேலன், கணபதி இவர்கள் வாகனங்களோடு திருநீற்றுச்சோழனுடைய குதிரையும், வாகீசர், திருவாசகப்புலவர் இவர்கள் தேரும் பின் வந்தன என்கின்றார். சிறப்பிற் சிறப்பாக நூற்றிருபத்தேழு, நூற்றிருபத்தெட்டாங் கண்ணிகளில் தில்லைச்சிற்றம்பலமுடையான் சிற்சபைக்குத் தேவர்கள் பொன்வேய்ந்தார்கள் என்றும், ஒவ்வொரு பொன்னோட்டிலும் திருவைந்தெழுத்து பொறிக்கப்பட்டதென்றும் குறிப்பிடுகின்றார். அந்தப் பகுதி "திருவெழுத்தால் சேணோடு பொன்வேய்ந்த சிற்றம்பலம்" என்பது. இவருடைய அன்பின் கனிவிற்கு "ஆழிவாய் ஒப்பற்ற வல்விடத்தையூட்ட மனமிசைந்த முப்பத்து முக்கோடி மூர்க்கரும்" என்றபகுதி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## சிதம்பரமும்மணிக்கோவை :

இந்நூல் குமரகுருபர சுவாமிகளால் இயற்றப்பெற்றது. இதில் தில்லையின் சிறப்பும், இறைவனுடைய ஆனந்தக்கூத்தின் அமைதியும், முத்தி தரும் தலங்களும், பிறவும் மொழியப்படுகின்றன.



கடவுட்டன்மைக்கும், கற்பனைக்கும், கருத்தூன்றக் கவி இயற்றும் வன்மைக்கும் எடுத்துக்காட்டாக இலங்குவது இந்நூல். "மன்றம் பொகுட்டாம் மதில் இதழாம் மாடங்கள் துன்றும் புயல்கள் சுரும்பராம்" ஆதலின் சிதம்பரம் செந்தாமரையை யொக்கும் என்கின்ற கற்பனை இதற்கு எடுத்துக்காட்டாகும். பெருமானிடம் தனம் வேண்டும், கல்வி வேண்டும், தளர்வறியாமனம் வேண்டும் என்று உலகம் வேண்டிக்கொள்ள, இவருடைய உண்மைத்துறவு,

> "மல்லலம் பொழில்சூழ் தில்லைவாண!
> வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும், அதுவே
> பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
> பலதொடுத் திசைந்த வொருதுணி யல்லது
> பிறிதொன்று கிடையா தாக, வறுமனைக்
> கடைப்புறத் திண்ணை யல்லது கிடக்கைக்கு
> இடம்பிறி தில்லை யாக, கடும்பசிக்கு
> உப்பின் றட்ட புற்கையூ ணல்லது
> மற்றொ ருண்டி வாய்விட் டாற்றினும்
> ஈகுந ரில்லை யாக."

என்று வரம்வேண்டச்செய்தது. ஆனந்த தாண்டவத்தின் சிறப்பினை அநுபவிக்கின்றவர் சிவகாமி அம்மையேயென்பதனை,

> 'பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
> நோயுண் மருந்து தாயுண் டாங்கே"

எனவும்,

"ஆட்டுகின்றோ ரின்றிமன்று ளாடுமா றெங்ஙனே
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று—வேட்டதனை
உற்றெடு நாளாக வுண்ணுமோர் மால்யானை
பெற்றெடுநாரு கூந்தற் பிடி".

எனவும் கற்பனைசெய்தல் கருத்தைக் கவர்வனவாம்.

**சிதம்பரச்செய்யுட்கோவை :**

இதுவும் குமரகுருபர சுவாமிகளால் இயற்றப் பெற்றது. இலக்கியமும் இலக்கணமும் ஒரு சேர அமையப் பாடப்பட்டதொரு பிரபந்தம். இதில் அம்மைக்கும், அப்பனுக்கும் உள்ள இயைபினைக் "கனகமார் கவின்செய் மன்றில்" என்ற பாடலால் எடுத்துக்காட்டுகிறார்கள். இதுவும், "முகிழ் முலைக் கன்னியோடு இன்புறும யோகி எழுபுவிக்கரசு" என்பதும் சாத்திரநுட்பங்களமைந்த பகுதிகளாம். "உத்தமனைத்தெழுத் துருவங்காண்பன அனந்தன் கண்கள்" என்பதுமத்தகைத்தே. "ஓமெனுமெழுத் தின் வடிவாய் நடனவிற்றும் புலியூரன்" என்பது நடராஜப்பெருமானது பிரணவ பஞ்சாக்கரக் கூத்தைக் காட்டுவதாகும்.

**சிதம்பரநாதர் பதிகம் :**

இந்நூலிற்குச் சிதம்பர நடராஜர் திருவருட்பா என்னும் மறுநாமம் உண்டு. நடராஜப்பெருமானுடைய நடனச்சிறப்பும், ஐந்தொழில் ஆக்கும் திறமும், விளக்கப் பெற்றுள்ளன. நடராஜப்



பெருமானாகிய கதிர் உதிக்கப் பரசமயர் கண்கள் இருண்டன; சைவசித்தாந்தி கண்கள் மலர்ந்தன; இருளகன்றது; மனமலர் மலர்ந்தது என்கின்ற அழகிய உருவகம் மூன்றும்பாட்டிலமைந்துள்ளது. பவப்பசியால் வாடிய மனவண்டு சரணகமலத் தேனையுண்டு தேக்கிடுவதெந்நாள் என்று ஏமாந்திருக்கும் எளிமையைக் காட்டும் பாடல் பண்பட்ட மனத்தை நையவைக்கும் அரியசெய்யுளாகும். சாத்திர தோத்திர நூலாகிய இது, தருமபுர ஆதீன பத்தாவது மகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது.

**நடராஜசதகம் :**

நடராஜசதகம் என்பது சிதாகாசமாகிய தில்லை நகரில் எழுந்தருளியிருக்கும் ஆனந்தக்கூத்தனைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு எழுந்த ஒரு பிரபந்தம். நூறு ஆசிரியவிருத்தங்களைக்கொண்டது. ஒவ்வொருபாடலின் இறுதியிலும் 'சிவசிதம்பரவாச சிவகாமி யுமைநேச செகதீச நடராஜனே' என்ற மகுடம் பெற்று விளங்குவது. அதிலும் 'தில்லை மூவாயிரவர் தொழும்' எனத் தில்லைவாழந்தணர்கள் ஆகமவிதிப்படி வழிபாடு செய்வதை மிகமிகப் பாராட்டிச் செல்லுகிறது. 'பாலுண் குழவி பசுங் குடர் பொறாதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு' ஆனந்தக்கூத்தன் அருட்பெருக்கை ஏற்று ஆன்மாக்களது பக்குவநிலைக்கேற்பப் பாலித்தருளும்

பராசத்தியாகிய சிவகாமியம்மைக்கு மூவகையான் மாக்களுமுய்ய - மூலாகம உபாகமங்களை விதிமுறை நடக்க மொழிந்ததாகக் கூறுகின்றது.

இச்சதகத்துள் பல ஆகமங்களில் பலகாற் பயின்று, நினைவுவன்மையோடு அரிதின்முயன்று அறிந்துகொள்ளப்படும் அருங்கருத்துக்கள் பலவும் அடைவே மிளிர்கின்றன. சைவசமயத் தொடர்புடைய பல நுணுக்கங்கள் ஒருசேர உணர்த்தப்படுகின்றன. இக்கருத்தை, பஞ்ச பூதஸ்தலங்கள், ஆறு காசி, அட்ட வீரட்டம், இருபத்தைந்து மாகேசுவர வடிவங்கள் இவை முதலானவைகளைத் தொகுத்துணர்த்தும் பகுதிகள் நன்கு வலியுறுப்பனவாம். சிவபூசை, அதற்கேற்ற உபகரணங்கள், சிவலிங்கவகைகள், அவற்றை வழிபடுதற்குரியார், வழிபடுமுறை, மாத வருட விசேட அபிடேகங்கள், அபிடேகதிரவியங்களைப்பற்றிய அருங்கருத்துக்கள், பயன்கள், அருச்சனைக்குரிய பத்திர புட்பங்கள், முதலியவைகளை நன்கு விளக்கிச்செல்கின்றது. ஒரு சைவசமயி மேற்கொள்ள வேண்டிய சாதனங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களி னிலக்கணங்கள், அணியுமுறை, இவை அறிவிக்கப்படுகின்றன. இந்நூலாசிரியர் தருமபுர ஆதீன சிதம்பரநாதமுனிவர்.

**புலியூர்வெண்பா :**

தில்லைவிடங்கன் மாரிமுத்துபிள்ளையால் அவர் இரண்டாம் மகனுடைய சித்தப்பிரமை நீங்குவ

கிழக்குக்கோபுரத்தில்



அசுவனித்தேவர்

தற்காகச் செய்யப்பெற்றது. சிவபெருமானுடைய ஆயிரங்கலைகளுள் ஓர்கலையே ஊரெங்குஞ் சுற்றித் தில்லையில் அர்த்தயாமத்து ஒடுங்குகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தலத்து அர்த்தஜாம தரிசனம் சிறப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

**சிதம்பரவெண்பா :**

இது திருவண்ணமலை குகை நமச்சிவாயரால் பாடப்பெற்றது.

**தில்லையமக அந்தாதி :**

திருசிரபுரம் மகாவித்துவான், மீனட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப்பெற்றது. இதுயமக முறையில் அமைந்தது. இதில் ஒரு அடிக்கு ஒற்றுச் சேர்த்துப் பன்னிரண்டெழுத்து முதல் பதினோந் தெழுத்துவரையிலுங் கூட யமகம் அமைந்திருக் கிறது. 'சிற்றம்பலங்கண்டு போற்றேன் மின்னர் கள் செவ்வாய் தரும் எச்சில்தம்பலம் கண்டுபோலக் கொள்வேன்' 'பேரம்பலம் பலகாற்சூழ்தரேம்பித்து அடிமை யென்றும் பேரம்பலம் பலங்கோதி யிவ ணின்று பேறெனினும் பேரம்பலம் பலமா இச்சித் தேம்' என்பன முதலிய பகுதிகள் உயிர்களினியற் கையை விளக்கி ஆண்டவனடிக்கு வழிப்படுப்பன.

**சோழமண்டலசதகம் :**

இது ஆத்மநாத தேசிகரால் இயற்றப்பட்டது. இதில் மூன்ருவது செய்யுளும், பன்னிரண்டாவது

செய்யுளும், தொண்ணூற்றொன்பதாம் செய்யுளும், தில்லையை, தில்லைவாழந்தணர்களை, தில்லையின் நிகழ்ச்சிகளைப்பற்றி அறிவிப்பனவாகும்.

**திருச்சித்ரகூடமான்மியம் :**

இது சிதம்பரத்தைப்பற்றிய வைணவ சம்பந்தமான புராணம். இதனைத் தமிழில்செய்தவர் புதுவை இராமாநுஜ நாவலர். இரண்டாயிரத்து முப்பது செய்யுளையுடையது. கஜமுகன், தண்டகன் இவ்விருவர் புத்திரிகளாகிய சில்லி, தில்லியென்பாள் ஆதிவராகமூர்த்தியை வேண்டிக்கொள்ள, சில்லியென்பவள் வேண்டியவாறு திருமுட்டத்தில் திருவடிக்கீழ்ச் சேவிக்கும் வரத்தையளித்தார். தில்லியென்பவளுக்குப் புண்டரீகபுரத்திற்குச் சென்று புண்டரீகசரஸில்மூழ்கித் தவஞ்செய்தால் வீடுபேறு அடைவாயென வரமளித்தார். அவள் அவ்வாறே சென்று தில்லைமரவடிவாகிப் புண்டரீகவனத்தில் பொருந்தினள். அதனால் தில்லைவனமென்ற பெயர் ஆயது. இது அறுபது படலங்களை யுடையது.

**தனிச்செய்யுள் :**

தனிப்பாடற்றிரட்டு, தனிச்செய்யுட்சிந்தாமணி முதலியவற்றுள்ளும் தில்லையைப்பற்றிப் பல குறிப்புக்கள் அறிவிக்கப்பெற்றுள்ளன.



"பொன்னஞ் சடையுறாகம் புல்லாங்கும் பூம்புனற்கும்
தன்னெஞ்சு உலையுறத் தாவுமே—அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவுந் தில்லைநட ராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று"

என்று மான்கன்று துள்ளுவதற்குக் காரணம் கற்பிக்கிறார் ஒருபுலவர். மற்றோரிடத்து நடனத்தைக் கண்டு வியந்து,

"கொங்குலவுந் தென்தில்லைக் கோவிந்தங் கோனிருக்கக்
கங்குல்பகல் அண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஓடெடுத்த அம்பலவா வோங்குதில்லை யுட்புகுந்தே
ஆடெடுத்த தெந்தவுபா யம்"

என்று வியந்துபேசுகிறார். இவ்வாறு நகைச்சுவை படப் பாடிய பாடல்கள் பல காணப்படுகின்றன.

**கந்தபுராணம் :**

வழிநடைப் படலத்தில், முருகன் தன்படை வீரர்களோடு வீரமாகேந்திரம் நோக்கிவருகின்றவர் திருத்தில்லையையுங் கண்டுவந்தாரென்பதை,

"விரிகனல் வேள்விதன்னில் வியன்றலை அரிந்து வீட்டிப்
பொருவரு தவத்தையாற்றும் பதஞ்சலி புலிக்கால் அண்ணல்
இருவரும் உணர்வாற்காண எல்லையில் அருளால் ஈசன்
திருநட இயற்கை காட்டும் தில்லைமூதூரைக் கண்டான்."

என்ற பாடல் அறிவிக்கிறது.

**திருவிளையாடல் :**

முனிபுங்கவர்களை மதுரைக்கு அழைத்துச்செல்கின்ற அகத்தியர், தில்லைப்பதியையும் அம்முனிவர்களுக்குக்காட்டிச்,

"சத்திய ஞானாநந்த தத்துவம் அசைவற்றாகும்
நித்திய பரமானந்த நிறையருள் மன்றம் ஈது"

என அறிவிப்பதாகத் தில்லையின் பெருமை விளக்கப்பட்டுள்ளது.

**வில்லிபாரதம் :**

அருச்சுனன் தீர்த்தயாத்திரைக்காகப் புறப்பட்டபோது தென்பாண்டிநாட்டையடைகின்றவன் வழியில் பொன்னம்பலத்தைக்கண்டு தொழுதான் என்பதை,

"இன்னம்பல பலயோனியில் எய்தாநெறி பெறவே
முன்னம்பலர் அடிதேடவும் முடிதேடவு மெட்டா
அன்னம்பல பயில்வார்புனல் அணிதில்லையுள் ஆகும்
பொன்னம்பல நாதன்கழல் பொற்போடு பணிந்தான்"

என வில்லிபுத்தூராழ்வார் அறிவிக்கிறார்.

மற்றும் தல விசேடப்படலத்தில் சிறந்ததலங்களாவன புண்ணியத்தலங்கள்; அவைகளுள்ளும் சிறந்தன சிவதலங்கள்; அவைகளுள்ளும் சிறந்தன அறுபத்தெட்டு. அதிலும் தெய்வத்தலங்களாகிய



பதினெட்டும் சாலச் சிறந்தன அப்பதினெட்டனுள்ளும் அதிகதலம் நான்கு என்று கணக்கிட்ட ஆசிரியர், அந்நான்கனுள் 'அன்னமலிவயற்புலியூர்' என இத்தில்லைப்பதியையே முதற்கண் வைத்துப் பேசியுள்ளார்.

**பெருமாள் திருமொழி :**

'அங்கணெடுமதிள்' என்றதிருமொழியில், முதற்பாட்டு பெருமானைச் சூரியகுலத்தின் விளக்காகவும்; இரண்டாம் பாடலில் தாடகை ஸம்காரம்; விசுவாமித்திரரின் வேள்விகாத்தது; மூன்றாம் பாடலில் வில்லொடித்துச்சீதையைவேட்டது, பரசுராமன்வில் ஒடித்தது; 4ம் பாட்டில் கைகேசி சூழ்ச்சியால் முடிதுறந்தது, குகனை நட்புக்கொண்டது, பரதனுக்குப் பாதுகை அளித்தது; 5ம் பாட்டில் விராதைவதம்; சூர்ப்பனகையை மூக்கரிந்தது, கரதூஷணன்வதம், மானெய்தது; 6ம் பாட்டில் சீதையைப் பிரிந்தது, சடாயுவுக்கு முத்தியளித்தது, சுக்கிரீவக்கியம், வாலிவதை, அநுமன்தூது; 7ம் பாட்டில் வருணன்வற்ற அம்பெய்தது, சேதுபந்தனம், இராவணன்வதம், விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம்; 8ம் பாட்டில் அயோத்தியடைந்து அரசெய்தியது, தன்வரலாறு கேட்டது; 9ம் பாட்டில் சம்புகனைக் கொன்றது, பிராமணச் சிறுவனை உயிர்ப்பித்தது; 10ம் பாட்டில் சராசரங்களுக்கு மோக்ஷம் அளித்தது, பரந்தாமம் படர்ந்தது; 11ம் பாட்டில் திருக்கடைக்காப்புமாக

இம்முறையில் விஷ்ணுவின் பெருமை அறிவிக்கப் பட்டுள்ளது.

## பெரியதிருமொழி :

'ஊன்வாட' என்ற திருமொழியில் உலகவரை நோக்கி, 'இந்திரியநிக்கிரகம் செய்து தவம் செய்ய வேண்டாம்; தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று வழிபட்டுய்யுங்கள்' என்றுஉபதேசிக்கின்றார். அதில் 'அருமறை அந்தணர் சிந்தைபுக செவ்வாய்க்கிளி நான்மறை பாடு தில்லை', 'தீயோங்க ஓங்கப் புகழ் ஓங்குதில்லை', 'திருமால் திருமங்கையொடு ஆடுதில்லை' என்று தில்லைச் சிறப்பு இறை எழில்தோன்றுமாறு இயம்பப்படுகிறது.

'வடமருதிடை' என்ற திருமொழியில், தில்லைத் திருச்சித்திரகூடத்துள்ள பெருமானே மல்லரைக் கொன்று, மருதிடைபோகி, ஆயர் ஆனிரைகளுக்கு இடர்தீர்த்தவன் என்றும், மாநில மாமகள் மாதர் கேள்வன் என்றும், வானோர் தங்கள் பிரான் என்றும் அறிவிப்பதோடு இப்பாசுரங்கள் பத்தையும் ஓதுவார்க்கு வினைசாரா என்றும் கூறியுள்ளார்.

## வரலாற்றுத் தொடர்புள்ள இடங்கள்

வேட்களத்து இறைவன் வேடவுருவாக வந்து அருச்சுனன் தவநிலையினை உலகினுக்கறிவிக்கப் பன்றியை உசுப்பிவிட்டதலம் **உசுப்பூர்** என்று



வழங்குகிறது. அருச்சுனனால் வில்லடிபட்ட இறைவன் உகந்த இடம் நக்கர் உகந்தகுடி. இன்று அது **நக்கந்தங்குடி** யென்று வழங்குகிறது. **வல்லம் படுகை** யென்பது காளிங்கனால் நடராஜப்பெருமானுக்கு ரோஜாத்தோட்டம் போட விடப்பெற்ற இடம். இதனை ஒருசரித்திராசிரியர் தஞ்சாவூரின் பக்கத்துள்ளதான வல்லம் எனக் குறிப்பிடுகிறார். **தில்லைவிடங்கன்** என்பது நடராஜப்பெருமானுடைய திருநாமங்களிலொன்று. விடங்கம் என்பது உளி படாது ஆகிய சுயம்புமூர்த்தியெனப் பொருள்படும். தில்லையிலுள்ள விடங்கராதலின் தில்லை விடங்கர் எனப்பட்டார். வீதிவிடங்கர் என்ற வழக்காறும் காண்க. தில்லைவிடங்கன் என்ற இப் பெயரைக் கிராமத்திற்கு இட்டுவழங்கினர். கோயில் என்பது சிதம்பரத்தைக் குறிப்பதாதலின் இதனை அடுத்து விளங்கும் சிறுகிராமம் **கேயிலாம்பூண்டி** எனப் பெயர்பெற்றது.

## தில்லையைச் சுற்றியுள்ள சிவத்தலங்கள்

**திருநாரையூர்:-** இது நாரைபூசித்ததலம். இத் தலத்துக்கும் சிதம்பரத்துக்கும் தொடர்பு உண்டு. நம்பியாண்டார்நம்பிகள் இத்தலத்தில் அவதரித்தவர்கள். இங்குள்ள பொல்லாப்பிள்ளையார் அருளால் சிதம்பரத்தில் திருமுறைகள் இருக்குமிடம் வெளிப்பட்டது. சம்பந்தர், அப்பர் பாடல்கள் இருக்கின்றன. இத்தலம் சிதம்பரத்தின் தென்மேற்கே

பத்துமைல் தூரத்தில் இருக்கிறது. சம்பந்தர் தம் பாடலில் 'செல்வத் திருநாரையூர்' என்றுகுறிப்பிட்டுள்ளார்.

**திருக்கானாட்டுமுள்ளூர்:-** இது பதஞ்சலி முனிவர் பூசித்ததலம். சுந்தரர் பதிகம் பெற்றது. சிதம்பரத்துக்குத் தென்மேற்கே பதினெட்டுமைல் தூரத்தே யுள்ளது. இறைவர் பதஞ்சலிநாதர். இறைவி கானார்குழலி.

**திருஓமாம்புலியூர்:-** இது அங்குலனென்னும் வேடன் புலிக்குப்பயந்து வில்வமரத்திலேறி இரவு முழுதும் வில்வ இலையால் அருச்சிக்க அவனுக்கும் புலிக்கும் முத்திகொடுத்த தலம். சம்பந்தர், அப்பர் பாடல்கள் இத்தலத்திற்குள்ளன.

**திருவேட்களம்:-** அருச்சுனன் பாசுபதம் பெற்றதிருத்தலமாகிய இது சிதம்பரத்தின் கீழ்பால் விளங்குகிறது. சம்பந்தர், அப்பர் பாடல்கள் உண்டு. நடராஜப்பெருமானைத் தரிசிக்க வந்த சம்பந்தர் இரவில் தங்குமிடமாகக்கொண்ட சிறப்பினது. மூங்கில்வனம் என்றபெயரும் இத்தலத்திற்கு உண்டு. சுவாமி பாசுபதேசுவரர். அம்மை நல்லநாயகி. "வேடனாருறை வேட்களஞ் சேர்மினே" என்ற தேவாரப்பகுதி தலவரலாற்றைக் குறிப்பதாகும். அருச்சுன உற்சவமூர்த்தி ஆலயத்தில் இருக்கிறது கோயில் மிக அழகான திருப்பணி. கிழக்குப்பார்த்த சந்நிதி.



**திருநெல்வாயில்:-** இது இக்காலத்துச் சிவபுரி என வழங்குகின்றது. சுவாமிபெயர் உச்சிநாதர். அம்மை கனகாம்பிகை. சம்பந்தர் பதிகம் ஒன்றேயுடையது. இத்தலம் திருவேட்களத்தின் தென்பால் இரண்டுகல் தொலைவில் உள்ளது.

**திருக்கழிப்பாலை:-** மூவர்பாடல்களும் பெற்றது இத்தலம். சுவாமிபெயர் பால்வண்ணநாதர். அம்மை வேதநாயகி. இத்தலம் நெல்வாயிலிலிருந்து அரைமைலில் தென்பால் உள்ளது.

## கர்ணபரம்பரைச் செய்திகள்

ஹைதர் காலத்தில் தில்லைத் திருக்கோயிலைக் கோட்டையாகக் கொண்டு போர்செய்தமையால் தில்லைவாழந்தணர்கள் நடராஜப்பெருமானை எடுப்பித்துக்கொண்டு மலைநாட்டை அடைந்தார்கள். அங்கேபெரிய புளியமரப்பொந்தில் வைத்து மூடிவிட்டார்கள். கலகம் அடங்கச் சிலமாதங்களாயின. இன்ன மரத்தில் வைத்தோமென்பதைத் தில்லைவாழந்தணர்கள் மறந்துவிட்டார்கள். திகைத்து நின்றார்கள். அங்கு உழுதுகொண்டிருந்த உழவர்கள் 'காளையை அவிழ்த்து அம்பலப்புளி யடியில் மேயவிடு' என்று பேசிக்கொண்டார்கள். இதைக் கொண்டு நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் புளியை யறிந்து பொந்தைத்திறந்து பெருமானைக் கொணர்ந்தனர். இதனைச் சோழமண்டல சதகம்,

"தெளிவந் தயர்மா லறியாத தில்லைப் பதியம் பலவாணர்
புளியம் பொந்தினிடம் வாழும் பதுமை காட்டிப் பொருள்காட்டி
எளிதிற் புளியங் குடியாமென் றிசைக்கும் பெருமை யேருழவர்
வளருங் குடியிற் பொலிவாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே."

என்று அறிவிக்கிறது.

துர்வாசர் இறைவழிபாட்டுக்காக ஒரு சமயம் தில்லைக்குவந்தார். உச்சிப்போதுவரை தில்லையான் கூத்தில் திளைத்திருந்தார். நண்பகல்; நல்லபசி இவரை வாட்டிற்று. வழக்கமான சினம் வந்தது. "எருக்கு முளைத்த தில்லை ஈசனுமிங்கில்லை" என்று இகழ்ந்துரைத்தார். முனிவர்வாயில் சினவுரையைக் கேட்டு ஆற்றாத சிவகாமித்தாயார் அன்னங் கொண்டுவந்து படைத்தனர். மகிழ்ச்சியால் மனம் மாறியமுனிவர் "எருக்கு முளைத்ததில்லை ஈசனுமிங் குண்டு" என்று பாடினராம்.

## பழமொழிகள்

### தில்லைபாதி திருவாசகத்தில் :

மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிநாட்டிலே அவதரித்து, மதுரையில் மந்திரியாக இருந்தும், அவர்கள் பாடிய திருவாசகத்தில் பாதிக்குமேல் தில்லையைப் பற்றியதாதலின் இந்தப்பழமொழி வழங்கியதுபோலும்.



### சிதம்பரத்தில் பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக்கொடுக்க வேண்டுமா ?

திருவெம்பாவை திருவண்ணமலையில் அருளிச் செய்ததாயிருப்பினும், சிதம்பரத்தில் திருவாதிரைத் திருநாள் பெருவிழாவில் இது ஓதப்பெறுதலின், எல்லோரும் கற்றிருப்பார்கள் என்பதுபற்றி வழங்கி வருகிறது. இது சிதம்பரத்திற்பிறந்த பிள்ளைக்குத் திருவாசகம் தெரியாதா? என்றும் வழங்கும்.

### பொன்னம்பலத்துக்கும் புவனகிரிபட்டணத் திற்கும் என்றைக்கும் உண்டான இழவு :

1182ல் மாறவர்மன் விக்ரமபாண்டியன், வெள்ளாற்றங்கரையில் சண்டையிட்டான். அவனுக்குப் புவனேகவீரன் என்னும் பேருண்டு. 1753ல் பிரஞ்சுக்காரர்கள் புவனகிரியைப் பிடித்துக்கொண்டு சிதம்பரம்கோயிலைத் தனக்குக் கோட்டையாக வைத்துக் கொண்டிருந்த ஆங்கிலேயரை விரட்டிப்பிடித்துக் கொண்டார்கள். அச்சண்டையால் தில்லையிலுள்ளவர்கட்குத் தொல்லையாயிருந்திருக்கும். இத்தகைய பலநிகழ்ச்சிகளைக்கொண்டு இப்பழமொழி எழுந்திருக்கவேண்டும்.

### பூசச்சோற்றைத் தின்னுதவன் பூனையாய்ப் பிறக்க வேண்டும் :

இராஜராஜ தேவனுடைய ஆட்சி 4ம் ஆண்டு 25வது நாளில் தைப்பூசப் பாவாடைக்காக நிலம்

விட்டதால் அப்பாவாடைச்சோற்றைச் சாப்பிடாதவன் பூனையாய்ப் பிறக்கவேண்டும் என்ற பழமொழி எழுந்ததுபோலும்.

**தில்லைப்பெண் எல்லையைத் தாண்டாது:**

திருக்கோயில் அகத்தொண்டர்களாகிய தில்லை வாழந்தணர்களும், புறத்தொண்டர்களாகிய மெய்காவல், திருமாலைகட்டி, ஓதுவார்களும் தில்லைக்கு வெளியில் பெண்கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ள மாட்டார்களாதலால் இப்பழமொழி ஏற்பட்டது.

---



சிற்றம்பலம்
(சித்சபை)

—பக்கம் 24

# கல்வெட்டுக்கள்

சோழநாடு சங்ககாலத்தில் மிகச் சிறப்புற்று இருந்தது. சோழநாட்டுப்புலவர் ஆலூர் மூலங்கிழார் 'குடகுமலையில் முகில் முழங்கினால்போதும்; காவிரியில் பூவிரி புதுநீர் பொங்கிவழியும்; காவிரி இரு மருங்கும் நீர்வளம் நிறைந்திருக்கும்; அத்தகைய எப் ஊரிலே உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுவோம்' என்று இறுமாந்து பேசுகிறார். அந்நிலையிலுள்ள சோழநாடு பல்லவர் படையெடுப்பால் சிறிது சீர் குலைந்தது. பின் 9ம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சிறிது தலைதூக்கத் தொடங்கியது. அப்போதிருந்த நாட்டினியல்பைக் கல்வெட்டுக்கள் நன்கு தெரிவிக்கின்றன. சோழநாடு வளநாடுகளாக-நாடுகளாகப் பிரிக்கப்பட்டு நல்லதோர் ஆட்சி முறையில் வந்தது. முதற் குலோத்துங்கனுக்கு முன்னர் காவிரிக்கு வடக்கிலும் தென்பெண்ணைக்குத் தெற்கிலுமுள்ள பகுதி, இராஜராஜவளநாடு என்றும், வடகரை ராஜேந்திர சோழவளநாடு என்றும் வழங்கியது (S. I. I. Vol III P. 209). பின் விருதராஜ பயங்கர வளநாடென்று வழங்கலாயிற்று. இவ்வளநாட்டில் மேற்காநாட்டு இருங்கோளப்பாடிநாடும் (237 of Vol XII), மிழலைநாடும் (233of Vol XII), நல்லாற்றூர் நாடும் (222 of Vol XII), பருவூர்க்கூற்றமும் (133 of Vol XII) அடங்கியன. இவைகளுள் சிதம்பரம் தனியூராக அரசன் நேர் பார்வையில் இருந்துவந்தது.

கோயிலென்னும் இத்தில்லை, சைவநெறிக்குச் சீர்த்த திருக்கோயில்களெல்லாவற்றினும் முடிமணியாக நிலவுவது. தில்லைநகர் பதினான்கு சிற்றூர்களைத் தன்னகத்தடக்கியதோர் பேரூராக இருந்தது. பண்ணங்குடிச்சேரி என்கிற பரகேசரிநல்லூர், இளநாங்கூர், காரிகுடி, மணலூர், கோயில்பூண்டி, சிவபுரி, கோலம், அக்கன் பள்ளிப்பட்டி என்கிற விக்கிரமசோழநல்லூர், திருவேட்களம், கடுவாய்ச்சேரி, சண்டேசநல்லூர், கொற்றவன்குடி, மிதிணிக்குடி, எருக்காட்டுப்படுகை என்கிற எருக்காட்டுச்சேரி என்பன அப்பதினான்கு சிற்றூர்களாம்.

சிற்றம்பலம் என்பது இத்தலத்தின் பழைய பெயராகும். இது வடமொழியில் சிதம்பரமெனத் திரிந்ததாக அரசாங்கக் கல்வெட்டிலாகா 1914ம் ஆண்டு அறிக்கை[1] கூறுகிறது. கல்வெட்டுக்களில் இத்தலம் புலியூர், பெரும்பற்றப்புலியூர்[2], பொற்புலியூர்[3], தில்லை, தில்லையூர், கோயில் என்று வழங்கப்படுகிறது. தில்லையில் தேவகாரியங்களைக் கண்காணிப்பவர்களே சோழநாட்டுத் தேவாலயங்களையும் கண்காணிப்பவராக இருந்து வந்தனர். திருக்கண்ணபுரத்து இராமனதீச்சரத்துக் கோயில் வருவாய் குறைந்து பூசைக்கு முட்டுப்பாடு ஏற்பட, கோயில்தானத்தாரும், மாகேசுரரும், தில்லைப் பெரும்

[1] A. R. For 1914 Para 13 [2] A. R. For 1888 No. 117
[3] A. R. 1913 No. 339.



பற்றப்புலியூர் கோயில் தானத்துக்கு விண்ணப்பம் செய்துகொள்ள, அவர்கள் சோழமண்டலம் இராஜராஜபாண்டி மண்டலம், வீரசோழ மண்டலம், நடுவில் நாடு, தொண்டைநாடு, சயங்கொண்டசோழமண்டலம் ஆகிய இங்கிருந்த கோயிலார்களை, நெல்லாகவோ, பொன்னாகவோ கொடுத்து இராமனதீச்சரக்கோயில் பூசனை நன்றாக நடைபெறும்படி, ஏற்பாடுசெய்தனர் என்று மூன்றாம் இராஜராஜனுடைய ஆட்சி பதினாறாம் ஆண்டு இராமனதீச்சரக் கல்வெட்டுக்கூறுகிறது.


சோழநாட்டில் முடிசூடவேண்டுமானால் தில்லையிலுள்ள அரசகாரியம் பார்ப்பாரைத் தலைமையாகக் கொண்ட தேவகாரியக் குழுவினரே முடிசூட்ட வேண்டுமென்ற நியதி இருந்தது. எல்லாக்கோயில்களுக்கும் தலைமைக்கோயிலாக இருந்ததனாலே இது கோயிலெனவே வழங்கலாயிற்று.

ஆதியில் இத்தில்லைக்கோயில் மிகச்சிறிதாக இருந்திருக்கவேண்டும் என்றும், இப்பொழுதுள்ள திருமூலத்தானமும் திருஅம்பலமும் விளக்கமாக இருந்திருக்க வேண்டுமென்றும், இங்கே நடராஜர் மூலத்தானத்தார் காமக்கோட்டமுடைய நாச்சியார் இவர் மூவர் கோயில்தவிர ஏனையோருக்கும் சிறு கோயில்கள் பல இருந்திருக்கின்றன என்றும், கனகசபையில் கூத்தப்பெருமானாரும் ரகசியமுமே இருப்பதற்குக் காரணம் ஒன்றும் சொல்ல முடிய

வில்லை என்றும், ஆகாசப் பெருவெளியையும் தனக்கு இடமாகக்கொண்ட ஆண்டவன் அறிவுருவாக எழுந்தருளியிருக்கின்றான் என்று சைவர்கள் சொல்கிறார்கள் என்றும் A. R. 1914 Para 14, 15 கூறுகிறது.

கல்வெட்டுக்களில் மிகப் பழமையானதாகிய இராஜேந்திரசோழ தேவனுடைய 24ம் ஆண்டுக் கல்வெட்டும், குலோத்துங்கசோழதேவனுடைய 47ம் ஆண்டுக் கல்வெட்டும் கனகசபையையும் திருமூலட்டானத்தையும் பிரிக்கும் சுவரில் உள்ளன.

கனகசபையைச் சுற்றியுள்ள பிராகாரம் விக்கிரமசோழன் திருமாளிகை என்றும், திருமூலட்டானத்தைச்சேர வருகின்ற இரண்டாம் பிராகாரம் குலோத்துங்கசோழன் திருமாளிகை என்றும், அதற்கும் வெளியிலுள்ள மூன்றாம் பிராகாரம் இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை என்றும் வழங்கப்பட்டன. இவற்றுள் குலோத்துங்க சோழன் திருமாளிகை என்ற பெயரும், விக்கிரமசோழன் திருமாளிகை என்ற பெயரும் மேற்குறித்த சுவரிலுள்ள கல்வெட்டுக்களிலேயே காணப்படுகின்றமையின், விக்கிரமனே தன் தந்தையாகிய குலோத்துங்கன் பெயரால் உட்பிராகாரத்தையும், தன்பெயரால் இரண்டாம் பிராகாரத்தையும் செய்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.



தேவசபை (பேரம்பலம்) —பக்கம் 26

சம்பந்தர் முதலிய மூவர் காலத்திலேயே இத்தலம் சிறப்புற்றிருக்கவும், அவர்கள் காலத்திய பல்லவவேந்தர்களின் கல்வெட்டொன்றும் இதில் காணப்பெறுமை குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 271 உள்ளன. அவைகளுள் பெரும்பாலன கோப்பெருஞ்சிங்க அரசனைப்பற்றியும், ஜடாவர்மன் சுந்தர பாண்டியனைப்பற்றியும் கூறுவனவாகும். மற்றும் சோழமன்னர்களாகிய ராஜேந்திரன் முதல், ராஜ ராஜன் IIIமுடிய உள்ள பலருடைய கல்வெட்டுகளும், விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுக்களும் நாயக்க மன்னர்களின் கல்வெட்டுக்களும் இருக்கின்றன.

இவைகளுள் பெரும்பாலனவற்றில் நந்தவனப் பணிகளே அறிவிக்கப்பட்டுள்ளன. மிகச் சில வற்றுள், பூசை வழிபாட்டுக்குரிய நிவந்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அறச்சாலைகளைப்பற்றியும், அக்கிரகாரங்கள் அமைப்பதைப்பற்றியும், திருப் பாவாடை போடுவதைப்பற்றியும் தெரிவிக்கின்றன சில கல்வெட்டுக்கள்.

விக்கிரமசோழனது காலம்வரையில் கோயிற் சார்பாக நடைபெற்ற சாசனங்களெல்லாம் திருப் புலியூர்ச் சண்டேசுவர தேவநாயனர் பெயராலேயே நடைபெற்றுவந்தன. இவன் காலத்துக்குப் பிறகு கோயில் கண்காணிப்புச்சபையின் பெயராலேயே நடைபெற்று வந்திருக்கின்றன.

அரசாங்கத்தலைமை அதிகாரிகளும், உள்நாயகத் தார்களும், சிகாரியஞ் செய்வார்களுமாகப் பலர் மேற்கூறிய சபையின் அங்கத்தினர்களாக இருந்து கோயிற்காரியங்களை மேற்பார்வை செய்து வந்துள் ளார்கள்.

சிதம்பரம் திருக்கோயிலைக் கண்காணித்தவர் களாக 1. தொண்டைமான் 2 திருவையாறுடை யான் 3.மதுராந்தகப்பிரமராயன் 4 தில்லையம்பலப் பேரரையன் 5. விழிஞத்தரையன் 6. ராசராசவிழுப் பரையன் 7. சித்தரையன் 8. வில்லவரையன், 9. அங்கராயன் 10. சிங்களராயன் 11. விஜயராயன் 12. மூவேந்தரையன் 13. வாணதரையன் 14. வயல் நாட்டரையன் 15. பொத்தப்பிச்சோழன் 16. கார ணைவிழுப்பரையன் 17 குருகுலராயன் 18. மழவ ராயன் 19. காடுவெட்டி 20. வயிராதிராயன் 21. விலாடராயன் 22. விக்ரமசோழப்பிரமராயன் 23. விளநாடுடையான் 24. நிகரில்சோழப்பல்லவரையன் 25. குலோத்துங்கசோழவாணகோவரையன் 26. எதிரில்சோழவேளான் 27. நரசிம்மவர்மன் 28. பாண்டியராயன் 29. மலையப்பிராயன் 30. வேணாடு டையான் என்பவர்கள் குறிக்கப்படுகிறார்கள்.

கிழக்கு, தெற்கு, மேற்குக் கோபுரங்களை முடி சூடிய மன்னர்கள் கட்டியதாகவும், வடக்குகோ புரத்தைக் கடவுள் தானே கட்டிக்கொண்டாரென் றும் S. I. I. 374-1913. கல்வெட்டுப்பாட்டொன்று



அறிவிக்கிறது. இவ் வடக்குக் கோபுரத்தைக் கிருஷ்ணதேவராயன் தொடங்கி நிலைமட்டம் வரை யிலோ, அல்லது அதற்கு மேலுமோ நிறுத்தியதாக வும், அச்சுததேவராயன் இதனை முற்றுப்பெறு வித்ததாகவும் கல்வெட்டுக்களில் யூகிக்க இடந்தருவ தால், கடவுள் தானே கட்டிக்கொண்டார் என்று கல்வெட்டு உபசாரமாகக் கூறுகிறது போலும். தெற்குக்கோபுரம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப் பட்டது. இவனுக்கு அழகிய சிங்கன் என்ற மற் றொரு பெயருமுண்டாதலால் இக்கோபுரம் சொக்க சீயம் என்று குறிக்கப்பட்டுளது. இதனைத் தெற்கில் சொக்கச்சீயன் திருநிலை யேழுகோபுரத்திருவாசல் திருப்பணிக்கு உடலாகத் தொண்டைநாட்டு ஆத் தூரில் நிலம்விட்டதாகவரும் ஆத்தூர் முக்தீசுர முடையார் கல்வெட்டும், கச்சிஏகம்பமுடையார் கல் வெட்டும் தெரிவிக்கின்றன. (S. I. I. Vol VIII 51.).

மேலைக் கோபுரத்தைத் திருப்பணி செய்த சிற்பிகள் விருத்தகிரிசேவகப் பெருமாளும் அவன் மகன் விச்வமித்துருவும், திருப்பிரைக்குடையாசாரி திருமருங்கனும், அவன் சகோதரன் காரணாசாரியும் ஆவார்கள்என S.I.I.17-1916கல்வெட்டுகாட்டுகிறது. இன்னும் அதிலேயே கீழ்ப்புறச் சுவரில் காமதேவன் அகத்தியன், சீதேவி, தேவந்திரன், கணேசன், துர்க்கை இவ்வுருவங்களும், வடபுறச்சுவரில் ருத்ர தேவர், ராகுகேதுக்கள், நாரதன், அளகேசன், சந்திரன், கிரியாசக்தி, சனி, வாயு இவ்வுருவங்களும்

மேல்புறச் சுவரில்; [1] க்ஷேத்ரபாலப் பிள்ளையார், கங்காதேவி, தன்வந்தரி, திரிபுரசுந்தரி, சுக்கிரன், வைஜயன், நாகன், யமுனை, பத்ரகாளி, ஆதி சண்டீசர் இவ்வுருவங்களும், தென்சுவரில் புதன், நிருதி, ஞானசக்தி, அக்னிதேவன் இவ்வுருவங்களும் இருப்பனவாக அறிவிக்கிறது.[2]

தேவாரம் பாடிய மூவர் முதலிகளாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருக்கும் தனித்தனியே ஆலயங்கள் இருந்தனவாகக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

வடக்குக் கோபுரத்தை யடுத்துத் திருத்தொண்டத்தொகையீச்சரம் என்ற ஒன்று குறிப்பிடப்படுகிறது. இதில், திருத்தொண்டத்தொகையில் பாராட்டப்பெற்ற தனி அடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பதின்மருமாக உள்ள பெருமக்களில்; தனியடியார்களுக்குத் தனித்தனித் திருவுருவம் அமைக்கப்பெற்றமை போலத் தொகையடியார்களாகிய கூட்டத்தினருக்குத் தனித்தனி உருவம் அமைக்கமுடியாமையின், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு இலிங்கத்திருமேனியாக எழுந்தருளச்செய்திருக்கிறது. முத்தியடைந்த பெருமக்களை உருவம் தெரிந்தால் உருவமமைத்தும், உரு

[1] இது தலவிநாயகராகிய கற்பகவிநாயகரைக் குறிப்பதாகும்.
[2] S. I. I. 1916 of 17, 48.

கிழக்குக் கோபுரத்தில்



(மகதி) நாரதர்

அமைக்க முடியாததற்குச் சிவலிங்கந் தாபித்தும், அதுவுமில்லையானால், பீடங்கள் அமைத்தும் வழி படலாம் என்று ஆகமங் கூறுகிறது. ஆதலால், உருவம் அமைக்க முடியாத தொகையடியார்களைச் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபடவேண்டித், திருத்தொண்டத்தொகை யீச்சரம் என்ற இக் கோயிலை அமைத்து உள்ளார்கள். அன்றியும், தொண்டத்தொகைபாடிய சுந்தரர் வடக்குவாயில் வழியாகவந்தாரென்பதும், ஊன்றிக் கருதத்தக்கது. இவ்வாலயம், நவலிங்கம் கோயில்என இப்பொழுது வழங்கப்படுகிறது.

மூர்த்திகளின் திருநாமங்கள் :

பொன்னம்பலக் கூத்தன், [1]பொன்னம்பல நாதன், [2]ஆனந்ததாண்டவப்பெருமாள் நாயனார், [3]அழகிய திருச்சிற்றம்பலமுடையார், [4]ஆளுடைய நாயனார், [5]சிதம்பரேசுவரர், தில்லைநாயகத் தம்பிரானார் முதலாகிய பலபெயர்களால் குறிக்கப்படுகிறார். திருச்சிற்றம்பலக்கோவையில் மாணிக்கக்கூத்தன் என்றும் இறைவன்பெயர் வழங்கப்படுகின்றது. அதற்குப் பேராசிரியர் மாணிக்கம்போலும் கூத்தினை உடையான்என்று உரைகண்டார். ஆனாலும், அது இரத்தினசபாபதியாகிய மரகத நடராஜரைக் குறிப்பது என்பது தெளிவு.

---

[1] A. R. 622-1888. [2] A. R. 352-13, [3] E. P. 1-1914. [4] S. I. I. 280-13. [5] S. I. I. 332-13.

அம்மை சிவகாமசுந்தரி என்றும், திருக்காமக் கோட்டமுடைய பெரியநாச்சியார் என்றும் வழங்கப் படுகிறார். சிவகாமசுந்தரி என்பது சிற்சபையில் இறைவன் இடப்பாகத்தில் எழுந்தருளி இருக்கும் அம்மையைக் குறிப்பதாகும். முக்குறுணி விநாயகர் முகக்கட்டணத்து விநாயகர் எனவும்,[1] குலோத்துங்க சோழ விநாயகர் எனவும் கல்வெட்டுக்களில் குறிப் பிடப்படுகின்றார். முகக்கட்டணம் என்பது முகப்பு. தில்லைக்குத் தெற்குக்கோபுரமே சிறந்தபெருவாயில். அவ்வழியாகவே நடராஜப்பெருமானை வழிபடச் செல்கின்றவர்கள் செல்வது முறையாம். நடராஜப் பெருமானின் திருமுன்பும் இதுவே. ஆதலால் முகப் பிலிருக்கும் பிள்ளையார் முகக்கட்டண விநாயகர் எனக் குறிப்பிடப்படுகிறார். முகக்கட்டணமென்பது முக்கணமாகி - முக்கணம் முக்குணியாகப், போலி இலக்கண அறிவு அதனைமுக்குறுணியாக்கிவிட்டது. அதன்மேல் உருவத்தின் பெருமையை யொட்டி, முக்குறுணி அரிசிக்கு ஒரே மோதகம்செய்து நிவே திக்கப் படுவதால் இப்பெயர் உண்டாயிற்றென்ற செவிவழிச் செய்தியும் கிளைத்துவிட்டது.

‘விக்கிரமசோழன் தெங்குத் திருவீதியில் வட பக்கத்துச்செங்கனிவாயான் திருநந்தவனத்து எழுந் தருளியிருக்கும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பண்டார உடலிட்டும்’ என்றகுறிப்பு காணப்பெறு

[1] S. I. I. 365-13.



வதால் விக்கிரமசோழன் திருவீதியில் திருஞான சம்பந்தருக்குத் தனியாகக் கோயில் இருந்தமை தெற்றெனப்புலப்படும். மேலைக்கோபுரத்தையடுத்து, திருநாவுக்கரசருக்குத் தனிமடமிருந்ததாகக்காட்டப் பெறுகிறது. முருகன், ‘சுப்பிரமணியப்பிள்ளையார்’ என்று ஒருகல்வெட்டில் குறிக்கப்பெறுகிறார்.

கற்பகவிநாயகர், ‘க்ஷேத்திரபாலப்பிள்ளையார்’ என்றும், ‘குலோத்துங்கசோழவிநாயகர்’ என்றும் குறிப்பிடப்படுகின்றார்.

தில்லைக்காளி, ‘தில்லைவனமுடைய பரமேசுவரி’ என்று குறிப்பிடப்படுகின்றார்.

**விழாக்கள் :**

தில்லையில் திருவானித் திருநாளும், மார்கழித் திருவாதிரைத் திருநாளும் சிறப்பாகக் கோப்பெருஞ் சிங்கன் காலத்து முன்பிருந்தே நடைபெற்றுவந்தன (Vol. IV. 223.). மாசிமாதத்தில் ஒரு திருவிழா நடந்ததாகத்தெரிகிறது. அதில் திருத்தொண்டத் தொகை விண்ணப்பம் செய்யப்பெற்று வந்தது. (Vol. IV. 223.). ஏனைச் சிவதலங்களில் அம்மைக்கு ஆடிப்பூரவிழா நடைபெற்றுவருவதுபோல, இங்கு ஐப்பசிப்பூரவிழா நடைபெற்றுவருகிறது (360-13.). மாசிமக நட்சத்திரத்தன்று நடைபெறும் கடலாட்டு விழாவும் குறிப்பிடப்படுகின்றது. ‘திருப்புதியது விழா’ என்று ஒன்று காணப்படுகின்றது. அதில்

அம்மைக்குப் புதிய ஆடை சாத்தியதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. திருப்புடவையீடுவிழா என்றும் அது வழங்கப்பெற்றுப் பின் திருப்புதியதுவிழா என்று வந்திருக்கலாமோ என்றுகருத இடமுண்டு (269-13). அன்றி, திருப்பாலிவளத்திருநாள் என்று ஒருவிழா குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஐப்பசிப்பூரத் திருநாளைக் குறிப்பதாகுமோ? என ஐயந்தருகிறது. இதில் அம்மை நீராடி, வெள்ளணி அணிந்து, பயறு முதலிய நவதானியங்களின் முளையைத் தன் மடியில் தரிக்கும் நாளாதலின் பாலிவளத்திருநாள் எனப்பட்டதுபோலும். (பாலி - நவதானியமுளை). (Vol. IV. 43.) வசந்தத்திருநாள் என்பது பெருமான் வசந்த உற்சவம் கொண்டாடக் குலோத்துங்கன் தோப்புக்கு எழுந்தருளியதாகத் தெரிகிறது (Vol. IV. 43.). திருக்கண்சாத்தும் திருநாளும், பெருமான் பரிவாரநாயன்மார்களுக்கு, திருவருள்நோக்கம்செய்யும் திருநாளாகும் என அக்கல்வெட்டே குறிப்பிடுகிறது.

இந்த ஒன்பது விழாக்களையுமன்றி ‘எதிரிலி சோழன் சிவபாதசேகரன் சித்தத்துணைப் பெருமாள்விழா’ என ஒன்று குறிப்பிடப்படுகின்றது. சிவபாதசேகரன் என்பது முதல் ராஜராஜனுக்கு வழங்கியபெயர். எதிரிலி என்பது முதற்குலோத்துங்கனுக்கு வழங்கியபெயர். ஆகவே தன்னாட்களில் தன் குலமுதல்வனாகிய இராஜராஜன் வரையில் இருந்த சோழமன்னர்கட்குச் சித்தத்துணையாகவே

தெற்குக் கோபுரத்தில்



சந்திர சேகரர்

இருந்துவந்த நடராஜப்பெருமானுக்கு நடந்த பெருவிழாக்களையே இது குறிப்பிட்டதாகுமென ஊகிக்கலாம். இதுவன்றித் தைப்பூசத்தில் பாவாடையிட்டுப் பெரியபூசவிழா ஒன்று நடத்தியதாகவும் தெரிகிறது. இத்தகைய திருவிழாக்கள் கல்வெட்டுகளிலிருந்து அறியவருகிறது என்பது சிந்திக்கத்தக்கதொன்று.

## திருமுறைப்பாராயணமும், மூவர்முதலிகளும்:

கீழக்கோபுரத்தின் வாயிலின் வலப்பக்கத்தில் காணப்பெறும் கல்வெட்டு, சோழகுலவல்லியால் நாயன்மார்களுடைய பாமாலையைப் பாராயணம் செய்வதற்காக நிபந்தம் விட்டதை அறிவிக்கிறது. (343-1913.). முதலாம் இராஜேந்திரன் காலத்தில் மாசித் திருவிழாவில் அழகியதிருச்சிற்றம்பலமுடைய நாயனார் சந்நிதியில் திருத்தொண்டத்தொகை பாராயணம் செய்வாருக்கு நிலம்விட்டதாக உள்ளது (Vol. IV. 223.). சம்பந்தர் முதலிய மூவருக்கும், தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய கோபுரங்களைச்சார இராஜாக்கள் தம்பிரான் திருமாளிகைத் திருவீதியில் தனித்தனியே திருக்கோயில்கள் இருந்ததாகவும், அவற்றுள் சம்பந்தப்பிள்ளையார் திருக்கோயில் பொன்வேயப்பெற்றிருந்ததாகவும் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இதனால் திருமுறைகளுக்கும், திருமுறைகளைப்பாடியருளிய சமயாசாரியர்களுக்கும் எவ்வளவு சிறப்பு சிதம்பரத்திலிருந்தது என்பதை ஊன்றிநோக்கவேண்டும்.

**அரசர்கட்குள்ள தில்லைப்பற்று :**

அப்பூதியடிகள் நாவுக்கரசர்மீதிருந்தபற்றினை நிலம்புலம் எல்லாவற்றிற்கும் அவர்பெயரிட்டு வழங்கியதுபோல, அரசர்கள் ஆனந்தக்கூத்தர் மீதிருந்த பற்றால், குடிகளுக்கல்லுக்கும், மரக்காலுக்கும் ஆடவல்லான் என்று பெயரிட்டுவந்தனர். சிற்றூர்களுக்குத் தில்லைவிடங்கன், கூத்தனூர், கோயிற்பூண்டி, சபாநாயகபுரம், தில்லைநாயகபுரம், நடராஜபுரம் என்றும், ஓடை நீர்நிலை முதலியவற்றிற்குக் கூத்தாடுநாயகன் திருவோடை, ஆளுடையநாயகன் திருவோடை என்றும் பெயரிட்டிருந்தனர். தம்மிடம் அரசகாரியம்பார்ப்பாருக்குத் தில்லையம்பலப்பல்லவராயன், திருச்சிற்றம்பலமுடையான்நக்கன், திருச்சிற்றம்பலமுடையான், தில்லையம்பலப்பேரரையன் என்றும் பெயர்வைத்திருந்தமை அரசர்கட்கு உள்ள அன்பின் முதிர்ச்சியை எடுத்துக்காட்டும் தக்க சான்றுகளாம்.

## பல்லவர்கள்

**இரணியவர்மன் :**

இவனது இயற்பெயர் சிம்மவர்மன் என்றும், கௌடதேசத்தரசன் என்றும், இவன் உடலில் நோயிருந்தது என்றும், சிவகங்கையில் மூழ்கியதால் அது நீங்கிப் பொன்னிறமாயிற்றென்றும், அதனால்



இரணியவர்மன் எனப் பெயருண்டாயிற்றென்றும் கோயிற்புராணம் கூறுகிறது. பல்லவர் வம்சத்தில் சிம்மவர்மன் என்ற பெயருடையவர்கள் மூவர் காணப்படுகின்றனர். புலிக்கால்முனிவர், சிம்மவர்மனாகிய இரணியவர்மனைக்கொண்டு, தில்லைத் திருப்பணி செய்வித்தார் என்று கோயிற்புராணம் கூறுகிறது. அப்பர்காலத்திலேயே சிதம்பரம் மிகச்சீரிய நிலையில் இருந்தது. ஆதலால் தில்லைக்கோயிலைக் கண்ட சிம்மவர்மன் அப்பர்காலத்துக்கு முந்தியவனாதல் வேண்டும். ஆதலால் கி. பி. 436-458வரையில் அரசாண்ட சிம்மவர்மனே இவன் என்றும், இவனாலேயே சிற்றம்பலம்பொன்வேயப்பெற்றது என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். கொற்றவன்குடிப் பட்டயம் இரணியவர்மன் அரசனாயிருந்தான் என்று தெரிவிக்கிறது. தண்டந்தோட்டப் பட்டயம் "அரசன்" என்பதை விளக்கமாகக் கூறவில்லை. பல்லவர்வழிகூறும் பட்டயங்களும் இவன்பெயர் கூறவில்லை. கூறப் பெறாமைக்குக் காரணம் இவன் சிதம்பரத்தில் அரசேற்று வாழ்ந்தமையாம். அல்லாமலும் இவனுடையதந்தை மூத்தகுமாரனை சிங்கவர்மன் உடற்பிணியின்றித் தில்லை இராச்சியத்தை நடத்துவதைக் கேள்வியுற்றதும், இவனையே தனது அரசியலுக்கும் ஏற்படுத்த எண்ணினான் என்றும், தனதுகுருமூலமாக அழைப்பிக்க ஏற்பாடு செய்தான் என்றும் கோயிற்புராணம் கூறுகிறது. ஆதலால், இவன் அங்குச்சென்று அரசேற்றிருக்கலாம். ஆதலால் இவன் முதலாம் சிம்மவர்மனே

என்று துணியக்கூடும். இவனை முதல் மகேந்திர வர்மன் எனக் காஞ்சிக் கல்வெட்டுக் கூறுவதாக C. S. சீனிவாசாரியார் அவர்கள் கூறுவார்கள்.

கோப்பெருஞ்சிங்கன் :

இவன் சடாவர்மன் சுந்தரபாண்டியனேடும், மூன்றும் ராஜராஜனேடும் சண்டையிட்டிருக்கிறன். மூன்றும் இராஜராஜனேடு இவன் மாறுபட்டான் என்றும், சேந்தமங்கலத்தில் இவனை வென்றன் என்றும், திருவஹீந்திரபுரத்துத் தேவநாயகப்பெரு மாள் கோயில் மேலைப்பிராகாரத்தில் உள்ள கல் வெட்டு தெரிவிக்கிறது. மேலும், "கோப்பெருஞ் சிங்கனிருந்த எள்ளேரியும், கல்லியூர் மூலையும், அழித்துச்சேந்தமங்கலத்திலேஎடுத்துவிடப்போகிற அளவிலே கோப்பெருஞ்சிங்கன் குலைந்து, 'சோழச் சக்கரவர்த்தி எழுந்தருளக் கடவதாக' என விண் ணப்பஞ் செய்தான்"[1] என்றுவரும் பகுதி இதனை நன்குவிளக்குவனவாம். இவன் அவனியாளப் பிறந் தான் கோப்பெருஞ்சிங்கன் என்று குறிப்பிடப் படுகிறன்.

இவன் சடாவர்மன், சுந்தரபாண்டியனலும் வெல்லப்பட்டவன். இதனை "காடவர்கோன் எண் பட்டசேனை எதிர்பட்டொழுக..........படைதொட்ட சுந்தரமீனவனே" என்றபாடல் நன்கு விளக்கும்[2]

[1] E. P. IND. Vol. P. 167-8. [2] S. I. I. Vol. IV. 618.



அக்கினிதேவன்

—பக்கம் 136

இவனுடைய ஆட்சி இரண்டாவது ஆண்டில் இடப மாதத்தில் நிலவிற்பனை விஷயமான குறிப்புகாணப் படுகின்றது. இன்னும் மூன்றாவதாண்டில் சித்திரை மாதம் 3, 4, 20, 25 தேதிகளில் நிலம்விற்றவிவரங்கள் அறிவிக்கப்படுகின்றன. (கல்வெட்டு எண். 707 to 711. 713 to 715.)

மற்றும் மூன்றாவது ஆண்டு எண்பத்தோராவது நாள் ஆளியார்திருத்தோப்பு என்ற ஒன்றைத் தேவதானமாகக் கொடுத்துப், பலா வாழைப்பழங்களைத் திருமடைப்பள்ளித் திருப்பண்டாரத்திற்குச் செலுத்தஏற்பாடுசெய்திருக்கிறான். (Vol VIII 5318) தன்னுடைய பெயராலேயே கமுகந் திருநந்தவனத்தை யமைத்து அதற்குச் ‘சொக்கச்சீயன் கமுகு நந்தவனம்’ என்று பெயர்சூட்டியிருக்கிறான். திருச்சிற்றம்பல நாயனார் கோயிலுக்கும், திருக்காமக் கோட்டமுடையார் கோயிலுக்கும் பாலமுது செய்தருளக், குலோத்துங்க சோழன் திருக்கோசாலையிலுள்ள இடையர்களுக்குக் கொத்துக்காக (உணவு) நிலமளித்திருக்கிறான். அன்றியும், கோசாலையில்பசுக்கள் குறைந்துவிட 1496பசுக்களை வாங்கிவிட்டிருக்கிறான் (S. I. I. Vol. VIII.) மிகச் சிறப்பான குறிப்பு - குலோத்துங்கசோழத் திருமாளிகைப்புறக் கல்வெட்டில் இராஜகேசரி யென்னும் உழக்கால் பால் கலனே அறு நாழிகை யுரி, வேளை தோறும் அளக்கவேண்டுமென்று காட்டியிருப்பது.

இவனுடைய ஆட்சியாண்டு ஐந்தாவதில் சொக்
கச்சியன் திருநிலை எழுகோபுரத் திருவாசல் திருப்
பணிக்காகத் தொண்டைநாட்டு ஆத்தூரில், நிலம்
விட்டிருக்கிறான். இதேபொருளைப்பற்றி ஆத்தூரில்
மூத்தீச்சரமுடையார் கோயிலிலும், கச்சி ஏகம்ப
முடையார்கோயிலிலும்குறிப்பிட்டிருக்கிறான். மேற்
படி ஆண்டு 50வது நாள் செங்கழுநீரோடைக்காக,
பெருமாள்திருவோடை என்றபெயரால் நிலத்தை
அளிப்பித்திருக்கிறான்.

ஐந்தாம்ஆண்டு 33ம்நாளில், திருவண்ணமலைக்
கோளகி இராவாளர் ஸ்ரீகயிலாயதேவர் நிலம்வாங்கி
நந்தவனம் வைத்ததாகவும், பொன்னம்பலக்
கூத்தன் தொலையாத செல்வன் என்பான் இவன்
பொருட்டு நிலம்வாங்கி நந்தவனம் அமைத்ததாக
வும் தெரிகிறது. (S. I. I. 11, 12 1936.) சிறப்பாகத்
திருப்பாவாடைபோடுவதற்கு நிலமளித்தசெய்தியை
47 எண்ணுள்ள கல்வெட்டு அறிவிக்கிறது.

ஆட்சி ஏழாம்ஆண்டில் திருமூலட்டானருக்கும்,
தட்சிணாமூர்த்திக்கும் சந்திபூசை நடப்பதற்கு நிலம்
விட்டான். (304-13.) இவனது எட்டாம் ஆண்டில்
கற்கடகஞாயிற்றுப் பத்தாந்தேதி விக்ரமசோழன்
செவ்வையாய்த் தெங்குவைத்த திருவீதிக்குத் தெற்
கில் எழுந்தருளிப் பூசைகொண்டருளுகிற நாயனார்
வாரணவாசிமாதேவர் கோயில் தானத்தார் நிலம்
விற்றுக்கொடுத்த செய்தியை அறிவிப்பது.



மேற்படி ஆண்டில், திருவம்பலமுடைய நாயனாருக்கும், திருக்காமக்கோட்டமுடையபெரியநாச்சியாருக்குமாகச் செங்கழுநீர்மாலையளிக்கக் கூத்தாடும் நாயகன் திருவோடை, நாற்பத்தெண்ணாயிரவர் மடப்புறத்துத் திருவோடை, கண்ணுடைச்சியர் திருவோடை, தாய்க்கோரம்போகாதான் திருவோடை, சோழர்கோன் திருவோடை, செங்கனிவாயான் திருவோடை, ஆளுடையதனிநாயகன் என்னும் சிவநாமத்தான்செய்த திருவோடை என்னும் ஓடைகள் அளித்திருக்கிறான். அவற்றுள்தாய்க்கோரம்போகாதான் திருவோடை இரண்டுவேலிபரப்புள்ளதென்று குறிப்பிடப்படுகிறது. சேக்கிழான் வயிராதராயன் என்பான், திருத்தொண்டர்புராணம் பாடிய சேக்கிழார் திருநாமத்தால், திருத்தொண்டர்சீர் பரவுவார் திருநந்தவனமும், பொன்வேய்ந்தபெருமாள் திருநந்தவனமும், மகநதிகாரத் திருநந்தவனமும் அமைத்து மலர்ப்பணிசெய்வித்தான். இதற்காகப் பல கிராமங்கள் இவனால் அளிக்கப்பெற்றன. இந்த தேவதானத்தைத் தில்லைக்கோயில் கண்காணிப்பாளர்களாகிய தென்னவன்பிரமராயன், ஜயதுங்கப் பல்லவராயன், தில்லையம்பலப் பல்லவராயன், கோயில் ஸ்ரீமாஹேஸ்வரர்கள் கண்காணியம் செய்வார்கள், ஸ்ரீகாரியஞ் செய்வோர், சாமுதாயம் செய்வோர், கோயில்நாயகஞ் செய்வோர், திருமாளிகைக் கூறுசெய்வோர், கணக்கர், இந்த ஒன்பதின்மரையும் கண்டு விடுத்தான். (S. I. I. 48. Vol. 8.) நெசவாளர்களுக்குப், பரிசட்டம் (பரிவட்டம்) வழங்குவதற்காக வீடும், நிலமும் வழங்கப்பெற்றது (308-13)

ஒன்பதாம் ஆண்டில் நந்தவனப் பராமரிப்புக்கும், காவலர் உணவுக்குமாக நிலமளித்த செய்தி அறிவிக்கப்படுகிறது (318-13.)

பத்தாவது ஆண்டில் விக்ரமசோழத்தெங்குத் திருவீதிக்குத் தெற்கேயுள்ள திருச்சிற்றம்பல மாகாளிக்கு நிலம் விட்டான் (312—13). [1] அண்டாபரணர் கோயிலுக்கு நந்தவனமும் பராமரிப்புக்கு நிலமும் விட்டான் (326—13). சுந்தரபாண்டியன் திருநிலை எழுகோபுரச் சந்நிதியில் சொக்கச்சீயன் குறட்டில் கீழ்ப்பக்கத்துக் கீழைமடச்சந்தானமாகத் திருநோக்கழகியான் திருமடம் செய்வித்து, அதில் நாயனார் பொற்குடைக்கீழ் எழுந்தருளும் போது அத்யயனம்பண்ணிச் சேவிக்க நிவந்தம் ஏற்படுத்தினான். (624 Vol. VII.)

பதினோராவதாண்டில் செயங்கொண்டசோழநல்லூரென்கிற எருக்காட்டூர்க்கோயில் கிராமத்தில் தைப்பூசப்பாவாடைக்கு நிலமளித்தான் (106—35). திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியாருக்குப் பாவாடை அணிவிக்க வேறுசெல்வமகளிரிருவரால் நிலமளிக்கப்பட்டது (107—35). இக்காலத்திலேயே அகளங்கன் மண்டபமும், நந்தவனமும் இவனால் அமைக்கப்பட்டன. (108, 109-35) திருக்களாஞ்சேரி பீமேசுரமுடைய மகாதேவருக்கு நித்யபூசைக்காக நிலம் விட்டான். (261—13) திருச்சிற்றம்பலமுடைய

1 முருகன் பணியாளர்.

கிழக்குக்கோபுரத்தில்



கல்யாணசுந்தரர்

மாகாளியாருக்குப் பூசைசெய்யும் நம்பியார் பூசைப் பேற்றிற்கும், மைச்சருவுக்கும், இளமுளைத்தாழைக்குமாக நிலம் விட்டான் என்றும், அதற்கு எல்லை திருவாமூராளி 'திருவதிகைமடப்புரத்திற்கு மேற்கு' என்றும் எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் விக்ரமசோழன் தெங்குத்திருவீதியின் வடப்பக்கத்து செங்கணிவாயான் திருநந்தனவனத்துள் எழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பண்டார உடவிட்டும், இப்பிள்ளையார்கோயில் திருமாளிகைக்குள் நிற்கும் தெங்குகள் விற்ற காசும், பிற காசுங்கொண்டு வாங்கிவிட்ட நிலம் நாலு மா என்று எழுதப்பெற்றுளது. இதனால் தில்லைமாகாளி கோயில் பூல.சசெய்தவர்கள் பலையாளசாத்தேய ஆகம பூசைக்காரர்களாக இருந்தார்கள் என்றோ? அல்லது காளிபூசைசெய்வார்க்கு நம்பியார் என்ற பெயர் இருந்ததாகவோ அறியப்படும். மைச்சரு என்பது நிணங்கலந்தசோறு. மை-ஆடு; சரு-அன்னம். இளமுளைத்தாழை என்பது காளி முதலிய தெய்வங்கட்குப் பலியிடும்போது இளந் தென்னம் பாளைகளைக்கீறிப் பள்ளையம் இடுவது இப்போதும் வழககம். (தாழை-தென்னை) இதில் தெங்குவிற்ற காசால் நிலம்வாங்கியசெய்தி மிகச் சிக்கனமான ஆட்சிமுறையைத் தெரிவிப்பதாகும். (714, Vol. 4.)

பன்னிரண்டாம் ஆண்டில் திருக்கோயிலுக்கு நந்தவனம் அமைத்து, நந்தவனச்சுற்றைத் தோட்டக்காரர்களுக்குமான்யமாக அளித்து பூத்தொண்டு இடையறாதுசெய்ய ஏற்பாடுசெய்தான்.

பதினாறாம் ஆண்டு 28ம்நாள் செங்கனிவாயான் திருநந்தனவனத்திற்குப், பிரதிக்ஷேத்திரமாக (பரிவர்த்தனையாக) வீரப்பெருமாள்மங்கலம் என்னும் சிற்றூரையும், நந்தவன ஏவலாளிகளின் கொத்துக்காகத் திருச்சிற்றம்பலமங்கலம்என்னுங்கிராமத்தையும் அளித்தான் (56. Vol. 8.). அதே ஆண்டு 26ம் நாளில் சொக்கச்சீயன் கமுக நந்தவனப்புறமாக நிலமளித்தான் (55. Vol. 8.).

ஆட்சி 19ம் ஆண்டில் இவனால் தோப்பும், இவனுக்கு நலமுண்டாகும்படியாக இவனுடையதண்டத்தலைவனாகிய பெருமாள்பிள்ளை என்பவனால் நிலங்களும் விடப்பெற்றன. (319, 321-13.) அதேயாண்டில் நரசநாய்க்கன் பிரதிநிதியாகிய திருமலைக்கொழுந்தர் என்பவரால், பிட்டமுது நிவேதனத்திற்கு நிலம்ஒதுக்கப்பட்டது. (322-13.) திருச்சிற்றம்பலமுடையான் திருநந்தனவனத்திற்கு, ஆட்களின் ஜீவனமாக நிலமளிக்கப்பெற்றது.

முப்பத்துநான்காமாண்டில் திருப்பள்ளியறை நாச்சியாராகிய அவனியாளப்பிறந்த நாச்சியாருக்குத் திருப்பாவாடைப் புறமாக நிலம் அளித்தான். அதேயாண்டில் தில்லைத்திருவிழாவில் வேலைசெய்தவர்களுக்குபத்துவேலி நிலத்தீர்வையைத்தள்ளுபடி செய்தான். (104-35.).

முப்பத்தாறாவது ஆண்டில், கூத்தப்பெருமான் திருத்தேர்க்கு எழுந்தருளும்போதும், திருவசந்தத்



திருநாளில் குலோத்துங்கசோழன் தோப்புக்கெழுந்தருளும்போதும் சிவபாதசேகரன் சித்தத்துணைப் பெருமாள்உற்சவத்தில், எதிரிலிசோழன் திருநந்தனவனத்திற்குளெழுந்தருளும்போதும், திருப்பாலிவளத் திருநாளுக்கு எழுந்தருளும்போதும் (முளையீடுவிழா) சொஸ்திவாசகம் சொல்பவர்களுக்கு, முற்றூட்டாக தில்லைநாயகர் சதுர்வேதிமங்கலம் என்னும் அக்கிரகாரத்தைக்கொண்டு தில்லைமூவாயிரவளாகம் என்னும்பெயரால் கொடுத்தான். அம்பலநாயகப்பெருந்தெருவில் திருநாவுக்கரசு நாயனார் பெருமடங் கட்டி வைத்தான் (43. Vol. 8.) திருநிலை அழகியாள் நந்தவனம், நந்தவனப்புறம், ஓடைப்புறம், கரும்பீடு வளாகம், மஞ்சட்காப்புக் கொல்லை, இவைகளை அளித்து, விக்ரமசோழன் திருமாளிகையில் கல்வெட்டுவித்தான்.

## பாண்டியர்கள்

### *மாறவர்மன் சுந்தரபாண்டியன்* —1216-1238.

இவன் சடையவர்மன் குலசேகரபாண்டியனுடைய தம்பியாவன். 1216ல்முடிசூடியவன். 1219ல் சோழநாட்டின்மீதுபடையெடுத்துவந்தான். வெற்றி கொண்டான். தில்லைக்குச்சென்று பொன்னம்பலவாணன் பொற்கழல்கண்டு வணங்கினான். இதனை,

> "தெய்வப் புலியூர்த் திருவெல்லையிற் புக்கு
> பொன்னம் பலம்பொலிய யாடுவார் பூவையுடன்
> மன்னுங் திருமேனி கண்டுமனங் களித்து"

என்ற இவனது மெய்க்கீர்த்திப்பகுதி விளக்கும். இவன் இராஜராஜன் வேண்டுகோட்படி சோழ நாட்டை மீண்டும் அவனுக்குக் கொடுத்தான். S.I.I. Vol. IV. P. 108, 109.

## சடையவர்மன்சுந்தரபாண்டியன் கி.பி.1251-1268

இவன் அரியணையேறியதும், சேரநாடு சோழ நாடு தெலுங்கநாடு இவற்றையெல்லாம் வென்றான். 3ம் இராஜேந்திரசோழனைக் கப்பங்கட்டும்படியாக அடக்கிவைத்தான். தில்லையம்பலத்திற்குச்சென்று நடராஜப்பெருமானை வணங்கி, கோயிலைப் பொன் வேய்ந்தான். சுமார் 30 கல்வெட்டுக்கள் இவனைப் பற்றியனவாக இக்கோயிலில் உள்ளன. இவனது ஆட்சி ஆறுவது ஆண்டின் கல்வெட்டொன்று மேற்குப்பிராகாரத்துச் சிறுகோயில் அடிப்புறத்து காணப்படுகிறது. அதில் நில அளவுமுறை விளக்கப் பெற்றுள்ளது. ஏழாவது ஆண்டு 252வது நாள் கல்வெட்டு நந்தவனப்பாதுகாப்பாளருக்காக அளிக்கப்பெற்ற நிலம், கடலெக்கர்மூட அதற்காக வேறு நிலம் மாற்றிக்கொடுத்த விபரத்தை அறிவிக்கிறது.

எட்டாம் ஆண்டில், திருச்சிற்றம்பல மாகாளி கோயிலுக்கு விழாவும், பூசையும் நடைபெறத் திருநாமத்துக்காணி விட்டசெய்தியை விளக்குகிறது. இவனது ஒன்பதாவதாண்டுக் கல்வெட்டு தில்லைத் திருக்கோயில்கோயிற்பொதுவார்கள் கணக்குவைத்திருந்த முறையில் குறைகள்சில காணப்பெற்றதால்

மேலைக்கோபுரத்தில்:



சூரியன்

மேற்பார்வைசெய்து, தணிக்கையிட்டதாக அறிவிக்கிறது. பதின்மூன்ருமாண்டில் நந்தவனத்துக்கு நிலம்விட்டசெய்தியும், பதினன்காம் ஆண்டில் வழிபாட்டிற்கு வேண்டும் நிபந்தங்கள் அளித்த செய்தியும் அறிவிக்கப்பெற்றுள்ளன. கடலாட்டுவிழாவிற்குப்பெருமான் எழுந்தருளும்போது உபயத்திற்குதவும்படி, கோலம் என்னுமூரை அளித்ததையும் மற்றும் அக்கன்பள்ளிப்படையில் நந்தவனம் அமைத்ததையும் 275-13. இக்கல்வெட்டு அறிவிக்கிறது. ஆண்டுகுறிக்கப்படாதநிலையில் பல கல்வெட்டுக்கள் உள. 354-13ல் வேணுட்டரசரையும், தெலுங்கநாட்டரசரையும், கொங்க நாட்டரசரையும் வென்ற குறிப்பு அறிவிக்கப்பெற்றுளது.

இவன் துலாபாரம் புக்கசெய்தி இரண்டு கல்வெட்டுக்களால் குறிக்கப்படுகிறது. அத்துலாபாரப் பொன்னைக்கொண்டே கோயிலைப் பொன்வேய்ந்தான். இதனுலேயே இவனுக்குக், 'கோயில் பொன் வேய்ந்த பெருமாள்' என்றபெயர்வழங்குவதாயிற்று இவனது பதினேராவதாண்டில் நந்தவனத்திற்குரிய வரிக்கழிவு செய்யப்பட்டது. (293-13.) தனக்கும் காடவர்கோனுகிய கோப்பெருஞ்சிங்கனுக்கும், 3ம் இராசேந்திரசோழனுக்கும்நடந்த போரைப்பற்றிய நான்குபாடல்கள் காணப்படுகின்றன. (332-13.) சுந்தரபாண்டியன் திருத்தோப்பு, சுந்தரபாண்டியன் தெற்குத்திருவீதி இவற்றின் பராமரிப்புக்காகவும், பலருக்குச் சீவித ஏற்பாடுகளுக்காவும் நிலம்

அளித்திருக்கிறான். (S.I.I. 546-18.) திருமூலட்டானமுடையாருக்கு ஸ்ரீருத்ரம் அத்யயனம்பண்ண நிலம் அளித்திருந்தான். (A. R.Vol. VI 631) இவனுக்குப் ,புவனேகவீரன்', 'எல்லாந் தலையான பெருமாள்' என்ற பட்டப்பெயர்களும் உள்ளனவாம்.

### மாறவர்மன் வீரபாண்டியன் —1253-1281

"மாறவர்மன் வீரபாண்டியன் என்பவன் ஒரு சிறந்தவீரன். இவன் திரிபுவனசக்ரவர்த்தி என்று அழைக்கப்பெறுகிறான். இவன் கேரள அரசன். ரவிவர்மன் குலசேகரனொடு பொருது, வென்றவன்', என்று கிருஷ்ணசாஸ்திரிகள் கருதுகிறார். (A. R. 269-13, 295-13.) இவன் நூற்றுக்கால் மண்டபத்திற்குத் தன்பெயர் சூட்டிக்கொள்ள முயன்றிருக்கிறான் என்பது, அங்குள்ள மூன்றுதூணில் 'விக்ரம சோழன் திருமண்டபம்' என்றும், அம்மண்டபத்தின் தெற்குவாயில் முகப்புத்தூண்களில் 'வீரபாண்டியன் திருமண்டபம்' என்றும் பொறிக்கப்பெற்று உள்ளதால் விளங்கும். இவன் எருக்காட்டஞ்சேரியில் அழகியதிருச்சிற்றம்பலமுடையார் நந்தவனத்திற்காக மூன்றுவேலிநிலம் அளித்தான். (A.R.5-36)

அம்மை திருப்புதியது திருநாளுக்கு 4 புடவையும் ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஆண்டொன்றுக்கு 5 சிறுதுண்டும் அளிக்கவேண்டுமென்று கட்டளையிட்டு, சோழியசாதியர்களுக்குவீடும்நிலமுமளித்திருக்கின்றான். (A.R. 269-13.) கூத்தப்பிரானுக்குக்



கொற்றங்குடியில் நிலம்விட்டான். இதனைக்குலோத்துங்கசோழன் திருமாளிகையில் கல் வெட்டிக் கொள்ளவும் உத்தரவு பிறப்பித்தான். இவன் ஆட்சி ஒன்பதாம்ஆண்டில் அழகியதிருச்சிற்றம்பலமுடையாருக்குச் செந்தாமரைப்பூ சாத்த ஓடை ஒன்றும், நந்தவனமும், தண்ணீர்ப்பந்தலும் ஏற்படுத்தி, அதில் வேலைசெய்வதற்காக 18 பேர்களை நியமித்து அவர்கள் உணவுக்காகவும் தர்மபாதுகாப்பிற்காகவும் நிலங்களையளித்தான். அதனைச் சேதிராயன் உத்தரவுப்படி வில்லவதரையன் கல்வெட்டிக்கொள்ளும்படி உத்தரவிடப்பெற்றது.

### மாறவர்மன் விக்கிரமபாண்டியன் —கி. பி. 1269-1296

இவன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் மகன். மூன்றாங் குலோத்துங்கனுடைய உதவியைப் பெற்று, அரசையேற்றவன். இவன் ஆட்சி ஐந்தாம் ஆண்டு 27ம் நாள் தில்லைச் சிற்றம்பலமுடைய பெரிய நாயனார்க்கு இராஜ கல்யாண அந்தியின் போது, மாலைகள் கொடுக்க, காங்கேயராயன் நிலம் அளித்தான். அரசனுக்குப் பிறகு அது 'இராஜ கல்யாணன் பெரியதிருநாள்' என்று வழங்குவதாயிற்று. ஆறாம் ஆண்டில், கோயிலுக்கு வாழைப் பழம் கொடுக்கவும், நிபந்தம் அளித்திருக்கிறான். மற்றும், இவனுடைய ஆட்சியில் 355ம் நாளில் அரசியாகிய உலகமுழுதுடையாள் பேரால் நந்தவனம்

அமைப்பதற்காக, பள்ளிப்படை என்கின்ற விக்ரம சோழ நல்லூரிலும், எருக்காட்டஞ்சேரி என்கிற ஜெயங்கொண்டசோழநல்லூரிலும், மணலூர் என்கிற ஜெயங்கொண்ட சோழநல்லூரிலும் நிலம் அளிக்க, கோயில்தானத்தாராகிய வேங்கடராயன் என்பவனுக்கு உத்தரவிட்டிருக்கிறான். 276-13.

இவ்வாறே இவனது ஆட்சி நான்காவது ஆண்டு பதினெட்டாவது நாள், குலசேகரன் சோளகன் என்பவனைக் கொண்டு இராஜாக்கள் தம்பிரான் திருமாளிகைக்குக் கிழக்கிலும், எழுநிலைக்கோபுரத்திற்குத் தெற்கிலும் உள்ள யானையேற்றுக் கூடத்தில், 54 யாத்திரைவாசிகளுக்கும், 32 வேதப்பிராமணர்களுக்கும், 54 ஸ்ரீ காளியைத் தொழுவார்கட்கும், கடைசியாகக் கோயில்கண்காணிப்பாளருக்குமாக நிலங்கள் அளித்திருக்கிறான் S. I. I. 295-13. அடுத்த மூன்று கல்வெட்டுக்கள் இவன் புவனகிரியில் நடத்திய போரைப்பற்றிப் பாராட்டுகின்றன A. R. 336, 337, 353-13.

**மாறவர்மன் குலசேகரன்** —கி. பி. 1268-1311.

இவன், திறம்பட கொல்லத்தையும் சோழ நாட்டையும், இலங்கையையும் வென்றவன். கொல்லங்கொண்டான்' முதலிய பட்டங்கள் கொண்டு இவன் தனது இருபத் தெட்டாவது ஆண்டில் ஐயனங்காரன் திருநந்தனவனம் என்று ஒன்றமைத்தான். இவனுடைய ஐந்தாம் ஆண்டு 353ம் நாளில், பெரும்

மேலைக்கோபுரத்தில்:



இடபாருடர்

பற்றப் புலியூரில், ஒருதிருவீதியில் உள்ள கடவுளுக்குப் பூசை நைவேத்தியத்திற்காக நிலம் விட்டுச் சேதிராயனைக் கொண்டு கல்வெட்டுவிக்கச் செய்தான் S.I.I. 286-913

இவனுடைய இருபத்தொன்பதாவது ஆண்டில், தன் அரசியல் தலைவனாகிய காளிங்கராயனைக் கொண்டு இராசாக்கள் தம்பிரான் திருமாளிகையில் உள்ள எழுநிலைக்கோபுரத்தின் தென்பக்கத்தில் உள்ள குலோத்துங்கசோழ விநாயகப் பிள்ளையாருக்கு எல்லாந் தலையான பெருமாள்சந்தி என்ற பூசாகாலமுறை ஏற்படுத்தினான். எல்லாந் தலையான பெருமாள் என்பது, முதலாம் சடாவர்மன்சுந்தர பாண்டியனைக் குறிப்பதாகும் 1251-64.

## சோழமன்னர்கள்

தில்லைக் கூத்தப்பெருமான் சோழர்களுக்குக் குலதெய்வமாக விளங்கினான் என்று ஒட்டக்கூத்தர் இராசராசன் உலாவில் "தொல்லைத் திருமரபுக் கெல்லாந் தொழுகுலமாம் தில்லைத் திருக்குலமும் சேவித்து" என்று கூறுகிறார். சோழர்களில், பராந்தகன் I காலத்தாலும் பணியாலும் முற்பட்டவன்.

**பராந்தகன் I** —கி. பி. 907-947.

907-ல் முடிசூட்டப்பெற்ற மன்னன் பராந்தகன் I. இவன் ஆதித்தச் சோழன் மகன். இவ

னுக்கு வீரநாராயண சோழன் என்றும் பெயர் உண்டு. இவன் பாண்டிய நாட்டை வென்றவன். மதுரை கொண்ட கோப்பரகேசரி யென்றே குறிக்கப்படுபவன். இலங்கையையும் வென்றவன். அதனால் சங்கிராமராகவன் எனச் சிறப்பிக்கப் பட்டான். இங்ஙனம் இவன் கண்ட வெற்றிகள் குலதெய்வமாகிய தில்லை நடராசருக்குத் திருப்பணி செய்யத் தூண்டின. அதனால் திருச்சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்தான். அதுவும், கொங்கிற் பொன் கொண்டு வேய்ந்தான் என்பர் உலகநாத பிள்ளை. இவன் மகனான கண்டராதித்த தேவர். (கி. பி. 949-957) தம்திருவிசைப்பாவில் தந்தையின் வெற்றியை யும், பணியையும் கூறியுள்ளார்.

"வெங்கோல் வேந்தன் தென்னன் நாடும் ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லை அம்பலத்துள்
எங்கோன் ஈசன் எம்மிறையை என்றுகொல் எய்துவதே".

**பராந்தகன் II**

—957-970.

பரந்தகன் II.இவன் அரிஞ்சயன் மகன். 954ல் பட்டம் ஏற்றான். இவன் ஆட்சி மிக நேர்மை யானது. ஆதலால் மனுவின் அவதாரம் என்று அழைக்கப்பெற்றான். இவனாட்டில் ஆரம் என்ற சொல்லின் எழுந்தொலியாகிய 'ஆ' கேட்கப்படுமே யல்லாது இரக்கக் குறிப்பாக 'ஆ' என்று மக்கள் அலறமாட்டார்கள் என்று திருவாலங்காட்டுச் சாஸ



னம் கூறும். இவன் சேவூர்ப் பறந்தலையில் வீர பாண்டியனோடு கடும் போர் புரிந்தான். புறங்காட்டி யோடச் செய்தான். ஆதலால் பாண்டியனைச் சுரம் இறக்கின சுந்தரச் சோழன் என்று நாடு வழங்குவதாயிற்று என்று திருக்கழித்திட்டை சாஸ னம் கூறும். தெய்வ பக்தன். இவன் கடைசி காலத்தில் பொன் மாளிகையில் ,(சிதம்பரத்தில்) தன் மனைவியோடிருந்து காலங்கழித்தான். அப் போது இவனால் வென்றுதுரத்தப்பட்ட வீரபாண்டி யன் வந்து பழிதீர்த்துக்கொண்டான் போலும். அதனால் இவன் 'பொன்மாளிகையிற் றுஞ்சிய தேவன்' என்று வழங்கப்பெறுகிறான். இவன் படிவமும், உடன்கட்டை ஏறிய இவன் மனைவி வானவன் மாதேவியார் படிவமும் தஞ்சை யிராச ராசேச்சரத்தில் வைத்துப் பூசை செய்விக்க ஏற் பாடு செய்விக்கப்பெற்றதாகச் சாஸனங்களால் தெரிகின்றன.

—985-1014.

**ராஜராஜன் I**

இவன் இரண்டாம் பராந்தகன் மகன். 985ல் பட்டம் ஏற்றான். கடற்போரிலும், தரைப்போரி லும் வல்லவன். அமரபுஜங்க பாண்டியனை வென்று மதுரையைத் தன்வசப்படுத்தியிருந்தான். இலங் கையை வென்றான். நம்பியாண்டார் நம்பி இவன் காலத்தவரே. இவரைக்கொண்டு திருமுறைகளைத் தொகுப்பித்ததால் 'திருமுறைகண்ட சோழன்' என் னும் பெயர்பெற்றான். இவனுடைய இயற்பெயர்

அருண்மொழி வர்மன் என்பது. இவனுக்கு அபய குலசேகரன் என்ற பெயருமுண்டென்று திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. இவனுடைய நாணயத்தில் 'ராஜராஜன்...சேகரன்' என்பது காணப்படுகின்றது என்று நீலகண்ட சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். மெய்க்கீர்த்தி ஏற்பட்டதும் இவன் காலத்திலேயே. மும்முடிச் சோழன் என்ற பட்டப் பெயரும் இவனுக்கு உண்டு. சிவபாத சேகரன் என்ற பட்டம் கி. பி. 1003ல் தில்லைவாழந்தணர்களால் இவனுக்கு அளிக்கப்பட்டது. சிவ நண்பனும், செல்வத்திற் சிறந்தவனுமான குபேரனின் பெயர் ராஜராஜன் என்பது. அப்பெயர் இவனுக்கு வழங்கப்பட்டது.

கூத்தப்பெருமானிடத்துள்ள அன்பு இவன் காலத்திய நிலமளக்கும் கோலுக்குச் 'சிற்றம்பலக் கோல்' என்று பெயரிடச்செய்தது. அது பதினாறு சாண் அளவுடையது. (S. I. I. Vol. III Part I) கோயில் மரக்காலுக்கு 'ஆடல் வல்லான்' என்று பெயரிட்டிருந்தான். திருமுறை வகுத்த காலம் கி. பி. 1011 ஆகுமென்று (எபிக்ராபிகா இண்டிகா) கூறுகிறது.

இவனுடைய 26ம் ஆட்சியாண்டில் எதிரிலி சோழன் திருத்தோப்புக்குச் செல்லும் திருவீதியில் திருநந்தவனமும், மடமும், தில்லை நாயகவளாகத்தில் நாலரை வேலி நிலமும் விட்டான். மூன்றும்

மேலைக்கோபுரத்தில்:



பாசுபதமூர்த்தி

ஆட்சி ஆண்டிலும் நந்தவனத்திற்காக நிலம் விட்டிருக்கிறன். இவன் செய்த கோயிற்பணிகளைக் காட்டிலும் திருமுறைத் திருப்பணி மிகச் சிறந்த தாகும்.

பரகேசரி இராஜேந்திரன் I —கி. பி. 1012-1044

இவன் கல்வெட்டே மிகப் பழமையானது. இக்கல்வெட்டில் கோ ராஜகேசரிவர்மன் அல்லது உடையார் இராஜேந்திரசோழன் என்றழைக்கப் படுகிறன். இவன் மெய்க்கீர்த்திகள் நன்குவிளங்கப் பெறவில்லை. இவன் 24ம் ஆண்டில், வைரவன் நீலன் என்பானல், ஓடை, நத்தம், நாரைக்கால் ஆற்றுக்கொல்லை நீங்கலாக முப்பத்துநாலேகாலே அரைக்கால்காணி நிலம் அளிக்கப்பெற்றது. இதன் வருமானம் 4500-கலத்தில் மேல் வாரமாக 2250 கல நெல்லாவது அல்லது 264¾ காசு பொன்னவது இதர வருமானங்களுக்காக 40 காசும் கூடச்சேர்த்து கோயிற் செலவுக்கு அளிக்கப்படவேண்டுமென்று ஏற்பாடுசெய்தான். (S. I. I. 118 of 1888.) For Text Vide S. I. I. Vol IV 233

குலோத்துங்கன் I —1070-1120

இவன் வடநாடு பாண்டியநாடுகளை வென்றவன். குடகுமலை நாட்டையும் கைப்பற்றியவன். கலிங்கத்தின்மீது தனது படைத்தலைவன் கருணகரத் தொண்டைமானை அனுப்பி, வெற்றி கண்டவன்.

திருபுவன சக்ரவர்த்தி என்ற பட்டமும் இவனுக்கு
உண்டு. சுங்கந்தவிர்த்த சோழனென்றும் பெயர்
பெற்றான். தன் தாய்வழிச்சோழர் வழக்கத்தின்படி,
பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தான். அதனால்
பேரம்பலம் பொன்வேய்ந்த சோழன் எனப் பெயர்
பெற்றான். திருநீற்றுச்சோழன் என்ற பெயரும்
இவனுக்கு உள்ளதாகத் தெரிகிறது. இவனே
சேக்கிழாரைக்கொண்டு பெரிய புராணம் பாடுவித்
தான் என்று கோபிநாதராவ் கூறுவர். சீனுவாச
அய்யர் இவனே அநபாயன் என்று குறிக்கப்'
பெற்றவன்என்றுசொல்லுகிறார். அதற்காதாரமாக
செங்கற்பட்டு ஜில்லா திரிசூலம் தர்மபுரீசுவரர்
கோயில் (1332 of 1901.) கல்வெட்டு அரசனுடைய
39-வது ஆட்சி ஆண்டில் முன்னலூர்க் கிராமத்தைத்
திருநீற்றுச்சோழநல்லூர் என்ற பெயரால் மாற்றி,
அக்கோயிலுக்கு அளித்தான் என்று அறிவிக்கிறது.
இரண்டாவதாகத் திருவானைக்கோயில் சாசனம்
ஆட்சி 12-வது ஆண்டில் நென்மலை என்ற ஊருக்குத்
திருநீற்றுச்சோழநல்லூர் என்று பெயர் வைத்த
தாகத் அறிவிக்கிறது. அதில் திருமந்திர ஓலை
என்னும் அதிகாரியின் பெயர் 'அநபாயமூவேந்த
வேளான் என்று வருகிறது. மேலும் அக்கோயிலில்
உள்ள (S.I.I.359 of 1911) கல்வெட்டு அரும்பாக்கம்
என்ற ஊரை அநபாயநல்லூர் என மாற்றியதாக
அறிவிக்கின்றது. அதிலும் அநபாயமூவேந்த
வேளானே குறிப்பிடப்பட்டுள்ளான். இவைகள்
மூன்றும் முதற் குலோத்துங்கன் கல்வெட்டுக்களே.



திருமந்திர ஓலையின் பெயர் அரசனது பெயரை
ஒட்டி வழங்குதலே மரபு. உத்தம சோழப்பல்லவ
ராயன் என்ற வழக்காறு வீரராஜேந்திரன் ஆட்சி
4-வது ஆண்டிலேயே தர்மாபுரம் தாலுக்கா மூத்தூர்
கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது. வீர
ராஜேந்திரன், முதற் குலோத்துங்கனுக்கு முற்
பட்டவன். முதற் குலோத்துங்கன் ஆட்சி 12-வது
ஆண்டில் ஏற்பட்ட திருவானைக்கோயில் களத்தூர்
சாசனங்கள் தன் அரசாங்கத்ததிகாரி தொண்டை
மானுக்கு அனுப்பியதாகக் காணப்படுகின்றன.
தொண்டைமான் என்ற பட்டம் சேக்கிழார் விலகிய
பின்பு மந்திரியாயிருந்த அவர் தம்பி பாலறா
வாயருக்கு அரசன் அளித்தது; என்ற இவைகளைக்
காட்டுகிறார்.

அழகிய திருச்சிற்றம்பல முடையார்க்கு நாள்
வழிபாடு நடக்க நிலமும், காசும் அளித்த செய்தியை
இரண்டு கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. துறவி
கட்கு மடமும் கோவிலுக்கு நந்தவனம் வைத்ததும்
ஆகிய செய்திகளை இருகல்வெட்டுக்கள் அறிவிக்
கின்றன. நந்தனவனம், நந்தவனப்பணியாளர்,
கோயில்பணியாளர் இவர்களுக்கு ஊதியம் அளிக்க
நிலம் விட்டதை இருகல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டு
கின்றன. இவன் ஐந்து பாண்டியர்களையும் ஒரு
சேரனையும் கொட்டாரதுர்க்கத்தில் ஒருசேரவெ
ன்று சையாத்திரி உச்சியில் ஜெயஸ்தம்பம் நட்டு
பாரஸீகப் பெண்களைக் கொண்டு கடற்கரை ஓரத்
தில்தன்புகழைப்பரவச் செய்தான்.

இவன் ஆட்சி 46வது ஆண்டுக்கல்வெட்டில் ராஜாதிராஜவளநாட்டுத் தனியூரான பெரும்பற்றப் புலியூர் உடையார் திருச்சிற்றம்பல முடையார்க்கு சாமுதாயத்திருமாளிகைக்கூறுசெய்வார், ஸ்ரீகாரியம் செய்வார், சாமுதாயஞ்செய்வார், கோயில் நாயகம் செய்வார், திருமாளிகைக் கூறுசெய்வார், இவர்கள் காணக்கடவதாக நந்தவனப் புறமாகவும், மாகே சுரத்திருவமுதுக்கு மடப்புரமாகவும் திருச்சிற்றம் பலமுடையான் பேரில் விலைகொண்டது; என்ற குறிப்பு காணப்படுகிறது. இதில் கோயில் நிர்வாகி களிருவரும், ஸ்ரீகாரியஞ் செய்யும் மாகேசுரர் ஒரு வரும், அரசியற் றொடர்புடையார்கள் இருவருமாகக் கோயிற் காரியங்களைக் கண்காணிக்க நியமனம் செய்திருத்தல் கவனித்தற்குரியது. இதில், திருச்சிற் றம்பல வழிக்குக் கிழக்கு என்று எல்லைகுறிப்பிடப் படுகிறது.

**குந்தவ்வை** —கி. பி. 1114

இராஜராஜனது மகளும், திரிபுர சக்ரவர்த்தி முதலாம் குலோத்துங்கனது இளைய சகோதரியு மாகிய இவள், சிதம்பரத்து ஆளுடைய பிள்ளையா ருக்குப் பல நன்கொடைகள் கொடுத்துள்ளாள் என்று கல்வெட்டு அறிவிக்கிறது. (119-1888) முதற் குலோத்துங்கனது 4வது ஆட்சி ஆண்டில் இவ் வம்மையாரால் பொற்குடம் கண்ணடி அளிக்கப் பெற்றமையையும், அம்பலம் செம்பொன் வேய்ந்

தெற்குக்கோபுரத்தில்



அர்த்தநாரீசுவரர்

தமையையும் காம்போஜி ராஜனிடமிருந்து ராஜேந்திர சோழனல் கொண்டுவரப்பெற்ற கல் ஒன்றை திருவெதிரம்பலத்து வைத்தமையையும் சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்தி ஸ்ரீ குலோத்துங்க சோழன் திருத்தங்கையான ராஜராஜன் குந்தவ்வையாழ்வார் ஆளுடையாருக்குத் தண்ணீரமுது செய்தருள இட்ட மிண்டமொன்றினல் குடிஞைக்கல் நிறை மதுராந்தகன் மடையொடொக்கும் பொன் ஐம்பது கழஞ்சும் அளித்தாள்.

**விக்கிரம சோழன்** —1118-1136

முதற் குலோத்துங்கன் மகன் விக்கிரமன் கி. பி. 1117ல் ஆட்சி ஏற்ருன். கருணுகரத் தொண்டைமானுடன் கலிங்கப் போருக்குச் சென்றவன்; பதினெட்டு வருடங்கள் அரசாண்டான்; கூத்தர் இவன் காலத்துப் புலவர்; இவன் தில்லையில் பல திருப்பணி செய்துள்ளான் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன; இவன் மீது பாடப்பட்ட உலாவில் இச்செய்திகள் குறிப்பிடப்படவில்லை என்பது கருதத்தக்கதொன்ரும் இவன் மகனே இரண்டாம் குலோத்துங்கன்.

இவன் ஆட்சி பதினைந்தாவது ஆண்டுக் கல்வெட்டில், 'தன் குலநாயகன் தாண்டவம்பயிலும் செம்பொன்னம்பலம் சூழ்திருமாளிகையும், கோபுர வாசல் கூடசாலைகளும், உலகுவலங்கொண்டு ஒளி விளங்கும் நேமிக்குலவரை உதயகுன்றமொடு

நின்றன பசும்பொன் வேய்ந்து, எனவரும்பகுதி இவன் தந்தை நடராஜப்பெருமானுக்குப் பொன் கொடுத்ததை அறிவிக்கிறது.

நடராஜர் கோயில் முதற் பிராகாரக் கீழ்புறச் சுவர் வாயிலின் இடதுபுறத்தில் உள்ள கல்வெட்டில் ஆட்சி மூன்றாவது ஆண்டு 95வது நாள் நந்தவனத்திற்காகத் திருமெய்யூர் உய்யக்கொண்டார் வளநாட்டு வட்டம் மன்னார்குடிக் கட்டளை ஜெயங்கொண்ட சதுர்வேதிமங்கலத்தில் 4 குடிகளோடு கிராமமளித்த செய்தியும், திருச்சிற்றம்பலமுடையார் ஆலயத்தில் மந்திர புஷ்பம்செய்யப் பெரும்பற்றப்புலியூரிலுள்ள பண்ணங்குடிச்சேரி என்கிற பரகேசரிநல்லூர் கிராமத்தில் நிலம் அளித்த செய்தியும் அறிவிக்கப்படுகின்றன.

## குலோத்துங்கன் II

—1113-1150

பேரம்பலம்பொன் வேய்ந்ததும், தில்லைக் கோவிந்தராஜர் சிலையை அப்புறப்படுத்தியதும் பெரியபுராணம் பாடுவித்ததும் இவனே என்பர் ராஜமாணிக்கம் பிள்ளை. அதற்கு அவர் காட்டும் காரணங்கள் பெரியபுராணம், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்க யாகப்பரணி இவைகள் ஒத்தகருத்துடைய சொற்றொடரை வழங்குதல், திருமாணிகுழி, திருப்புறம்பியம், திருவாரூர், திருவாடுதுறைக் கல்வெட்டுக்கள் முதலியவையாகும். திருவாரூர்க் கல்வெட்டு இவனைப்பற்றி 'அநபாயன்



தில்லை நடராஜர் திருவடித்தாமரையில் ஈப்போன்றவன்' என்று அறிவிக்கின்றது. இவன்மீது பாடப்பட்ட உலாவில், இவன் புவனமுழுதுடையாளோடு தில்லை வழிபாடாற்றச் சென்றதும், அங்கு இவன் செய்த பல பணிகளும் (வரி 73 முதல் 116 வரை) கூறப்பட்டுள்ளன. இதனையே சுருக்கிப் பின்னர் ராசராசன் உலாவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குலோத்துங்கன் III —கி. பி. 1178-1218

இவன் இராசாதிராசனுக்குப்பின் முடிசூடியவன். வீரராசேந்திரன், திரிபுவன தேவன் என்ற பெயர்களும் இவனுக்கு உண்டு. தில்லைக் கோயிலில் முகமண்டபம் கட்டினான். கோபுரம் அம்மன்கோயில் திருச்சுற்று மண்டபம் இவைகளைப் பொன்மயமாக்கினான். ஒப்பில்லாத சிவபக்தன். தில்லையில் மேலைவீதிக்கு முடித்தலை கொண்ட பெருமாள் திருவீதி என்று பெயரிட்டான். இவனது இருபத்துமூன்றாவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பெற்ற திருக்கடவூர்க் கல்வெட்டால் வீராந்தகப் பல்லவதரையார் இவனது ஆஸ்தான வித்துவானாக இருந்தார் என்றும், அவரது வேண்டுகோளுக்காக நிருத்தப் பேரரையன் ஒருவன் 1201-ல் கனக சபைக்கு நியமிக்கப்பட்டான் என்றும் அறியலாம். தண்டியாசிரியரும் ஆடல் வல்லோருள் ஒருவராய்க் கனகசபையில் நடித்து வந்தார் என்பது,

"ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
தவலரும் கீர்த்தித் தண்டி என்பவனே"

என்ற பாயிரப்பகுதி அறிவிக்கிறது.

இவனுடைய ஆட்சி இரண்டாவது ஆண்டில், நிலஅளவு செய்தான். அப்போது திருத்தொண்டத் தொகையீச்சுர முடையாருக்குச் சொந்தமான நிலங்களையும், அருமொழியீச்சுரத்து சுப்பிரமணியப் பிள்ளை யாருடைய நிலங்களையும் எட்டாந்தரமாக்கி, இறையிலியாகச் செய்திருக்கிறான்.[1] ஐந்தாவது ஆண்டில், நந்தவனப்புறமான இறையிலியில், நந்தவனம் போக மீதியைத் தோட்டக்காரர்கள் தங்கள் கொத்துக்குக்கொள்வார்களாக' வென்று உத்தரவிட்டிருக்கிறான்.[2] ஆறாவதாண்டில் திருக்களாஞ்சேரி மகாதேவனுக்கு மணலூரில் நிலம் விட்டிருக்கிறான். திருக்களாஞ்சேரி என்பது சிதம்பரத்திற்கு வடக்கே மறைஞான சம்பந்தர் சமாதியை அடுத்து உள்ளது. இது சிங்காரத்தோப்பு எனவும் வழங்குகின்றது.

ஒன்பதாவதாண்டில் நந்தவனத் தொழிலாளர் கொத்துக்கு நிலம்விட்டிருக்கிறான். 11வது ஆண்டில் தாயிலும் நல்லபெருமாள் திருநந்தவனத்திற்காகக் கடுவாய்ச்சேரியில் நிலம் விட்டிருக்கிறான். பன்னி

[1] 1913 of 262, 263 [2] Vol. IV 227.

தெற்குக் கோபுரத்தில்



மகாசதாசிவ மூர்த்தி

ரண்டாவதாண்டில் பெரும்பற்றப்புலியூர் விக்ரம சோழீச்சுரமுடையாருக்கு நிலமளித்தான். பதினூருவதாண்டில் நில அளவை செய்து, மிகுதியை நந்த வனத்திற்கு விட்டு இறையிலி ஆக்கினன். பதினேழாம் ஆண்டு இருபதாம் நாளில் திருச்சிற்றம்பலமுடையார் கோயிலில் விளக்கு விளக்குமரம் இவற்றை ஐந்தாண்டுக்கொருமுறை புதுக்கி, அதனை அவ்வூர்த் தானத்தாரிடம் காட்டித், தணிக்கை செய்து வருவதற்காகப் பொன்னளித்தான். இவனுடைய இருபதாம் ஆண்டுக் கல்வெட்டும் இதனையே தெரிவிக்கும். மேலும் 'முடித்தலைக்கொண்ட பெருமாள் வீதி, என்னும் மேலைவீதியில் அறப்பெருஞ் செல்விச்சாலை என்னும்சத்திரத்தைநிறுவி அதற்கு நிலம் விட்டான்.

இவன் செய்த பணிகளுள், மிகச்சிறப்பானது தைப்பூசப் பாவாடைக்காக நிலம்விட்டு, அதனை இரண்டாம் பிராகாரமாகிய குலோத்துங்க சோழன் திருமாளிகையில் கல்வெட்டுவித்தது. நந்தவனத்தில் மற்றவர்களைப்போல பொதுவகையில் நிலமளிக்காமல் இருவாட்சி நந்தியாவர்த்தம் மல்லிகை என்ற மூன்று பூக்களுக்காக அளித்து, எட்டுப்பேரை அமர்த்தி, நாலு நாலு பேராக ,மாற்று முறையில் வேலைசெய்ய உத்தரவிட்டிருப்பது. இவனுடைய 39-ம் ஆண்டுவரை உள்ள கல்வெட்டுகள் இங்கு உள்ளன.

### இராசராசன் III —கி. பி. 1216-1246

இவன் மூன்றாங்குலோத்துங்கன் மகன். இவன் ஆட்சிக்காலத்தில் சிற்றரசர்கள் பேரரசர்களாக இருந்தார்கள். அதனால் இவனுக்கு ஒரு வகையில் இடையூறும், ஒருவகையில், உதவியும் இருந்தது. மாறவர்வன் சுந்தரபாண்டியன் I மிகப்பலசாலியாக இருந்ததால், சோழநாட்டின்மீது படையெடுத்து வென்றான். இதனைச் சுந்தரபாண்டியனது மெய்க்கீர்த்தி "பொன்னிசூழ் நாட்டிற் புலியாணை போய் அகல" என்று அறிவிக்கின்றது. பின்னர் இவன் போசள நரசிம்ம தேவனது உதவியால், இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான். (Fleet's dynasties of the kanarese. Districts P. 507) இது சுந்தரபாண்டியன் வரலாற்றிலும் விளக்கப் பட்டுள்ளது. இவன் இழந்த நாட்டைத் திரும்பவும் பெற்றான். அவனியாளப் பிறந்தானாகிய கோப் பெருஞ்சிங்கனை வென்று வெருட்டியவன். இவனைப் பற்றி சுமார் 24 கல்வெட்டுக்கள் தில்லைக்கோயிலில் திகழ்கின்றன. இவனாட்சி மூன்றாமாண்டில் நாள் தோறும் நடராசப்பெருமானுக்கு நூற்றுமுப்பதும் இருநூறுமாகிய செந்தாமரை மாலைகளை அளித்து வர நிபந்தங்கள் ஏற்படுத்தி இருக்கிறான். 39ம் ஆண்டிலும் ஒரு முறை இத்தேவதானத்தைச் செய்திருக்கிறான். கோவில் பூண்டியில், திருநந்தவனம் அமைத்தான். A. R. 282, 283, 284, 285-13. நந்தவனத்தில் பெரிய பெருமானுக்குப் பயன்



படும்படி, தேங்காய்கமுகு இவைகள்வைக்க ஏற்பாடு செய்திருக்கிறான். மூன்றாமாண்டில் நந்தவனக் காவலனுக்கு உணவு ஏற்பாடும், 10ம் ஆண்டில் வேறொரு நந்தவனமும் அமைத்திருக்கிறான். S.I.I. 305-13. 316, 317-13. பன்னிரண்டாவதாண்டில் விசயநுளம்பன் மகள் உமையாள்வீ திருநந்தவனம் வைத்தாள். அதற்காவனவற்றை, இவன் உத்தரவு நிறைவேற்றிற்று. பத்தாவதாண்டில் திருக்காமக் கோட்டமுடையாருக்குப் பழங்கள் அளிக்க ஏற்பாடு செய்தான். 24ம் ஆண்டில் ஆளுடைய நாயகனுருக்காக விடப்பட்ட திருநந்தவனத்திற்கு இறையிலி செய்வித்தான். A.R.1-36. அம்மைக்கென்றுதனித்த நந்தவனமும், குதிரை வாணிகனைக் கொண்டு சில நந்தவனங்களும் ஏற்பாடு செய்வித்தான், இவனுடைய 17, 16 கல்வெட்டு மேலக்கோபுரத்தி லுள்ள சிற்பத்திறனைத் தெரிவிக்கிறது. ஆளுடைய நாயகனுருக்கு 500 பலாப்பழம், 5000 மாம்பழம் 5000 வாழைப்பழம் கொடுத்து வரும்படி சாலியர்க்கு உத்தரவிட்டிருக்கிறான். A. R. 280-13. 700 பூக்கள் தரும் மற்றொரு செந்தாமரை ஓடையையும் அளித் திருக்கிறான். S. I. I. 313-13.

### மணவிற்கூத்தன் காலிங்கராயன் —கி. பி. 1118-1150

கூத்தன் என்பது இவனது இயற்பெயர். தொண்டைமண்டலத்து மணவிற்கோட்டத்து மணவில்என்றவூரின் தலைவன். முதற்குலோத்துங்கனது

படைத்தலைவனாயிருந்து பெரும் புகழ் எய்திய வன். குலோத்துங்கன் வேணாடு, மலைநாடு, பாண்டியநாடு, வடநாடு இவ்விடங்களில் நடத்திய போர்களில் தலைமை வகித்து வெற்றி எய்தினான். அதனால் காலிங்கராயன் என்னும் பட்டமும் பெற்றான். இத்தகைய சிறப்புற்ற இவ்வீரன் தில்லைப் பெருமானிடம் பேரன்பு பூண்டவன். இவன் தில்லைக்குச் செய்த திருப்பணிகளைப் பற்றிய செய்திகளை அறிவிக்கும் முப்பத்தாறு வெண்பாக்கள் சிதம்பரம் கல்வெட்டிலுள்ளன. (S. I. I. Vol IV A. R. No.120 of 1888.)

கொடுங்கை பொன் வேய்ந்தது, பொன்னம்பலத்தைப் பொன் வேய்ந்தது, கோயில் முழுதும் பொன் வேய்ந்தது, சிற்றம்பலம் பொன் வேய்ந்தது, பேரம்பலம் செம்பு வேய்ந்தது, பொற்பரிகலம் அமைத்தது, பொற்படிக்கம் அமைத்தது, பொன் எக்காளம் அமைத்தது, கர்பூர தீபம் அமைத்தது, பொன்னம்பலத்தைச் சுற்றிலும் பொன் விளக்கு அமைத்தது, திருமஞ்சனக் குடம் அமைத்தது, பாலமுதம் அளிக்க நிபந்தம் வைத்தது, ஆயிரம் படி நெய்யபிஷேகம் செய்தது, திருப்பதிக மண்டபம் கட்டுவித்தது, நூற்றுக்கால் மண்டபம் அமைத்தது, சுற்றுமாளிகை அமைத்தது, தீர்த்தம் திருப்பணி செய்தது, வீதியில் விளக்கு மண்டபம் அமைத்தது, அம்மை கோயில் கட்டியது, அம்மை கோயில் திருச்சுற்றமைத்தது, அம்மை திருமஞ்சனத்துக்கு நிபந்

தெற்குக் கோபுரத்தில்



திரிபுராந்தகமூர்த்தி

தம் வைத்தது, அம்மைக்குப் பீதாம்பரம் சாத்த ஏற்பாடு செய்தது, தில்லைக் குழந்தைகளுக்கு எண்ணையும் பாலும் வழங்கியது, வீதியில் விளக்கும் பொற்கொடியுமமைத்தது, நடராஜர்வீதியுலாவில் தூபமிடுவித்தது, ஒளித் திருக்கோலம் கண்டது, தில்லையில் கல்வி பரப்பியது, தில்லைவாழந்தணர்களுக்குத் திருமடம் கட்டியது, பெருமானுக்கு யானை கொடுத்தது, தேவாரத்தைச் செப்பேடுகளில் எழுதுவித்தது, நந்தவனம் அமைத்தது, அம்மையாருக்கு ஆயிரத்தாழி யமைத்தது, மாசிக்கடலாட மண்டபமும் வழியும் அமைத்தது. பெருமானுக்கு ஆயிரம் பசு அளித்தது, கற்றளி கண்டது, தில்லை ஏரிக்கு மதகு கட்டியது முதலிய பணிகளை அவ்வெண் பாக்கள் அறிவிக்கின்றன.

## சேரர்

### கொச்சி இராமவர்மமகாராஜா

இவர் சேரமான்பெருமாள் நாயனருடைய குடியில் வந்தவர். கொச்சி அரசர். சகம் 1498ல் (கி. பி. 1576ல், ஆனந்ததாண்டவ மாகேசுரர்களுக்கும் அந்தணர்களுக்கும் பரிசாரகர்களுக்கும் நாடோறும் 33 தளிகையளிக்க ஏற்பாடுசெய்திருக்கிறார்.

### அச்சுததேவராயர்


இரண்டாங் குலோத்துங்கசோழனல் கடலில் இடப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற தில்லைப்

பெரிய பெருமாளைச்சகம், 1211ல் எழுந்தருளுவித்தான் என்றும் கூறுவர். குருபரம்பரைப் பிரபாவம், பிரபன்னமிர்தம் என்ற நூல்களில் குறிக்கப்படும் செய்திகள் தில்லைக் கோவிந்தராசப் பெருமாள் கீழைத் திருப்பதிக்குக் கொண்டு போகப் பெற்று, திரும்பப், பிரதிட்டை செய்யப் பெற்ருர் என்கிறது. ஆதலால் அச்சுதராயர், பூசை நின்றிருந்த பெருமாளுக்குத் திரும்பவும் வைகானச விதிப்படி நடைபெற 5000 பொன் கொடுத்தார். இச்செய்தியை (S. I. I. 1 of 1915) கல்வெட்டும் நன்கு விளக்குகிறது. இவர் சைவ வைணவ சமய வேற்றுமை இல்லாதவர். சகம் 1451ல் கூத்தப்பெருமான் தேர் விழாவிற்காக 64 கிராமங்களையும், வடக்குக் கோபுர வேலைக்காக 18 கிராமங்களையும் சர்வமான்யமாக அளித்திருக்கிருர். Oriental Research Vol. 12. P. 169 178.

## மகாதேவராயர் II

கி. பி. 1428ல் தேவஸ்தான நிர்வாக ஊழல்களைத் திருத்தினர். அமிதவரி வசூலிப்பினுல், குடிகள் ஓடிப்போக அதனுல் வருமானம் குறைந்தமையால் புலியூர்க்கோயிலில் பூசை தடைப்பட்டமையையறிந்து குடிகளைத் திரும்பவும் அழைத்துக் கிராமங்களை வளப்படுத்தி, கோயில் நிர்வாகத்தைச்செப்பஞ் செய்தார் (376-1913).

வடக்குக்கோபுரத்தில்:



கிருஷ்ணதேவராயர்



### கிருஷ்ணதேவராயர்

இவர் விஜயநகரத்தரசர். பெருவீரர். இவருடைய ஆட்சி சகம் 1432ல் அழகிய திருச்சிற்றம்பல முடைய தம்பிரானுக்கு மகாபூஜை செய்யவும் அடியார்களுக்கு அமுது வழங்கவும் ஏற்பாடு செய்தார். சகம் 1443ல் சிதம்பரநாதபுரம் என்னும் கிராமத்தைக் கோயிலுக்கு சர்வமானியமாக அளித்தார். சகம் 1531ல் (கி. பி. 1509ல்) சிம்மாத்திரி போத்தனூருக்குச் சென்று வென்று வெற்றி மகிழ்ச்சியால் சிதம்பரத்தைத் தரிசிக்கவந்தார். அப்போது வடக்குக் கோபுரத்தைக் கட்டினார். S. I. I. 371 of 13. S. I. I. Vol. IV 622.

### வேங்கடதேவராயர்

சகம் 1500ல் சிதம்பரேசுவர சிவகாம சுந்தரி அம்மைக்கு, விடியற்கால வழிபாட்டிற்காக, கிராமங்களை அளித்தார். சகம் 1506ல் (கி. பி. 1613)ல் 300 பொன் கொடுத்து, 20 சாதம் நாள்தோறும் ஏழைகளுக்கு அளிக்கும்படி ஏற்பாடு செய்தார். 5000 கலம் நெல் வருமானமுள்ள கிராமத்தை அளித்து, முப்பது கட்டிச்சோறு, துறவிகளுக்கு அளிக்க ஏற்பாடு செய்தார். S. I. I. 346, 347-13. சகம் 1586ல் சிதம்பரத்தில் இருந்த நமசிவாயஉடையார் என்பவர் மேற்பார்வையில் இருபது கட்டி, கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார். இந்த நமசிவாயர் குகை நமசிவாயராக இருக்கலாமோ என்று கருது

கிறார்கள். இவரைப்பற்றிய கல்வெட்டுகள் 12க்கு மேல் உள்ளன. பெரும்பாலானவை, 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்ற அருள் மொழியை மெய்ப்பித்த தொண்டாகவே இருக்கின்றன.

## ஸ்ரீரங்கராயர் II

சகம் 1503ல் மிளகுத்தரகு வருமானத்தைக் கொண்டு சிற்றம்பலமுடையார்க்கு அபிஷேகம் செய்விக்கவும், சகம் 1517ல், சிவகாமசுந்தரி ஐப்பசி பூரவிழாக்கொண்டருளும்படி புறப்பேட்டை ஊரை தேவதானமாகக் கொடுத்திருக்கிறார். சகம் 1503ல் ஏழு கிராமங்களின் வருமானத்தைக்கொண்டும், மிளகுத்தரகைக்கொண்டும், பெருமாளுக்கு அபிஷேக ஆராதனை விழாச்செலவுகள் நடத்திவர வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ஸ்ரீரங்கராயர் VI

1565ல் இவன் தில்லைத் திருச்சித்ரகூடத்தில் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் மூன்மண்டபத்தைப் பழுதுபார்த்தான். புண்டரீகவல்லித் தாயார்; சூடிக்கொடுத்த நாச்சியார் விமானங்களும் பழுதுபார்க்கப்பட்டன. பரம்பரையாக வைணவர்கள் வசிக்கின்ற ஆடூர், கருங்குழி, சூரியாமங்கலம், மருதாந்தநல்லூர், உடையூர் முதலிய கிராமங்களுக்குத் தீர்வை தள்ளுபடி செய்தான். இந்தப்

தெற்குக்கோபுரத்தில்



கஜஸம்ஹாரமூர்த்தி

கிறார்கள். இவரைப்பற்றிய கல்வெட்டுகள் 12க்கு மேல் உள்ளன. பெரும்பாலானவை, 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்ற அருள் மொழியை மெய்ப்பித்த தொண்டாகவே இருக்கின்றன.

## ஸ்ரீரங்கராயர் II

சகம் 1503ல் மிளகுத்தரகு வருமானத்தைக் கொண்டு சிற்றம்பலமுடையார்க்கு அபிஷேகம் செய்விக்கவும், சகம் 1517ல், சிவகாமசுந்தரி ஐப்பசி பூரவிழாக்கொண்டருளும்படி புறப்பேட்டை ஊரை தேவதானமாகக் கொடுத்திருக்கிறார். சகம் 1503ல் ஏழு கிராமங்களின் வருமானத்தைக்கொண்டும், மிளகுத்தரகைக்கொண்டும், பெருமாளுக்கு அபிஷேக ஆராதனை விழாச்செலவுகள் நடத்திவர வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ஸ்ரீரங்கராயர் VI

1565ல் இவன் தில்லைத் திருச்சித்ரகூடத்தில் தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் முன்மண்டபத்தைப் பழுதுபார்த்தான். புண்டரீகவல்லித் தாயார், சூடிக்கொடுத்த நாச்சியார் விமானங்களும் பழுதுபார்க்கப்பட்டன. பரம்பரையாக வைணவர்கள் வசிக்கின்ற ஆடூர், கருங்குழி, குரியாமங்கலம், மருதாந்தநல்லூர், உடையூர் முதலிய கிராமங்களுக்குத் தீர்வை தள்ளுபடி செய்தான். இந்தப்



பணி நிகழ்ந்தகாலம் 2-2-1644 என்று L. D. சாமிக் கண்ணுப்பிள்ளை கணக்கிட்டிருக்கிறார்கள்.

## திம்மராயர்

இவர் வீரப்ரதாப திம்மையா என அழைக்கப் படுகிறார். சகம் 1425ல் ருத்ரோத்காரி சிம்ம ரவியில் (கி. பி. 1503ல்) சுவாமி அம்பாளுக்கு இரட்டை மாலை சாத்த, பெரும்பற்றப்புலியூருக்கு மேற்கேயுள்ள காரிகுடி கிராமத்தை அளித்திருக்கிறார்.

## வீரபூபதிராயர்

நிருத்தநாதன் திருமுன் விளக்குக்காக, தனது அரசியல் தலைவனாகிய செண்டப்ப ராசா ஆதித்த ராசாவைக் கொண்டு 64 பசுக்கள் அளித்திருக்கிறார். இவர் புக்கா II காலமாக இருக்கலாமென்று (E. P. 1909 P. 115) கூறுகிறது.

# நாயக்கர்கள்

## நாகமநாயக்கர்

இவர் விஸ்வநாத நாயக்கருடைய தந்தை. மதுரையில் நாயக்கர் ஆட்சியை நிலைநிறுத்தியவர் சிதம்பரத்தில் ஒரு பெரும் சரக்கறையினை விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளித்திருக்கிறார்.

### முத்துகிருஷ்ணப்ப நாயக்கர்


இவர் வையப்ப கிருஷ்ணப்ப கொண்டப்ப நாயக்கர் மகன். சகம் 1520ல் ஆடிப்பதினெட்டாம் பெருக்கில் தில்லைக் கூத்தப்பெருமான் எழுந்தருளியிருப்பதற்காகக் கொள்ளிடக் கரையில், தீர்த்த மண்டபம் கட்டி இருக்கிறார்.

### பிற்காலம்

இதுவரையில் தில்லைக் கோயில் அருள் நிலைக் களமாக-அமைதிக்கு அரணாக இருந்ததென்பதைப் பல்லவ, பாண்டிய, சோழ, சேர அரசர்கள் செய்த பணிகளானும், விசயநகர நாயக்க அரசர்கள் செய்த பணிகளாலும், அறிந்தோம். மகமதிய படையெடுப்புக் காலத்தில் ஹைதரலி யுத்தப்பாதுகாப்புக்காகக் கோயிலை அரணாகக்கொண்டு, பட்டாளத்தை வைத்திருந்தான். அதனால் கோயிலுடைய அழகிய சிற்பங்கள் அழிந்தன. தில்லைவாழந்தணர்கள் கூத்தப் பெருமானைத் திருவாரூருக்கு எழுந்தருளுவித்துத் தஞ்சை மகாராஷ்டிர மன்னன் பாதுகாப்பில் மறைத்து வைத்திருந்தனர். பின், கலகம் ஓய்ந்ததும், சகம் 1696ல் (கலி 4874ல்) மாசிமீ கிருஷ்ண பக்ஷம் மூலநக்ஷத்திரம் திரயோதசிதிதி கூடிய நன்னாளில் திரும்பத் தில்லையை யடைவித்தனர்.

1749ல் தலைவர் கோப் (Captain cope) கூடலூரிலிருந்து தேவிகோட்டைக்குப் புறங்காட்டி ஓடிவரும்போது, கோயிலை அரணாக வைத்துக் கொண்டான்

தெற்குக் கோபுரத்தில்




பிக்ஷாடனர்

1750ல் முராரிராவும், முசபர் சங்கும் இங்குத் தான் சந்தித்தார்கள்.

1753ல் பிரஞ்சுக்காரன் புவன கிரியைப் பிடித் துக்கொண்டு, கோயிலைப் பாசறையாக வைத்திருந்த ஆங்கிலேயரை விரட்டியடித்தான். ஆங்கிலேயர் இதனை விட்டுத் திருச்சிராப்பள்ளியை நோக்கி ஓடினர். மீட்டும் 1759ல் பிரஞ்சுக்காரனை விரட்டப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டனர். ஆனால் அது வெற்றி கரமாக முடியவில்லை. அடுத்து முயன்றால் ஆகாதன உளவோ என்ற நீதிப்படி ஆங்கிலேயர் விடாமுயற்சி மேற்கொண்டதால் 1760ல் வெற்றியுற்றனர். பிரஞ்சுக்காரர்கள் வசம் தில்லைக் கோயில் இருந்த போது மேற்குக் கோபுர வாயில் மிகப் பலப்படுத்தப் பெற்றது.

1780ல் 2-வது மைசூர் யுத்தத்தில் ஸர் ஹறயர் ஹறூட் என்பவன் கோவிலைத்தாக்கி எதிரியை விரட்டி வசப்படுத்தினான், சிற்ப அழிவுக்கு இவர்கள் தாக்குதலும் ஒரு காரணமாயிற்று.

அதற்குப் பின், தில்லைவாழந்தணர்களுடைய அன்பின் பெருக்காலும், தென்னாட்டுப் பெருமக்களின் இடையீடில்லாத அன்பின் மேன்மையாலும் தில்லைக் கோயில் என்றும் நின்று நிலவி இன்னருள் நிலைக்களமாக விளங்கிவருகிறது.



சமயாசாரியார் நால்வர்

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்கள்

### பண் - குறிஞ்சி

இராகம் - யதுகுலகாம்போதி] [தாளம் - திருபுடை.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின் தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி யாகத் தொருபாக
மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே. 8

கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. 10



ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்.

**பண் - காந்தாரபஞ்சமம்**

இராகம் - கேதார கௌளை] [தாளம் - சாபு.

திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிட மா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினாயருளாய் சுருங்கவெம தொல்வினையே. 1

கொட்டமேகம ழுங்குழலாளொடு
கூடினாயெரு தேறினாய்நுதற்
பட்டமேபுனைவா யிசைபாடுவ பாரிடமா
நட்டமேநவில்வாய் மறையோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவா யிவைமேவிய தென்னைகொலோ. 2

நீலத்தார்கரிய மிடற்றார்நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினார்பற்று
சூலத்தார் சுடலைப்பொடிநீறணி வார்சடையார்

சீலத்தார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழக்
கோலத்தாயரு ளாயுன காரணங்கூறுதுமே. 3

கொம்பலைத்தழ கெய்தியநுண்ணிடைக்
கோலவாண்மதி போலமுகத்திரண்
டம்பலைத்தகண் ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்தெழு காமுறுகாளையர்
காதலாற்கழற் சேவடிகைதொழ
அம்பலத்துறை வானடியார்க் கடையாவினையே. 4

தொல்லையாரமு துண்ணநஞ்சுண்டதோர்
தூமணிமிட றுபகுவாயதோர்
பல்லையார்தலை யிற்பலியேற்றுழல் பண்டரங்கா
தில்லையார்தொழு தேத்துசிற்றம்பலஞ்
சேர்தலாற்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தானெரியம்மதி லெய்தவனே. 5

ஆகந்தோயணி கொன்றையாயனல்
அங்கையாயம ரர்க்கமராவுமை
பாகந்தோய்பகவா பலியேற்றுழல் பண்டரங்கா
மாகந்தோய்பொழில் மல்குசிற்றம்பல
மன்னினாய்மழு வாளினாயழல்
நாகந்தோயரையா யடியாரை நண்ணாவினையே. 6

சாதியார்பளிங் கின்னொடுவெள்ளிய
சங்கவார்குழை யாய்திகழப்படும்
வேதியாவிகிர் தாவிழவாரணி தில்லைதன்னுள்
ஆதியாய்க்கிட மாயசிற்றம்பல
மங்கையாற்றொழு வல்லடியார்களை
வாதியாதகலுந் நலியாமலி தீவினையே. 7



வேயினார்பணைத் தோளியொடாடலை
வேண்டினாய்விகிர் தாவுயிர்கட்கமு
தாயினாயிடு காட்டெரி யாடலமர்ந்தவனே
தீயினார்கணை யாற்புரமூன்றெய்த
செம்மையாய்த்திகழ் கின்றசிற்றம்பலம்
மேயினாய்கழ லேதொழு தெய்துதுமேலுலகே. 8

தாரினார்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவா நல்ல
தேரினார்மறுகிற் றிருவாரணி தில்லைதன்னுட்
சீரினால்வழிபா டொழியாததோர்
செம்மையாலழ காயசிற்றம்பலம்
ஏரினாலமர்ந்தா யுனசீரடி யேத்துதுமே. 9

வெற்றரையுழல்வார் துவராடைய
வேடத்தாரவர்கள் உரைகொள்ளன்மின்
மற்றவருலகின் னவலம்மவை மாற்றகில்லார்
கற்றவர்தொழு தேத்துசிற்றம்பலங்
காதலாற்கழற் சேவடிகைதொழ
உற்றவருலகின் னுறுதிகொள வல்லவரே. 10

நாறுபூம்பொழில் நண்ணியகாழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறுமின்றமிழா லுயர்ந்தாருறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புக ழேந்துசிற்றம்பலத்
தீசனையிசையாற் சொன்னபத்திவை
கூறுமாறுவல்லா ருயர்ந்தாரொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

## திருநேரிசை. பண் - கொல்லி

இராகம் - நவரோஸ்]

[தாளம் - ஆதி.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா வெறிக்குஞ்சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடுமாறே. 1

ஏறனா ரேறுதம்பா லிளநிலா வெறிக்குஞ்சென்னி
ஆறனா ராறுசூடி யாயிழை யாளோர்பாக
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே. 2

சடையனார் சாந்தநீற்றர் தனிநிலா வெறிக்குஞ்சென்னி
யுடையனா ருடைதலையி லுண்பதும் பிச்சையேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
அடிகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 3

பையர வசைத்தவல்குற் பனிநிலா வெறிக்குஞ்சென்னி
மையரிக் கண்ணினாளு மாலுமோர் பாகமாகிச்
செய்யரி தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
கையெரி வீசிநின்று கனலெரி யாடுமாறே. 4

ஓதினார் வேதம்வாயா லொளிநிலா வெறிக்குஞ்சென்னிப்
பூதனார் பூதஞ்சூழப் புலியுரி யதளனார்தாம்
நாதனார் தில்லைதன்னுள் நவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகள்தாழக் கனலெரி யாடுமாறே. 5



ஓருடம் பிருவராகி யொளிநிலா வெறிக்குஞ்சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றவெம் பரமமூர்த்தி
காரிடந் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
பேரிடம் பெருகநின்று பிறங்கெரி யாடுமாறே. 6

முதற்றனிச் சடையைமூழ்கமுகிழ்நிலாவெறிக்குஞ்சென்னி
மதக்களிற் றுரிவைபோர்த்த மைந்தரைக் காணலாகு
மதத்துவண் டறையுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோ ரரவமாடக் கனலெரி யாடுமாறே. 7

மறையனார்மழுவொன்றேந்திமணிநிலாவெறிக்குஞ்சென்னி
இறைவனா ரெம்பிரானா ரேத்துவா ரிடர்கள்தீர்ப்பார்
சிறைகொணீர்த் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
அறைகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 8

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெறிக்குஞ்சென்னி
நிருத்தனார் நிருத்தஞ்செய்ய நீண்டபுன் சடைகடாழக்
கருத்தனார் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
அருத்தமா மேனிதன்னோ டனலெரி யாடுமாறே. 9

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா வெறிக்குஞ்சென்னிக்
காலனைக் காலாற்காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னுள் நவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே. 10

மதியிலா வரக்கனோடி மாமலை யெடுக்கநோக்கி
நெதியன்றோ ணெரியவூன்றி நீடிரும் பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய் தில்லைதன்னுள் மல்குசிற் றம்பலத்தே
அதிசயம் போலநின்று அனலெரி யாடுமாறே. 11

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கே னென்னைநீ யிகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல்காண்பா னடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
ஒருத்தரா லறியவொண்ணாத் திருவுரு வுடையசோதீ
திருத்தமாந் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தனைக் காணவேண்டி நேர்பட வந்தவாறே. 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகில்
நாட்டினே னின்றன்பாத நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளைபாயு மல்குசிற் றம்பலத்தே
கூட்டமாங் குவிமுலையாள் கூடநீ யாடுமாறே. 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தைநீ யருளிச்செய்யா யாதுநான் செய்வதென்னே
செந்தியார் வேள்வியோவாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அந்தியும் பகலுமாட வடியிணை யலசுங்கொல்லோ. 4

கண்டவா திரிந்துநாளுங் கருத்தினா னின்றன்பாதங்
கொண்டிருந் தாடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
எண்டிசை யோருமேத்த விறைவநீ யாடுமாறே. 5

பார்த்திருந் தடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே யென்பனுன்னை மூவரின் முதல்வனென்பன்
ஏத்துவா ரிடர்கள்தீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான் வந்தவாறே. 6



பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா வடிமைசெய்ய
ஐயநீ யருளிச்செய்யா யாதியே யாதிமூர்த்தி
வையகந் தன்னின்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநுன் னாடல்காண்பான் பரமநான் வந்தவாறே. 7

மனத்தினார் திகைத்துநாளு மாண்பலா நெறிகண்மேலே
கனைப்பரா லென்செய்கேனோ கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்பலத்தே
அனைத்துநின் னிலயங்காண்பா னடியனேன் வந்தவாறே. 8

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனேநீ
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
அஞ்சொலாள் காணநின்று அழகநீ யாடுமாறே. 9

மண்ணுண்ட மாலவனு மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவேமிக்க தில்லைச்சிற் றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே. 10

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம். பண் - கொல்லி

இராகம் - நவரோஸ்] [தாளம் - திருபுடை.

திருச்சிற்றம்பலம்.

பாளை யுடைக்கமு கோங்கிப்பன்
மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயற் றில்லைதன்னுள்

ஆள வுடைக்கழற் சிற்றம்
பலத்தர னாடல்கண்டால்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்
பேய்த்தொண்டர் காண்பதென்னே. 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணிய
மூர்த்தி புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை
மணாள னுலகுக்கெல்லாம்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
றிருவடி யைக்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 2

தொடுத்த மலரொடு தூபமுஞ்
சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு
மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய
தில்லைச்சிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 3

வைச்ச பொருள்நமக் காகுமென்
றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தே னணிதில்லை
யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி
யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே. 4



செஞ்ஞின்ற நீல மலர்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள்
கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த
நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே. 5

ஊனத்தை நீக்கி யுலகறிய
வென்னை யாட்கொண்டவன்
றேனைத் தெனக்கினி யான்றில்லைச்
சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை
யுண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே. 6

தெரித்த கணையால் திரிபுர
மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
எரித்த விறைவ னிமையவர்
கோமா னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 7

சுற்று மமரர் சுரபதி
நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப்
பரவையுள் நஞ்சையுண்டான்

செற்றங் கணங்களைத் தீவிழித்
தான்தில்லை யம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 8

சித்தத் தெழுந்த செழுங்கம
லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வைரமு மாணிக்கந்
தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே. 9

தருக்கு மிகுத்துத் தன்தோள்வலி
யுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப
மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்து
மணிதில்லை யம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட
கண்கொண்டு காண்பதென்னே. 10

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

கருநட்ட கண்டனை அண்டத்
தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல்
லானைச்செந் தீமுழங்கத்



திருநட்ட மாடியைத் தில்லைக்
கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர்
கோனென்று வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தா னடியவற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு
மான்றன் றிருக்குறிப்பே. 2

கன்மன வீர்கழி யுங்கருத்
தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வாநவில் தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது
போலப் பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன்
போந்த சுவடில்லையே. 3

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடையெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோர்
பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள்
செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத்
தான் றில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன்
றோநந்தங் கூழைமையே. 5

பூத்தன பொற்சடை பொன்போன்
மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன
பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள்
பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருள
ரோவென்றன் கோல்வளைக்கே. 6

முடிகொண்ட மத்தமு முக்கணி
னோக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்தவெண்
ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்
கூத்தன் குரைகழலே. 7

படைக்கல மாகவுன் னாமத்
தெழுத்தஞ்செ னாவிற்கொண் டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப்
பும்உனக் காட்செய்கின் றேன்



துடைக்கினும் போகேன் றொழுது
வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச்
சிற்றம் பலத்தரனே. 8

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ
றணிந்து புரிசடைகண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந்
துழலும் விடங்கர்வேடச்
சின்னத்தி னான்மலி தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
என்னத்த னாடல்கண் டின்புற்ற
தாலிவ் விருநிலமே. 9

சாட வெடுத்தது தக்கன்றன்
வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை
நாரண னான்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட்
சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன்றோ
நம்மை யாட்கொண்டதே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறுந்தொகை

இராகம்-நாதநாமக்கிரியை.] [தாளம்-சாபு.

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை

என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே 1

அரும்பற் றப்பட வாய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனந்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொண்டன்றா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி யிருப்பனென் னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

ஒருத்த னாருல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே. 7



விண்ணி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த விருவர்க் கறிவொணாக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத்
துண்ணி றைந்துநின் றாடு மொருவனே. 8

வில்லைவட் டப்பட வாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதின் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லைவட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே. 9

நாடி நாரண னான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே. 10

மதுரவாய்மொழி மங்கையொர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 1

தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய வொருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனே. 2

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந் துய்வனே. 3

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலா மாளக் கொடுத்தஎன்
ஆணி யைச்செம்பொ னம்பலத் துண்ணின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனே. 4

பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்த னைமுளை வெண்மதி சூடியைச்
சித்த னைச்செம்பொ னம்பலத் துண்ணின்ற
அத்த னையடி யேன்மறந் துய்வனே. 5

நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கு மறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத்
தாதி யையடி யேன்மறந் துய்வனே. 6

மைகொள் கண்டனெண் டோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம் பலத்தெங்கள்
ஐய னையடி யேன்மறந் துய்வனே 7



முழு தும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியுந் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந் தெங்ஙன முய்வனே. 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாவமு தைமறந் துய்வனே. 9

ஓங்கு மால்வரை யேந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந் துய்வனே. 10

திருச்சிற்றம்பலம்.

## பெரிய திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை
யருமறையி னகத்தானை யணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கு மலந்தார்க்கு மருள்செய் வானை
யாரூரும் புகுவானை யறிந்தோ மன்றே

மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2

கருமானி னுரியதளே யுடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப வனல்கை யேந்தி
வருமானத் திரடோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
வமரர்கண முடிவணங்க வாடு கின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்க டொழுதேத்து மப்பன் றன்னை
யமரர்கடம் பெருமானை யரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் றன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணுந்
திருந்தொளிய தாரகையுந் திசைக ளெட்டுந்
திரிசுடர்க ளோரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையை யடியார்த மல்ல றீர்க்கு
மருமருந்தை யகன்ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 5



கரும்பமரு மொழிமடவாள் பங்கன் றன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் றன்னை
யருமறையோ டாறங்க மாயி னானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் னூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கைமிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 6

வரும்பயனை யெழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கண் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
வம்மானை யலைகடனஞ் சயின்றான் றன்னைச்
சுரும்பமருங் குழல்மடவார் கடைக்க ணோக்கிற்
றுளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 7

காரானை யீருரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சியே கம்பன் றன்னை
ஆரேனு மடியவர்கட் கணியான் றன்னை
யமரர்களுக் கறிவரிய வளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை யெண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பான்மதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் றன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் றன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்

குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் றன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பா னின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

திருச்சிற்றம்பலம்.

## புக்க திருத்தாண்டகம்

இராகம் - அரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்.

மங்குன் மதிதவழு மாட வீதி
மயிலாப்பி லுள்ளார் மருக லுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றா லத்தார்
குடமூக்கி லுள்ளார்போய்க் கொள்ளம் பூதூர்த்
தங்கு மிடமறியார் சால நாளார்
தருமபுரத் துள்ளார் தக்க ளூரார்
பொங்குவெண் ணீறணிந்து பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.



நாக மரைக்கசைத்த நம்ப ரிந்நாள்
நனிபள்ளி யுள்ளார்போய் நல்லூர்த் தங்கிப்
பாகப் பொழுதெலாம் பாசூர்த் தங்கிப்
பரிதி நியமத்தார் பன்னி ருநாள்
வேதமும் வேள்விப் புகையு மோவா
விரிநீர் மிழலை யெழுநாள் தங்கிப்
போகமும் பொய்யாப் பொருளு மானார்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 2

துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலும்
தூமதியும் பாம்பு முடையார் போலும்
மறங்காட்டி மும்மதிலு மெய்தார் போலும்
மந்திரமுந் தந்திரமுந் தாமே போலும்
அறங்காட்டி யந்தணர்க்கன் றால நீழல்
அறமருளிச் செய்த வரனா ரிந்நாள்
புறங்காட் டெரியாடிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 3

வாரேறு வனமுலையாள் பாக மாக
மழுவாள் கையேந்தி மயானத் தாடிச்
சீரேறு தண்வயல்சூ ழோத வேலித்
திருவாஞ் சியத்தார் திருநள் ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த
கண்விளங்கு நெற்றியார் கடல்நஞ் சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 4

காரார் கமழ்கொன்றைக் கண்ணி சூடிக்
கபாலங்கை யேந்திக் கணங்கள் பாட
ஊரா ரிடுபிச்சை கொண் டுழலும்
உத்தமராய் நின்ற வொருவ னார்தாம்

சீரார் கழல்வணங்குந் தேவ தேவர்
திருவாரூர்த் திருமூலட் டான மேயார்
போரார் விடையேறிப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 5

காதார் குழையினர் கட்டங் கத்தர்
கயிலாய மாமலையார் காரோ ணத்தார்
மூதாயர் மூதாதை யில்லார் போலும்
முதலு மிறுதியுந் தாமே போலும்
மாதாய மாதர் மகிழ வன்று
வன்மதவே டனுடலங் காய்ந்தா ரிந்நாள்
போதார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 6

இறந்தார்க்கு மென்று மிறவா தார்க்கும்
இமையவர்க்கு மேகமாய் நின்று சென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவா தார்க்கும்
பெரியான்றன் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்தென்று மருவார் போலும்
மறைக்காட் டுறையு மழுவாட் செல்வர்
புறந்தார் சடைதாழப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 7

குலாவெண் டலைமாலை யென்பு பூண்டு
குளிர்கொன்றைத் தாரணிந்து கொல்லே றேறிக்
கலாவெங் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கையோ டனலேந்திக் காடு றைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்ட மாட
நிறைவயல்சூழ் நெய்த்தான மேயசெல்வர்
புலால்வெண் டலையேந்திப் பூதஞ் சூழப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 8



சந்தித்த கோவணத்தர் வெண்ணூன் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோ மிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையி லென்கொலோ வேந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமு மெல்லா
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 9

பாதங்க ணல்லார் பரவி யேத்தப்
பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர் தங்கள்
ஏதங்கள் தீர இருந்தார் போலும்
எழுபிறப்பு மாளுடைய ஈச னார்தாம்
வேதங்க ளோதியோர் வீணை யேந்தி
விடையொன்று தாமேறி வேத கீதர்
பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. 10

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
யோதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

**பண் - குறிஞ்சி**

இராகம் - **யதுகுலகாம்போதி**] [தாளம் - **திருபுடை.**

*திருச்சிற்றம்பலம்.*

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்தில் தமருகமும்
எரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்றாற்போ
லன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுந் திருவி னாரை
ஓராது தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான
பரிசொழிந்து நாளு முள்கிப்
பிரியாத அன்பராய்ச் சென்றுமுன்
அடிவீழுஞ் சிந்தை யாரைத்



தரியாது தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 3

கருமையார் தருமனார் தமர்நம்மைக்
கட்டியகட் டறுப்பிப் பானை
அருமையாந் தன்னுலகந் தருவானை
மண்ணுலகங் காவல் பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 4

கருமானி னுரியாடை செஞ்சடைமேல்
வெண்மதியக் கண்ணி யானை
உருமன்ன கூற்றத்தை யுருண்டோட
உதைத்துகந் துலவா இன்பந்
தருவானைத் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே யுள்ளமே
யொழிகண்டா யூன்க ணோட்டம்
எத்தாலுங் குறைவில்லை யென்பர்காண்
நெஞ்சமே நம்மை நாளும்
பைத்தாடு மரவினன் படர்சடையன்
பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா
யிரவர்க்கு மூர்த்தி யென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார்
பாவமும் வினையும் போக
விட்டானை மலையெடுத்த இராவணனைத்
தலைபத்து நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே
கருதுமா கருதுகிற்றார்க்
கெற்றாலுங் குறைவில்லை யென்பர்காண்
உள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ்
செய்மனமே நம்மை நாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய
சாக்கியர்க்கு மூடம்வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 9

பாரூரு மரவல்கு லுமைநங்கை
யவள்பங்கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்



ஆரூரன் தம்பிரா னாரூரன்
மீகொங்கி லணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்
றம்பலத்தே பெற்றா மன்றே. 10

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

இந்திரிய வயமயங்கி
யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே. 1

வினைப்பிறவி யென்கின்ற
வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிது மாட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை
யம்பலத்தே கண்டேனே. 2

திருச்சிற்றம்பலம்

# திருக்கோவையார்

திருச்சிற்றம்பலம்.

உணர்ந்தார்க் குணர்வரி யோன்தில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்
செவ்வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும்
போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல்
போல வளர்கின்றதே. 1

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந் தெய்தியதே. 2

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை
பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்
தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற்
றியாவர்க்கு மூதியமே. 3

திருச்சிற்றம்பலம்.



# திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே சசிகண்டா சிகண்டா
சாமகண்டா அண்ட வாணா
நற்பெரும் பொருளா யுரைகலந் துன்னை
யென்னுடை நாவினால் நவில்வான்
அற்பனேன் னுள்ளத் தளவிலா வுன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ
கற்பமா யுலகா யல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே. 3

திருச்சிற்றம்பலம்.

௯௨

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
    வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
    புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
    கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
    பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
    பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
    மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
    பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தா ரமரர் குழாத்தில்
    அணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
    இரவியு மிந்திரனுந்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
    திசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
    பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.





நிருத்தசபையில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி

—பக்கம் 14



நிருத்தசபையில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தி

—பக்கம் 14

# திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்.

உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொற் றிருமன்றுள் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில்வைத் தேனே.

மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே.

ஆதிபரன் ஆட அங்கைக் கனலாட
ஓதுஞ் சடையாட உன்மத்த முற்றாடப்
பாதி மதியாடப் பாரண்ட மீதாட
நாதமோ டாடினன் நாதாந்த நட்டமே.

ஆடிய காலும் அதிற்சிலம் போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே.

கூத்தன் கலந்திடுங் கோல்வளை யாளொடுங்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஆனந்தம்
கூத்தன் கலந்திடுங் கோதிலா ஞானத்துக்
கூத்தனுங் கூத்தியுங் கூத்ததின் மேலே.

திருச்சிற்றம்பலம்

# பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மானடஞ்செய் வரதர் பொற்றாள்தொழ. 2

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புட னடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி. 3

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றோதி யாரரு ளாதலி னஞ்செழுத்
தோதி யேறினார் உய்ய உலகெலாம். 4

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம். 5

திருச்சிற்றம்பலம்.



# திருப்புகழ்

நீல மாமுகில் போலும் வார்குழ
லார்கள் மாலைது லாவு வேல்கணை
நீள வாள்விழி பார்வை காதிரு குழையாட
நீடு மார்பணி யாட வோடிய
கோடு போலிணை யாட நூலிட
நேச டாளித சோலை மாமயி லனவேகிக்
காலி னூபுர வோசை கோவென
ஆடி மால்கொடு நாணி யேவியர்
காய மோடணு பாகு பால்மொழி விலைமாதர்
காத லாயவ ரோடு பாழ்வினை
மூழ்கி யேழ்நர காழு மூடனை
காவ ரோதய மாசி வாபதம் அருள்வாயே
கோல மாமயி லேறி வார்குழை
யாட வேல்கொடு வீர வார்கழல
கோடிகோடிடியோசைபோல்வட வரைதூளாய்க்
கோகொ கோவென ஆழி பாடுகள்
தீவு தாடசு ரார்கு ழாமொடு
கூள மாகவி ணோர்கள் வாழ்வுற விடும்வேலா
நாலு வேதமு டாடு வேதனை
யீண கேசவ னார்ச கோதரி
நாதர் பாகம் விடாள்சி காமணி உமைபாலா
ஞான பூமிய தான பேர்புலி
யூரில் வாழ்தெய்வ யானை மாதொடு
நாலு கோபுர வாசல் மேவிய பெருமாளே

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு வருள் நினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செயும்பொற் சழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

## க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

சீரார் திருச்சிற் றம்பலத்துள்
செம்பொன் மேலைக் கோபுரத்தே
திகழு மூவா யிரர்பூசை
செய்யு மாறு முகவேளைக்
காரார் கூந்தற் சிவகாமி
காண வருளா னந்தநடங்
காட்டும் பரம சிவனருளுங்
கருணை நிதியைத் தனிபுரக்க
நீரார் வெண்டா மரையாளும்
நெடியோன் செந்தா மரையாளும்
நிறைவாஞ் சத்த மாதாவும்
நினைக்குந் துர்க்கை மாதாவும்
பாரார் தரிக்கு முகங் கரங்கள்
பரவா யிரமீ ராயிரமேற்
பகரு மூவா யிரப்வீர
பத்ர காளி யன்னையுமே.



## பெருமாள் திருமொழி

அங்கணெடுமதிள் புடைசூழ் அயோத்தி யென்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்துக்கு ஓர்விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னை
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள் தனிமுதல்வனை எம்பெருமான் தன்னை
என்றுகொலோ! கண்குளிரக் காணும் நாளே. 1

தனமருவுவைதேகிபிரியலுற்றுத்
தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி
வனமருவுகவியரசனகாதல்கொண்டு
வாலியைக்கொன்று இலங்கைநகரரக்கர்கோமான்
சினமடங்கமாருதியால்சுடுவித்தானைத்
தில்லைநகர்த்திருச்சித்ர கூடந்தன்னுள்
இனிதமர்ந்த அம்மானை இராமன்தன்னை
ஏத்துவாரிணையடியேஏத்தினேனே. 2

தில்லைநகர்த்திருச்சித்ர கூடந்தன்னுள்
திறல்விளங்குமாருதியோடு அமர்ந்தான் தன்னை
எல்லையில்சீர்த்தயரதன்தன்மகனாய்த்தோன்றிற்று
அதுமுதலாத்தனுலகம்புக்கதீறாக்
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள்
கோழியர்கோன் கொடைக்குலசேகரன் சொற்செய்த
நல்லியலின் தமிழ்மாலைபத்தும்வல்லார்
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. 3

# பெரிய திருமொழி

ஊன்வாட உண்ணாது உயிர்காவலிட்டு
உடலில்பிரியாப்புலனைந்தும்நொந்து
தாம்வாடவாடத்தவம்செய்யவேண்டா
தமதா இமையோருலகாளகிற்பீர்
கானாடமஞ்ஞைககணமாடமாடே
கயலாடுகானீர்ப்பழனமபுடைபோய்
தேனாடமாடக்கொடியாடுதில்லைத்
திருச்சித்ரகூடம்சென்றுசேர்சேர்மின்களே. 1

செருநீலவேல்கண்மடவார்திறத்துச்
சினத்தோடுநின்றுமனத்தால்வளர்க்கும்
அருநீலபாவம்அகலபுகழ்சேர்
அமரர்க்கும்எய்தாத அண்டத்து இருப்பீர்
பெருநீர்நிவாஉந்துமுத்தம்கொணர்ந்து
எங்கும்வித்துமவயலுள்கயலபாய்ந்துஉகளத்
திருநீலம்நின்றுதிகழ்கின்றதில்லைத்
திருச்சித்ரகூடம்சென்றுசேர்மின்களே. 2

பண்டுஇவன்வெண்ணெயுண்டானென்று
ஆய்ச்சியர்கூடி இழிப்ப
எண்திசையோரும்வணங்க
இணைமருதூடுநடந்திட்டு
அண்டரும்வானத்தவரும்
ஆயிரநாமங்களோடு
திண்திறல்பாடவருவான்
சித்திரகூடத்துள்ளானே. 3



# கல்வெட்டிற்கண்ட பாடல்கள்.

## குந்தவை தில்லைக் கோயில் பொன்வேய்ந்தது

நானிலத்தை முழுதாண்ட சயதரற்கு
நாற்பத்து நாலா மாண்டில்
மீனநிகழ் நாயிற்று வெள்ளிபெற்ற
வுரோகிணிநா ளிடபப் போதாற்
றேனிலவு பொழிற்றில்லை நாயகர்தங்
கோயிலெலாஞ் செம்பொன் வேய்ந்தாள்
ஏனவரும் தொழுதேத்து மிராசராசன்
குந்தவைபூ விந்தை யாளே.

## [1] சுந்தரபாண்டியன் துலாபாரஞ்செய்தது

இனவரிக் கிம்புரி வெண்பிறைக்
கோட்டிகல் வெங்கடுங்கட்
சினமத்த வெங்கரிச் சுந்தரத்
தென்னவன் றில்லைமன்றில்
வனசத் திருவுடன் செஞ்சொற்
றிருவை மணந்தொக்கும்
கனகத் துலையுடன் முத்தத்
துலையிற் கலந்ததுவே.

## [2] சுந்தரபாண்டியன் செய்தபோர்

வட்ட வெண்குடை மன்னர் தம்புகல்
கொண்டு மாமுடி கொண்டுபோர்

[1] S.I.I. Vol. VI. P. 189. [2] ஷை Vol. No. 618, 19.

மாறு கொண்டெழ போசளன்றனை
　　கொண்டு வாணன் வனம்புகத்
தொட்ட வெம்படை வீரன் வென்றி
　　புனைந்த சுந்தர மாறன்முன்
சூழ விட்ட தெலுங்கர் சேனை
　　துணித்து வென்றவெங் களத்துமேல்
விட்ட வெம்பரி பட்ட போதெழு
　　சோரி வாரியை யொக்குநேர்
மேன்மி தந்தநி ணப்பெ ருந்திரள்
　　வெண்ணு ரைத்திர ளொக்குமுன்
பட்ட வெங்கரி யந்த வாரி
　　படிந்த மாமுகி லொக்கவீழ்
பருமணிக்குடை யங்கு வந்தெழு
　　பருதி மண்டில மொக்குமே.

காரேற்ற தண்டலைக் காவிரி நாடனைக் கானுலவுந்
தேரேற்றி விட்டசெழுந்தமிழ்த் தென்னவன் சென்றெதிர்ந்து
தாரேற்ற வெம்படை யாரியர் தண்டு படத்தனியே
போரேற்ற நின்ற பெருவார்த்தை யின்னும்பதுவார்த்தையே

பண்பட்டமென் மொழிப்பைந்தொடி கொங்கை பரக்கவைவேற்
கண்பட்ட முத்த வடங்கண்டுங் காக்கிலன காடவர்கோன்
எண்பட்ட சேனை யெதிர்பட் டொழுக வெழுந்தபுண்ணீர்
விண்பட் டலையப் படைதொட்ட சுந்தர மீனவனே.

---

## சேர்க்கை

### பக்கம் 4

இத்தலம் மிகத் தொன்மையானதென்பதைச் சிற்றம்பலமும் பொன்னம்பலமும் மரத்தாற்கட்டப் பெற்றுள்ளமை நன்கு அறிவிக்கும். பல்லவர்கண்ட குகைக்கோயிலுக்கும், கற்கோயிலுக்கும் முற்பட்டதென்பது குறிப்பு.

### பக்கம் 5

இரணியவர்மச்சக்ரவர்த்தி ஐந்தாம்நூற்ருண்டின் முற்பகுதியிலிருந்தவரென்று திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் கூறுவார்கள். வீரசோழனென்பது முதற்பராந்தகனையும் அரிவரித்தேவர் என்பது அவன்மகனுகிய அரிஞ்சயனையும் குறிப்பதென்னலாம்.

### பக்கம் 9

வீதிகளில் அம்மாபேட்டைதெரு எனவழங்குவதற்கு 'கூத்தப்பிரானுர் திருவீதி' என்றபெயர் முன் வழங்கியதாகத்தெரிகிறது. வேங்காங்தெரு என்று இன்று வழங்குவது வேங்கைக்காலன்தெரு என்பதின் திரிபாகும். செங்கழுநீர்ப்பிள்ளையார்கோயில் தெரு 'இராஜாக்கள் தம்பிரான்தெரு' என்றும்,

மாலைக்கட்டித்தெரு 'புகழாபரணர்திருவீதி' என்றும் அக்காலத்து வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

பக்கம் 14

நரமுகப்பிள்ளையார்கோயில் குபேரன்கோயில் என்றும்; இன்று பிள்ளையாராக வழங்கும் திருவுருவம் குபேரனுருவமென்றும் செவிவழிச்செய்தி கூறுகிறது. ஆனால் வடவீதியில் இல்லாமல் தெற்கு வீதியிலிருப்பது இக்கருத்தை வலியுறுத்தவில்லை.

பக்கம் 15

புலிமடு சூலதீர்த்தமென வழங்கப்பெற்றதென்றும், புலிக்கால்முனிவர் செப்பஞ் செய்தமையின் இப்பெயர்பெற்றதென்றும் மான்மியம் கூறும்.

பக்கம் 16

பிரமதீர்த்தக் கரையில் மறைஞானசம்பந்தருடைய சமாதி யிருக்கிறது. இதன் பின்பக்கத்தில் ஒரு சிவாலயமும் உள்ளது. அதிலுள்ள இறைவனை பீமேசுவரமுடை நாயனார் என்று கல்வெட்டுக் கூறுகிறது. இது மூன்றாம்சிம்மவர்மனது இரண்டாவது மகனாகிய பீமவர்மனது திருப்பணியாக இருக்கலாமோ என்று கருத இடமுண்டு. இது சிங்காரத்தோப்பென இப்போது வழங்குகிறது.



பாசமறுத்ததுறை என்பதும் சிதம்பரத்தைச் சார்ந்த பத்துத் தீர்த்தங்களில் ஒன்றாகும். இது கிள்ளைக்குக் கிழக்கேயுள்ள கடல்.

பக்கம் 17

கிழக்குக் கோபுரமும், தெற்குக் கோபுரமும், கோப்பெருஞ்சிங்கனால் கட்டப்பட்டனவென்று சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

வெளிப்புறமதில் நாயக்கமன்னர்களாலும் சீர்திருத்தம்பெற்றது போலும். அதனால் வீரப்ப நாயக்கர் திருமதில் என்று இப்போது வழங்கி வருகின்றது.

பக்கம் 19

சண்டேசுரர் ஆலயம்:- கனகசபையின் கீழ்ப் பக்கத்துப் பரமானந்த கூபத்திற்கெதிரில் இருக்கிறது. இதில் நான்முகத்தோடு ஒரு சண்டேசுரரும், ஒருமுகத்தோடு ஒரு சண்டேசுரரும் எழுந்தருளியிருக்கின்றனர். நான்குமுகங்களோடு இருப்பவரை பிரமன் என்றும், பிரமனே சண்டேசபதவிபெற்றாரென்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் பிரமனுக்குச் சண்டேசபதவி யளிக்கப்பட்டதாக எந்தவரலாறும் காணப்பெறவில்லை. அல்லாமலும் விசார சருமராகிய சண்டேசுரர் (பெரியபுராணம்) சண்டேசப் பதவி பெற்றவரே. அப்பதவியில் இறைவனருளால்

என்றுமிருப்பவர் நான்கு திருமுகங்களை யுடைய சண்டேசரே யென்று சிவாகமங்கள் தெளிவுறக் கூறுகின்றன. இதனை,

रुद्राग्निप्रभवं चण्डं कज्जलाभं भयानकम् ।
शूलटङ्कधरं रौद्रं चतुर्वक्त्रं चतुर्भुजम् ॥
मुखोद्गीर्णमहाज्वालं रक्तद्वादशलोचनम् ।
जटामकुटखण्डेन्दुमण्डितं फणिकङ्कणम् ॥
व्यालयज्ञोपवीतं च साक्षसूत्रकमण्डलुम् ।
श्वेतपद्मासनासीनं भक्तिप्रह्वार्तिनाशनम् ॥

எனவரும் சண்டேசுரர் தியான சுலோகங்கள் நன்கு அறிவிக்கும்.

**பக்கம் 22**

பாண்டியநாயகம்கோயிற்சித்திரங்கள் இரண்டு மூன்று ஆண்டுகட்குமுன் எழுதப்பெற்றவை. இதனைத் திருப்பணி செய்வித்துச் சித்திரங்களையும் எழுதுவித்தவர், அவ்வூர் காசுக்கடை வணிகர், திரு. இரத்தினசாமிச் செட்டியார் அவர்கள்.

நவலிங்கம் கோயில் 'திருத்தொண்டத்தொகை ஈச்சரம்' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றது. இக்கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவம் அமைக்கப்பெற்றதாகக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இதனைப்பற்றிய முழுவிபரம் இந்நூல் 136ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.



**பக்கம் 24**

சிவகங்கைக்கு நடராஜர் அபிஷேகங்கள் ஆறிலும், அபிஷேகம் நடைபெறும்.

சித்சபைக்குள் இறைவன் சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் என்னும் மூவகைத் திருமேனியுடனும் எழுந்தருளியிருக்கின்றார். சகளத்திருமேனி நடராசத்திருவுரு. நிஷ்களத்திருமேனி இரகசியம். சகளநிஷ்களத் திருமேனி ஸ்படிகலிங்கம். அவைகளுள் ஸ்படிகலிங்கத் திருமேனி அழகியதிருச்சிற்றம்பல முடையாரென்றும், திருவம்பல முடையாரென்றும் வழங்கும். இவர்களேயன்றி இரத்தினசபாபதியாகிய மரகத நடராஜாவும், ஸ்வர்ணகால பைரவரும் காட்சி அளிக்கின்றனர்.

**பக்கம் 25**

பொன்னோட்டில் பஞ்சாக்ஷரம் எழுதி வேய்ந்ததை இந்நூல் 112ம் பக்கத்தில் 'தில்லையுலா' விளக்கத்திற் காண்க.

**பக்கம் 26**

கனகசபையின் வடக்குப் பிராகாரத்தில் திருச்சுற்றுமாளிகையின் மேற்பக்கத்து ஆகாயலிங்கம் இருக்கிறது.

**பக்கம் 27**

நிருத்தசபை, எதிரம்பலம் எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகிறது.

திருமூலநாதர் கோயிலின் மேற்குப் பிராகாரத்தின் மேல் தளத்தில் அஷ்டநாகபந்தம் ஒன்று எழுதப்பெற்றிருக்கின்றது. அதில் ஒரு வெண்பா அடைக்கப்பெற்றுள்ளது. அது வருமாறு:-

"தில்லைத் திருமூலத் தேவர் அணியரவே
கல்வளைத்தே நீறுபடக் காத்தனையாய்—செல்வர்பணி
பூண்டு புகழ் தொண்டர் பூளைப்பரனேனை
நீண்டு விடமேறு திரு."

**பக்கம் 28**

ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாளாதலின் தேவபூஜையாக மார்கழித் திருவாதிரை அபிஷேகம் விடியற்காலமாகவும், மாசிச்சதுர்த்தசி அபிஷேகம் காலசந்தியாகவும், சித்திரைத்திருவோண அபிஷேகம் உச்சிக்காலமாகவும், ஆனிஉத்தர அபிஷேகம் திருவந்திக்காப்பாகவும், ஆவணிச்சதுர்த்தசி அபிஷேகம் இரண்டாங்காலமாகவும், புரட்டாசிச்சதுர்த்தசி அபிஷேகம் அர்த்தசாமமாகவும் ஆக அபிஷேகங்கள் ஆறு நடைபெறுகின்றன. இதனை,

"சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்தரமாம்
சத்ததனு வாதிரையும் சார்வாகும்—பத்தி



நிருத்தசபை

—பக்கம் 27

மாசியரி கன்னி மருவு சதுர்த்தசிமன்(று)
ஈசரபி டேகதின மாம்."

என்றபாடல் அறிவிக்கும்.

நடராஜப்பெருமானுக்கு (பால் நைவேத்தியம்) திருவனந்தல், காலசந்தி, இரண்டாங்காலம், உச்சிக்காலம், திருவந்திக்காப்பு, (சாயரக்ஷை) இரண்டாங் காலம், அர்த்தயாமம் என்று ஏழுகாலபூஜைகள் நடைபெறுகின்றன. அர்த்தயாமபூசை அர்த்தயாம அழகர் வழிபாட்டோடு முடிவுறும்.

**பக்கம் 29**

நடராஜப் பெருமானுடைய திருவடிவத்தில் அமைந்துள்ள ஐந்தெழுத்து விளக்கத்தை உண்மை விளக்கம்,

"ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

"சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்."

என இவ்வாறு அறிவிக்கிறது.

இறைவனது தாண்டவம் எழுவகையென்றும், ஒன்பதுவகையென்றும் நூல்களிற் கூறப்படுகின்றன. அவற்றுள், எழுவகைத்தாண்டவங்களாவன:- காளிகாதாண்டவம், கௌரிதாண்டவம், சந்தியாதாண்டவம், சங்காரதாண்டவம், திரிபுரதாண்டவம், ஊர்த்துவதாண்டவம், ஆனந்ததாண்டவம் என்பன.

அவற்றுள் ஆனந்ததாண்டவமே நடராஜப் பெருமான் ஆடுவது. இது எழுவகைக்கூத்திற்கும் அப்பாற்பட்டது என்றும் பஞ்சகிருத்ய பரமாநந்த தாண்டவம் எனப் பெயர்பெறும் என்றும், சாத்திர அறிஞர் கூறுவர்.

நடராஜப்பெருமானுடைய திருவுருவத்தை இருபத்தைந்து மாகேச்சுரமூர்த்தங்களுள் ஒன்றாகிய 'சபாபதி' என்றும், அதிகாரசிவமாகிய மாகேச்சுர மூர்த்தங்களுக்கும் அப்பாற்பட்ட போகசிவமாகிய 'சதாசிவமூர்த்தம்' என்றும், 'சதாசிவமூர்த்தியின்' மூர்த்தாவின் விளங்குவதாதலின் போகசிவத்திற்கும் மேலானது என்றும் சமயநுட்பந்தெரிந்த பெரியோர்கள் கூறுகின்றனர். இதன் ஏனையவிளக்கங்களையும், நடராஜமூர்த்தி போகசிவத்திற்கும் அப்பாற்பட்டவர் என்பதையும் 64ம் பக்கத்தில் காண்க.

**பக்கம் 32**

தில்லைக் கோவிந்தராஜர் சயனதிருக்கோலத்தைப்பற்றித் திருக்கோவையாரில் மணிவாசகப் பெருந்தகையார்,



"புரங்கடந் தான்அடி காண்டான் புவிவிண்டு புக்கறியா(து)
இரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் ஈரடிக்(கு) என்இரண்டு
கரங்கள்தந் தானொன்று காட்டமற் றாங்கதும் காட்டிடென்று
வரங்கிடந்தான் தில்லை யம்பல முன்றிலம் மாயவனே"

என்று கூறுகின்றார்கள். இதனால் மணிவாசகர் காலத்துத் தில்லைக் கோவிந்தராஜர் கோயில் விளக்கம் பெற்றிருந்தமை புலனாகும்.

**பக்கம் 49**

முதல் இராஜராஜன்காலத்தே திருவீழிமிழலைக் கோயிலுக்குச் சிவஞானியும் திருமாளிகைத்தேவர் என்று வழங்கப்பெறுபவருமாகிய ஜயந்தன் என்ற பெரியவர் விளக்குவைத்தார் என்று செந்தமிழ் 3ந் தொகுதியில் 359-60ம் பக்கங்களில் கோபிநாத ராயரவர்களுங் கூறியுள்ளார்கள்.

**பக்கம் 59**

உமாபதிசிவாசாரிய சுவாமிகளுடைய திருமாளிகை இப்போது மாலைகட்டித்தெருவில் திருவாவடுதுறை மடமாக இருக்கிறது.

**பக்கம் 64**

வெள்ளியம்பலவாண சுவாமிகள் தாம் அருளிய ஞானவரணவிளக்கத்தில் பறப்பைப்படுத்தெங்கும்

பசுவேட்டெரியோம்பும் சிறப்பர்களாகிய தில்லைவாழந்தணர்கள், தில்வாரண்யமாகிய தக்ஷிணாரண்யத்திற்கு மகுடாகி தக்ஷிண தந்திரங்களே விதிநூல்களாகமேற்கொண்டார்களென்றுகூறி, மகுடாகமத்திலிருந்து பிரமாணங்காட்டுகிறார்கள்.

"பிரமா, விஷ்ணு, உருத்திரன், ஈசுரன், சதாசிவன், பரவிந்து, பரநாதம், பராசத்தி, சிவன் ஆகிய இந்த ஒன்பதுதத்துவங்களும் எந்தவஸ்துவினிடத்தில் லயத்தை யடைகின்றனவோ அந்த வஸ்து துவாதசாந்தத்தில் விளங்குவதாகவும், பரமானந்த தாண்டவம் புரிவதாகவும் உள்ளது. அந்த தாண்டவமூர்த்தியைக்காட்டிலும் மேலானபொருள் இல்லையென்பது உறுதி. ஆகையினாலே ஞானிகள் எல்லாவற்றையும்விடுத்து, போகமோட்சமிரண்டையும் ஒருங்கே எய்துவதற்காக, ஆனந்த தாண்டவமூர்த்தியைத்தியானிக்கிறார்கள். பஞ்சகிருத்யகாரணராக ஒளிவடிவாக எப்பொழுதும் நடனஞ்செய்கிற பரம்பொருள் இதுதான் என்று மகுடத்திலும் வாதுளோத்தரத்திலும் கூறப்பெற்றுள்ளது என்று ஞானந்தபரிபாஷை பேசுகிறது" என்றும் அதில் குறித்துள்ளார்கள்.

**பக்கம் 82**

"மல்லன் ஞாலம் புரக்கின்றார் மணிமா மவுலி புனைவதற்குத்
தில்லை வாழந் தணர்தம்மை வேண்ட அவருஞ் செம்பியர்தம்



தொல்லை நீடுங் குலமுதலோர்க் கன்றிச் சூட்டோம் முடியென்று
நல்கா ராகிச் சேரலன்றன் மலைநா டணைய நண்ணுவார்."

என்பது கூற்றுவநாயனார் புராணம்.

**பக்கம் 83**

கோச்செங்கணனது பிறந்தநாள் கார்த்திகை மாதம் மிருகசீரிஷநக்ஷத்திரமென்றும், அதில்விழா நடத்தியதாகவும், கல்வெட்டுக் குறிப்பு அறிவிக்கின்றது.

**பக்கம் 85**

திருமுறைகண்ட விநாயகர் இரண்டாம் பிராகாரத்து, மேலவாசலின்எதிரில், உச்சியிலிருக்கிறார். இவர், உச்சிப்பிள்ளையாரென இக்காலத்துவழங்கப் பெறுகின்றார்.

**பக்கம் 86**

தில்லையைப்பற்றிய வடமொழி நூல்கள் பல இருப்பனவாகத் தெரிகின்றன. அவைகளுட் சில வருமாறு:-

சிதம்பர ரகஸ்யம்
ஸம்மேளன பிரஸ்தாரம்
ரகஸ்யப்ரணவப்ராகாரலட்சணம்
மகாரகஸ்யஸ்தானலட்சணம்

தில்லைவன மான்மியம்
வியாக்ரபுர மான்மியம்
புலியூர் மான்மியம்
புண்டரிகபுர மான்மியம்
சிதம்பர மான்மியம்
ஏமசபாநாத மான்மியம்
ஆகாசபைரவ கல்பம்
சிதம்பரரகஸ்ய மந்திர உபாசனைகற்பம்
சிந்தாமணி மந்திரம்
சிதம்பர பஞ்சாட்சரகற்பம்
சித்சபா கைங்கர்ய ஸ்வதந்த்ரஸக்தி
சித்சபா ஸம்புரோக்ஷண சூத்திரம்
சித்சபா ஸம்புரோக்ஷண கற்பம்
சித்சபா ஸம்புரோக்ஷண கவிதை
சித்சபா ஸம்புரோக்ஷண பாஷ்யம்
சிதம்பர கற்பம்
சித்சபாப்ரதிஷ்டா மான்மியம்
நடராஜ ஸகஸ்ரநாம ஸ்தோத்ரம்
சிதம்பரகவசம்
சிதம்பரதீக்ஷித ஸ்தோத்ரம்
சிதம்பராஷ்டகம்
நடேசாஷ்டகம்
நடேசஸ்தோத்ரம்
நடேச சிந்தாமணி
நடராஜ திக்பந்தனம்
சிதானந்தாஷ்டக ஸ்தோத்ரம்
சிதம்பரேஸ்வராஷ்டகம்



சிதம்பரேஸ்வர புஜங்காஷ்டகம்
சிதானந்த சாரம்
நடேச விஜயம்
பதஞ்சலி சரித்திரம்
சபாபதிவிலாச நாடகம்.

**பக்கம் 117**

குகைநமச்சிவாயர் என்பவரின் மாணவர் குருநமச்சிவாயர் என்பதை,

"தென்னருணை மருவு குகை நமச்சிவாய
தேவர்சிஷ்யன் குருநமச்சிவாயன் செய்யும்
மன்னுபணி விடையாகப் புலியூர்ச் செம்பொன்
மன்றுடையான் பூசைகொண்டு மகிழ்ந்துளானே"

என்ற சாஸனப்பாடல் அறிவிக்கும். இவர்பாடியது சிதம்பரவெண்பா என மு. இராகவையங்காரவர்கள் கூறுவர்.

**பக்கம் 122**

வரலாற்றுத்தொடர்புள்ள இடங்களில் கொற்றவன்குடி, கூத்தன்கோயில், குமாரமங்கலம், தில்லைநாயகநல்லூர்என்பனவும்கருதத்தக்கன. புவனகிரி; புவனேகவீரபுரி என்பதன் திரிபு. புவனேகவீரன் என்பது மாறவர்மன் விக்கிரமபாண்டியனுடைய விருதுப்பெயர். இப்பெயர் சடாவர்மன் சுந்தரபாண்டியனுக்கும் உள்ளதாகத் தெரிகிறது.

**பக்கம் 142**

காஞ்சிபுரம் வைகுந்தப்பெருமாள் கோயில் கர்ப்பக்கிரகத்துத் தென்புறச் சுவரில் உள்ள கல்வெட்டால் இரணியவர்மச்சக்ரவர்த்தியைப் பற்றிய வரலாற்றுண்மை வெளியாகிறது. அதாவது:-

"பல்லவவம்சம் பிரமனை முதற்கொண்டு பரம்பரையாகவருவது; அவ்வமிசத்தில் பரமேசுவரப்போத்தலரையன் என்ற ஒருவன் அரசாண்டான்; அவன் சொர்க்கம்சென்றபிறகு நாடு சீர்குலைந்தது; அதனைக்கண்டு மந்திரிகளும் மூலப்படையும்சேர்ந்து காடவகுலபதியாகிய இரணியவர்மனை அரசுதாங்க அழைக்கத்தில்லைக்குவந்தார்கள். இரணியவர்மனைக் கண்டு 'உபயகுலமும் பரிசுத்தமாகத் தாங்கள்வந்து அரசுதாங்க வேண்டுமென்று' தெரிவித்தார்கள். இரணியவர்மன் தன் குலத்தவர்களை அழைத்து 'ராஜ்யாபிஷேகம்செய்து கொள்கிறீர்களா?' எனக் கேட்டான். எல்லோரும் மறுக்கவே தன்மக்களாகிய ஸ்ரீமல்லன், ரணமல்லன், சங்கிராமமல்லன், பல்லவமல்லன் என்பவர்களை அழைத்துக்கேட்க, அவர்களுள்ளும் முதல்மூவர் மறுத்தார்கள். உடனே பல்லவமல்லனை பரமேசுவரன் நான் போவேன் எனத் தொழுது சொன்னான். அதைக்கேட்ட இரணியவர்மன் காடவகுலம் சிறக்கத் தோன்றிய சத்தியவந்தனை நம் பிள்ளை அரசு செலுத்தப் போகின்றானென்று ஒருபக்கம்மகிழ்ச்சியையும், ஒரு



பக்கம் பிரிவுத்துன்பத்தையும் அடைந்தான். அப்போது பல்லவமல்லனுக்கு வயது பன்னிரண்டு. ஆதலால் இரணியவர்மன் அவனை அனுப்பச் சம்மதியாது போகவே தரணிகொண்டகோசர் "இவன் மகாவிஷ்ணுவின் அம்சமாகத் தவம்செய்தவன்; சக்ரவர்த்தியாகக் கூடியவன்" என்று தேற்றினான். †

உடனே இரணியவர்மன் தன்மகனை அனுப்பி இருக்கவேண்டும். ஏதோ இடையில் போர்நிகழ அம்மகன் கொல்லப்பட்டான். இரணியவர்மன் இச்செய்தி அறிந்து சென்று கண்டிருக்கவேண்டும். அப்போது தரணிகொண்டகோசர் உருளுகின்ற தலையைக்காட்டி 'இது களிற்றின் தலையன்று; உன் மகன் முடித்தலை' என்றுசொல்ல, இரணியவர்மன் வருந்தினான். கண்ட தரணிகொண்ட கோசர், படை கொடுக்க, விடைபெற்றுச்சென்று, வனந்தரங்களைத் தாண்டி, அவற்றையெல்லாம் அழித்துக்கொண்டு வந்தான். இதனை அறிந்த பல்லவதிரையன் பெருஞ் சேனையோடு எதிர்வந்து இரணியவர்மனை யானைமேலேற்றிக் காஞ்சிக்கு அழைத்துவந்தனன். இதனை அறிந்த சிற்றரசர்களும், ஊரவர்களும், மூலப்படையும் எதிர்சென்று அழைத்துவந்து அரண்மனையுட் புகுவித்தனர். எல்லோருங்கூடி நந்திவர்மன் என்று பெயர்சூட்டி, அரசுரிமையேற்கச் செய்தனர். நாற்

† இதற்குமேலுள்ள சிலபகுதி சிதைவுபட்டுள்ளது. பின்வரும் நிகழ்ச்சியைக்கொண்டு தொடர்ச்சி ஊகிக்கப்படுகிறது.

படைகளை வழங்கினர். கட்டுவாங்கத்துவஜமும், இடபமுத்திரையும் கொடுத்து விடேல்விடுகு என்ற ஆணையையும் அளித்தனர். இரணியவர்மன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு பல்லவநாட்டை ஆண்டுவந்தான். (S. I. I. Vol. IV. 135, A. R. No. 37 of 1888.)

கோயிற்புராண ஆசிரியர் இவனைக் "கௌடதேசத்தவன்" என்று குறிப்பிடுவது காடவவம்சத்தவனாக இருந்தமைபற்றிபோலும். மற்றும் இவன் சிதம்பரத்தில் வியாக்ரபாதரால் முடிசூடப்பட்டு ஆளுகின்றகாலத்து, கௌடதேசம் அரசனில்லாது அழிய, வசிஷ்டமுனிவரை அனுப்பி இவன்தந்தை அழைத்துவரச்செய்தான் என்பதும், இவன்வியாக்ரபாதரது உத்தரவுப்படி அங்குஞ்சென்று முடிசூடி இருநாட்டையும் ஆண்டான் என்பதும் கோயிற்புராணக் கூற்று. அது மேற்குறித்த கல்வெட்டு வரலாற்றோடு ஒத்திருத்தல் காண்க. சரித்திர ஆராய்ச்சியாளர் இரணியவர்மனே நந்திவர்மன் என்ற பெயர்தாங்கி அரசாண்டான் என்பதையும் இவன்மகன் பல்லவமல்லன் பனிரண்டு வயதிலேயே அரசுகட்டிலேறினன் என்பதையும் ஆராய்ந்து இரணியவர்மன்காலத்தை வரையறுப்பாராக. இது வரலாற்றுத்துணிவிற்குப் பெருந்துணையாகும்.

---

100704